# இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - I

## (MUGHAL RULE IN INDIA - Part I)

ஆசிரியர்கள்

S. M. எட்வர்ட்ஸ்

H. L. O. காரெட்

தமிழாக்கம்

பா. மாணிக்கவேலு

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—167

# இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - I

## (MUGHAL RULE IN INDIA - Part I)

ஆசிரியர்கள் :

S. M. எட்வர்ட்ஸ், C.S.I., C.V.O.
(முன்னாள் ஐ.சி.எஸ். அலுவலர்)

H. L. O. காரெட், M.A.,
இந்தியக் கல்வித் துறை,
துணை முதல்வர், அரசினர் கல்லூரி,
லாகூர்.

தமிழாக்கம் :

பா. மாணிக்கவேலு, M.A.,
வரலாற்றுப் பேராசிரியர்,
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி, வேலூர்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழக அரசு

First Edition—October 1968

B.T.P. No. 167

© Bureau of Tamil Publications

**Mughal Rule in India - I**

S. M. EDWARDES AND H. L. O. GARRETT

*Translation*

P. MANICKAVELU

Price Rs. 5-00

This translation of 'Mughal Rule in India' by S. M. Edwardes and H. L. O. Garrett is published by arrangement with M/s. S. Chand and Company, Ramnagar, New Delhi-1.

Printed by
AMURTHA PRINTERS,
111-C, Arcot Road,
Madras-24

# அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறை களிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியாவில் முகலாயரின் ஆட்சி-I' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 167ஆவது வெளியீ டாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல் களையும் சேர்த்து இதுவரை 202 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக ! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் ; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முகவுரை

முகலாயர்கால இந்தியா பற்றிய நூல்கள் முடிவின்றி வந்த வண்ணமிருக்கின்றன. பல முகலாயப் பேரரசர்களின் வாழ்க்கை பற்றியும் முகலாயரின் ஆட்சி சார்ந்த பல துறைகளில் காணப் பெற்ற செயல்கள்பற்றியும் எழுந்துள்ள எண்ணிறந்த நூல்களி லிருந்து தில்லியையாண்ட தைமூரியர்களுடைய வரலாறு எத்துணை அளவிற்கு வஸீகரமானது என்பதை அறிந்துகொள்ள முடியும். மூல நூல்களிலிருந்தும் ஏராளமான, சிலசமயங்களில் அதிக விலை யுள்ளதுமான நூல்களிலிருந்தும் முகலாயரின் ஆட்சிபற்றி கிடைக் கின்ற முக்கிய செய்திகளையும் இணையாக வரும் விளக்கங்களையும் வசதியாக ஒரே நூலில் தொகுத்து மக்களுக்கு அளிப்பதே இந் நூலின் முக்கிய நோக்கமாகும். இந்த அடிப்படையில் அளவிறந்த ஆவணங்களையும் எண்ணிறந்த ஏடுகளையும் அலசிப்பார்க்கும் ஆர்வமோ காலமோ இல்லாத சாதாரண வாசகர்களுக்கு மட்டு மல்லாது அறிஞர் ஸ்மித் எழுதிய 'History of the Fine Arts in India and Ceylon' அறிஞர் பெர்ஸி பிரௌன் எழுதிய 'Indian Painting under the Mughals' போன்ற பல அடிப்படையான நூல்களை விலை அதிகம் கொடுத்து வாங்கிப் படிக்க முடியாத மாண வர்களுக்கும் பயன்படும் வகையில் நூல் ஒன்றை அளிப்பதும் நோக்கமாகும்.

அக்கால அரசியல் ஆட்சிமுறை தொடர்பான செய்திகளைப் பொறுத்தவரையில் பாபரின் 'வாழ்க்கைக் குறிப்புகள்' (Memoirs), ஜஹாங்கீரின் 'வாழ்க்கைக் குறிப்புகள்', அபுல் பாஸலின் அழியா இலக்கியம் போன்ற சிறப்புவாய்ந்த மூல நூல்களையே ஆதார மாகக் கொண்டுள்ளோம். அதனுற்றான் அவுரங்கசீப்பின் மதவெறி யில்தான் சமய ஒறுப்பு தோன்றியது என்று பொதுவாகக் கருது வதை விட்டு ஜஹாங்கீர் ஆட்சியிலும் ஷாஜஹான் ஆட்சியிலும் அது முற்றிலும் இல்லாமலில்லை என எடுத்துரைக்க முடிகின்றது. அதைப்போலவே பின்புவரும் அதிகாரங்களில் முகலாயப் பேரர சின் பொதுவான நிலைபற்றி விளக்குதற்கு ஆரம்பகாலத்தில் வந்த ஐரோப்பிய வணிகர்களும், வழிப்போக்கர்களும் விட்டுச்சென்ற குறிப்புகளையும் ஆவணங்களையும் பயன்படுத்தியுள்ளோம். இந்த நூல் முழுவதிலும் பேராசிரியர் ஜாதுநாத் சர்க்காரின் ஆதார பூர்வ மான வெளியீடுகளைப் பெரிதும் துணையாகக் கொண்டுள்ளோம். வாணிபம், பொருளாதார முறை ஆகியவைபற்றிய விளக்கங்

களுக்காக W. H. மோர்லண்டின் விலை மதிப்பில்லா இரு நூல்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம். அந்நூல்கள் முகலாயர் காலத்துச் சமுதாய நிலைபற்றியும் முகலாய ஆட்சிமுறையில் உள்ள குறைகள் பற்றியும் அறிந்துகொள்ளப் பெரிதும் பயன்படுகின்றன. வாசகங்களை அப்படியே எடுத்துக் கையாளுவதற்கு அனுமதி தந்தமைக்காகப் பின்வருவோர்க்கு எமது நன்றி.

Mrs. Beveridge மொழிபெயர்த்த 'Babur Nama' விலிருந்து எடுத்து எழுதுவதற்கு அனுமதி தந்த W. H. Beveridge, Esq., Vicomte d'Humieres எழுதிய 'Through Isle and Empire' விருந்து எடுத்து எழுத இசைவுதந்த Messrs. Heimemann, பேராசிரியர் Jadunath Sarkar எழுதிய 'History of Aurangzib,' 'Shivaji and his Times,' 'Studies in Mughal India' ஆகியவற்றிலிருந்து எடுத்துக் கையாள இசைந்த அப்பேராசிரியர், அவற்றினை வெளியிட்ட Messrs. Longmans, Green & Co., Manucci எழுதிய 'Storia do Mogor, ஐ மொழிபெயர்த்த Irvine ஆகியோர் அவர்களுள் அடங்குவர். இறுதியாக ஒன்று முதல் ஐந்துவரையிலான அதிகாரங்களைத் திருவாளர் காரட்டும், ஆறு முதல் ஒன்பது வரையிலான அதிகாரங்களைத் திருவாளர் எட்வர்ஸும் கூட்டாக எழுதிய இந்நூல் அதன் நோக்கத்தை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

S. M. E.

H. L. O. G.

# பொருளடக்கம்

## முதல் பாகம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகலாயரின் வருகை: பாபர்; ஹுமாயூன் | ... 1 |
| 2. | அக்பரின் ஆட்சிக்காலம் | ... 28 |
| 3. | ஜஹாங்கீர் | ... 68 |
| 4. | ஷாஜஹான் | ... 86 |
| 5. | அவுரங்கசீப் | ... 125 |
| | கலைச்சொல் அகராதி | |
| | தமிழ்—ஆங்கிலம் | ... 195 |
| | ஆங்கிலம்—தமிழ் | ... 198 |
| | பொருட்குறிப்பு அகராதி | ... 201 |

# இந்தியாவில் முகலாயரின் ஆட்சி-I



ஆக்ரா—தாஜ்மஹால்

# முதல் பாகம்

## 1. முகலாயரின் வருகை ; பாபர் : ஹுமாயூன்

### முன்னுரை

முகலாயரின் வருகையோடு இந்திய வரலாற்றில் நன்கு வரையறுக்கப்பெற்ற காலப்பகுதி தொடங்குகின்றது. மேலும், முன்னால் வந்த காலப் பகுதிகளுக்குக் கிடைப்பதைக் காட்டிலும் இதற்குக் கிடைக்கும் ஆதாரங்கள் ஏராளமானவையாகும். முற்காலத்திய மூல ஆதாரங்களைப்பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிவது இல்லை. சான்றாக, சந்திரகுப்த மௌரியருடைய அரசவைபற்றியும் அரசாங்கம்பற்றியும் விரிவான விளக்கத்தை மெகஸ்தனிஸ் தருகின்றார். முகமது பின் துக்ளக் எனும் 'எதிர்ப் பண்புகளின் விநோதக் கலப்பை' இபின் பதூதா (Ibn Batuta) படம் பிடித்துக் காட்டியுள்ளார். ஆயினும், முகலாயர் காலம் வரையில் உண்மையான நூல் பட்டியல் எனும் அளவிற்கு அவை நிறை உடையன அல்ல. முகலாயர் காலத்தில் குறைத்து மதிப்பிட முடியாத நிலையில் உள்ள அரசர்களே எழுதிய உண்மையான குறிப்பேடுகளைத் தவிர அக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தகுந்த எழுத்தாளர்களின் ஏராளமான நூல்களும் கிடைக்கின்றன. ஆயினும், அவற்றைப் பயன்படுத்துவதில் இந்திய வரலாற்று மாணவர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். துரதிட்டவசமாக நூலாசிரியர்கள் தங்களது கருத்துகளுக்குப் பொருந்துமாறு வரலாற்று உண்மைகளைத் திரித்துக் கூறுவது பொது வழக்காக இருந்திருக்கின்றது. ஆயின், இந்தியாவில் அப் பழக்கம் மிக மோசமாக இருந்தது. வேண்டுமென்றே உண்மையைத் திருத்திக் கூறுகின்ற நூல்கள் பலவற்றிற்கு முன் (துரதிட்ட வசமாக இன்றும் அந்நிலை தொடர்கின்றது) மெக்காலேயின் 'இஸ்டரி ஆஃப் இங்லண்டு' (History of England) போன்ற அரசியல் ஒருபுறச் சாய்வான நூல்கள் சிறப்பிழந்து போகும்.

முகலாயர் இந்தியாவிற்கு வந்தபோது இருந்த அரசியல் நிலைபற்றி இவ்விடத்தில் சுருக்கமாக விளக்குதல் நலமாகும். கடந்தகால வரலாற்றில் பலமுறை நடந்ததைப் போலவே, உள் நாட்டுப் பூசல்களின் விளைவாக உறுதிபூண்ட அன்னியப் படையெடுப்பாளருக்கு நாடு எளிதில் பலியாகியது. தொடர்ச்சியாக வந்த உறுதியற்ற மெலிந்த வேந்தர்களின் ஆட்சியின்கீழ் ஒன்றிற்கும் உதவாத, செயலிழந்த நிலையை தில்லி சுல்தானியம் அடைந்தது. தலைநகரின் அண்மையில் இருந்த சிறு பகுதியில் தான் அதனுடைய ஆதிக்கம் சென்றது. இராஜபுதனத்தில் பல தலைவர்களிடையேயான ஓயாத பொறுமைப் பூசல்களினுல் ஒற்றுமை தோன்றுவதற்கு வழியில்லாது போயிற்று. தில்லி அரசாங்கம் மெலிவுற்றதால் மத்திய இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பல உரிமைபெற்ற அரசுகள் தோன்றின. அவை சில சமயங்களில் ஒன்றுபட்டு நின்றன. ஆனுல், பல முறை அவைகள் ஒன்ரேடொன்று முரண்பட்டு ஐயங்கொண்டு வாழ்ந்துவந்தன. தென்கோடியில் விஜயநகரம் எனும் இந்துப் பேரரசு வலிமையுடன் திகழ்ந்தபோதிலும் அது வெகு தொலைவில் தள்ளி இருந்ததால் வட இந்திய விவகாரங்களின்மீது செல்வாக்குச் செலுத்த முடியாது போயிற்று.

எவ்வாறெனினும், இத்தகைய அரசியல் ஒற்றுமையின்மையோடு, நாட்டின் பிற்கால வரலாற்றின்மீது மிகுந்த செல்வாக்குச் செலுத்தவல்ல வேறுவகையான சக்திகள் வேலை செய்து வந்தன. முகலாயரின் வருகைக்கு முன் வந்த நூற்ருண்டில் பெரும் சமய நடவடிக்கைகள் எழுந்தன. சைதன்யர், கபீர், குருநானக் முதலாஞேருடைய மெய்விளக்கப் போதனைகளின் பயனுக இறைமைபற்றிய புதிய கோட்பாடு உருவாகியது. 'பக்திநெறி' (Bhakti) இயக்கம் என்று அழைக்கப்பெற்ற இச் சமய இயக்கத்தைப் பரப்புவோரும், ஆதரிப்போரும் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்துவந்தனர். ஆயின், முகலாயருடைய ஆட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதனுடைய முக்கியத்துவம் புறக்கணிக்கப்பெற்றுள்ளது. அவர்கள் வரும்போது இவ்வியக்கம் தொடக்க நிலையில் இருந்தது. ஆயின் முகலாயப் பேரரசு அழிவதற்கு முக்கிய காரணங்களாக இருந்த இரு சக்திகளை உருவாக்கியது இவ்வியக்கமே. இத்தகைய இயக்கம் வளராதிருக்குமாஞல் மராத்தியரோ சீக்கியரோ, பிற்காலத்தில் இருந்தவாறு வலிமை வாய்ந்த சக்திகளாக உருவெடுத்திருக்க முடியாது.

முகலாயர் வந்தபோது இந்தியாவின் நிலை இங்ஙனமாக இருந்தது. பாபரின் இறுதிப் படையெடுப்பு நேர்ந்த 1526ஆம் ஆண்டில் முகலாயப் பேரரசு தோன்றியது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பெறுகின்றது. ஆயின், அது எப்போது முடிவுற்றது என்பதுபற்றி மிகுந்த கருத்து வேற்றுமை காணப் படுகிறது. 1707ஆம் ஆண்டில் கடைசிப் பேரரசரான அவுரங்கசீபின் மறைவோடு முகலாயப் பேரரசு வீழ்ந்தது எனச் சில அறிஞர் கருதுவர். மற்றவர் 1857ஆம் ஆண்டில் இரண்டாம் பகதூர் ஷாவை வெளியேற்றியவுடன்தான் அப் பேரரசு முடிவிற்கு வந்தது என்பர். ஆயின், அதற்கு முந்திய ஆண்டுகளில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் முகலாய மன்னர் கொண்டிருந்த உறவினைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இரண்டாவது கருத்து ஏற்புடையது அன்று என்பது விளங்கும். நிலையான உதவி மானியம் பெற்று, பட்டங்கள், பதவிகள் வழங்க முடியாத நிலையில் வாழ்ந்து, அனுமதியின்றி அரண்மனையை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருந்த மன்னரை உண்மையான மன்னரென்றே கருதமுடியாது. அதிலும் ஆசிய அரசியல் கருத்துப்படி அவ்வாறு கருதுவதற்கு இடமேயில்லை.

பொதுவாகப் பார்க்குமிடத்து நாதர் ஷா படையெடுத்து வந்த நாளிலிருந்து பெருமை மிக்க முகலாயரின் பேரரசு அரசியல், ஆட்சித்துறை சார்ந்த அமைப்பாக இல்லா தொழிந்தது என்று வலியுறுத்திக் கூறுவது பொருத்தமானதே. எனினும், குருடராகிச் செயலிழந்த நிலையில் இருந்த பேரரசர் ஷா ஆலம், மராத்தியரை வென்று வாகை சூடிவந்த தளபதி லேக்கின் (Lake) பாதுகாப்பில் தம்மை ஒப்படைத்துக்கொண்ட 1803ஆம் ஆண்டிலிருந்து மறையத் தொடங்கியது எனக் கொள்ளுதல் நேர்மையானதாகத் தெரிகின்றது.

**பாபரின் வருகை**

முகலாயப் பேரரசிற்கு வித்திட்டவரான பாபர், 1519ஆம் ஆண்டில் இந்தியாவில் காலடி வைத்தார். தமது குல மரபை ஒட்டியே, அவர் அவ்வாறு செய்தார். அன்னாரது மூதாதையர் களான செங்கிஸ்கானும் முடத் தைமூரும் இந்தியாவின்மீது படையெடுத்து வந்திருக்கின்றனர். முன்னவர் பதின்மூன்றும் நூற்றுண்டிலும், பின்னவர் பதினான்காம் நூற்றுண்டிலும் படை யெடுத்து வந்தனர். தமது குடும்பத்தார் இழந்த பகுதிகளை மீட்பதே தமது படையெடுப்பின் முக்கிய நோக்கம் என்று பாபர் அறிவித்தபோதிலும், அவரது மூதாதையர்களின் இரு படை

யெடுப்புகளும் நிரந்தரமான பயன் ஏதும் அளிக்கவில்லை. 1519ஆம் ஆண்டில் அவர் பின்வருமாறு எழுதினார்: 'இந்துஸ்தானத்தைக் கொள்ளவேண்டுமென்ற ஆவல் எமது உள்ளத்தில் எப்போதும் இருந்துவந்தது. பீரா, குஷாப், சீனுப், சினியட் ஆகிய இப் பகுதிகள் ஒரு காலத்தில் துருக்கியர் வசம் இருந்தன. அவற்றை எம்முடையதாகவே கருதியுள்ளோம். எனவே, அவற்றை அமைதியாகவோ வலுத்தாக்குதல் மூலமாகவோ கொள்ள உறுதி பூண்டுள்ளோம்.'[1]

### அவரது இளமைப் பருவம்

பாபர் (புலி) என்று பெயர் பெற்ற ஸாஹிர் உத்தின் முகம்மது 1483ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர் தமது முப்பத்தியேழாம் வயதில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்தார். அது வரையில் அவரது வாழ்க்கை துணிகர வீரச் செயல்கள் நிறைந்ததாக இருந்தது. அவற்றில் தாம் இன்பம் கண்டதாக அவர் எழுதியுள்ளார். ஒரு நூற்றுண்டிற்கு முன்பு அவர் ஐரோப்பாவில் பிறந்திருப்பாராஞல் ஒரு சிறந்த உலாவியல் பெருந்தகை வீரராக விளங்கியிருப்பார். முதலில் தமது தந்தையிடமிருந்து மரபு வழியாகப் பெற்ற பர்காஞ (Khokand) எனும் சிறு நாட்டை ஆண்டுவந்தார். ஆயின், அவர் அங்கிருந்தே விரட்டப் பெற்ருர். அவரது குடும்பத்தார் இழந்துவிட்ட சாமர்கண்டைக் கைப்பற்றுவதற்காகப் பலமுறை முயன்று தோல்வி கண்டார். இறுதியாகப் பல தொல்லைகளுக்குப் பிறகு அவர் காபூலின் அரசராஞர். காபூலிலிருந்துதான் அவர் 1519ஆம் ஆண்டில் இந்தியாவின்மீது முதன்முறையாகப் படையெடுத்துவந்தார்.

### முதலாவது படையெழுச்சி

எதிர்ப்பு அதிகம் அற்ற நிலையில் அவர் சிந்து ஆற்றைக் கடந்து ஜீலம் ஆற்றை நோக்கி முன்னேறினுர். தலத்தில் ஆண்டுவந்த தலைவர்களில் பலர் அவரிடம் பணிந்தனர். திறை செலுத்துமாறு ஆணையிடப்பெற்றனர். ஏற்கெனவே கூறியவாறு தமது மூதாதையரின் நாட்டினை மீட்பதற்காகவே தாம் வந்ததாக பாபர் அறிவித்து வந்ததால் அந்நாட்டிலிருந்து திறை கொள்வது முறையானது எனக் கருதினுர். மேலும் அங்கே வாழ்ந்த மக்கள் தமது குடிமக்களே என அவர் கருதியதால் அவர்களைத் தமது பாதுகாப்பிலேயே வைத்திருக்கத் தீர்மானித்தார். படைவீரர்களிற் சிலர் அறிவில்லாமல் நடந்துகொண்டு பீரா மக்களைத்

[1] Beveridge, 'Babur-Nama', vol. i, பக்கம் 380.

துன்புறுத்தியதாகச் சிலர் முறையிட்டபோது, சில அதிகாரிகளை பாபர் அனுப்பி வைத்தார். அவர்கள் அந்த அறிவுகெட்ட வீரர்களில் சிலரைக் கொன்றனர்; மற்றவர்களுடைய மூக்குகளை அறுத்துப் பாசறையைச் சுற்றி வருமாறு செய்தனர்.[1]

இப்போது வெல்திற வழிகளில் மேலும் சில பகுதிகளைப் பெற பாபர் முயன்ருர். அதற்கிணங்க தில்லியை ஆண்ட சுல்தான் இப்ராஹீம் லோடிக்கும், லாகூரில் அவரது பகர ஆளாக இருந்த தௌலத்கான் லோடிக்கும் கடிதங்களுடன் தூதுவரை அனுப்பி வைத்தார். பாபரின் வார்த்தைகளாலேயே அத் தூதுக்குழுவின் தோல்வியை விளக்குவோம். 'ஒரு காலத்தில் துருக்கியரை நம்பியிருந்த நாடுகளுக்கு அமைதியை நிலைநிறுத்துதற்காகத் தூதுவரை அனுப்புவதில் எத் தவறுமில்லை'.[2] இங்ஙனமாகச் சுல்தான் இப்ரஹீமிடம் செல்வதற்கென முல்லா முர்ஷிதை பாபர் நியமித்தார்.

'மிகப் பழங்காலத்திலிருந்து துருக்கியரைச் சார்ந்திருந்த பகுதிகளைக் கேட்டு, அவருக்கு ஒரு கோஷாக் பறவையை அனுப்பினோம். தௌலத்கானுக்கும், சுல்தான் இப்ரஹீமிற்குமான கடிதங்களை எழுதுதல் முல்லா முர்ஷிதின் பொறுப்பில் இருந்தது. வாய்மொழி மூலமாகவும் செய்திகள் அனுப்பப்பெற்றன. அவர் செல்வதற்கு அனுமதியும் வழங்கப்பெற்றது. இந்துஸ்தானத்து மக்கள், குறிப்பாக ஆப்கானியர்கள், மதிநுட்பத்தையும் பகுத்தறிவையும் இழந்து, நல்ல ஆலோசனையும் நேர்மையான முடிவும் அற்று இருந்திருக்கவேண்டும். நட்புறவிற்கான விதிமுறைகளையும் அவர்கள் அறிந்தார்களில்லை. யாம் அனுப்பிய ஆளை தௌலத்கான் நேரில் காணவோ சுல்தான் இப்ரஹீமிடம் விரைவாக அனுப்பவோ செய்யாது, பல நாட்களுக்குத் தடுத்து நிறுத்திவைத்துவிட்டார். அதனால் எமது ஆள் பதிலேதும் இல்லாது பல மாதங்கள் கழித்துக் காபூலுக்குத் திரும்பிவந்தார்'.[3]

தாம் கைப்பற்றிய பகுதியில் அமைதியை நிலைநாட்டும் பணியை முடித்துக்கொண்டு காபூலுக்குத் திரும்பும் பயணத்தை பாபர் தொடங்கியபோது, கக்கர்களைத் (Gakkars) தண்டிப்பதற்காகப் படையெடுத்துச் செல்லவேண்டுமென்ற யோசனை அளிக்கப்பெற்றது. கக்கர்கள் உப்பு மலையில் (Salt Range) வாழ்ந்த போர்க்குணமிக்க மலை நாட்டினர். அவர்கள் அப்

1 Beveridge, எழுதிய 'Babur-Nama', vol. i, பக்கம் 383.
2 Ibid., பக்கம் 384.
3 Ibid., பக்கம் 385.

பகுதியில் வாழ்ந்த போர்க்குணம் படைத்த பிற கூட்டத்தாருடன் ஓயாது போரிட்டுவந்தனர். அவர்கள் இன்றும் வீரத்திற்குப் பெயர் போனவர்களாகத் திகழ்கின்றனர். இத்தகைய மலை நாட்டு மக்களில் ஜான்ஜுவா (Janjua) எனும் மற்றொரு கூட்டத்தாரின் தூண்டுதல் காரணமாக கக்கரின் வலிமை வாய்ந்த கோட்டையாகிய பாரலாவை (Parhalah) அல்லது பிராலாவை பாபர் தாக்கினர். தாக்குதல் முழு வெற்றியளித்தது. பாரலா கோட்டை அவரிடம் சிக்கியது. கக்கர் தலைவரான ஹாலிகான் தப்பி ஓடினர். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் பாபரிடம் சரணடைந்தார். அதன் பின்னர் பாபர் தாய்நாடு நோக்கிய பயணத்தைத் தொடர்ந்து, 1519ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காபூலை அடைந்தார். இங்ஙனம் பாபரின் முதல் இந்தியப் படையெடுப்பு நிரந்தரமான வெற்றியைத் தந்தது எனக் கூற முடியாது. அது அநேகமாக முன் சென்று புலங்காணும் செயல் போலவே அமைந்தது. ஆயினும், நாட்டைப்பற்றியும் மக்களைப்பற்றியும் பாபர் அறிந்துகொண்ட செய்திகள் அவரது பிற்காலப் படையெடுப்புகளுக்குப் பெரிதும் பயன்படுவனவாக அமைந்தன. மேலும், நாட்டைக் கைப்பற்றுவதில் அவர் கொண்டாடிய உரிமையும், அங்கு வாழ்ந்த குடிமக்களிடம் பரிவு காட்டிய பாங்கும், கஜினி மாமுது போன்ற கொள்ளையிடுவதையே முக்கியமாகக் கொண்டவர்களின் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தன.

**மேலும் படையெடுப்புகள்**

மேலும் இருமுறை இந்தியாவின்மீது பாபர் படையெடுத்து வந்தார். ஆயின் அப்போது அவர் நீண்ட நாட்கள் இந்தியாவில் தங்கவில்லை. எவ்வாறெனினும் 1524ஆம் ஆண்டில் அவர் பெரும் படையுடன் இந்தியாவிற்கு வந்தார். இப்போது அவரது வெற்றி வாய்ப்புகள் மிகுதியாயிருந்தன. லோடி குடும்பத்தைச் சேர்ந்த செல்வந்தர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்ய முற்பட்டனர். சுல்தான் இப்ரஹீமுடன் சண்டையிட்டுக்கொண்ட லாகூரின் கவர்னரான தௌலத்கான் பாபரின் உதவியை நாடினர். லோடி குடும்பத்தைச் சேர்ந்தவரும் சுல்தானின் மாமனுமாகிய ஆலம்கான் ஒரு காலத்தில் பட்டத்திற்கு உரிமை கொண்டாடியவர். அவரும் தப்பியோடி பாபரின் பாதுகாப்பை நாடினர். உள்நாட்டில் கிடைத்த இத்தகைய ஆதரவு காரணமாக முன் எப்போதையும்விட பாபர் வெகுதூரம் முன்னேறினர். இறுதியாக அவர் சர்ஹிந்தை வந்தடைந்தார். ஆயினும் ‘முரட்டுத்தனமும், மூட மதியும் கொண்டவர்’ என பாபர் குறிப்பிட்ட தௌலத்கானின் நடத்தை காரணமாக பாபர் மேலும்

முன்னேறுவது முடியாத ஒன்ருகியது. தமது முன்னேற்றத்திற் கான ஒரு கருவியாகவே முகலாயரைப் பயன்படுத்திக்கொள்வது தௌலத்கானின் நோக்கமாகும். ஆயின் அவ்வாறு நடக்க பாபர் மறுத்துவிட்டதால் அவர்கள் இருவருக்குமிடையேயான கூட்டுறவு முரிந்தது. எனவே, பாபர் தன் நாடு திரும்பிஞர். அங்கே தமது படையைத் திருத்தி அமைத்து அதன் சக்தியைப் பெருக்கிஞர்.

## இறுதிப் படையெடுப்பு

அவரது இறுதிப் படையெடுப்பு 1525ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தொடங்கியது. 1525ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் நாளன்று சூரியன் தனுசு ராசியில் இருந்தபோது இந்துஸ்தானத்திற்குப் புறப்பட்டதாக பாபர் குறிப்பிட்டுள்ளார்.[1] பெஷாவர், சியால்கோட் வழியாக அவர் இந்தியாவிற்கு வந்தார். அவர் மேற்கொண்ட பணிக்கு ஏற்ற அளவு பெரும் படை அவரிடம் இல்லை. படைத்துணைவர் உள்பட 12,000 பேர் களுக்கு மேல் அப் படையில் இருந்திருக்கமாட்டார்கள் என வின்சென்ட் ஸ்மித் குறிப்பிடுகின்ருர். இத்தகைய சிறிய அளவிஞல் அவரது படை வீரர்கள் உற்சாகம் குன்றியிருந்தனர். அவர்களுக்குத் தெம்பூட்டுதற்காக அவர் அரும்பாடுபட்டார். தமது நண்பர்கள் என்று சொல்லிக்கொண்ட ஆலம்கானும், தௌலத்கானும் தோல்வி கண்டனர் என்ற செய்தி பாபருக்குச் சியால்கோட்டில் கிடைத்தது. அவ்விரு தலைவர்களும் மனக் குறையுடைய வேறு சிலருடன் சேர்ந்துகொண்டு தெற்கு நோக்கி முன்னேறி தில்லியை முற்றுகையிட்டனர். தலைநகரைக் காப்பதற்காகச் சுல்தான் இப்ரஹீம் படையுடன் வருவதை அறிந்து, முற்றுகையைக் கைவிட்டு, அவருடன் போரிடச் சென்றனர். இராத்தாக்குதல் ஒன்றின் மூலமாகச் சுல்தானின் படையிலிருந்து பலர் தம் பக்கம் சேர்ந்துவிடுவார்களென்று ஆலம்கானும், அவரது ஆதரவாளர்களும் நம்பினர் என்று பாபர் எழுதியுள்ளார். எவ்வாறெனினும் இத்தகைய நம்பிக்கை நாச மாகியது. சுல்தானின் படைகள் முழு வெற்றி பெற்றன. ஆலம்கானும், தௌலத்கானும், பிற தலைவர்களும் வடக்கு நோக்கி ஓடினர். இந்தச் செய்தியைத்தான் சியால்கோட்டில் பாபர் அறிந்தார். தௌலத்கானையும் அவரது ஆட்களையும் சிறிதும் நம்பாத பாபர் மேலும் முன்னேறிச் செல்வதற்கு முன்னர் அவர்களைப் பணியவைக்க உறுதி பூண்டார். அதஞல் அவர்

1 Beveridge, 'Babur-Nama', vol. ii. பக்கம் 445,

தௌலத்கானைத் தாமே துரத்திச் சென்றார். வெகு விரைவில் தௌலத்கான் பாபரிடம் சரணடைந்தார். அவர் ஆண்டுவந்த மாநிலத்தின் ஒரு பகுதியை அவர் வைத்துக்கொள்ள அனுமதி கிடைத்தது. மற்றவர்களைப் பின் தொடர்ந்து செல்லுமாறு சிறு படையொன்றை அனுப்பிய பாபர், 'தீர்மானமெனும் அங்க வடியில் காலூன்றி, ஆண்டவரிடம் நம்பிக்கையெனும் கடிவாளத்தைக் கையில் பற்றி' தில்லியிலிருந்து வந்துகொண்டிருந்த இப்ரஹீமிற்கு எதிராக முன்னேறிச் சென்றார். அம்பாலாவிற்கு அருகே நடந்த சிறு சண்டையொன்றில் பாபரின் மகனான ஹுமாயூன் வெற்றிபெற்றார்.

**பானிப்பட்டுச் சண்டை**

இறுதியாக, மூன்று முடிந்த போர்களைக் கண்ட இந்தியாவின் போர்க்களமான பானிப்பட்டுச் சமவெளியில் இரு படைகளும் எதிர் எதிராக நின்றன. எண்ணிக்கையில் அவை யிரண்டிற்கும் பெருத்த வேற்றுமை இருந்தது. பாபரிடம் அநேகமாக 9,000 வீரர்கள் இருந்திருக்கலாம். இப்ரஹீமின் படையில் 1,00,000 வீரர்களும் 1,000 யானைகளும் இருந்ததாக பாபரே குறித்துள்ளார். 1,000 யானைகள் என்பது மிகைக் கூற்றேயாகும். 100 யானைகள் என பெரிஷ்டா குறிப்பிடுவது அநேகமாகச் சரியாக இருக்கவேண்டும்.

இந்தியப் போர்க்கலையில் புதிய வளர்ச்சியாகிய பீரங்கிப் படையையே பாபர் பெரிதும் நம்பியிருந்தார். அவர் பானிப்பட்டை அடைந்ததும் உறுதியாக நிலைகொண்டார். மார்பளவு மண்மதில் எழுப்பி அவற்றின் பின்னே தமது பீரங்கிகளை இரட்டை இரட்டையாகப் பிணைத்து நிறுத்திவைத்தார். அவரது வலப்புறத்திற்குப் பானிப்பட்டு நகரம் அரணாக அமைந்தது. பாபரின் படைத் தலைவர்கள் பயனில்லாது நடத்திய இராத் தாக்குதல் ஒன்றைத் தவிர இரு படைகளும் சில நாட்களுக்குச் செயலில் ஈடுபடாது வாளா இருந்தன. இறுதியாக 1526ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி சுல்தானின் படை தாக்குவதற்காக முன்னேறியது. அதன் பிறகு நீண்ட கடுமையான போர் நடைபெற்றது. பாபரின் படைகள் சிதறாது நின்றன. அவரது பீரங்கிப் படை பேருதவி அளித்தது. அவரது குதிரைப் படை பக்கமாக வளைந்து வந்து பகைவரைத் தாக்கியதால் அவருக்கு இறுதி வெற்றி கிடைத்தது. இத்தகைய போர் முறையைத்தான் போரஸிற்கு எதிராக அலெக்சாந்தர் பயன்படுத்தினார் என்று வின்சென்ட் ஸ்மித் குறிப்பிடுகின்றார். அன்று மாலையே சுல்தானின் பெரும்படை மறைந்தது. 15,000 வீரர்

களுடன் சுல்தானும் போர்க்களத்தில் மாண்டு வீழ்ந்தார். தமது வெற்றியைக் குறிப்பிட வந்த பாபர், அநேகமாக கிராம்வெலின் (Cromwell) பெருமித நடையில் எழுதியுள்ளார். 'சண்டைக்கான கிளர்ச்சித் தூண்டுதல் வந்தபோது கதிரவன் ஈட்டி உயரத்தில் எழுந்திருந்தான். நண்பகல் வரையில் கடுமையான போர் நடைபெற்றது. பிற்பகல் வந்தது; பகைவர் தோல்வியுற்று அழிந்தனர். நமது நண்பர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் மூழ்கினர். எல்லாம் வல்ல இறைவனின் அருளால் நமக்கு இக் கடினமான காரியம் எளிதில் முடிந்தது. அந்த மாபெரும் படை அரைநாளில் மண்ணைக் கவ்வியது. ஓரிடத்தில் இப்ரஹீமைச் சுற்றிலும் ஐயாயிரம் அல்லது ஆறுயிரம் வீரர்கள் வீழ்ந்து கிடந்தனர். போர்க்களம் முழுதும் சிதறிக்கிடந்த பிற இறந்தவரின் எண்ணிக்கை பதினைந்து முதல் பதினாறுயிரம் வரை இருக்குமென மதிப்பிட்டோம். ஆனால், ஆக்ராவை அடைந்ததும் அங்கே இந்துஸ்தானியரின் கூற்றுகளைக் கொண்டு போர்க்களத்தில் மாண்டவர்களின் எண்ணிக்கை 40 அல்லது 50 ஆயிரம் இருக்குமென அறிந்துகொண்டோம்.'[1]

பாபர் தமது வெற்றியைத் தொடர்ந்து தாமதமின்றி முன்னேறினார். ஆக்ராவைக் கைப்பற்றுவதற்காக இளவரசர் ஹுமாயூனின் தலைமையிலான படையொன்று விரைந்து சென்றது. படையின் பெரும் பகுதியுடன் பாபர் சென்றார். மூன்றும் நாள் அவர் தில்லியை வந்தடைந்தார். அங்கே அவர் சில நாட்கள் தங்கினார். புதியனவற்றை அறியும் ஆவல் பாபரிடம் இயல்பாக அமைந்திருந்தது. அதற்கிணங்க அவர் கல்லறைகள், பொதுமனைகள், பூங்காக்கள் முதலானவற்றைக் காண்பதில் பெரும்பொழுதைக் கழித்தபோதிலும் தாம் புதிதாக வென்ற பகுதிகளைப் பாதுகாப்பதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கத் தவறவில்லை.

நகரத்தைக் காப்பதற்கென ஆளுநர் ஒருவரும் காவற்படைத் தலைவர் ஒருவரும் நியமிக்கப்பெற்றனர். கருவூலங்கள் கைப்பற்றப்பட்டன. தில்லி வாழ் மக்களுக்குப் புதிய மன்னர் தோன்றியது தெளிவாக்கப்பெற்றது. வெள்ளிக்கிழமை பொது வழிபாட்டின்போது பாபரின் பெயராலேயே குத்பாவை வாசித்து இந்நிலையை உறுதி செய்தனர். இங்ஙனம் தில்லியின் மீது நிலையான ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு பாபர், 1526ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி வெற்றியுடன் ஆக்ரா நகருக்

1 Ibid., பக்கம் 447.

குள் புகுந்தார். அக்காலத்தில் ஆக்ராவும் பேரரசத் தலைநகர மான தில்லியைப் போன்று புகழ்பெற்று விளங்கியது. மக்கள் நிறைந்த இவ்விரு நகரங்களின் வீழ்ச்சி கடைசி ஆப்கானியர் குலம் மறைந்து புதிய, முகலாய சகாப்தம் தொடங்கியது என்பதைக் குறித்தது.

**பாபரின் பிற நடவடிக்கைகள்**

புதிய மன்னர் பல தொல்லைகளைச் சமாளிக்கவேண்டியிருந்தது. இன்னும் பல வலிமைமிக்க ஆப்கானியத் தலைவர்கள் அவரிடம் பணியாது இருந்தனர். தாம் துறைபோகிய அருளிரக்கம், தந்திரத் திறமுறை ஆகியவற்றைக் கலந்த பாபர் ஆப்கானியத் தலைவர் பலருடன் நட்புறவை நிலைநாட்டினார். தமது படைவீரர்களின் உறுதியை மீட்பது அவருக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. வடக்கிலிருந்து வந்த முகலாயர்களால் இந்தியாவின் கடுமையான மே மாத வெய்யிலைத் தாங்க முடியவில்லை. அவர்களிற் சிலர் வெப்பம் தாங்காது மடிந்தனர். அதனால் பொதுவான அச்சமும் மனத் தளர்ச்சியும் அவர்களை ஆட்கொண்டன. பெரும் கொள்ளைப் பொருளும் அவர்களுக்குத் தெம்பூட்டுவதாக இல்லை.[1] அதனால் தமது முக்கியப் படைத் தலைவர்களின் சபையைக் கூட்டிய பாபர், பின்வருமாறு பேசினார் :

'வருவாய்களும் வழிமுறைகளும் இல்லையானால் உலகின் மீது மேலாண்மையும் ஆட்சித் திறமும் இருப்பதற்கில்லை. நிலங்களும் நம்பிக்கையான ஆட்களும் இல்லையானால் இறைமையோ அதிகாரமோ இருப்பதற்கில்லை. பல ஆண்டுகளாகப் பாடுபட்டுப் பல தொல்லைகளை அனுபவித்து, நெடுந்தூரம் பயணம் செய்து எமது படையும் யாமும் போர்க்களத்தில் புகுந்து பெரும் எண்ணிக்கையில் வந்த பகைவரைப் படுகொலை செய்ததெல்லாம் அவர்களுடைய பரந்த நிலங்களைக் கொள்வதற்குத் தான். இத்தகைய இடரார்ந்த முறையில் கைப்பற்றிய நாடுகளைக் காரணம் ஏதுமின்றிக் கைவிடவேண்டிய அவசியம் என்ன? அவ்வாறு செய்ய நம்மை வற்புறுத்தும் சக்தி எது? கடுமையான வறுமையின் பிடியில் சிக்கிய கேலிப் பொருள்களாக நாம் உழல வேண்டுமா? எமது நலனில் அக்கறை கொண்டவர் யாரும் இனி இவ்விதம் பேசாதிருப்பாராக. ஆயின் கடுமையாக உறுதி

1 ஹுமாயூனின் பாதுகாப்பில் இருந்த குவாலியர் குடும்பத்தார் அவருக்களித்த ஒரு வைரக் கல்லே 80,000 பவுன் பெறும் என்று டாவர்னியர் மதிப்பிட்டார்.

யுடன் நிற்க முடியாதவர் திரும்பிச் செல்லத் தீர்மானித்திருப்பார், களானுல் அவர்கள் இங்கே தங்கத் தேவையில்லை'.[1] அவரது வேண்டுகோள் வெற்றியளித்தது. குவாஜாகலானைத் தவிர மற்றையோர் தலைவருடன் தங்குவதாக வாக்குறுதி அளித்தனர். பாபர், தாம் கொடுத்த வாக்கிற்கிணங்க குவாஜாகலானைத் தாய் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அவர் மிகுந்த அன்பு பாராட்டிய அவரது குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு ஏராளமான விலையுயர்ந்த பரிசுப்பொருள்களை குவாஜாகலானிடம் கொடுத்து அனுப்பினுர்.

**கான்வா சண்டை**

இப்போது பாபர், இப்ரஹீம் லோடியைவிடத் தீவிரமான எதிரியைச் சமாளிக்கவேண்டியிருந்தது. பொதுவாகச் சங்கா என அழைக்கப்பெற்ற புகழ் மிக்க வீரரான மேவாரின் இராணு சங்கரம் சிங்குடன் பாபர் போராடவேண்டியிருந்தது. அவர் பல ஆண்டுகள் போர்த் துறையில் அனுபவம் பெற்ற மாவீரராகத் திகழ்ந்தார். 1509ஆம் ஆண்டில் மேவாரின் அரியணையேறியவுடன் அவர் இராஜஸ்தானத்தின் முதன்மையான தலைவராக விளங்கத் தொடங்கினுர். அத்தகைய ஆண்டகை இப்போது பெரும் படையுடன் படையெடுப்பாளரைச் சந்திக்க முன்னேறினுர்.

'80,000 குதிரைகளும், 500 போர் யானைகளும் உள்பட 120 தலைவர்களுடைய படைகளும் அப் பெரும் படையில் அடங்கியிருந்தன' என்று வின்செண்ட் ஸ்மித்[2] குறிப்பிடுவார். சாதாரணமாக இராணு சங்காவை ஆதரித்தவர்கள் இந்து கூட்டணியைச் சார்ந்தவரே என விளக்கப்பெற்றபோதிலும் பாபர் சமரசம் செய்யத் தவறிய ஆப்கானியத் தலைவர்கள் சிலரும் அதில் அடங்கினர். ஆள்வார் நாட்டின் ஹாசன்கான் மேவாட்டி என்பாரும் அக் கூட்டணியைச் சேர்ந்த முக்கியமானவருள் ஒருவர். அவர் ஆப்கானியர் வழி வந்தவராயினும் மேவாட்டைச் சார்ந்த கான்ஸடாவே (Khanzada). அவர் இஸ்லாம் சமயத்திற்கு மாறியவரும் அல்லர் அவ்வாறு சமயம் மாறியவரின் வழிவந்தவரும் அல்லர். 'கலீமாவைப் பயன்படுத்திய முஸ்லீ மல்லாதவர்' என்று அவரை பதௌனி விளக்குவார். இரு தரத்துப் படைகளும் நெருங்கியதும் எண்ணிக்கையில் இருந்த பெருத்த வேற்றுமையினுல் பாபரின் சிறு படையிலிருந்த வீரர்கள் மனந் தளர்ந்தனர். ஆயின் பாபரோ மனந் தளராது

1 Beveridge, 'Babur-Nama', vol. ii, பக்கம் 525.
2 'History of India,' பக்கம் 323.

நிலைமையை நன்கு சமாளித்தார். முதலில் தமது மனத்திற்குகந்த பழக்கமாகிய மது அருந்துவதைத் துறக்கத் தீர்மானித்தார். அவரது கூற்றுப்படி :

'வெள்ளி, தங்கக் கோப்பைகளையும், குடுவைகளையும், விருந்திற்கான விதவித பாத்திரங்களையும் எடுத்துவருமாறு செய்தேன். அவைகளை அப்போதே அவ்விடத்திலேயே போட்டு உடைத்தேன். இங்ஙனம் மதுவைத் துறந்து மன அமைதி பெற்றேன். அன்றிரவும் மறுநாளும் 300 பெக்குகளும் (Begs), அரண்மனையிலிருந்தோரும், படை வீரர்களும், படைத் துறைச் சாராத மக்களும் மதுவை மறந்தனர்'.[1] அதன் பிறகு பாபர், தமது படையினரை நோக்கி நாநலம் மிக்கதோர் வேண்டுகோளை விடுத்தார். 'பெக்குகளே, பண்பட்ட வீரர்களே !

(பாரசீக மொழி)

மண்ணில் பிறந்தார் மறைவது உறுதி;
இறைவன் ஒருவனே இறவாது வாழ்பவன்.

(துருக்கிய மொழி)

வாழ்க்கையெனும் பேரவையில் வந்துதித்த எவரும்
மரணமெனும் மதுவருந்தி மாள்வதுதான் உண்மை.

வாழ்க்கையெனும் விடுதியிலே வாழவந்த எவரும்
பூவுலகின் இன்னலெனும் இல்லத்திருந்து ஏகிடுவார் இறுதியிலே.

கெட்ட பெயரோடு வாழ்வதைவிட
நல்ல பெயரோடு மடிவது மேல்

(பாரசீக மொழி)

நற்பெயருடன் நானிறந்தால் நலமாகும்;

நற்பெயரே எமக்கு வேண்டும்; ஏனெனில், எமதுடல் நமனுடையதாகும்.

நாம் தியாகிகளாக வாழவும், சமயத்திற்காகப் பழி வாங்கவும் எல்லாம் வல்ல இறைவன் நமக்கு இன்பத்தையும் நல் வாய்ப்பையும் அளித்துள்ளார். அதனால் இப் பகைவருக்குப் புறமுதுகு காட்டுவது இல்லையென்றும், உடலிலிருந்து உயிர் பிரியும்வரை கடுமையான போராட்டத்திலிருந்து

1 Beveridge, 'Babur-Nama,' vol. ii, பக்கம் 552.

பின்வாங்குவது இல்லையென்றும் நீங்கள் அனைவரும் திருக்குரானின் மேல் ஆணையிட்டு உறுதிமொழி எடுக்க வேண்டும்'.[1]

பாபரின் சொற்கள் அவரது படைவீரர்களின் மனத்தில் நன்கு பதிந்தன. 'கூடியிருந்த அனைவரும், பெக்காக இருப்பினும் பணியாளராக இருப்பினும், பெருந்தரத்தோரும் சிறுதரத்தோரும், களிப்புடன் குரானைக் கையிலேந்தி அவ்விதமே செய்வதாக ஆணையிட்டு ஒப்பந்தம் செய்தனர்'.[2]

இறுதியில் ஆக்ராவிற்கு அருகிலமைந்த கான்வா என்னும் இடத்தில் 1527ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் நாளன்று இரு படைகளும் ஒன்ருேடொன்று மோதின. பாபர் முடிவான வெற்றி பெற்ருர். அவருடைய சிறிய ஆனுல் செம்மையான கட்டுப்பாடு கொண்ட படை இராஜபுத்திரப் பெரும் படையினை சின்னுபின்னப்படுத்தியது. இராணு சங்கா தப்பினுர் எனினும் ஹாசன்கான் உள்படப் பெரும்பாலான தலைவர்கள் களத்திலேயே மடிந்தனர். இந்த வெற்றியைக் கொண்டாடு முகத்தான் காஸி எனும் பட்டப் பெயரை பாபர் புனைந்துகொண்டார்.

**சாந்தேரியைக் கைப்பற்றுதல்**

இப் போரினுல் இராஜபுத்திரர் சண்டையிடும் சக்தியாக இருந்த நிலை அநேகமாக மாறியது. ஆயினும் மேதினிராவின் தலைமையிலிருந்த வலிமை மிக்க காவற் படையொன்று சாந்தேரி கோட்டையை விடாது காத்துவந்தது. சமரச யோசனை தோல்வியுறவே அக் கோட்டையைத் தாக்க பாபர் முன்னேறினுர். புறநகர் எளிதாக வீழ்ந்தது. ஆயின் அரண் மிகுந்த கோட்டை கடுமையான எதிர்ப்பு தந்த பிறகே வீழ்ச்சியுற்றது. யாவற்றையும் இழந்துவிட்டதைக் கண்ட காவற் படையின் பெரும் பகுதியினர் இறுதிவரை போரிட்டு வீரமரணம் எய்தினர்.

**ஆப்கானியரின் வீழ்ச்சி**

இங்ஙனம் பாபர் இராஜபுத்திரர்களுக்கு ஒரு முடிவு கட்டினுர். எனினும் வங்காளத்திலும் பீகாரிலும் ஆண்டுவந்த ஆப்கானிய அரசர்களை அவர் சமாளிக்கவேண்டியிருந்தது. 1528ஆம் ஆண்டில் அவர் மேற்கொண்ட முதல் நடவடிக்கையின்போது கங்கை யாற்றின்மீது பாலம் அமைத்து, அதனைக்

1 Ibid., பக்கம் 556.

2 Ibid., பக்கம் 557.

கடந்து சென்று கன்னேசியிலிருந்த சிறு படையினை அழித்தார். அவர் 1529ஆம் ஆண்டில் காக்ரா ஆற்றைக் கடந்து ஆப்கானியரை அடியோடு முறியடித்தார்.

**பாபரின் மறைவு**

இந்த வெற்றியுடன் பாபரின் படையெடுப்புகள் முடிவுற்றன. அடுத்த ஆண்டு அதாவது 1530-ல் அவர் மரணமெய்தினர். அவர் இறக்கும்போது நாற்பத்தேழு வயதே நிரம்பியவர் என்பதால் ஓரளவு இளம் வயதில் இறந்தார் எனலாம். ஆயின் அவரது கடுமையான உழைப்புக் காரணமாக உடல் தளர்ச்சியுற்றது. இந்தியாவின் தட்ப வெப்ப நிலையும் அவர் இறப்பதற்குக் காரணமாய் அமைந்தது. அவர்தம் மரணம்பற்றிய கதை யாவரும் அறிந்ததே. அவரது மூத்த மகனுகிய ஹுமாயூன் கடுமையாக நோயுற்றிருந்தார். தம்முயிரை அர்ப்பணித்துத்தான் தமது மகனின் உயிரைக் காக்க முடியும் என நம்பிய பாபர், தமது விருப்பத்தை நிறைவேற்றிவைக்குமாறு முஸ்லீம் சாதுவின் பேரால் இறைவனை வழிபட்டு வேண்டினர். தமது தனயனின் படுக்கையை மூன்று முறை வலம் வந்து ‘உனது துன்பங்கள் அனைத்தும் என்னை வந்து அடையட்டும்’ எனக் கதறி அழுதார். அவரது வழிபாடு வீண்போகவில்லை. விரைவிலேயே ஹுமாயூன் பிழைத்தெழுந்தார். ஆயினும், 1530ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி பாபர் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் விருப்பப்படியே காபூல் நகருக்கு அருகில் அமைந்த, அவரது மனத்திற்குகந்த பூங்காக்களில் ஒன்றில் பாபரின் உடல் புதைக்கப்பெற்றுள்ளது. அவரது வழிவந்தோராகிய ஷாஜஹான், அவர்தம் எளிய கல்லறையைச் சுற்றி மசூதியொன்றைக் கட்டுவித்தார்.

**பாபரின் குண இயல்பு**

பாபர், ‘முரட்டுக் குணம் கொண்ட தைமூர் குலத்தவர்தான் எனினும், ஆசிய வரலாற்றில் வருகின்றவர்களில் அவரே மிகுந்த மனிதத் தன்மையும் கவர்ச்சியும் கொண்ட மனிதராவார். கொடிய வெற்றியாளரிடம் சாதாரணமாகக் காண முடியாத உண்மையான இன்ப வாழ்வையும், இயற்கையின்மீதான மாருக் காதலையும் அவர் கொண்டிருந்தார் என்பதை அவரது வாழ்க்கைக் குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. அவர் வாழ்ந்த கால நிலையை வைத்து எண்ணும்போது அவரைக் கொடியவர் என்று கொள்ள முடியாது. அவரது காலத்திற்கும், இனத்திற்கும் புறம்பான அருளிரக்கத்தையும், மீண்டும் மீண்டும் மன்னிக்கும் பண்பையும் அவரிடம் காண முடியும்.

பாபரைப்பற்றிய லேன்பூலின் (Lane-Poole) பின்வரும் புகழ் மிக்க வாசகங்கள் குறிப்பிடத்தகுந்தவை: 'பாபர், மத்திய ஆசியாவையும் இந்தியாவையும் பிணைக்கும் பாலமாகவும், நாடோடிக் கூட்டங்களுக்கும் நன்கமைந்ததோர் பேரரசிற்கும் உற்ற இடை நிரப்பீடாகவும், தாமர்லேனையும் அக்பரையும் இணைக்கவல்ல இடையிணைப்பாளராகவும் விளங்குகிருர். அவரது குருதிக் குழாய்களில் ஆசியாவிற்குப் பெருங் கொள்ளை நோய் போன்று வந்த செங்கிஸ்கான், தைமூர் ஆகியோரின் இரத்தம் கலந்துள்ளது. நாடோடிகளான தார்த்தார்களின் அஞ்சாமை, துடிதுடிப்பு ஆகியவற்றுடன், பாரசீகப் பண்பாட்டையும் நயத்தையும் ஒருங்கே பெற்றவர் பாபர். எழுச்சியற்ற இந்துக்களுக்கு மங்கோலியரின் வலிமையையும், துருக்கியரின் துணிவையும் சக்தியையும் அவர் கொண்டு வந்தார். பொருட் செல்வத்தைத் தேடி வந்த துணிகர வீரரான அவர் பேரரசை நிர்மாணிக்கும் கலைஞர் அல்லர். எனினும், அக்பர் கட்டி முடித்த அழகிய மாளிகையாம் பேரரசிற்கு அடிக்கல் நாட்டியவர் அவரே. பேரரசர் குலம் ஒன்று தோன்ற வழிவகுத்த அவரது இந்திய வெற்றிகளே வரலாற்றில் அவருக்கு நிரந்தரமானதோர் இடத்தைத் தேடித் தந்து விட்டன. ஆயின், அநேகமாக அவர் தமது இளமைக் காலத்தில் செய்த துணிகர வீரச்செயல்களும், எண்ணியதைச் செய்து முடிக்கும் இடையருத முயற்சியும், அவற்றைச் சுவைபட விளக்கவல்ல குறிப்பேடுகளை எழுதிவைத்ததும் வாழ்க்கை விளக்க நூல்களிலும் இலக்கியங்களிலும் அவரது இடத்தை நிர்ணயிக்கின்றன. பண்பாட்டு மொழியாகவும், இந்தியாவினுடையதைப்போன்றே மத்திய ஆசியாவின் இலத்தீனுகவும் விளங்கிய பாரசீக மொழியில் அவர் கைதேர்ந்த கவிஞராகத் திகழ்ந்தார். சொந்த மொழியாம் துருக்கியில் உரைநடையிலும் செய்யுள் இயற்றுவதிலும் தூய, எளிய நடை கைவரப் பெற்றிருந்தார்.[1]

### முகலாயரின் நிலையும் பாபரின் மரணமும்

பாபரின் அகால மரணத்தினுல் இந்தியாவில் முகலாயரது ஆதிக்கம் ஆபத்தான நிலையில் இருந்தது. தமது வெற்றிகளை உறுதி செய்யவோ, நிலையான அரசாங்கம் ஒன்றை அமைக்கவோ பாபருக்குப் போதிய காலம் இல்லை. அவர் வெற்றி பெற்றதெல்லாம் வாளின் வெற்றியேயாகும். அவரது பேரர் அக்பர்

1 Stanley Lane-Poole எழுதிய 'Babur' ('Ruler of India' Series), 1899, பக். 9, 10.

காலத்தில்தான் முறையான செயற்படுகின்ற ஆட்சி முறை அமைந்தது எனலாம். வடமேற்கு இந்தியாவும் கங்கைச் சமவெளியும் முகலாயரின் ஆதிக்கத்தில் இருந்தபோதிலும், வங்காளம் அவர்கள் ஆதிக்கத்திற்குட்படாமலேயே இருந்தது. புதிய அரச குலத்தின் நலனைச் சிறிது காலத்திற்கு நாசமுறச் செய்த பேரிடர் அப்பகுதியிலிருந்துதான் வந்தது.

### பாபரின் மைந்தர்கள்

பாபருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவர் ஹுமாயூன் ஆவர். தந்தை இறந்தபோது 23 வயது வாலிபராக இருந்த அவர், தந்தையின் படையெடுப்பில் பேருதவியாக இருந்துவந்தார். கம்ரன் (Kamran), ஹிந்தால் (Hindal), அஸ்காரி (Askari) ஆகிய மூவரும் இளைஞராயிருந்த மற்ற இளவரசர்கள்.

### ஹுமாயூனின் இடர்ப்பாடுகள்

தில்லி அரியணை ஏறியவுடனே அவருக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. அவரது சகோதரரான கம்ரன், ஏற்கெனவே காபூலின் ஆளுநராக இருந்தார். அவருக்கு ஹுமாயூன் பஞ்சாபையும் அளிக்கவேண்டியதாயிற்று. பொருளும் ஆள்களும் அவசியமாகத் தேவைப்பட்ட சமயத்தில் இத்தகைய இழப்பினால் ஹுமாயூனின் பொருளாதார நிலை மோசமாகியது. தகுந்த தண்டனை அடைந்து இறக்கும் வரையில் கம்ரன் ஹுமாயூனிடம் பற்றுறுதியற்றே வாழ்ந்திருந்தார். அவருடன் பிற்கால முகலாய குடும்பத்தில் உடன்பிறந்தாரிடையே வெறுப்பு வேற்றுமை குறிப்பிடத்தகுந்த கூறாகியது.

### ஹுமாயூனின் குண இயல்பு

ஹுமாயூன் பல நற்பண்புகளைப் பெற்றிருந்தபோதிலும், ஆற்றலில் அவர் தமது தந்தைக்குக் குறைந்தவரே. அவர் தொடர்ச்சியான கொள்கையை உறுதியுடன் கொண்டுசெல்லும் ஆற்றல் அற்றவராகக் காணப்பெற்றார். அபினை மிகுதியாகப் பயன்படுத்தியது அவரது தளர்ச்சிக்கெல்லாம் காரணமாக இருந்திருக்கலாம். அவரது ஆட்சி 1530 முதல் 1556 வரை இருந்ததாகக் கணக்கிடப்பெற்றபோதிலும், அக் காலத்தின் பெரும் பகுதியை நாடிழந்து அந்நியர் தயவில் வாழ்வதில் கழித்தார். 1540ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து விரட்டப்பெற்ற அவர், இறப்பதற்குச் சிறிது காலத்துக்கு முன்னரே, 1556ஆம் ஆண்டில் அரியணையை மீட்டார்.

**ஆரம்பகாலப் படையெடுப்புகள்**

ஆட்சியின் தொடக்க காலத்தில் அவர் படையெடுப்புகளில் தமது ஆற்றலை வெளிப்படுத்தினுர். ஆதிக்கம் இழந்த லோடி குலத்தில் தோன்றியவரும் ஜான்பூரைக் கைப்பற்றியவருமான முகம்மது லோடிக்கு எதிராக ஹுமாயூனின் முதல் படையெழுச்சி அமைந்தது. அவரை எளிதாக முரியடித்த ஹுமாயூன் அவரை நாட்டைவிட்டே விரட்டினுர். சிறிது காலத்திற்குப் பிறகு முகம்மது லோடி இறந்ததால் லோடி அரசகுலமே வரலாற்றில் அடியோடு மறைந்தது. இவ் வெற்றியைத் தொடர்ந்து குஜராத்தையும் மாளவத்தையும் ஆண்ட வலிமை மிக்க பகதூர் ஷாவிற்கு எதிராக ஹுமாயூன் பல படையெடுப்புகளை மேற்கொண்டார். ஹுமாயூனுக்கு எதிராகச் சதி செய்த முகம்மது ஸாமன் மீர்ஸா எனும் அகதிக்கு பகதூர் ஷா பாதுகாப்பளித்தார். அந்தச் சதிகாரனை ஒப்படைக்க பகதூர் ஷா மறுக்கவே பகைமை முற்றியது. 1535 ஆம் ஆண்டில் பகைப்படைகளை மாண்ட்சர் (Mandsur) எனுமிடத்தில் ஹுமாயூன் முரியடித்தார். பகதூர் ஷாவும் மாளவத்தின் தலைநகரமான மாண்டுவிற்கு ஓடினுர். ஆயினும், அந் நகரையும் பேரரசப் படைகள் எளிதாகக் கைப்பற்றின. அதனுல் அவர் குஜராத்திற்கு ஓடினுர். அங்கேயும் ஹுமாயூன் அவரைத் துரத்திச் சென்ருர். நான்கு மாத முற்றுகைக்குப் பிறகு நாட்டிலிருந்த வலிமை மிக்க கோட்டைகளில் ஒன்ருன சாம்பனிரைக் (Champaner) கைப்பற்றினுர். அவர் அனுபவம் மிகுந்த பெரும் படைத்தலைவராக இல்லாதபோதிலும் அச்சம் சிறிதும் கொள்ளாதவர். இச் சமயத்திலும் விளைவினைக் கருதாத துணிச்சலுடன் தாக்குதலில் ஈடுபட்டுப் பெரும் புகழ் கொண்டார். குஜராத்தை வென்றபிறகு ஹுமாயூன் தமக்கே உரித்தான குறிக்கோள் அற்ற நிலையில் செயலாற்றத் தொடங்கினுர். பல திசைகளிலிருந்தும் ஆபத்துகள் உருவாகிவந்த போதிலும் அவர் வீணே காலத்தைக் கழிக்கலானுர். அவரது படையின் ஒரு பகுதிக்குத் தலைவராக இருந்த அவரது தம்பியாகிய அஸ்காரியின் துரோகச் செயலும், பெரும் படையுடன் பகதூர் ஷா திரும்பிவந்ததும் ஹுமாயூனின் நிலையை மோசமாக்கின. நீண்ட காலத்திற்கு அவர் வடஇந்தியாவில் இல்லாது போனதால் புரட்சிக் கலகங்கள் தோன்றுதற்குத் தூண்டுதல் கிடைத்தது. இறுதியாக வளர்ந்துவந்த ஷெர்ஷாவின் ஆதிக்கம் காரணமாக ஹுமாயூன் மேற்குப் பகுதியைக் கைப்பற்றும் எண்ணத்தைக் கைவிட்டுக் கிழக்கில் தமது கவனத்தைச் செலுத்தவேண்டியவரானுர்.

**ஷேர்ஷாவின் ஆரம்பகால வாழ்க்கை**

இந்திய வரலாற்றில் தலைசிறந்து விளங்கியவர்களில் ஷேர்ஷாவும் ஒருவர். அவர் எப்போது பிறந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பதினைந்து ஆண்டுகளில் அவர் தோன்றியிருக்க வேண்டுமெனப் பொதுவாகக் கொள்ளப்பெறுகின்றது.[1] இங்ஙனம் அவர் புகழ் ஏணியின்மீது ஏறியபோது ஐம்பது வயதை எட்டியிருந்தார். பரீத் என்பது அவரது இயற் பெயர். அவர் கலப்பற்ற ஆப்கானிய குலத்தில் உதித்தவர். அவரது குடும்பத்தினர் நீண்ட காலம் இந்தியாவில் வாழ்ந்திருந்தவர்கள் அல்லர். எவ்வாறெனில், அவரது பாட்டனாரான இப்ரஹீம் என் பவரே பலால் லோடியின் அழைப்பிற்கிணங்கி முதன்முதலாக இந்தியாவிற்கு வந்தவர். ஷேர்ஷாவின் இளமைப் பருவத்தின் ஒரு பகுதி அவரது தந்தையின் சொத்துகளை நிர்வகிப் பதிலேயே செலவழிந்தது. பிற்காலத்தில் அவரைப் புகழ் மிகுந்தவராக உயர்த்திய ஆட்சித் துறையில், குறிப்பாக வரி கொள்வதில், அவர் பெற்றிருந்த ஆற்றலின் அறிகுறிகள் அப்போதே தென்படலாயின. காலப்போக்கில் அவர் தமது தந்தையின் சொத்துகளுக்கு வாரிசானார். அதன் பிறகு அவர் ஆக்ராவிற்குச் சென்று அங்கே பாபரின் சேவையிலீடுபட்டார். தரீக்கி-ஷேர் ஷாஹியின் ஆசிரியரான அப்பாஸ்கானுடைய கருத் துப்படி, ஷேர் ஷா, முகலாயரை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்தைக் குறுகிய காலத்திற்குள் கொள்ள லானார். பாபரின் கவனம் அவர்மீது விழுந்தது. அப்போது அவரது நோக்கம் பற்றிய வதந்திகள் பாபரின் காதுகளை எட்டின. பாபர் தம் அமைச்சர்களில் ஒருவரிடம் பின்வருமாறு கூறியதாகத் தெரிகின்றது: ‘ஷேர்கானின்மீது (ஷேர் ஷா அப் போது கொண்டிருந்த பட்டப் பெயர்) ஒரு கண் வைத்திருங் கள். இவர் மதிநுட்பம் வாய்ந்தவர். இவர் முகத்தில் அரச களை ஒளிர்கின்றது. இவரைவிடப் பெரிய ஆப்கானியச் செல் வந்தர்களை யாம் பார்த்துள்ளோம். ஆனால், அவர்கள் எம் மனத்தில் ஆழப் பதிந்ததில்லை. இவரைச் சிறையிலடைத்தாக வேண்டுமென்ற எண்ணம் இவரைப் பார்த்ததும் ஏற் பட்டது. ஏனெனில், பெருமைப் பண்புகளும் வல்லமையின் வடுக்களும் இவரிடம் யாம் காணுகின்றோம்.’ பேரரசரின் சூழ்ச்சியைச் சந்தேகித்த ஷேர் ஷா 1528ஆம் ஆண்டில் தமது ஜாகீருக்கே தப்பிச் சென்றுவிட்டார். அதனால் அவரை

1 Qanungo எழுதிய ‘Sher Shah’ எனும் நூலில் 1416ஆம் ஆண்டில் ஷேர் ஷா பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாபரின் ஆள்கள் கைது செய்யவில்லை. அதன் பிறகு அவர் பீஹாரை ஆண்டுவந்த சுல்தான் முகம்மதிடம் வேலைக்கமர்ந் தார். சுல்தான் இறந்ததும் அவரது மகனுகிய ஜலால்கானுக்கு ஷெர் ஷாவே காப்பாளரானுர். ஆயின், தமது பணியாளரான ஆற்றல் மிக்க ஷெர்ஷாவிடம் அழுக்காறு கொண்ட ஜலால்கான் வங்காளத்திற்கு ஓடிஞர்.

இங்ஙனம் ஷெர்ஷாவே பீஹாரின் மன்னராகத் திகழலானுர். வலிமையோடு சிறப்புற்று விளங்கிய சுனுர் (Chunar) கோட்டை யின் முன்னுள் தலைவரான டேஜ்கானின் விதவையாகிய லால் மாலிகாவை (Lal Malika) மணந்ததன்மூலமாக அச் சிறப்பு வாய்ந்த கோட்டையைக் கைக்கொண்டு தமது நிலையை ஷெர் ஷா மேலும் உறுதி செய்துகொண்டார்.[1] இதனுல் முகலாயருடனுன நேரடியான கைகலப்பில் அவர் பங்கு கொள்ள வேண்டியதாயிற்று. ஹுமாயூன் அனுப்பிய படை களில் ஒன்று சுனுர் கோட்டையை மிகவும் தீவிரமாக முற்றுகை யிட்டது. அதனுல் அவர்களிடம் ஷெர் ஷா பணிந்தார். தமது புதல்வர்களில் ஒருவனை ஈட்டுப் பொருளாகவும் முகலாயரிடம் ஒப்படைத்தார். ஷெர் ஷா சரணடைந்தபோதிலும், அப்போ திருந்தே அவர்மீதும் அவரது திட்டங்கள்மீதும் பேரரசருக்குப் பெரும் ஐயப்பாடு தோன்றலாயிற்று. இத்தகைய ஐயப் பாடு இரு தரப்பிலும் இருந்துவந்தது. பேரரசர் வாக்குறுதி களை மீறினுர் என்று பல முறை ஷெர் ஷா குற்றம் சாட்டினுர் என்பதை தாரீக்கி-ஃபரீத் ஷாஹியில் பலமுறை குறிப்பிடப் பெற்றுள்ளது. இதற்கிடையில் ஹுமாயூன் குஜராத் படை யெடுப்பில் மும்முரமாக இருந்தார். ஆயின், வடக்கே நடை பெற்ற கலகம் காரணமாக அவர் வெகு விரைவிலேயே குஜராத் படையெடுப்பைக் கைவிடவேண்டியவரானுர். அவர் லக்னோ எனுமிடத்தில் வெற்றிபெற்றுக் கலகத்தை அடக்கி ஞர். கலகக்காரர்கள் பக்கம் ஷெர் ஷாவும் சேர்ந்திருந்தார். அவர் போர்க்களத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளவில்லை. எவ்வாறிருப்பினும், பேரரசரின் வஞ்சகத்திலிருந்து அவரால் தப்ப முடியவில்லை. பேரரசர் சூனுரை முற்றுகையிட்டு ஆறு மாதங்கள் கழிந்து அதனைப் பிடித்துக்கொண்டார். அப் போதும் ரோட்டாக்களுடைய (Rohtas) சிறப்பு வாய்ந்த கோட்டை ஷெர் ஷாவிடம் இருந்தது. அதனை அவர் எவ் வாறு கொண்டார் என்பதுபற்றிக் கருத்து வேற்றுமை மிகுதி

1 இது அப்பாஸ் சர்வாரியின் கருத்தாகும். ஷெர் ஷாவைப்பற்றி இறுதியாக வாழ்க்கை விளக்க நூல் வரைந்த கனுங்கோ இக்கருத்தினைக் கொள்ளவில்லை.

யாகக் காணப்பெறுகின்றது. எனினும், சூழ்ச்சியைக் கையாண்டே அக் கோட்டையைக் கைப்பற்றியிருக்க வேண்டு மென்பது தெளிவு. பேரரசர் சூனர் கோட்டையை முற்றுகை யிடுவதில் ஈடுபட்டிருந்த சமயத்தில் வங்காளத்தின் ஒரு பகுதியைத் தம் நாட்டோடு இணைத்துக்கொள்வதில் ஷெர்ஷா தீவிரமாக இருந்தார். அம் மாநிலத்தின் தலைநகரமான கௌரை (Gaur) முற்றுகையிட்டு இறுதியில் அதனைக் கைப்பற்றினர்.

**ஹுமாயூனும் ஷெர்ஷாவும் ; வெற்றி பெற்ற ஷெர் ஷா தில்லி அரியணையைக் கைப்பற்றுதல்**

இப்போது ஷெர் ஷா ஹுமாயூனுடன் பேச்சுவார்த்தை துவங்கினர். உட்குடியாக இருந்து வங்காளத்தை ஆளுவதற்குத் தமக்கு அனுமதி தருவதானல் பீஹாரை ஹுமாயூனிடம் ஒப்படைப்பதாக ஷெர் ஷா தம் விருப்பத்தைத் தெரிவித்தார். முதலில் இந்த யோசனையைப் பேரரசர் ஏற்றபோதிலும், இரு வருக்கும் இடையே இருந்த ஐயப்பாடு காரணமாக நிரந்தர மான ஒப்பந்தம் ஏற்படாதுபோயிற்று.

மனமார உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்று ஷெர் ஷா நினைத்தாரா இல்லையா என்பது ஐயத்திற்குரிய செய்தியே. பொதுவாக ஆப்கானியருடைய நம்பிக்கை என்பது நம்பிக்கைக்கேடாகவே அமைவது வழக்கம். எவ்வாறிருப்பினும், பேரரசப் படைகள் அவருக்கு எதிராகப் புறப்பட்டதும், தமக்குத் தீங்கிழைத்துவிட்டதாக ஷெர் ஷா கூறமுற்பட்டார். 1538ஆம் ஆண்டில் வங்காளத்திற்கு ஹுமாயூன் நேரடியாகச் சென்று கௌரை மீட்டார். ஆனல், வழக்கமாக இருந்த அவரது உறுதி யற்ற தன்மையினல் அவ் வெற்றி பயன் தரவில்லை. தமது வெற்றியைத் தொடர்ந்து தீவிரமான தாக்குதலில் இறங்காது மூன்று அரிய மாதங்களை ஹுமாயூன் வீணக்கினர். அச் சமயத் தில் சூனரையும், பீகாரிலிருந்த தமது பகுதிகளையும் மீட்டுக் கொள்வதில் ஷெர் ஷா வெற்றியடைந்தார். இறுதியில் பேரரசர் பின்வாங்க நேர்ந்தது. மழைக்காலமாதலால் வெள்ளம் அவரது போக்குவரவை இடர் மிகுந்ததாகச் செய்தது. அவரது படை களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் தளவாடங்களும் தட்டுப்பட்டன. இவற்றிற்கெல்லாம் மேலாக ஹுமாயூனின் சகோதரரான மீர்ஸா ஹிந்தால் புரட்சி செய்து தம்மைப் பேரரசர் என அறிவித்துக்கொண்ட செய்தி ஹுமாயூனை எட்டியது. ஆயின், சிறப்பாக கம்ரனின் செயல் காரணமாக அப் புரட்சிக் கலகம் அழிந்தது. வடக்கிலிருந்து படையுடன் வந்த கம்ரன் ஹிந்தாலைப் பணியவைத்தார். ஆயினும், உதவிப் படைகளை

எதிர்நோக்கியிருந்த பேரரசருக்கு வேண்டிய படைகளை கம்ரன் அனுப்பத் தவறிவிட்டார்.

இப்போது ஷெர் ஷாவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஹுமாயூன் விழைந்தார். சமாதானக் கோரிக்கையுடன் ஷேக் கலீலை (Shaikh Khalil) ஷெர் ஷாவின் பாசறைக்கு அனுப்பினார். ஆயின், அத் தூதுவர் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார். அப்பாஸ்கானின் குறிப்புப்படி, ஷெர்ஷா ஷேக் கலீலை இரகசியமாகத் தமக்கு ஆலோசனை கூறுமாறு கேட்டார். அதற்கு ஷேக் பின் வரும் பதிலை அளித்தார்: 'சமாதானத்தைவிட ஹுமாயூனுடன் சண்டையிடுவது உமக்கு நல்லது. ஏனெனில், பேரரசரின் படையில் பெருங் குழப்பம் நிலவுகின்றது. அவரிடம் குதிரைகளோ மாடுகளோ இல்லை. அவருக்கு எதிராக அவர்தம் சகோதரர்களே புரட்சி செய்கின்றனர். வேறு வழியின்றியே அவர் உம்மிடம் இப்போது சமாதானம் செய்துகொள்ள முன் வருகின்றார். இறுதியில் அவர் அதன்படி நடக்கமாட்டார். இத்துணை அளவிற்கு வெற்றி வாய்ப்பினைப் பெற்ற தாங்கள் அதனை நழுவவிட்டுவிடக்கூடாது. ஏனெனில், இத்தகைய வாய்ப்பு மீண்டும் கிடைப்பது அரிது.'[1] பேரரசப் படையின் நிலையை நன்கறிந்திருந்த ஷெர் ஷாவிற்கு இது உகந்த யோசனையாக இருந்தது. தம் கீழிருந்த படைத் தலைவர்களுக்கு எழுதிய நீண்ட கடிதத்தில் 'ஹுமாயூன் தம்முடன் விளையாடுகிறார்' என ஷெர்ஷா குறிப்பிட்டார்; தமது படைகளைப் போருக்கு ஏவினார்.

**சௌசா (Chausa) சண்டை**

1539ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கங்கைக் கரையில் அமைந்த சௌசாவில் தங்கியிருந்த பேரரசர்மீது ஷெர் ஷா பாய்ந்தார். வியப்புற்றுச் செய்வதறியாது நின்ற பேரரசப் படை சிதறி ஓடியது. பேரரசரது பாசறையில் இருந்த பொருள்கள் அனைத்தும் ஷெர்ஷாவிடம் சிக்கின; உவளக மாதரும் பிடிபட்டனர். ஆனால், ஷெர் ஷா அவர்களைப் பெருந்தன்மையோடு நடத்தி ஆக்ராவிற்கு அனுப்பி வைத்தார். புண்பட்ட ஹுமாயூன் தோலினால் ஆன தண்ணீர்ப் பையின் உதவி கொண்டு ஆற்றைக் கடந்துசென்றார். பல ஆண்டுகளுக்குப் பின் தமக்கு உதவி அளித்தவரை ஒரு நாளைக்கு அரியணையின்மீது அமர்த்திவைத்தார். எப்படியோ ஆக்ரா நகரை அவர் அடைந்தார். காலங்கடந்து தங்களது தவற்றை உணர்ந்துகொண்ட அவரது சகோதரர்கள் அவருக்கு நல்ல

1 Elliot and Dowson, Vol. iv, பக். 372.

வரவேற்பளித்தனர். அப்போதுதான் அவர்கள் ஆப்கானியப் பகைவருக்குமுன் ஒற்றுமையின்மை எத்துணைக் கேடு பயப்பது என்பதை உணர்ந்திருந்தனர். ஆனால், அதற்குள் ஹுமாயூனின் படை அழிந்துவிட்டது போர்க்களத்தில் அவர் 8,000 வீரர்களை இழந்ததாகக் கூறப்படுகின்றது. இப்போது ஷெர் ஷா தம்மைப் பேரரசர் என அறிவித்துக்கொண்டார்; 'ஷெர் ஷா அதில்' (Sher Shah Adil) எனும் விருதுப் பெயரையும் வைத்துக்கொண்டார். முகலாயரை இறுதியாக விரட்டுதற்காக மாளவம், குஜராத் ஆகியவற்றின் தலைவர்களைத் துணைக்கழைத்தார். ஆப்கானியப் படை நாள்தோறும் வளர்ந்து வந்தது. ஆனால், அதே சமயத்தில் தமது படைகளைத் திருத்தி அமைக்க முயன்ற ஹுமாயூனுக்குத் தோல்வியே கிட்டியது. தலைமைப் பதவியைப் பெறமுடியாத கம்ரன், வெறுப்புக் கொண்டு தம் படையுடன் பஞ்சாபிற்குத் திரும்பிச் சென்றார். 1540ஆம் ஆண்டு மே மாதத்தில் பகைப்படைகள் கன்னோசியில் மீண்டும் சந்தித்தன. 'தாரீக்கி-ரஷீதி'யின் ஆசிரியரும், ஹுமாயூனின் உறவினருமான மீர்ஸா ஹைதர் இப்போரில் பங்கு கொண்டார். அவர் பேரரசப் படையின் கட்டழிவினை விளக்கிக் கூறுகின்றார். அத்தகைய படை, வெற்றிப் பெருமிதத்துடன் போரிட்ட ஆப்கானியப் படையின்முன் நிற்பதரிது. ஷெர் ஷா முன்னேறித் தாக்கியதைக் கண்ட பேரரசப் படையினர் இழிவான முறையில் சிதறி ஓடத் தலைப்பட்டனர். இங்ஙனம் ஹுமாயூனின் இறுதி வாய்ப்பும் பாழாகியது மிகுந்த இடருடன் ஹுமாயூன் போர்க்களத்திலிருந்து தப்பிச் சென்றார். ஆயினும், அவரது அரியணை பறிபோகியது. அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்குத் தன் நாடிழந்து பிற நாடுகளில் வாழ்ந்துவந்தார்.

**ஷெர் ஷா பஞ்சாபையும் இராஜபுதனத்தையும் அடக்குதல்**

ஹுமாயூன் நாட்டைவிட்டு வெளியேறி வாழ்ந்த ஆண்டுகளின் கதையைக் கூறுவதற்குமுன் ஷெர் ஷாவின் ஆட்சிபற்றியும், அவரை அடுத்து வந்த சூர் அரசர்களின் ஆட்சிக் காலங்களைப்பற்றியும் விளக்குவது பொருத்தமுடையதாகும். ஷெர்ஷா ஒரு கொள்ளைக்காரர் அல்லர். அவர் வெற்றி வீரராக மட்டுமன்றித் தில்லி அரியணையில் வீற்றிருந்த ஆற்றல் மிகுந்த அரசர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். ஒழுங்கினை நிலைநாட்டுவதே அவரது முதற் பணியாக இருந்தது. அவர் பஞ்சாபின்மீது படையெடுத்துச் சென்று கிளர்ச்சி மிக்க கக்கார் கூட்டத்தினரைப் பணியவைத்தார். அதைத் தொடர்ந்து இராஜபுதனத்தின்மீதும் மத்திய இந்தியாவின்மீதும் படையெடுத்துச் சென்றார். ரெய்சினில் இருந்த காவற் படையினை அவர் படு

கொலை செய்தது, இப் பகுதிகளில் அவர் பெற்ற வெற்றிகளுக்குக் களங்கம் ஏற்படுத்தியது. அவர் கொடுமையாக நடந்துகொண்ட மிகச் சில சமயங்களில் இதுவும் ஒன்று. பொதுவாக அவர் நற்செவ்வியுடையவராகவும் அருளீரக்கம் கொண்டவராகவும் விளங்கினர். அவரது இனத்தவரிடம் பொதுவாகக் காணமுடியாத தாராளத்தன்மையுடன் தம்மிடம் தோற்ற பகைவர்களிடம் ஷெர் ஷா நடந்துகொண்டார்.

**அவரது ஆட்சித்துறை சார்ந்த சீர்திருத்தங்களும் பிற சீர்திருத்தங்களும்**

தமது குறுகிய ஆட்சிக் காலத்தில் ஷெர் ஷா போர்களிலேயே அதிகக் கவனம் செலுத்தியபோதிலும், முறையான அரசாங்கத் திட்டத்தை அமைக்க அவர் தவறிவிடவில்லை. குறிப்பாக அவர் நிதி ஆட்சிக்கான திட்டத்தைப் புகுத்திப் புகழ் மிக்கவரானர். அக்பரின் பிற்கால ஆட்சி முறை யாவரும் அறிந்த ஒன்று. ஆயின், ஷெர் ஷா இட்ட அடித்தளத்தின் மீதே அக்பரும் அவரது அமைச்சரான தோடர் மாலும் முகலாய ஆட்சி முறையெனும் அழகிய மாளிகையை எழுப்பினர். இந்திய வரலாற்றில் காணப்பெறும் பண்டைக் கால மன்னர்களைப்போலவே ஷெர் ஷாவும் சாலைகள் அமைப்பதிலும், வழிப்போக்கருக்கு விடுதிகள் ஏற்படுத்துவதிலும் அக்கறை காட்டினர். புதிய மேம்பட்ட நாணயங்களையும் வெளியிட்டார். வல்லமை பெற்று மனச்சாட்சிக்கு உட்பட்ட ஷெர் ஷாவைப் போன்று குறுகிய ஐந்தாண்டுக் காலத்தில் இத்துணைச் செறிந்த வாழ்க்கையை மேற்கொண்டவர் யாருமிலர். வின்செண்ட் ஸ்மித்தின் கருத்துப்படி, ''ஷெர் ஷா இறவாது இருந்திருந்தால் (இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால்), அவர் தமது குலத்தை நிலைநாட்டியிருப்பார். 'மாபெரும் முகலாய மன்னர்கள்' வரலாற்றில் தோன்றியிருக்க மாட்டார்கள்.''

**ஷெர்ஷாவின் மறைவும் சூர் குலத்தில் தோன்றிய பிற மன்னர்களும்**

கலஞ்சார் முற்றுகையின்போது வெடிமருந்துக் குவளை வெடித்ததால் படுகாயமுற்ற ஷெர் ஷா 1545ஆம் ஆண்டு மே மாத முடிவில் இறந்ததும் அவரது குறிய ஆட்சியும் முடிவுற்றது. பல தலைசிறந்த மக்களைப் போலவே ஷெர்ஷாவும் தமக்குப் பின் ஆற்றல் மிக்க வாரிசை விட்டுச் செல்லவில்லை. இஸ்லாம் ஷா அல்லது சலீம் ஷா எனும் பெயருடன் அவரது இரண்டாம் மகன் அரியணையேறினர். ஆயின், அவர் மனநிறைவு தராத

மன்னராகத்தான் வாழ்ந்துவந்தார். முதன்மையான ஆப் கானியத் தலைவரைப் புறக்கணித்த அவரது கொள்கையால் சூர் குலத்தின் நிலையே மோசமாகியது. 1553ஆம் ஆண்டில் அவர் இறந்ததும் குழப்பம் தோன்றியது. பலர் அரியணைக்கு உரிமை கொண்டாடினர். இதனால் ஹுமாயூனுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. இங்ஙனம் 1555ஆம் ஆண்டில் முகலாயரது ஆதிக்கம் மீண்டும் ஏற்பட்டது.

**ஹுமாயூனின் பிற்கால வரலாறு**

இப்போது ஹுமாயூனின் துன்பம் நிறைந்த நீள் பயணத்தைக் காணத் திரும்புவோம். இதனை அறிந்துகொள்ள ஜாஹர் எழுதிய 'தஸ்கிராத்–உல்-வாக்கியத்' (Tazkirat-ul-Wakiat) முக்கியமான சான்றாக அமைகின்றது. ஜாஹர் ஹுமாயூனின் பணியாள். பேரரசரின் பயணத்தின்போது அவருடனே இருந்து பணியாற்றியவர். வழக்கம்போல ஹுமாயூனின் சகோதரர்களான கம்ரனும் அஸ்காரியும் அவருக்கு உதவி செய்யவில்லை. ஆப்கானியரோடு அவர்கள் மேலும் போரிட மறுத்துக் காபூலுக்குத் திரும்பினர். ஹுமாயூன் சில ஆதரவாளர் களுடன் புகலிடம் கிடைக்குமென்ற நம்பிக்கையோடு சிந்து மாநிலத்திற்குச் சென்றார். ஆயின், அங்கே அவர் வெற்றி பெற வில்லை. சிந்து ஆற்றின்மீது அமைந்த பக்கார் கோட்டையைக் கைப்பற்றுவதில் தோல்வி கண்டார். அதன் பிறகு மணல் நிறைந்து, வாழ்வதற்கு அரிய அப் பகுதியில் அவர் இங்குமங்கும் விரட்டப்பெற்றார். பசியாலும் தாகத்தாலும் சொல்லொணாத் துன்பம் அடைந்தார். அவரது ஆதரவாளர்களில் பலர் அவரை விட்டுப் பிரிந்து சென்றனர். அப்போது கன்னோசிப் போர்க்களத்திலிருந்து உயிர்தப்பி ஓடிவந்து ஹுமாயூனுடன் மீண்டும் சேர்ந்துகொண்ட பைராம்கான் எனும் உண்மையான ஊழியரே அவரை ஆதரித்தார். முகலாய ஆதரவாளர்களில் பற்றுறுதி மிக்கவரான பைராம்கான், அக்பரின் ஆட்சிக் காலத் தில் சிறந்த தொண்டாற்றினார். அமர்கோட் அரசரது நிழலில் சிறிது காலம் தங்கியிருந்தபோது 1542ஆம் ஆண்டில் ஹுமாயூனுக்கு மகன் பிறந்தான். அதனால் அவரது துன்பங்கள் ஓரளவு மறைந்தன. 1542ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் தேதி யன்று அவரது இல்லத்தரசியான அமீதா பேகம், பிற்காலத்தில் மாண்பு மிக்க அக்பராகத் திகழ்ந்த ஆண்மகனை ஈன்றெடுத்தார். அப்போது ஹுமாயூன் மிக வறியராய் இருந்த காரணத்தால் தமது ஆதரவாளர்களுக்கு ஒரு கஸ்தூரிப் பையைமட்டும் பரிசாக வழங்கினார். அவர்கள் அதனைச் சிறு துண்டுகளாக உடைத்துத் தங்களுக்கிடையே பகிர்ந்துகொண்டனர்.

**ஹுமாயூன் பாரசீகத்திற்கு ஓடுதல்; காண்டஹாரையும் காபூலையும் வெற்றி கொள்ளுதல்**

காண்டஹாருக்குச் செல்வது என ஹுமாயூன் உறுதி பூண்டார். ஆனால், அவ்வாறு செய்ய அவர்தம் சகோதரர்கள் அனுமதிப்பதாக இல்லை. தமக்கு எதிராக அஸ்காரி படையெடுத்து வந்த செய்தி அவருக்கு எட்டியது. அஸ்காரியை எதிர்த்துப் போரிடும் நிலையில் ஹுமாயூன் இல்லை. அதனால் ஏற்கெனவே பாதுகாப்பு அளிக்குமாறு கோரித் தாம் கடிதம் எழுதிய ஷா தமாஸ்பின் (Shah Tahmasp) நாடாகிய பாரசீகத்திற்கே ஓடிவிடுவது என முடிவு செய்தார். இங்ஙனம் அவர் ஓட்டமெடுத்தபோது அவர் தமது குழந்தையைப் பின்னால் விட்டுச் செல்லவேண்டியதாயிற்று. அஸ்காரி அக் குழந்தையைக் கைப்பற்றிக் காண்டஹாருக்குக் கொண்டு சென்றார். அங்கே அதனை சுல்தான் பேகத்திடம் ஒப்படைத்தார். அம் மாதரசி அக் குழந்தையை மிகுந்த பரிவுடன் வளர்த்துவந்தார். நாட்டைவிட்டு ஓடிவந்த ஹுமாயூனை ஷா தமாஸ்ப் அன்புடன் வரவேற்றார். சக அரசர் ஒருவருக்கு அளிக்கவேண்டிய மரியாதைகளையெல்லாம் அவருக்கு அளித்தார். ஆயினும், அவர் ஷியா சமயப் பிரிவைச் சார்ந்தவராதலால் தமது விருந்தினரும் அதனைப் போற்றவேண்டுமென்று விரும்பினார். உண்மையில் ஹுமாயூன் அவ்வாறு செய்தாரா என்பது ஐயத்திற்குரிய ஒன்று. அநேகமாக அவசியம் காரணமாக ஷாவின் விருப்பத் திற்கிணங்க அச் சமயப் பிரிவின் புறச்சடங்குகளை ஹுமாயூன் ஏற்றிருக்கலாம்.

சிறிது காலத்திற்குப் பிறகு (ஷியா பிரிவைச் சார்ந்த பைராம்கானின் தூண்டுதலின் பேரில்) காண்டஹாரை வெல்வதற்காக ஒரு படையை ஷா தமாஸ்ப் ஹுமாயூனுக்குக் கொடுக்க முன்வந்தார். 1544ஆம் ஆண்டில் ஹுமாயூன் படையுடன் முன்னேறத் தொடங்கினார். காண்டஹாரைப் பாரசீகரிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்ற நிபந்தனையோடு தான் உதவிப் படையை ஷா அளிக்க முன்வந்தார். தீவிரமான முற்றுகைக்குப் பின்னர் காண்டஹார் நகரின் காவற் படைத் தலைவராக இருந்த அஸ்காரி சரணடையச் சம்மதித்தார். ஒப்பந்தப்படி காண்டஹார் நகரை ஹுமாயூன் பாரசீகருக்கு அளித்தபோதிலும், அவர்கள் கையில் அதனை நீண்ட காலம் விட்டுவைக்கும் எண்ணம் ஹுமாயூனுக்கு இல்லை. ஷா தமாஸ்பின் பிரதிநிதியாக ஹுமாயூனுடன் வந்த அவரது மகன் மீர்ஸா முராத் இறந்ததும், ஹுமாயூன் திடீரென்று அந் நகரத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டார். அதனைத் தொடர்ந்து அவர்

முன்னேறிக் காபூலைக் கைப்பற்றினர். சிறிது காலத்திற்குள் தமது சிறு மைந்தனையும் மீட்டார். அதனைத் தொடர்ந்து பல நீண்ட சலிப்பூட்டும் படையெடுப்புகள் நேர்ந்தன. அதில் வெற்றி தோல்விகள் மாறிமாறி வந்தன. இறுதியில் ஹுமாயூனே வெற்றி பெற்றார். அவரை ஆதரித்த சகோதரரான ஹிந்தால் களத்திலேயே கொல்லப்பட்டார். சிறைப்பட்ட அஸ்காரி மெக்காவிற்கு அனுப்பப்பெற்றார். தொல்லைகளுக்கெல்லாம் மூல காரணமாக இருந்தவரும், மீண்டும்மீண்டும் ஹுமாயூனின் தய வினைப் பெற்றவருமான கம்ரன் கண்களைப் பறிகொடுத்துவிட்டு மெக்காவிற்குப் பயணமானர்.

**ஹுமாயூன் இந்தியாவை மீட்டல்**

ஹுமாயூன் ஆப்கானிஸ்தானத்தைக் கைப்பற்றியதோடு, இந்தியப் பேரரசை மீட்பதற்கான தளம் ஒன்றையும் அவர் பெற்றார். மேலும், சலீம் ஷாவின் மரணத்திற்குப் பிறகு தோன்றிய குழப்பமான நிலை அவருக்குச் சிறந்த வாய்ப்பினை நல்கியது. 1554ஆம் ஆண்டு இறுதியில் பெரும் படை ஒன்றுடன் அவர் புறப்பட்டார். முன்னணிப் படைக்கு அவரே தலைமை தாங்கிச் சென்றார். படையின் மற்றப் பகுதியைப் பற்றார்வம் மிகுந்த பைராம்கானிடம் ஒப்படைத்தார். லாகூர் உள்ளிட்ட பஞ்சாபின் பெரும் பகுதி எதிர்ப்பேதுமின்றி ஹுமா யூன் கையில் சிக்கியது. ஆப்கானியர் திடீரென்று தாக்கப் பெற்றதாலும், அவர்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பினை அளிக்க முடியாதவாறு பிளவுபட்டிருந்தமையாலும் ஹுமாயூனின் வேலை எளிதாயிற்று. இறுதியில் முன்னேறிவந்த முகலாயரைத் தடுத்து நிறுத்துவதற்காக அரியணைமீது உரிமை கொண்டாடிய சூர் குலத்தில் தோன்றியவருள் ஒருவரும், அப்போது தில்லியை ஆண்டுவந்தவருமான சிக்கந்தர் சூர் ஒரு படையினை அனுப் பினர். மாச்சிவாரா எனுமிடத்தில் (பஞ்சாபின் லூதியான மாவட்டத்தில் உள்ளது) 1555ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சண்டை நடைபெற்றது. நகரத்தில் தீப்பிடித்துக்கொண்டதைக் கண்டு பீதியுற்று ஓடிய ஆப்கானியர் படுதோல்வியுற்றனர். ஹுமாயூன் இவ் வெற்றியைத் தொடர்ந்து 1555ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சர்ஹிந்த் எனுமிடத்தில் மற்றொரு வெற்றியும் பெற்றார். சிக்கந்தர் சூர் ஓட்டமெடுத்தார். அதனால் தில்லியை அடையும் வழி தடையற்றிருந்தது. 1555ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஹுமாயூன் அந் நகருக்குள் பிரவேசித்தார். பஞ்சா பில் அமைதியின்மை வளர்வதைத் தடுப்பதற்காக இளைஞரான இளவரசரான அக்பரை ஆளுநராகவும் பைராம்கானை அவ ருக்குக் காப்பாளராகவும் நியமித்தார்.

**அவருடைய மரணம், 1556**

ஹுமாயூன் திடீரென்று இறந்ததால் அவரது ஆட்சி முடிவுற்றபோது பேரரசை மீட்கும் பணி முற்றுப்பெறுமலே இருந்தது. அவருடைய மரணம்பற்றிய கதையைத்[1] 'தபகாதி அக்பாரி' யில் நிஸாமுதீன் அஹ்மத் பின்வருமாறு தந்துள்ளார் : '1556ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் தேதியன்று[2] மாலையில் நூல் நிலைய மாடிக்கு ஏறிய பேரரசர் அங்கே சிறிது நேரம் நின்றிருந்தார். அங்கிருந்து அவர் இறங்கிவந்தபோது மூயஸின் (Muezzin) வழிபாட்டிற்கான அழைப்பை உரக்க அறிவித்தான். அப்போது பேரரசர் பயபக்தியுடன் இரண்டாவது படியில் மண்டியிட்டார். மீண்டும் அவர் எழுந்தபோது பாதம் வழுக்கியதால் மாடிப் படியிலிருந்து தரையில் வந்து வீழ்ந்தார். அவருக்குப் பணிவிடை செய்யக் காத்திருந்தவர்கள் பேரதிர்ச்சியுற்றனர். நினைவிழந்த நிலையில் இருந்த பேரரசரை அரண்மனைக்குள் எடுத்துச் சென்றனர். அரண்மனை மருத்துவர்கள் தங்கள் சக்திக்கு இயன்றவற்றையெல்லாம் செய்துபார்த்தனர்; பயன் ஒன்றும் ஏற்படவில்லை. அடுத்த நாள் அவரது நிலைமை மோசமாகியது; மருத்துவத்திற்கு அப்பாற்பட்டதாகிவிட்டது. இளவரசர் அக்பரை அழைத்துவருவதற்காக ஷேக் ஜுலியை பஞ்சாபிற்கு அனுப்பிவைத்தனர். 1556ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் தேதி அந்தி வேளையில் அவர் (ஹுமாயூன்) இவ்வுலகத்தைவிட்டு இன்பலோகத்திற்குச் சென்றார்.'

1 இது பேரரசரின் மரணம்பற்றிய அரசவையினரின் கூற்று எனலாம். அபின் மயக்கத்தில் இருந்ததால் இந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டது எனப் பிற எழுத்தாளர் கூறுவர்.

2 சரியான நாள்பற்றி அறிஞர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொள்கின்றனர். ஜனவரி 24ஆம் தேதி என பிவரிட்ஜும் வின்சென்ட் ஸ்மித்தும் கொள்வர். எப்படியும், பேரரசரின் மரணம்பற்றிய செய்தியினைப் பல நாள்களுக்கு மறைத்தே வைத்திருந்தனர்.

# 2. அக்பரின் ஆட்சிக் காலம் (1556—1605)

## அக்பர் அரசு எய்தல்

மாங்கோட் கோட்டையில் தஞ்சம் புகுந்திருந்த சிக்கந்தர் சூர் என்பாருக்கு எதிராகப் போர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு குர்தாஸ்பூர் மாவட்டத்தில் கலானர் எனுமிடத்தில் தங்கியிருந்த அக்பர், ஹுமாயூனின் மரணச் செய்தியைக் கேட்டறிந்தார். உடனே அவரைப் பேரரசர் எனப் பிரகடனம் செய்ய பைராம்கான் ஏற்பாடு செய்தார். 1556ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பதினேராம் தேதியன்றே தில்லியில் அக்பரைப் பேரரசர் என அறிவித்தனர். கலானரின் தோப்பு ஒன்றில் தனியாகச் செங்கல்லினுல் பீடம் அமைத்து பிப்ரவரி மாதம் பதினுலாம் தேதியன்று அக்பருக்கு முறையாக முடிசூட்டினர்.

## அரசு எய்தியபோது அக்பரின் நிலை

இளவயதினரான அக்பர் ஏறிய அரியணை அத்துணைத் திடமானதன்று. இந்தியாவின் அரியணைக்குத் தைமூரியர் கொண்டாடிய உரிமைக்கு சூரி குலத்தைச் சார்ந்த மூவர் போட்டியிட்டனர். முகம்மது அடில் ஷா, தமது உறவினரைக் கொன்று மன்னராக முடிசூடினுர். ஆயின், அந்த ஆண்டு முடிவதற்குள் அவரை இப்ரஹீம் சூர் வங்காளத்திலுள்ள சுனுருக்கு விரட்டினுர். அதைத் தொடர்ந்து சர்ஹிந்தில் ஹுமாயூனிடம் தோல்வியுற்ற ஷெர் ஷா சிக்கந்தரின் மற்ருெரு மைத்துனரால் இப்ரஹீம் சூர் தில்லியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இங்ஙனம் பஞ்சாபில் சிக்கந்தர் மட்டுமே தீவிர எதிரியாக விளங்கினுர். அவர் தமது இழந்த ஆட்சியை மீட்பதற்குற்ற காலத்தை நோக்கிக் காத்திருந்தார். அக்பருக்குச் சொந்தமான பகுதிகள் நன்கு வரையறுக்கப்பெறவில்லை. தில்லியும் ஆக்ராவும் மட்டுமே அக்பருடைய தந்தையின் உண்மையான ஆதிக்கத்தில் இருந்தன. பஞ்சாபில் சிக்கந்தருக்கு எதிராகப் போர் நடந்து கொண்டே யிருந்தது. காபூலும் பெயரளவில் அக்பரின் ஆளுகைக்கு உட்பட்டது எனினும், உண்மையில் அவரது ஒன்றுவிட்ட

தம்பியான ஹகீம் மீர்ஸாவின்கீழ் அது ஓர் உரிமை பெற்ற நாட்டைப்போல விளங்கியது.

**ஹீமுவின் வெற்றி**

இதற்கிடையில் சுனருக்குப் பின்வாங்கிச் சென்ற அடில் ஷா ரேவாரைச் சார்ந்த பனியாவான ஹீமுவைப் பிரதம அமைச்சர் பதவிக்கு உயர்த்தினர். ஹுமாயூனை எதிர்த்துத் தில்லியை மீட்பதற்காக அன்னாரைக் கிழக்கே அனுப்பினர். ஹீமு செல்லும் வழியில் இப்ரஹீம் சூரை வீழ்த்தினர். ஹுமாயூன் இறந்தபோது அக்பருடன் இந்துஸ்தானத்து அரியணைக்காகப் போட்டியிட ஒரு பெரும் ஆப்கானியப் படையுடன் அவர் களத்தில் ஆயத்தமாக நின்ருர். அவர் குவாலியர், ஆக்ரா ஆகியவற்றின் வழியாக முன்னேறிப் பழைய தில்லிக்கு அருகே தமது பாசறையை அமைத்துக்கொண்டார். முகலாயப் படைகள் முரியடிக்கப்பெற்றன. வெற்றி பெற்ற ஹீமுவிடம் பெரும் பொருள் சிக்கியது. தில்லியின் ஆளுநராக இருந்த தர்டிபெக் கான் திறமையாகப் பாதுகாக்கத் தவறிவிட்டார்; அதனுடன் தமது பொறுப்பையும் இழிவார்ந்த முறையில் கைவிட்டுச் சென்ருர். தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றியதால் ஹீமுவின் கை மேலோங்கியது. சர்ஹிந்திற்கு ஓடிய தாடி பெக் பேரரசரைச் சந்தித்தார். அங்கே அவர் அக்பருடைய அனுமதியுடன் பைராம்கானல் இரகசியமாகக் கொல்லப் பட்டார். இதனைப் படுகொலையென்றே பல அறிஞர்கள் பழித்துப் பேசுவர். இருப்பினும், அக் கொலையினல் நல்ல விளைவு தோன்றியது. பேரரசரும் பாதுகாப்பாளரும் தங்கள் குறிக்கோளில் திடமாக இருந்தனர்; அதற்காக எதையும் செய்யச் சித்தமாய் இருந்தனர் என்பதை அது தெளிவாக எடுத்துக் காட்டியது.

**பாணிப்பட்டுச் சண்டை**

ஹீமுவின் வெற்றி, அவரது படையின் பெரும் எண்ணிக்கை, அப்போது நாட்டைப் பீடித்திருந்த கடும் பஞ்சம் ஆகியவற்றினல் சாக்ஹடாய் செல்வந்தர்களில் பலர் மனம் தளர்ந்தனர். 100,000 படைவீரர்களைக் கொண்டதாகப் பெருமை பேசிய ஹீமுவிற்கு ஈடாகத் தங்களிடம் 20,000 வீரர்களே இருந்தனர் என்பதாலும், எதிரியிடம் பரிவுகொண்டு பகையுணர்ச்சி மிகுந்திருந்த உள்நாட்டு மக்களிடையே வாழவேண்டியிருந்ததாலும், காபூலுக்கே திரும்பிவிட வேண்டுமென்று அவர்கள் யோசனை கூறினர். ஆனல், அத்தகைய பின்வாங்கும்

எண்ணத்தை ஏற்றுக்கொள்ள பைராம்கான் மறுத்தார்; இந்துஸ்தானத்தின் அரியணையைப் போரிடாது கைவிடுவதில்லை என்றும் அறிவித்தார். அக்பரும் அவரை மனமார ஆதரித்தார், இளமை ததும்பும் பேரரசர் காட்டிய ஊக்கத்தினுல் தூண்டப்பெற்ற முகலாயர்கள் தில்லியை நோக்கி முன்னேறுவது என உறுதி பூண்டனர். வுளமைசால் வெற்றியால் தலைக்கனம் ஏறிய ஹீமு, 'மகாராஜா விக்ரமஜித்' எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையோடு முகலாயரை எதிர்க்கச் சென்றுர். 1556ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் தேதி வரலாற்றுப் புகழ் படைத்த பானிப்பட்டுக் களத்தில் இருவகைப் படைகளும் சந்தித்தன. பூர்வாங்கச் சண்டையொன்றில் முகலாய முன்னணிப் படையினர் ஹீமுவின் பீரங்கிப் படைப்பிரிவைக் கைப்பற்றினர். ஆனுல், இத்தகைய இழப்பிற்குப் பின்னும் ஹீமுவின் படைவலிமை மிக்கிருந்தது. அவர் யானைகளின்மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை கொண்டிருந்தபோதும் அவர் கை மேலோங்கியே நின்றது. எதிர்பாராது வந்து அவரது கண்ணைக் குத்தி நினைவிழக்கச் செய்த அம்பு இல்லையானுல் அவர் அநேகமாக வெற்றி பெற்றிருப்பார். ஏறக்குறைய வெற்றியை எட்டிய ஆப்கானியப் படையினர் தங்களது தலைவரைக் காணுத நிலையில் அவர் மடிந்துவிட்டதாக எண்ணி, மேலும் எதிர்த்துப் போரிடுவதைக் கைவிட்டு நான்கு பக்கங்களிலும் சிதறி ஓடத் தலைப்பட்டனர். ஹீமுவின் யானை பிடிபட்டது. ஷாகுலி கான் மெஹ்ராம் என்பார் ஹீமுவைப் பிடித்து அக்பர், பைராம்கான் ஆகியோர் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்திஞர். பைராம் யோசனைப்படி இளைஞரான பேரரசர் தமது வாளை உருவி ஹீமுவை வெட்டி வீழ்த்திஞர். ஹீமுவை அக்பர் தமது வாளால் தொட்டார் என்றும், அதன் பிறகு அவரது ஆள்களே ஹீமுவைக் கொன்றனர் என்றும் அந் நிகழ்ச்சிபற்றிய பிற்கால நயமான உரை குறிப்பிடுகின்றது. ஆயின், முன்னைய கருத்தே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பெறுவதாகும். ஹீமுவின் தலையைக் காபூலுக்கு அனுப்பினர், ஆயின், அவரது உடல் தில்லியின் வாயில்கள் ஒன்றில் தொங்கியது.

**அக்பர் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றுதல்**

பானிப்பட்டில் கிடைத்த வெற்றி முடிந்த வெற்றியாகும். பகைவரைத் தீவிரமாகத் துரத்திச் சென்ற முகலாயர் நவம்பர் மாதம் ஆறும் நாளன்று வெற்றி முழக்கத்தோடு தில்லி நகரில் நுழைந்தனர். அவர்கள் விரைவிலேயே ஆக்ராவை மீட்டு

ஹீமுவின் அளப்பரிய சொத்துகளைக் கைப்பற்றினர். தில்லியில் ஒரு மாதகாலத்திற்குத் தங்கிய பின்னர் அக்பர், சிக்கந்தர் ஷா விற்கு எதிரான நடவடிக்கைகளை நிறைவேற்றுதற்காக பஞ்சாப் திரும்பினுர். இங்ஙனம் முகலாயர் சர்ஹிந்திலிருந்து லாகூருக்குச் சென்றனர். சிக்கந்தரைத் துரத்திச் சென்று அவர் மீண்டும் மாங்கோட்டில் ஒளியுமாறு செய்தனர். அதன் பிறகு நீண்ட காலத்திற்கு முற்றுகையிட்டு 1557ஆம் ஆண்டு மே மாதம் அக் கோட்டையைக் கைப்பற்றினர். வீழ்ச்சியுற்ற சிக்கந்தரைப் பெருந்தன்மையோடு நடத்தினர். பீஹாரில் அவருக்கு ஜாகீர் களை அளித்தனர். அவர் அங்கேதான் இரண்டாண்டுகளுக்குப் பின் உயிர்நீத்தார். மீதமிருந்த சூர் போட்டியாளர் இருவரில் இப்ர ஹீம்கான் தாஞக விலகிக்கொண்டார். மற்றவரான அடில் ஷா வங்காளத்தைக் கைப்பற்றும் வீஞன முயற்சியில் இறங்கியபோது 1557ஆம் ஆண்டில் கொல்லப்பட்டார். இங்ஙனம் அக்பருக்குப் போட்டியாக யாரும் இல்லாதுபோயி னர். அவரது இளைய சகோதரரான ஹகீம் மீர்ஸா மட்டும் அவ்வப்போது பஞ்சாபைக் கைப்பற்றுவதற்கான பயனற்ற முயற்சிகள் சிலவற்றில் ஈடுபட்டுவந்தார்.

### பைராம்கானின் காப்பாளராட்சி

அக்பருடைய தாயாரும், அவர் குடும்பத்துப் பிற மாதரும் மாங்கோட்டில் அவருடன் வந்துசேர்ந்தனர். அங்கிருந்து அனை வரும் லாகூருக்குத் திரும்பினர். வழியில் ஜலந்தரில் தங்கிய போது அக்பர், பைராம்கானுக்கும் ஹுமாயூனின் மைத்துனியான சலீமா சுல்தான் பேகத்திற்கும் மணமுடித்து வைத்தார். பைராம்கானின் ஒப்பற்ற சேவையைப் பேரரசர் பாராட்டியதற் கான அறிகுறியாக இத் திருமணம் அமைந்தது. லாகூரிலிருந்து புறப்பட்ட பேரரசர் தில்லியை அடைந்தார். அங்கே அரச குலத்துப் பெண்களை விட்டுவிட்டு லோடி மன்னர்களின் தலை நகரமாக விளங்கிய ஆக்ராவில் தமது அரசவையை அமைத்துக் கொண்டார். தம் பொறுப்பில் இருந்த பேரரசருக்குக் கல்வி புகட்டுவதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் பைராம் செய்தார். ஆனுல், அதில் பயன் ஏதும் கிட்டவில்லை. எவ்வாறெனில், நூல் களைக் கற்பதற்கு மாருக அக்பர் வேட்டையாடுதல், யானைச் சண்டையைக் கண்டு களித்தல், இன்ன பிற பொழுதுபோக்கு களில் காலத்தைக் கழித்தார். ஆட்சிப் பொறுப்பினை பைராம் கானிடமே விட்டு வைத்தார். காப்பாளரான பைராம்கானும் தமது பணிகளை மிகுந்த வெற்றியுடன் செய்துவந்தார். வலிமை மிக்க குவாலியர் கோட்டையும், வளமான ஜான்பூர் பகுதியும்

பேரரசுடன் இணைக்கப்பெற்றன. ரான்தம்பூருக்கு எதிரான முயற்சி வெற்றிபெறவில்லை யென்பது உண்மையே. அவர் மாளவத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களை வகுப்பதிலும் முனைந்திருந்தார். ஆயின், இதற்கிடையில் அவரது வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த சூழ்ச்சிகளும் தொல்லைகளும் குறுக்கிடத் தொடங்கின.

**பைராம்கானின் வீழ்ச்சிக்குக் காரணமான நிகழ்ச்சிகள்**

பைராம்கானின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்த நிகழ்ச்சிகளை வரலாற்று அறிஞர்கள் விரிவாகவும் பல கோணங்களிலிருந்தும் விளக்கியுள்ளனர். பைராம்கான் ஷியா பிரிவைச் சேர்ந்தவர் என்பதையும், அதனால் அரசவையிலிருந்த சுன்னி பிரிவைச் சார்ந்த சாக்ஹடாய் செல்வந்தர்கள் அவரை வெறுத்தனர் என்பதையும் நாம் மனத்திலே கொள்ளவேண்டும். தார்டி பெக்கை பைராம் கொன்றதால் அவர்கள் ஓரளவு அடங்கினர் என்றாலும், அச் செயலுக்காக அவரை அவர்கள் மன்னிக்கவேயில்லை. பதினெட்டு வயதை எட்டிய பேரரசர் பிறரைச் சார்ந்திருப்பதால் ஏற்படும் தளைகளை உணரத் தொடங்கினர். பைராம்கானின் தொந்தரவளிக்கும் பாதுகாப்பை அவர் வெறுக்கத் தலைப்பட்டார். மேலும், பேரரசருக்கென்று செலவுப் பணப் பட்டியல் இல்லை. தமது குடும்பத்தார் வளமற்ற வாழ்வை நடத்திய சமயத்தில் பைராம்கானைச் சார்ந்தவர்கள் வளங்கொழிக்கும் வாழ்வைக் கொண்டது அவருக்கு வெறுப்பை அளித்தது. அக்பரின் அதிருப்தியை அவரது பேரன்பிற்குப் பாத்திரமான செவிலித் தாயாகிய மாஹம் அனகா மேலும் தூண்டினர். பேரரசரின் அன்னையாகிய ஹமீதா பானு பேகம், மாஹம் அனகாவின் மகனான ஆதம்கான், மருமகனான ஷியாபுத்தீன் ஆகியோர் அவருக்குத் துணையாக நின்றனர். பைராம்கான் நாட்டின் உண்மையான தலைவராக மாறிவிட்டார் என்றும், அக்பரை அரியணையிலிருந்து நீக்கிவிட்டுக் காம்ரானின் மைந்தர்களுள் ஒருவரை அரசபீடத்தில் அமர்த்த அவர் கருதியுள்ளார் என்றும் கூறிப் பேரரசரின் மனத்தைக் கெடுத்துவிட்டனர்.

இதற்கிடையில் அக்பருக்கும் அவரது காப்பாளருக்கும் இடையேயான பிளவை விரிவு செய்யவல்ல சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒரு நாள் யானைச் சண்டையைப் பேரரசர் கண்டு களித்திருந்தபோது, அந்த யானைகளில் ஒன்று அமைச்சரின் கூடாரக் கயிறுகளின் வாயிலாகச் சென்றது. அதனைத் தமக்கு நேர்ந்த அவமானமாக பைராம்கான் கருதினர். எவ்வாறிருப்பினும், தாம் எவ்வித அவமதிப்பையும் எண்ணவில்லை



டெல்லி கோட்டை—திவானிகாஸ்

என்று அக்பர் வாதாடினுர். பைராம்கான் மனவமைதி கொண்டதாகத் தோன்றியபோதிலும், அவர் பேரரசருடைய யானைப் பாகனைத் தண்டித்தார். மற்ருெரு நாள் பைராம்கான் யமுனை ஆற்றில் படகோட்டிச் சென்றபோது பட்டத்து யானையொன்று அவரது படகைத் தாக்கியது. பைராம்கானின் உயிருக்கே ஆபத்தாக இருந்தது. ஆனுல், யானைப்பாகன் மதங்கொண்ட விலங்கை அடக்கி அமைச்சரின் உயிரைக் காத்தான். இச் செய்தியைக் கேள்வியுற்றதும் அக்பர் அந்தப் பாகனைக் கைது செய்து காப்பாளரிடம் அனுப்பிவைத்தார். பைராம்கான் மீண்டும் அவனைத் தண்டித்தார். இதுபோன்ற பல நிகழ்ச்சிகள் காப்பாளர்மீது பேரரசரிடம் வளர்ந்துவரும் வெறுப்பை மேலும் அதிகமாக்கின. அதே சமயத்தில் பேரரசரின் ஆசாஞகிய முல்லா பீர் முகம்மதுவை வேலையிலிருந்து நீக்கியது அவரது கோபத்தை மேலும் கிளறியது. வேட்டையாட வெளியே சென்றிருந்த அக்பர், தமது தாயார் உடல்நலமின்றி இருந்ததைக்கேள்வியுற்ருர். பைராம்கானுக்குச் செய்திஅனுப்பி விட்டு அவர் தில்லி நோக்கிப் புறப்பட்டார். தில்லி, லாகூர் ஆகியவற்றின் ஆளுநர்களைப் பேரரசரின் பக்கம் இழுத்துக் கொண்டு அதேபோன்று காபூலையும் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன. பைராம்கான் துரோகமான, புரட்சி செய்வதற்கான திட்டங்களைத் தீட்டினுர் என்று மாஹம் அனகாவும் அவரது ஆதரவாளர்களும் குற்றம் சாட்டினர். அக்பர் தயங்கினுர். அதை அறிந்த அனகா, தாம் பைராம்கானின் கோபத்திற்கு அஞ்சுவதாக நடித்து, அதனுல் மெக்காவிற்குச் செல்லத் தமக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று அக்பரைக் கோரினுர். தம்மை அக்பர் ஒருகாலும் அனுப்பமாட்டார் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். அனகாவின் இச் செயல் அக்பரின் மனத்தை மாற்றியது. பெருமை மிக்க அமைச்சரின் சேவையை அவர் துறக்கத் துணிந்தார். தமது திட்டத்தை நிறைவேற்றுதற்கான மனவுறுதியுடன் பின்வரும் செய்தியை பைராம்கானுக்கு அனுப்பினுர். 'தங்களுடைய நேர்மையிலும் பற்றுறுதியிலும் முழு நம்பிக்கை கொண்டு, முக்கிய அரசாங்கப் பொறுப்புகளைத் தங்களிடமே ஒப்படைத்துவிட்டு, யாம் எமது இன்பங்களைப்பற்றியே எண்ணியிருந்தோம். இப்போது யாம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கத் தீர்மானித்துள்ளோம். தாங்கள் நெடுநாள்களாக விரும்பி வந்த மெக்காவிற்கான புண்ணியப் பயணத்தை இப்போது தொடங்குவது விரும்பத்தக்கது. தங்களது வாழ்க்கை வசதிக்கென்று இந்துஸ்தானத்து பர்காஞக்களிலிருந்து தகுந்த ஜாகீரைத்

தங்களுக்காக அளிப்போம். அதன் வருவாயை உமது பகர ஆள்கள் அனுப்பிவைப்பார்கள்.'[1]

**பைராம்கானின் கொலை**

பைராம்கான் கடைப்பிடிக்க வேண்டிய வழிபற்றி அவரது ஆலோசகர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தனர். அவர்களிற் சிலர் படைபலத்தைப் பயன்படுத்துமாறு யோசனை கூறினர். சிறிது தயக்கத்திற்குப் பிறகு பைராம்கானின் நேர்மையும், வாழ்நாள் முழுதும் அவர் கொண்டிருந்த பற்றுறுதியும் மேலோங்கி நின்றன. எனவே, அவர் பேரரசரின் கட்டளையை ஏற்றுத் தமது பதவிச்சின்னத்தை அக்பரிடம் அனுப்பிவைத்தார். ஆயின், ஒரு காலத்தில் பைராம்கானின் ஆதரவில் வளர்ந்த நன்றி மறந்த முல்லா பீர்முகம்மதுவையே முகலாயப் பேரரசில் அவரது இயக்கங்களைக் கண்காணிக்கவும், அவரை விரைவில் வெளியேற்றுதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அமர்த்திய போது பைராம்கான் அவமானத்தால் வெகுண்டெழுந்தார்; படைபலத்தைப் பயன்படுத்தவும் துணிந்தார். அதற்கிணங்க அவர் தமது குடும்பத்தாரைப் படிண்டா கோட்டையில் தங்கச் செய்துவிட்டுப் பஞ்சாபிற்குச் சென்றார். எப்படியும் பேரரசப் படைகள் அவரது படையை ஜலந்தரில் முறியடித்தன. அவர் மலைப்பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றபோது, பியாஸ் ஆற்றிற்கு அருகில், காபூலில் முன்னாள் காப்பாளராக இருந்த முனிம்கான் கைதுசெய்து அவரை அக்பர்முன் கொண்டுவந்து நிறுத்தினர். பைராம்கானின் பணிவை அக்பர் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார். தாம் அவரை முழுதும் மன்னித்து விட்டதற்கு அடையாளமாக மூன்று வழிகளை பைராம்கானுக்குக் கோடிட்டுக் காட்டினர். முதலாவதாக அரசவையில் பெரும் பதவியொன்றை ஏற்றுக்கொள்ளுதல்; இரண்டாவதாக அவர் விருப்பப்பட்ட மாநிலத்தின் ஆளுநர் பதவியை ஏற்றல்; மூன்றாவதாக மெக்காவிற்குச் செல்லும் அவரது ஆரம்ப முடிவை நிறைவேற்றுதல். ஆயின், இவ்வுலகப் பெருமைகளிடம் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு அவர் மனமொடிந்து இருந்ததால், மெக்காவிற்குப் பயணமாவது எனத் தீர்மானித்தார். அவரது கடந்த கால ஒப்பற்ற சேவைகளுக்கும், அவர் வகித்துவந்த உயர்பதவிக்கும் உகந்த வகையில் ஜாகீர்களும் மானியங்களும் அவருக்கு வழங்கப்பெற்றன. இராஜபுதனம் வழியாகச் சென்ற பைராம்கான் இறுதியாக குஜராத்திலிருந்த பத்தானை அடைந்தார். அந் நகரில் இருக்கும் போது ஆஃப்கானியக் கும்பல் ஒன்று

1 Elliot and Dowson, Vol. V, பக்கம் 264.

அவரைத் தாக்கியது. மச்சிவாராவில் அவருடன் போரிட்டுக் கொல்லப்பெற்ற ஒருவரின் மகன் அவரைப் பழிவாங்குதற்காகக் கொலை செய்தான். அவரது பாசறை சூறையாடப்பட்டது. அவரது குடும்பத்தினர் மிகுந்த இடர்ப்பட்டு அகமதாபாத்திற்கு வந்துசேர்ந்தனர். பைராம்கானின் கடந்த கால சேவையை மறக்காத அக்பர், அவரது குடும்பத்தாரை மிகுந்த மரியாதையுடன் தமது அரண்மனைக்குக் கொண்டுவருமாறு ஆணையிட்டார். பைராம்கானின் விதவையான சலீமா சுல்தான் பேகத்தைப் பேரரசர் மணந்துகொண்டார். அவரது இளம் பாலகனுன அப்துர்ரஹிம் அக்பரின் பாதுகாப்பில் வளர்ந்து, தந்தையைப் போலவே கான் கானுன் ஆக உயர்ந்தான். பைராம்கானின் பிற்காலச் செயல்கள் எவ்வாறு இருப்பினும், அவர் ஆற்றிய அரும்பணிகள் மறைந்துவிடக்கூடியவை அல்ல. அரியணையை மீட்டு அதனைப் பாதுகாப்பதில் அக்பரும் அவர்தம் தந்தையாரும் பைராம்கானுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருந்தனர்.

**வலுத்தாக்குதல் பேராசக் கொள்கையின் தொடக்கம். மாளவத்தை வெல்லுதல்**

பைராம்கானின் கட்டுப்பாட்டிலிருந்து அக்பர் தம்மை விடுவித்துக்கொண்டபோதிலும், அவர் முற்றிலும் தன்னுதிக்கம் செலுத்துவோராக ஆகவில்லை. அவ்வாறு செய்ய அவருக்குத் தகுந்த வயதும் ஆகவில்லை. சில ஆண்டுகளுக்கு அவர் பெரிதும் செவிலித் தாயாரான மாகம் அனகாவின் கட்டுப்பாட்டிலேயே வாழ்ந்துவந்தார். மாகம் அனகா கைதேர்ந்த ஆலோசகராக விளங்கவில்லை. கெட்ட நடத்தை கொண்ட தமது மகன் ஆதம்கானை உயர்பதவிக்குக் கொண்டுவருவதே அவர்தம் குறிக்கோளாக இருந்தது. மேலும், கொடுமையும் குரூரமும் நிறைந்த பீர்முகம்மது ஷர்வாணியை உயர்பதவிக்குக் கொண்டுவந்தது அவரது திறமையின்மைக்கு மற்ரெரு சான்ருகும். புதிய ஆலோசகர்களின்கீழ் அக்பரின் வெற்றி வாழ்க்கை தொடங்கியது. ஆரம்ப காலத்தில் அவர் அத்தகைய கொள்கைக்குப் பொறுப்பானவர் அல்லர். அவர் பட்டத்திற்கு வந்தபோது முகலாய அரசு அளவில் சிறியதாகவே இருந்தது. அதன் பிறகுதான் அது விரிவடைவதற்கான வலுத்தாக்குதல் கொள்கையை மேற்கொண்டது. மாளவத்தின் மன்னரான பாஸ்பகதூர் அக் கொள்கைக்குத் தலைப்பலியானுர். 1560ஆம் ஆண்டில் ஆதம்கான், பீர்முகம்மது ஆகியோரின் தலைமையில் முகலாயப் படையொன்று மாளவத்திற்குச்

சென்றது. அப் படையெடுப்பு வெற்றிபெற்றது. பாஸ்பகதூர் தோற்று ஓடினர். ஆயின், வெற்றி வீரர்களின் நாகரிகமற்ற கொடுஞ் செயல்கள் அவர்கள் பெற்ற வெற்றியின் புகழை மங்கச் செய்தன. சிறைப்பட்டோரில் பலரை அவர்கள் இரக்கமின்றிக் கொலை செய்தனர். அவர்களுடைய கொடுமைக்குப் பலியானவர்களில் பாஸ்பகதூரின் பேரெழில் வாய்ந்த அரசி ரூப்மதியாவார். அவர் வெற்றி பெற்ற மிருகத்தனமான முகலாயப் படைத்தலைவனின் காமக்கிழத்தியாவதைவிட நஞ்சுண்டு இறப்பது மேல் எனக் கருதி அவ்வாறே செய்தார்.[1] இத்தகைய கொடுஞ் செயல்கள்பற்றிய செய்தி ஆக்ராவிற்கு எட்டியது. இளைஞரான பேரரசர் பெருஞ் சினங் கொண்டார். தாமே நேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். அவ்வாறு தீர்மானித்த பிறகு எப்போதும் போலக் காலதாமதமின்றிக் கடிதில் பணிபுரியத் தொடங்கினர். ஒருசில ஆள்களே உடன்வர அவர் உடனே ஆதம்கானின் பாசறைக்குச் சென்றார். அவரது வருகைபற்றி மாஹம் அனகா தமது மைந்தருக்கு எச்சரிக்கை செய்வதற்கு முன்பே அவர் ஆதம்கானின் பாசறையில் இருந்தார். பேரரசரின் திடீர் விஜயத்தால் ஆதம்கான் செய்வதறியாது திகைத்தார். பேரரசரிடம் பணிந்து கடந்த காலத்தில் செய்தவற்றிற்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார். இங்ஙனம் வெப்பம் மிகுந்த காலத்தில் மிக விரைவில் பயணம் செய்து தலைநகர் திரும்பினர். வெப்பத்திற்கோ குளிருக்கோ அஞ்சாது பணியாற்றிய அலெக்சாந்தருடன் அக்பரை ஒப்பிட்டுப் பேசுவார் வின்சன்ட் ஸ்மித் அவர்கள். அக் காலத்தில் எழுந்த வேறு சில கதைகள் அக்பரின் உடலுரத்திற்குச் சான்று பகர்கின்றன. அவர் திரும்பும் வழியில் ஒரே வாள்வீச்சில் பெண் சிங்கமொன்றைக் கொன்றார். மதங்கொண்ட யானைகளை அடக்குவதில் அளவிலா ஆனந்தம் கொண்டார். யானைகள் சண்டையிடும்போது அவற்றின்மீது அமர்ந்திருப்பார். தமது தந்தைபற்றிய இது போன்ற கதைகள் பலவற்றை ஜஹாங்கீர் தமது குறிப்பு நூலில் எழுதியுள்ளார்.

### அக்பர் தமது நாட்டு அரசாங்கத்தில் அதிக அக்கறை காட்டுதல்

முழு ஆட்சிப் பொறுப்பினை அக்பர் ஏற்பதற்கு மேலும் சில ஆண்டுகள் பிடித்தபோதிலும், 1562ஆம் ஆண்டிலிருந்து அவர் அரசாங்கச் செய்திகளில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினர். தமது மக்களைப்பற்றித் தம்மால் இயன்ற அளவு

1 அவரது கதை நாடறிந்த நாட்டுப் பாடலின் பொருளாக அமைந்துள்ளது.

அறிந்துகொள்ள முற்பட்டார். வரலாற்றில் நாம் காணுகின்ற வேறு சில புகழ் படைத்த மன்னர்களைப் போல அக்பரும் செய்திகளை நேரில் அறிந்துகொள்வதற்காக இராக்காலங்களில் மாறுவேடம் அணிந்து செல்வது வழக்கமாக இருந்தது. இத் தகைய இரவு வேவு வேலைகள் சிலவற்றை அக்பருடைய ஆட்சிக் காலக் குறிப்பு நூலில் அபுல் ஃபாஸல் விளக்குகிறார். எவ்வாறு ஒரு முறை பேரரசரை அநேகமாக அடையாளம் கண்டுகொண்டனர் என்றும், தந்திரமொன்றைச் செய்து அக்பர் தப்பித்தார் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

### ஜான்பூர் ஆளுநர்மீது அக்பர் படையெடுத்துச் செல்லுதல்

ஆதம்கானைப் பணியவைத்தவுடனே ஜான்பூரின் ஆளுந ரான அலிகுலிகான் உஸ்பெக் பேரரசருக்கு எதிராகத் துரோக மான சதியில் ஈடுபட்டார் என்பதை அக்பர் கேள்வியுற்றார். மீண்டும் அவர் பழக்கமான விரைந்த செயல்வகையை மேற் கொண்டார். ஜூலை மாதக் கடுவெப்பத்தில் பற்றுறுதியற்ற பணியாளரைத் தண்டிப்பதற்காக விரைந்து சென்றார். ஆதம் கானைப் போலவே அலிகுலிகான் உஸ்பெக்கும் அக்பரிடம் சர ணடைந்தார்.

### பீர் முகம்மதின் முடிவு

நல்வாய்ப்பாக இப்போது அக்பரின் அரசவையில் மோச மான ஒருவர் இல்லாதிருந்தார். மாளவத்தின் பொறுப்பை பீர் முகம்மதுவிடம் ஒப்படைத்துவிட்டு ஆதம்கானை அக்பர் தலைநகருக்கு வரவழைத்தார். புதிய படையெடுப்பொன்றை மேற்கொண்ட பீர் முகம்மது, அசிர்காரையும் வேறு சில முக்கிய இடங்களையும் கைப்பற்றினர். அவர் ஒவ்வோர் இடத்திலும் முன்னைப்போலவே கொடூரமாக நடந்துகொண்டார். ஆயின், அக் கொடியவரின் வாழ்க்கை விரைவிலேயே முடிவுற்றது. பாஸ்பகதூரின் படைக்கு முன் நிற்கமுடியாது பின்வாங்கிய போது அவர் நர்மதையாற்றில் மூழ்கி இறந்தார்; 'எப்படி யாயினும், சிறிய இந்தியக் கொடுங்கோலர்களில் பீர்முகம் மதுவைவிட மோசமானவர் இல்லை எனலாம்.'[1]

### இராஜபுத்திரருடன் அக்பர் நட்புத் தொடர்பு கொள்ளுதல்

அக்பரின் ஆட்சிக் கால வரலாறு முழுமைக்கும் முக்கியப் பய னளித்த ஒரு நடவடிக்கையில் அவர் 1562ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஈடுபட்டார். ஆஜ்மீரில் புதைக்கப்பெற்றிருந்த

1 Kennedy எழுதிய 'Histoy of the Great Moghuls' Vol. i, பக். 238.

புகழ்மிக்க அருள்தொண்டர் ஒருவரின் கல்லறையைக் காண அக்பர் அங்கே சென்றபோது, ஜெய்பூரின் இராஜபுத்திரத் தலைவரான ராஜா பீஹாரிமால் அவரைச் சந்தித்தார். அவர் பேரரசரிடம் தாம் கொண்டிருந்த பற்றுறுதியைக் காட்டுதற்காகத் தமது மகளை அன்னருக்கு மணமுடித்துவைப்பதாகக் கூறினர். அவரது விருப்பக் கோரிக்கையை அக்பர் ஏற்றுக்கொண்டார். இராஜபுத்திர மங்கையை மணந்துகொண்டார். அம் மங்கை நல்லாளே ஜஹாங்கீரின் தாயாராவார். இத் திருமணத்தினல் தீவிர விளைவுகள் தோன்றின. அது இந்து சமயத்தையும், இந்துக் குடிகளையும் பரிவுடன் நடத்த அக்பரைத் தூண்டியது. மேலும், தமது தந்தையைப்போன்று அல்லது பாட்டனரைப் போன்று அன்னியப் படையெடுப்பாளர்களின் தலைவராக இருப்பதோடு அமையாது, உண்மையிலேயே இந்திய மன்னராக விளங்கி இந்திய அரசகுலம் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று அக்பர் விரும்பினர் என்பதை இத் திருமணம் இந்திய மக்களுக்கு எடுத்துக்காட்டியது. இத் திருமணத்தினல் பல இராஜபுத்திர அரசர்களுடைய ஆதரவு பேரரசருக்குக் கிடைத்தது. அவர்களிடமிருந்து பல தலைசிறந்த ஆலோசகர்கள் அக்பருக்குக் கிடைத்தனர். சான்ருக, அக்பர் ராஜா பிஹாரிமாலின் மகளை மணந்ததால் அந்த இராஜபுத்திர மன்னருடைய முதல் மைத்துனரான ராஜா மான்சிங்கைத் தமது அரசவைக்கு அழைத்துப் பதவி அளிக்கமுடிந்தது. அவுரங்கசீப்பின் சமய வெறியினல் விரோதம் வளரும்வரையில் அக்பர் காலத்திலும், அவரது வாரிசுகளின் ஆட்சிக் காலங்களிலும் முகலாயர் சேவையில் மனநிறைவுடன் சேர்ந்த பல இராஜபுத்திரர்களில் மான்சிங்கே முதலாமவர்.

**மாளவத்தை அடக்குதல்**

இப்போதுதான் அப்துல்லாகான் உஸ்பெக் மாளவத்தை இறுதியாக அடக்குவதில் முழு வெற்றி பெற்ருர். பாஸ்பகதூர் பேரரசரிடம் பணிந்தார். பேரரசப் படையில் தலைமைப் பதவி ஒன்று அவருக்குக் கிடைத்தது.

**ஆதம்கானின் முடிவு**

மாஹம் அனகாவும், அவரது ஒன்றிற்கும் உதவாத மகனை ஆதம்கானும் அதிகாரம் செலுத்திய காலம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. ஷம்ஸுத்தீன் முகம்மது அட்காகான் என்பாரை அக்பர் முதல் அமைச்சராக நியமித்தார். அவரது துணையோடு தமது வளர்ப்பு அன்னையின் பிடியிலிருந்து விடுபடுவது எனத் தீர்மானித்தார். 1562ஆம் ஆண்டில் ஷம்

ஸுதீனைக் கொலை செய்வதன் மூலமாகத் தமது பதவியைத் தக்கவைத்துக்கொள்ள முயன்றார். ஆதம்கானும் அவரது ஆள்களில் சிலரும் அமைச்சர் பணியாற்றிவந்த அரண்மனையில் திடுமெனப் புகுந்து நம்பிக்கைத் துரோகமான முறையில் அவரைக் கொலை செய்தனர். அதன்பிறகு அக்பர் உறங்கிக் கொண்டிருந்த அறைப்பக்கம் கொலைகாரர் செல்ல முற்பட்டனர். ஆனால், நடந்ததைப்பற்றிப் பணியாள்களின் மூலமாக அறிந்துகொண்ட பேரரசர், படைக்கலந் தாங்கி மண்டபத்திற்குள் நுழைந்து ஆதம்கானை வெட்டி வீழ்த்தினர். ஆதம் கானின் உடலை மேன்மாடியிலிருந்து கீழே எறியுமாறு ஆணையிட்டார். இங்ஙனம் பயனற்ற கொடுங்கோலனின் வாழ்வு முடிவுற்றது.

### மாஹம் அனகாவின் மரணமும் அக்பர் அரச அதிகாரப் பொறுப் பேற்றலும்

மகன் இறந்தபிறகு மாஹம் அனகா அநேக நாள்கள் உயிர் வாழவில்லை. நடந்ததைப்பற்றி அவரிடம் அக்பர் அறிவித்த போது, 'நல்லது செய்தீர்' எனப் பதிலிறுத்தார். டில்லியில் குதுப்மினருக்கு அருகே கட்டிய பொருட்செலவு மிகுந்த கல்லறையில் தாயையும் மகனையும் புதைக்குமாறு அக்பர் ஏற்பாடு செய்தார். அவருக்கு முழு விடுதலை கிடைத்ததால் அவர் இவ்வாறு பெருந்தன்மையோடு நடந்துகொள்ள முடிந்தது. அவர் பிறரைச் சார்ந்திருந்த காலம் மாறியது. அப்போதிருந்து பேரரசரே அரசாங்கச் செய்திகளில் தனிமுதன்மை பெற்றுத் திகழ்ந்தார்.

### 1563ஆம் ஆண்டில் புண்ணியச் செலவு வரியை நீக்குதல்

மாஹம் அனகாவும் அவரது மைந்தரும் மறைந்தபிறகு அக்பரின் மனத்தில் பெருமாற்றம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இனியும் அவர் விளையாட்டுகளிலும் கேளிக்கைகளிலும் ஆர்வங்கொண்ட இளைஞராக இல்லை. ஒரு பேரரசின் வேந்தருடைய கடமைகள் எவை என்பதை அவர் உணர்ந்து கொண்டார். அப் பொறுப்புகளை அவரே ஏற்கவேண்டுமென்றும், அவற்றைப் பகிர்ந்துகொள்ளப் பிறரை நம்பக்கூடாது என்றும் கடந்தகால அனுபவம் தெளிவாகக் காட்டியது. அதன்பிறகு அவர் உருவாக்கிய கொள்கைகளைக் கொண்டு செலுத்த அவரது சொந்த முயற்சியே பயன்பட்டது. 1563ஆம் ஆண்டுத் தொடக்கத்திலேயே அவர் ஒரு முக்கியச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். புண்ணியச் செலவு செய்வோரின் மீதான வரியை (யாத்திரிகர் வரி) நீக்குவதே அச் சீர்திருத்

தத்தின் நோக்கமாகும். அக் காலத்தில் யாத்திரிகர்கள் வரும் புகழ் பெற்ற நகரமான மதுராவில் இருந்தபோதுதான் அவ் வரியைப்பற்றி அவர் அறிந்தார். யாத்திரிகர்மீதான வரிகள் அனைத்தையும் உடனே நீக்குமாறு ஆணையிட்டார்.

### 1564ஆம் ஆண்டில் ஜெஸியா வரியை நீக்குதல்

அடுத்த ஆண்டு (1564) வர இருந்த மேலும் சிறப்பு வாய்ந்த சீர்திருத்தத்தின் முன்னோடியாக இது (புண்ணியச் செலவு வரி நீக்கம்) அமைந்தது. அதாவது, முகம்மதியர் அல்லாதார் அனைவரும் செலுத்தவேண்டிய தலைவரியான ஜெஸியாவை அக்பர் நீக்கினார். தொடக்ககாலத்தில் கலீஃபா உமர் விதித்த இந்த வரியை, சிந்துவை வென்று அடக்கிய முகம்மது காஸிமே எட்டாவது நூற்றாண்டில் முதல் முறையாக இந்தியாவில் புகுத்தினார். வல்லமையுள்ள பல டில்லி சுல்தானியர் இதனை விட்டுவிட்டு விதித்துவந்ததாகத் தெரிகிறது. முதல் முறையாக முஸ்லீம் சமயச் சட்ட விதிப்படி இதனை விதித்தவர் சுல்தான் ஃபிரோஸ்ஷா துக்ளக்காவார் (1351-1388). மேலும், அவர் அதுவரையில் தப்பித்துவந்த அல்லது வரிகொடாது ஏமாற்றிவந்த பிராமணர்மீதும் ஜெஸியாவை விதிக்கலானார். ஆயின், தமது இந்துக் குடிகளின் ஆதரவையும் பற்றுறுதியையும் பெறுவதற்கான திடமான கொள்கையின் ஒரு பகுதியாகவே அக்பர் இதனை நீக்க முற்பட்டார். பேரரசர் அவுரங்கசீப்பின் சமயவெறி காரணமாக இது மீண்டும் விதிக்கப்பெறும் வரையில், அக்பரின் வழியைப் பின்பற்றி அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர்களும் ஜெஸியா வரியைக் கொள்ளவில்லை.

### கோண்டுவனத்தை வெல்லுதல்

உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கிடையேயும் தமது நாட்டை விரிவு செய்யவும், நாடுபிடிக்கும் கொள்கையை நிறைவேற்றவும் அக்பருக்கு அவகாசம் இருந்தது. அதற்கு கோண்டுவனம் முதலில் இறையாயிற்று. தற்போது மத்தியப் பிரதேசத்தின் வட பகுதியாக விளங்கும் கோண்டுவன மாவட்டம் அக் காலத்தில் மதிநலம் மிக்க மாதரசியாம் ராணி துர்க்காவதியின் ஆட்சியில் இருந்தது. அவர் தமது இளம் பாலகனுக்குக் காப்பாளராக இருந்து அப் பகுதியை ஆண்டுவந்தார். அவர்மீது போர் தொடுப்பதற்கு அக்பருக்கு உண்மைக் காரணம் ஏதுமில்லை. இருப்பினும், தமது நாட்டின் எல்லையை வளர்க்கவேண்டுமென்ற ஆசையால் அவர் அவ்வாறு செய்யலானார். அசஃப் கானின் தலைமையில் முகலாயப் படை ஒன்று சென்றது. பகை

வரை தீரத்துடன் எதிர்த்துநின்ற ராணி துர்க்காவதி இறுதியில் மாண்டு வீழ்ந்தார். அன்னாரது தலைநகரமான சௌராகரும் அதிலிருந்த பெரும் பொருளும் அசஃப்கானிடம் சிக்கின. கொள்ளைப் பொருளைப் பேரரசருக்கு அனுப்புவதற்குப் பதிலாக அதில் பெரும் பொருளை அசஃப்கான் தமக்கே வைத்துக் கொண்டார்.

**கான் ஸமானின் புரட்சி**

இப்போது கான் ஸமான் அலிகுலிகான் உஸ்பெக் அக்பருக் கெதிராகப் புரட்சி செய்தார். உஸ்பெக் செல்வந்தர்களின் தலைவரான இவ்வதிகாரி கடந்த காலத்தில் பைராம்கானுக்கு அடுத்தபடியாகப் பேரரசருக்குப் பெரும்பணியாற்றியவர். பானிப் பட்டில் பயனுள்ள வெற்றி கிடைத்ததற்கு அன்னாரது முயற்சியே பெரிதும் காரணமாகும். ஆயின், அவரும் அவர்தம் ஆதரவாளர்களும் மனநிறைவற்றிருந்தனர். பேரரசரின் ஒரு முகப்படுத்தும் கொள்கையை அவர்கள் வெறுத்தனர். அவரது 'பாரசீகப் பண்பாடு சார்ந்த வழிகளை'க் கண்டித்தனர். பேரரசரின் அதிகாரம் தில்லியைச் சுற்றியுள்ள பகுதியோடு நின்றுவிடவேண்டுமென்றும், மானிய உரிமை பெற்ற தலைவர் களிடம் இருந்த பகுதிகளில் அவர்களுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினர். ஜான்பூரின் ஆளுந ராக இருந்த அலிகுலிகான் ஏற்கெனவே ஒருமுறை புரட்சியில் ஈடுபட்டு அடக்கப்பெற்றவர். ஆயின், இப்போது பேரரசரை அரியணையிலிருந்து இறக்கிவிட்டுக் காம்ரானின் புதல்வரான அவரது மைத்துனரை அரசராக்குவது எனத் தீர்மானித்த வலிமைவாய்ந்த கட்சியின் தலைவராக அவர் விளங்கினார். இதனைத் தடுப்பதற்காக 1565ஆம் ஆண்டில் அந்த இளவரசரை அக்பர் இரகசியமாகக் கொன்றுவிடுமாறு செய்தார். இது 1565 முதல் 1567 வரையில் ஓயாது எழுந்த பல புரட்சிக் கலகங் களுக்கு அறிகுறியாக அமைந்தது. இறுதியாக அக்பர் 1567ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அலகாபாத்திற்கருகே மணிப்பூரில் நடைபெற்ற சண்டையில் உஸ்பெக் செல்வந்தர் களை முரியடித்தார். உயிரிழந்தோரில் அலிகுலிகானும் ஒருவ ராவார். 'அக்பர் விரும்பிய ஒருமுகப்படுத்தப்பெற்ற ஆட்சியும், கான் ஸமான் பிரதிநிதியாக இருந்த நிலமானியச் செல்வந்தர் ஆட்சியும் ஒன்றாக வாழ்வதற்கில்லை. இதுபோன்ற எடுத்துக் காட்டுகள் பலவற்றை ஐரோப்பிய வரலாற்றில் காணலாம்.'[1]

1 Kennedy, 'History of the Great Moghuls,' Vol. i, பக். 244.

### ஆக்ரா கோட்டையைக் கட்டுதல்

தமது மகனையும் பேரனையும் போலவே அக்பரும் ஒரு பெருங் கட்டடப் பிரியராவார். அக் காலத்திலேயே அதற்கான பல திட்டங்களை அவர் தீட்டினார். அவற்றில் முதலாவது ஆக்ரா விற்கு அருகில் கட்டிய நாட்டுப்புற விடுதியாகும். அதற்கு அமனுபாத் என்று அக்பர் பெயர் சூட்டினார். அது ஏறக்குறைய எல்லா முகலாயக் கட்டடங்களையும் போலவே சுற்றிலும் தோட்டங்கள் சூழ இருந்தது. இந்த ஆரம்பகாலக் கட்டடம் அடியோடு அழிந்துவிட்டது. ஆயின், அக்பரின் அடுத்த கட்டடமான ஆக்ரா பெருங்கோட்டை இன்றளவும் நிலைத்து நிற்கின்றது. அதற்கான வேலை 1565ஆம் ஆண்டில் தொடங்கியது. அதனைக் கட்டிமுடிக்க பதினைந்து ஆண்டுகள் பிடித்தன. அதன் பெரும்பகுதியை ஷாஜஹான் இடித்துவிட்ட போதிலும், அக்பரின் கட்டடத்தின் சில பகுதிகள் இன்றும் அழியாது நிற்கின்றன.

### ஹகீம் மீர்ஸா இந்தியாவின்மீது படையெடுத்தல்

காபூலின் ஆளுநரும் அக்பரின் சகோதரருமான ஹகீம் மீர்ஸாவின் இந்தியப் படையெடுப்பினால் அக்பருடைய கட்டடக் கலை சார்ந்த திட்டங்களும் பிற திட்டங்களும் சிறிது காலத்திற்குத் தடைப்பட்டன. அவருக்கு எதிராக வடக்கில் முன்னேறிய அக்பர் லாகூரை அடைந்தார். ஆனால், அதற்குள் ஹகீம் மீர்ஸா பின்வாங்கினார். இங்ஙனம் பேரரசிற்கு வந்த இடர் பனிபோல் நீங்கியது.

### 1567ஆம் ஆண்டைய சித்தூர் முற்றுகை

இத்தகைய இடர்ப்பாடுகளிலிருந்து அக்பர் விடுபட்டதால் அவர் தமது நாடுபிடிக்கும் கொள்கையில் தீவிரமாக ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது. இந்தியாவிலேயே மிகுந்த வலிமை மிக்கதும், இராஜபுத்திரத் தலைவர்களிடையே தலைசிறந்தவரான மேவார் இராணாவின் வலிமைமிக்க கோட்டையுமான சித்தூர்க் கோட்டை 1567ஆம் ஆண்டில் அக்பரிடம் சிக்கியது. தட்டையான சமவெளிப் பகுதியின் நடுவில் இருந்த குன்றின்மீது அமைந்த சித்தூர்க் கோட்டை வெல்ல முடியாதது எனப் புகழ் பெற்று விளங்கியது. அக்பர் அதனைக் கைப்பற்றத் தீர்மானித்தார். தமது குடும்பத்தாரையே அன்னியர் என்றும், தாழ்ந்தவர் என்றும் கருதி அவமரியாதையாக நடந்துகொண்ட மேவாரின் இராணாக்களின்மீது அக்பர் வெறுப்புக்கொண்டார். மேலும், அக்பரிடம் தோற்று ஓடிய மாளவத்தின் சுல்தானை

பாஸ்பகதூர் இராணுவிடம் அடைக்கலம் புகுந்தார். இராணுவும் தமது கோட்டையின் வலிமையை மனத்தில் கொண்டு பாஸ் பகதூரை அக்பரிடம் ஒப்படைக்க மறுத்தார். இப் பகைநட வடிக்கையைத் தண்டிக்காது விட்டால் தமது பெருமைக்கு இழுக்கு வந்துவிடும் எனக் கருதிய அக்பர், 1567ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சித்தூரின்மீது நேரடியாகத் தாமே படை யெடுத்துச் செல்வதென முடிவு செய்தார். தகுதி வாய்ந்த தந்தை இராணு சங்காவின் தகுதியற்ற மகன் உதயசிங்குடன் போரிட நேர்ந்தது அக்பரின் நல்வாய்ப்பேயாகும். டோடின் (Tod)[1] கருத்துப்படி, 'வேந்தருக்குரிய பண்புகளில் ஒன்றுகூட உதயசிங்கிடம் இல்லை. அவரது இனத்தவரின் பொது மரபு சொத்தாக வரும் வீரூர்ந்த பண்பு குறைந்திருந்ததால் வேறெந்தக் குணநலமும் அவரிடம் இல்லாது போயின.' அவரது சொந்த மகனும் அவரது வாரிசுமான இராணு பிரதாப்சிங் தமது நாட்டிற்கும் இனத்திற்கும் நேர்ந்த இழிவைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இராணு சங்காவிற்கும் எனக்கும் இடையே உதயசிங் தோன்றுதிருந்தால் இந்தியாவில் துருக்கியர் ஆதிக்கம் ஏற்பட்டிராது' எனப் புலம்பினர். உதயசிங்கோ ஆரவல்லி மலைகளுக்கு ஓடிவிட்டார். ஆயின், மெய்ர்த்தாவைத் தீரத்துடன் காத்த வீரரும் இராணுவின் சேவகத்தில் இருந்தவரு மான ஜெய்மால், தமது தலைவரின் வெட்கக்கேடான வழியைப் பின்பற்றுது இறுதிவரையில் சித்தூரைக் காப்பது என உறுதி பூண்டார். சித்தூர்க் கோட்டையின் இயற்கை வலிமையை உணர்ந்து அதனை முறையாக முற்றுகையிட்டுக் கைப்பற்றுவது என அக்பர் தீர்மானித்தார். அவரது பாசறை இருந்த இடத் தைக் குறிக்கும் கற்றூண் ஒன்று காணப்படுகின்றது. அது இன்றளவும் 'அக்பர் தீவா' (Diwa - lamp) என அழைக்கப் பெறுகின்றது. சித்தூர்க் கோட்டையைக் கண்ணி வைத்துத் தகர்ப்பதற்கான முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. அக்பரின் நல்வாய்ப்பாகக் கோட்டை மதில்மீது கண்ட ஒருவரை அவரே சுட்டு வீழ்த்தினர். அவ்வாறு சுட்டு வீழ்த்தப்பெற்றவர் கோட்டையைத் தீரத்துடன் காத்துவந்த ஜெய்மாலே ஆவர்.

இந்தியப் படைகளிடம் வழக்கமாகக் காணப்பெறுவதைப் போல, தலைவரின் மரணம் சித்தூர்க் கோட்டைக் காவற்படை யின் தலைவிதியையும் நிர்ணயித்தது. ஃபட்டா எனப் பொதுவாக அழைக்கப்பெற்ற கெய்ல்வாவின் பத்சிங் தீரத்துடன் எதிர்த்துப் போரிட்டபோதிலும், பயன் ஒன்றும் கிட்டவில்லை. தங்களது

1 Tod's 'Aannls & co., Crooke, Vol. i, பக். 372.

போராட்டத்தின் பயனற்ற தன்மையை உணர்ந்த இராஜபுத்திர காவற்படையினர் 'ஜஹார்' (jauhar) சடங்கை நடத்தினர்.[1] 8,000 இராஜபுத்திர வீரர்கள் தங்கள் இன்னுயிரைக் கூடுமான வரை மதிப்பு மிக்கதாகச் செய்யத் தீர்மானித்து, சரண்புகாமல் செத்துமடிந்தனர். கடுமையான சேதத்திற்குப் பின்பே அக்பர் வெற்றி பெற்ருர். வீழ்ச்சியுற்றவரை அவர் வேண்டாத கடுமை யுடன் நடத்திஞர். சித்தூர்க் கோட்டையைப் பாதுகாப்பதில் பங்கு கொண்ட 30,000-க்கும் மேற்பட்ட இராஜபுத்திரர்களுக்குத் தண்டனை அளிக்கும் வகையில் அவர்களை வெட்டி வீழ்த்திஞர். சித்தூரின் வீழ்ச்சி இராஜபுத்திரர்களின் உள்ளுணர்ச்சிப் பாங்கில் மாருத வடுவினை ஏற்படுத்தியது. உதயசிங்கிற்குப்பின் வந்தவர் கள் யாரும் தங்களின் முன்ஞேர்களின் புனிதமான கோட்டைக் குள் நுழையத் துணியவில்லை. உதயபுரி எனும் புதிய நகரம் அவர் களுடைய தலைநகரமாகத் திகழத் தொடங்கியது. பிற்காலத்தில் இராஜபுத்திரத் தலைவர்களின் வீரத்தைப் போற்றும் வகையில் ஹதிபால் என்று பெயர் பெற்ற ஆக்ரா கோட்டை வாயிலில் ஜெய்மால், ஃபட்டா ஆகியோரின் சிலைகளை அக்பர் நிறுத்திஞர்.

**ரான்தம்பூரை அடக்குதல்**

அடுத்தபடியாக அக்பர் ரான்தம்பூரின்மீது கவனம் செலுத் திஞர். மீர்ஸாக்களின் புரட்சிக் கலகம் காரணமாகச் சிறிது காலத்திற்குத் தமது திட்டத்தைக் கைவிடவேண்டியிருந்த போதிலும், 1569ஆம் ஆண்டில் ரான்தம்பூரின் முற்றுகையை அக்பர் தொடர்ந்தார். அம் முற்றுகை நீண்ட காலத்திற்கு நீடிக்கும்போலத் தோன்றியது. மேவார் மன்னரிடமிருந்து மானிய உரிமை பெற்ற புந்தியின் ராவ் சுஜானின் தலைமையில் இருந்த ஹாராப் படையொன்று அக் கோட்டையைக் காத்து வந்தது. ஆயின், ஒரு மாதகாலத்திற்குள் ராவ் சுஜானுக்குக் கையூட்டு அளித்து அதனை அக்பர் பணியவைத்தார். பேரரச ரிடமிருந்து நேரடியாக ஐம்பத்திரண்டு மாவட்டங்களைக் கொண்ட மானியத்தை ராவ் சுஜான் கையில் ஒப்படைப்பதாக உறுதியளித்தார். ரான்தம்பூர் கோட்டை ஒப்படைக்கப்பெற்ற கதை சுவைமிக்கது. இராஜபுத்திரப் பண்பு மரபைப் பயன் படுத்தி சுஜானை அவரது கோட்டையிலேயே சந்திப்பதற்காக மான்சிங் சென்ருர். அக்பரும் வழக்கமான துணிவுடன் அரச சின்னம் தூக்கும் பணியாளாக வேடமணிந்து மான்சிங்குடன்

1 அவமானத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதற்காகப் பெண்கள் சுடலைத் தீயில் வீழ்ந்து மடிதல். மிக இக்கட்டான நிலையில் இராஜபுத்திரர் பொதுவாகக் கொள்ளும் பழக்கமாகும்.

சென்ருர். ராவின் உறவினர்களில் ஒருவர் அக்பரை அடையாளம் கண்டுகொண்டார். பேரரசரிடம் கொண்ட மதிப்பார்வத்தால் தூண்டப்பெற்று, அக்பரின் கையிலிருந்த பதவிச் சின்னத்தைத் தாமே பெற்றுக்கொண்டு, அவரைக் கோட்டைத் தலைவரின் அரியணைப் பக்கமாக அழைத்துச் சென்ருர். அக்பரும் பதற்றமுருது ராவ் சுஜானின் நோக்கங்களென்ன என்று வினவினர். ராவிற்குப் பதிலாக விடையளித்த மான்சிங், பேரரசரின் சேவையில் பெருந்தன்மை கொண்ட பதவியை ராவிற்கு அளித்தால், ரான்தம்பூர் கோட்டை சரணடையும் எனக் கூறினர். தம்மிடம் இருந்த பகுதிகள் அனைத்தையும் அக்பரின் உரிமை மானியதாரர் என்ற வகையில் ராவே வைத்திருக்க அனுமதி கிடைத்தது. மேலும், தமது நிலைக்கும் பெருமைக்கும் உகந்த உரிமைக் கூறுகளைக் கோரும் உரிமையும் அவருக்கு வழங்கப் பெற்றது.

இரு கட்சிகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் விவரமான குறிப்பினை டோட் நமக்குத் தந்துள்ளார்.[1] "ஆம்பரின் அரசருடைய இடையீட்டினுல் அவ்விடத்திலேயே உடன்படிக்கை உருவாகியது. அது இந்துக்களின் உணர்ச்சியை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. அதன்படி : 1. இராஜபுத்திரர்களுக்கு அவமானமளிக்கும் பேரரச உவளகத்திற்கு 'தோலா' (Dola) அனுப்பும் வழக்கத்திலிருந்து புந்தியின் தலைவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும். 2. ஜெஸியா அல்லது தலைவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். 3. புந்தியின் தலைவர்களை அட்டாக்கைக் கடந்து செல்ல வற்புறுத்தக் கூடாது. 4. நௌரோஸா திருவிழாவின்போது அரண்மனையில் உள்ள மீனுபஜாரில் கடை வைப்பதற்காக உட்குடிகளின் மனைவியரை அல்லது பெண் உறவினரை அனுப்பும் கட்டாயத்திலிருந்து புந்தியின் உட்குடிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும். 5. திவானி அம் அல்லது 'தரிசன மண்டபத்திற்கு' புந்தி தலைவர்கள் படைக்கலம் தாங்கி வரும் உரிமை வழங்கப் பெறுதல் வேண்டும். 6. அவர்களுடைய புனிதமான கட்டடங்களை மதித்து நடக்கவேண்டும். 7. எப்போதும் இந்து தலைவர் ஒருவரின்கீழ் அவர்களைக் கொண்டுவருதல் கூடாது. 8. அவர்களுடைய குதிரைகளின்மீது பேரரச முத்திரையைப் பொறித்தல் ஆகாது. 9. தலைநகரின் தெருக்களில் லால் தர்வாஸா அல்லது 'செவ்வாயில்' வரை அவர்களுடைய நக்காரா அல்லது 'படகத்தை' (Kettle drum) முழக்க அனுமதி தர

1 Tod's Annals & co. Crooke, Vol. iii, பக்.1482.

வேண்டும். அதனோடு பேரரசரின் முன்னிலையில் வரும்போது அவருக்கு மண்டியிட்டு வணக்கம் செலுத்துமாறு வற்புறுத்துதல் கூடாது. 10. பேரரசருக்குத் தில்லி எப்படியோ அப்படியே ஹராக்களுக்கு புந்தி அமைய வேண்டும். தலைநகர் மாறாமல் இருப்பதற்கு உறுதி அளிக்கவேண்டும்.

**கலஞ்சார் சரணடைதல்**

முன்னணைய இராஜபுத்திரப் பகைவர்களின் நட்பைத் தொடர்ந்து பெறுவதற்காக அக்பர் கையாண்ட வழிமுறையை மேலே தந்த குறிப்பு நன்கு விளக்கும். சித்தூரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அத்துணைக் குறுகிய காலத்தில் ரான் தம்பூரும் வீழ்ச்சியுற்றதால் பேரரசரின் பெருமை மேலும் உயர்ந்தது. இங்ஙனம் பேரரசப் படைத்தலைவர்களுக்கு எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் கலஞ்சாரின் தலைவர் தமது கோட்டையை அவர்களிடம் ஒப்படைத்தார். இறுதிப் பெருங்கோட்டையான கலஞ்சார் வீழ்ச்சியுற்றதோடு வடஇந்தியாவில் அக்பரின் நிலை உறுதியடைந்தது; மேலும், அவர் மற்றத் திசைகளில் தமது பேராசைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான வாய்ப்பையும் அளித்தது.

**இராணு பிரதாப் பேரரசரை எதிர்த்து நிற்றல்**

எப்படியாயினும், அக்பருக்கு எதிராக ஓர் இராஜபுத்திரத் தலைவர் வாழ்ந்துவந்தார். சோம்பலான சுகவாழ்க்கையை மேற்கொண்டு தமது மூதாதையர்களின் நாட்டை மீட்க முடியாத நிலையில் இருந்தபோதிலும், ஆரவல்லிக் காடுகளில் உதய சிங் பாதுகாப்புடன் வாழ்ந்துவந்தார். அவருக்குப் பிறகு 1572ஆம் ஆண்டில் அவரது புகழ்பெற்ற மைந்தரான இராணு பிரதாப்சிங் தலைவரானார். அவரது தலைநகரமும் நாடும் முகலாயப் பேரரசரிடம் இருந்ததால், அவற்றை மீட்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். வீரமிக்க இராஜபுத்திரப் படையொன்றைத் திரட்டிக்கொண்டு பேரரசக் காவற்படைகளைத் தாக்கத் தொடங்கினார். பல கோட்டைகளையும் கைப்பற்றினார். ஆயினும், சித்தூர் மட்டும் முகலாயர் கையிலேயே இருந்தது. 1576ஆம் ஆண்டில் ஹால்டிகாத் கணவாயில் பேரரசப் படைகள் இராணு பிரதாப்சிங்கைத் தோற்கடித்தன. அச் சண்டையில் இராஜபுத்திரக் கொடி, வெண்கொற்றக் குடை ஆகியவற்றின் கீழ் பிரதாப்பிற்குப் பதிலாக அமர்ந்து போரிட்ட ஜாலா தலைவர், இராணுவின் உயிரைக் காத்தார். அவர் சண்டையிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பிரதாப்சிங் போர்க்களத்திலிருந்து தப்பிச்சென்றார். ஜாலா தலைவர் பற்றுறுதியுடன் கடமையைச்

செய்து தம் இன்னுயிரை ஈந்தார். ஆயினும், இராணு பிரதாப்பின் போற்றுதலுக்கு அடையாளமாக அரசக் கொடியையும், வெண்கொற்றக் குடையையும் ஜாலா தலைவரின் சந்ததியார்கள் தங்களிடமே வைத்திருந்தனர். இராணு பிரதாப்சிங்கின் வாழ்க்கை ஓயாத இன்னலும் ஒழியாத இடரும் நிறைந்திருந்தது. பல சமயங்களில் அவர் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது. ஆயினும், பகைவரிடம் பணிய அவரது பெருமிதம் இடந்தரவில்லை. அவரை அடிமைகொள்ளவேண்டும் என்ற அக்பரின் முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. 1597ஆம் ஆண்டில் அவர் இறந்தபோது சித்தூர் இராணுவின் அதிகாரத்தை முற்றிலும் அழித்துவிடுவதற்கான வாய்ப்பு அக்பருக்குக் கிடைத்தது. ஆயின், அக்பரது கவனம் பிற பகுதிகளில் தீவிரமாகச் சென்றிருந்தது. இளைஞரான இராணு அமர்சிங்கிற்கு எதிராகப் போர்தொடுக்க இளவரசர் சலீமை அக்பர் அனுப்பினுர். ஆனுல், அவ்விளவரசர் புரட்சி செய்ய முற்பட்ட காரணத்தால் அக்பரின் முயற்சி வெற்றிபெறவில்லை. இங்ஙனம் அக்பரின் ஆட்சி முடியும்வரை இராணு அமர்சிங் சுதந்திரமாக வாழ்ந்துவந்தார்.

**1569ஆம் ஆண்டில் இளவரசர் சலீமின் தோற்றம்; ஃபதேபூர் சிக்ரியைக் கட்டுதல்**

அக்பருக்குப் பல மனைவியர் இருந்தும், அதுவரையில் அவருக்குப் பிறந்த குழந்தை எதுவும் உயிருடன் வாழ்ந்திருக்கவில்லை. ஒரு மகனைப் பெறுவதற்காக அவர் ஆஜ்மீரிலும் பிற இடங்களிலும் வாழ்ந்த புகழ்பெற்ற அருள்தொண்டர்களிடம் தவருது சென்றுவந்தார். பிற இடங்களோடு ஆக்ராவிற்கு அருகிலிருந்த சிக்ரி எனும் இடத்திற்கும் சென்று வந்தார். அங்கே வாழ்ந்துவந்த புனிதரான ஷெய்க் சலீமின் விடுதிக்குச் சென்றுவரலானுர். பேரரசரின் பிரார்த்தனைகள் பயனளிக்கும் என்றும், அவருக்கு மகன் பிறப்பான் என்றும் ஷெய்க் சலீம் உறுதியளித்தார். அவரது வாக்கு 1569ஆம் ஆண்டு பலித்தது. அக்பருக்கு மூத்த மகன் பிறந்தான். ஷெய்கின் பெயராலேயே அவ்விளவரசனுக்கு சலீம் எனப் பெயர் சூட்டப்பெற்றது. அடுத்த ஆண்டில் அங்கேயே முராத் எனும் மற்ருெரு மகன் பிறந்தான்.

இங்ஙனம் தமது நன்றியறிதலின் அறிகுறியாக சிக்ரியில் நேர்த்தியான நகரமொன்றை நிர்மாணிப்பது எனப் பேரரசர் முடிவு செய்தார். அந் நகரத்திற்கு ஃபதேபூர் சிக்ரி எனப் பெயரிட்டார். அதனைக் கட்டிமுடிக்கப் பதினன்கு ஆண்டுகள்

பிடித்தன. 1585ஆம் ஆண்டில் அதனை முற்றிலும் துறக்கும்வரை அது அவரது தலைநகரமாகத் திகழ்ந்தது. அவருக்குப் பின் வந்தோர் அதனைப் பயன்படுத்தவில்லை. அது பெரும்பாலும் அக்பர் விட்டுச்சென்ற நிலையிலேயே இன்றும் இருந்துவரு கின்றது. மசூதியின் மிகப் பெரிய வாயிலான 'புலாந்த் தர்வாஜா'வே (Buland Darwaza) அந் நகரின் மிகச் சிறந்த கட்டடமாகும். அதைப்பற்றி இந் நூலின் எட்டாம் இயலில் விளக்கம் காணலாம்.

## குஜராத்தின்மீது படையெடுத்தல்

குஜராத்தில் வாழ்ந்த பல அரசர்களிடையே இருந்த பூசல் களே அப் பகுதியின்மீது படையெடுத்துச் செல்ல அக்பரைத் தூண்டின. 1572ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அவர் படை யுடன் புறப்பட்டுச் சென்றார். அங்கே எதிர்ப்பு அதிகமில்லாத தால் தலைநகரமான அகமதாபாத்தை அக்பர் நவம்பர் மாதத் தில் கைப்பற்றினார். பெயரளவில் குஜராத் மாவட்டத்தின் மன்ன ராக இருந்த முஸஃப்பர்ஷாவைச் சிறையிலடைத்தார்.

## 1573ஆம் ஆண்டில் சூரத்தைக் கைப்பற்றியதோடு குஜராத்தையும் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருதல்

அதன்பிறகு அக்பர் காம்பேயிக்குச் சென்றார். அங்கே முதல் முறையாகக் கடலைக் கண்டு அதில் சிறிது தூரம் சென்று வந்தார். ஆனால், இப்ரஹீம் உசேன் மீர்ஸாவின் புரட்சிக் கல கத்தைப்பற்றி அறிந்து காம்பேயிலிருந்து விரைவாகத் திரும்பி வந்தார். மீர்ஸாவின் தலைநகரமான சூரத்தை நோக்கி முன்னேறி 1572ஆம் ஆண்டு சார்னல் எனுமிடத்தில் நடந்த கடுமையான போரில் வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து 1573ஆம் ஆண்டு ஜனவரியில் சூரத்தை முற்றுகையிட்டார். அங்கேதான் அவர் ஐரோப்பியரை முதல் முறையாகச் சந்தித் தார். சூரத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் உதவி செய்வதற் காக கோவாவிலிருந்து சிறு போர்ச்சுகீசியப் படை ஒன்று சூரத் திற்கு வந்திருந்தது. எப்படியிருப்பினும், பேரரசருடன் போரிடு வதற்குப் பதிலாகப் போர்ச்சுகீசியர்கள் சமாதானப் பேச்சு களைத் தொடர்ந்தனர். அதன் விளைவாகப் பேரரசருக்கும் கோவாவிலிருந்த போர்ச்சுகீசிய அரசப் பகர ஆளுக்கும் முறை யான உடன்படிக்கை ஏற்பட்டது. அதனால் முக்கியமாக மெக் காவிற்கு யாத்திரிகர்கள் செல்வது எளிதாயிற்று. 1573ஆம் ஆண்டில் சூரத் சரணடைந்ததும், போர் நின்றது. ஆயினும், சிறிது காலத்திற்குள் முகம்மது உசேன் மீர்சாவின் தலைமையில்

குஜராத்தில் புதிய கலகம் ஒன்று தோன்றியது. கடுமையான கோடையின் மத்தியில் இருந்தபோதிலும் உடனே நட வடிக்கை எடுக்க அக்பர் முடிவு செய்தார். 1573ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதியன்று அவர் மூவாயிரம் வீரர்களைக்கொண்ட சிறு படை ஒன்றுடன் ஃபதேபூர் சிக்ரியை விட்டுப் புறப்பட்டார். அதே சமயத்தில் பகைவரிடம் 20,000 வீரர்கள் அடங்கிய பெரும்படை இருந்தது. நெப்போலியனைப் போல விரைந்து சென்று தாக்குவதில் அக்பர் நம்பிக்கை கொண் டிருந்தார். அக்பர் திடீரென்று குஜராத்திற்கு வந்தது பகைவரை வியப்பில் ஆழ்த்தித் தடுமாறச் செய்தது. பேரரசருக்காக கானி ஆஸம் ஆண்டுவந்த அகமதாபாத்தையே அவர்கள் கண் காணித்துவந்தனர். அப்போது செப்டம்பர் மாதம் இரண்டாம் நாளன்று எதிர்பாராத நிலையில் அவர்கள்மீது அக்பர் திடீரென்று பாய்ந்தார். புரட்சிக் கலகம் செய்தவர்கள் படுதோல்வி அடைந்தனர். அவர்களது தலைவரும் சிறைப்பட்டார். 1573ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ஆம் தேதி அக்பர் தலை நகருக்குத் திரும்பிவிட்டார். இப் படையெடுப்பு முழுவதற்கும் நாற்பத்துமூன்று நாள்களே பிடித்தன. இது 'வரலாற்றிலேயே வெகு விரைவில் நடந்தேறிய படையெடுப்பாகும்'. [1]

### அக்பரும் இராஜபுத்திரர்களும்

இராஜபுத்திரர்களுடன் அக்பர் கொண்டிருந்த உறவுநிலை அவரது ஆட்சியின் வரலாற்றிலேயே சிறந்த இடத்தினைப் பெறுவதாகும். அதனை விரிவாக விளக்குதல் வேண்டும்.

'அதுவரையில் இந்தியாவை ஆண்ட அரச குலங்களிலெல் லாம் தாமர்லேனின் குலமே அடிப்படையில் மிகவும் மெலிந்தது, நிலையற்றது' என ஆங்கில வரலாற்றறிஞர் கூறுகின்றார். இன்னும் தைமூரின் குலம் நாட்டில் நன்றாகக் காலூன்றவில்லை. அக் குலத்தவரின் பகைவர்களாக இருந்த இந்துக்களும் முஸ்லீம் களும் எண்ணிக்கையில் ஏராளமானவர், வலிமையில் வெல்ல முடியாதவர்கள். அக்பருடைய தந்தையாரும் பாட்டனாரும் ஓயாது போரிடவேண்டியிருந்ததால் பாசறைகளிலேயே வாழ்க் கையின் பெரும் பகுதியைக் கழித்தனர். அதனால் ஒழுங்கான பொது ஆட்சிமுறையை உருவாக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாதுபோய்விட்டது. புதிதாக வந்தவர்களை அன்னியராகக் கருதிய முஸ்லீம்கள் அவர்களிடம் பற்றுறுதி கொள்ளவில்லை. ஹுமாயூனின் ஓட்டமும் சூர்கள் அரியணையில் ஏறியதும் இந்தி

1 V. A. Smith Akbar.

யாவில் வாழ்ந்த முஸ்லீம்களை நம்பமுடியாது எனத் தெளிவாகக் காட்டின. ஹகீம்மீர்ஸா காபூலின் அரசராக வந்தபிறகுஆப்கானிஸ்தானத்திலிருந்தோ துருக்கிஸ்தானிலிருந்தோ உதவிப்படைகள் பெறும் வாய்ப்புகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. இடரார்ந்த போர்களின் விளைவாக பாபர், ஹுமாயூன் போன்றோரின் காலத்தில் வாழ்ந்த ஆற்றல்மிகுந்த படைத்தலைவர்களின் எண்ணிக்கை குறைந்துவந்தது. மேலும், பேரரசர் பெற்ற வெற்றிகளுக்கெல்லாம் தாங்களே காரணம் என்று உணர்ந்த அவர்கள் சில சமயங்களில் பேரரசருக்குப் பணிய மறுத்தனர்; பல சமயங்களில் போரில் பெற்ற பொருள்களைப் படைத்தலைவர்களே வைத்துக்கொண்டனர். தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகப் பேரரசரே நேரில் சென்று அவர்களைப் பணியவைக்கவேண்டியிருந்தது.

பத்தானியரின் ஆட்சிக் காலம் முழுதும் இந்து எதிர்ப்பின் மூலகாரணமாக இருந்தவர்கள் இந்து சமயத்தவரான இராஜபுத்திரத் தலைவர்களே. தில்லியை ஆண்ட அரசர் அனைவரும் அவர்களுடன் ஓயாது போரிடவேண்டியிருந்தது. அப்படி இருந்தும் மத்திய அரசின் பிடி தளர்ந்தது என்பதை உணர்ந்தவுடனே இராஜபுத்திரர்கள் தங்களது உரிமையை நிலைநாட்டி வந்தனர். அவர்களில் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பெற்ற தலைவராக விளங்கியவர், மேவாரின் இராணுவே ஆவார். மேவாரின் தலைநகரமான சித்தூரை அலாவுதீன் கில்ஜி அழித்த போதிலும்,அப் புயலைத் தாங்கிநின்ற இராணுவின் குடும்பத்தினர் தனிமதிப்புப் பெற்றுத் திகழ்ந்தனர். பாபரின் முக்கிய எதிரியாக இருந்தவர் இராணுசங்ரம் சிங்தான். அவர் அனுபவமும் ஆற்றலும் மிக்க படைவீரர் மட்டுமன்று; சக்திவாய்ந்த இராஜபுத்திரக் கூட்டணியின் தலைவராகவும் விளங்கியவர். பாபருக்குக் காண்வாயில் முடிந்த வெற்றி கிட்டியபோதிலும் இராணுசங்ரம் சிங் உரிமையோடு வாழ்ந்திருந்தார். 1529ஆம் ஆண்டில் அவர் மறைந்தபிறகு மேவாரைக் சார்ந்த ராஜா மால்தேவ் தலைசிறந்து விளங்கினார். அவருக்கு எதிராகவும் ஷெர் ஷா போரிட்டார். அப் போரில் ஷெர் ஷா வெற்றி பெற்ற போதிலும் அவருக்கு ஏற்பட்ட சேதம் கடுமையானது. ‘கையளவு பஜ்ரி தானியத்தைப் பெறுவதற்காகத் தில்லிப் பேரரசையே அனேகமாக இழந்துவிட இருந்தேனே’ என்று ஷெர் ஷா வியந்து கூறியதாகச் சொல்லப்படுகின்றது.

ராஜா பீஹாரிமாலின் மகளை மணந்ததிலிருந்து இராஜபுத்திரருடனான அக்பரின் நட்புறவு தொடங்கியது. இத் திருமணம்

3185



அவரது பிற்காலக் கொள்கைமீது செல்வாக்குச் செலுத்திய சிறப்புமிக்க செயலாகும். அந்த இராஜபுத்திரத் தலைவரின் புதல்வரும் பேரருமான பகவந்தாஸும் மான்சிங்கும் முகலாயப் பேரரசில் பெரும் பதவிகளைப் பெற்றுப் பிரபுக்களாயினர். பழைய பகைமையை மறந்து, தமது குடிகள் அனைவரும் ஒன்றுபட்ட மக்களாக வாழ வழி செய்யும் வகையில் செயலாற்றுவதே சிறந்த கொள்கையாகுமென்பதை ஏற்கெனவே அக்பர் உணர்ந்திருந்தார். ஆயின், இப்போது தாம் மக்களுடைய இடர்களைப் போக்கிக் கொடுமைகளை அகற்றும் பாதுகாவலர் என்பதை அவர்களுக்கு உணர்த்தவும், அவர்கள் தங்களுடைய பழைமையான உரிமைகளையும் தனி உரிமைகளையும் தடையின்றி அனுபவிப்பதற்கேற்ற உறுதிமொழி அளிக்கவும் இனம், சமயம் ஆகிய வேற்றுமையின்றி அரசாங்க உயர் பதவிகளை யாவருக்கும் தரவும், ஒரே வகையான முறையை வழங்கவும் உற்ற ஏற்பாடுகளைச் செய்து அவற்றின்மூலம் தமது கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று அக்பர் முடிவு செய்தார். கடந்த காலத்தில் இந்து சமயத்தின் அரணாக விளங்கியவர்கள் இராஜபுத்திரர்களே ஆவர். அவர்களைப் பேரரசின் ஆதரவாளர்களாகச் செய்ய முடியுமானால் தமது வேலை எளிதாகிவிடுமென அவர் உணர்ந்தார். அவர் இராஜபுத்திர இளவரசிகளை மணந்ததால் தகுந்த வாய்ப்புக் கிடைத்தது. அதனை அவர் நன்கு பயன்படுத்திக்கொண்டார். இராஜபுத்திர அரசர்கள் பெரும் பதவிகளைப் பெற்றதோடு,பேரரசக் குடும்பத்தாருடன் நெருங்கிய உறவுகொண்டவர்களாக எல்லா வழிகளிலும் நடத்தப்பெற்றனர். மேலும், தகுதிக்கு ஏற்றவாறு அவர்கள் அரசியல் வாழ்க்கையில் முன்னேறிச் சென்றனர். அதுவரையில் படைத்தலைமை முஸ்லிம்களிடமே இருந்தது. அக்பர் அதனை எவர்க்கும் அளிக்க முன்வந்தார். இராஜபுத்திரர்களும் பேரரசு தங்களிடம் காட்டிய பரிவிற்கும், கொண்டிருந்த நம்பிக்கைக்கும் தாங்கள் தகுதியானவர்கள் என்பதை அருஞ் செயல்களாலும் சாதனைகளாலும் நிரூபித்துக் காட்டினர். ஆயின், பொதுவாக இந்துக்களிடமும், குறிப்பாக இராஜபுத்திரர்களிடமும் ஒப்புரவிணக்கக் கொள்கையைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது என்பதை உணர்ந்திருந்த அக்பர், நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பெறுவதற்கு முன்னர் பகைவரை அழிக்க வேண்டுமென்பதை மறந்துவிடவில்லை. நண்பர்களாகவும் துணைவர்களாகவும் இராஜபுத்திரர்களை வரவேற்க அவர் விருப்பங் கொண்டிருந்தபோதிலும், உரிமை கொண்ட இராஜபுத்திர அரசு எதையும் அடக்காமல் விடுவது இல்லை என்று உறுதிபூண்டார். இங்ஙனம் அவரது திருமண வைபவங்கள்

PACHAIYAPPA'S COLLEGE LIBRARY

நடந்துகொண்டிருந்தபோதே மெர்டாவைக் கைப்பற்றும் திட்டத்தை அவர் வகுத்தார். 1570ஆம் ஆண்டில் பிகானரிலிருந்தும் ஜெய்சல்மீரிலிருந்தும் மேலும் இரண்டு இராஜபுத்திர மங்கையரை மணந்துகொண்டார். இங்ஙனமாக இராஜபுத்திரக் காப்புக் கடப்பாட்டுணர்வுடன் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டார்.

இத்தகைய திருமண உறவுகளும், ஆலோசனைக் கூட்டத்தில் அக்பர் வெளிப்படுத்திய மதிநுட்பமும், போர்க்களத்தில் காட்டிய வீரமும், அவர் இராஜபுத்திரர்களிடம் காட்டிய விட்டுக்கொடுக்கும் உளப்பாங்கும் அவரை இராஜபுத்திரர் மிகவும் நேசிக்குமாறு செய்தன. இராணு பிரதாப்சிங்கைப் பலர் போற்றினர். ஆனுல், பேரரசருக்கு எதிராக அவருக்கு உதவி செய்ய எந்த இராஜபுத்திரத் தலைவரும் விரும்பவில்லை. இராஜபுத்திரர் முழு மனத்தோடு பேரரசை ஆதரித்தனர். பேரரசரின் பகைவரிடமிருந்து அவரையும் அவர்தம் ஆட்சியையும் உறுதியுடன் காப்பவர்களாக மாறினர். அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவிகளை அவர்கள் வகித்தனர். பேரரசரின் இளைய சகோதரரான ஷகீம் மீர்ஸா இறந்ததும், இராஜபுத்திர அரசர் ஒருவர் காபூலின் அரசப் பகர ஆளாக நியமிக்கப்பெற்ருர்.

### அக்பரின் சமுதாயச் சீர்திருத்தங்கள்

தமது இராஜபுத்திர, இந்துக் குடிகளை இணக்குவிப்பதில் மிகுந்த கவனம் செலுத்திய அதே சமயத்தில், விரிவகலமான மனிதகுலத் தேவைகளை அக்பர் மறந்துவிடவில்லை. பெண் குழந்தைகளைக் கொல்வதைத் தடைசெய்தார். மணமக்களுடைய இசைவில்லாத மணம் சட்டப்படியான திருமணமாகாது என விதித்தார். கடுந்தேர்வுகளைக் கொண்டு முறை வழங்குதல், விலங்குகளைப் பலியிடுதல் ஆகியவற்றைக் கண்டித்தார். கைம்பெண் மறுமணத்தைச் சட்டமுறையானதாக்கினுர். 'சதியை' (sati) (உடன்கட்டையேறுதலை) அறவே ஒழிப்பதில் அவர் வெற்றிபெறவில்லையெனினும், உடன்கட்டையேறுதல் தன்னிச்சையாக நிகழவேண்டுமென்று ஆணையிட்டார். விதவைகளின் விருப்பத்திற்கு விரோதமாக அவர்களை வற்புறுத்தித் தீக்குளிக்கவைப்பதைத் தடுப்பதற்காக அவரே நேரில் வந்து தலையிட்டுத் தடுத்தார் எனக் கூறப்படுகின்றது.

### அவரது ஆட்சிமுறை

பிரிட்டிஷ் இந்தியாவின் ஆட்சிமுறையின் அடிப்படையாகத் திகழ்ந்த அக்பரின் ஆட்சி முறையைக் கவனமாக

ஆராயவேண்டும். பல மாநிலங்களில் அக்பரும் அவர்தம் அமைச்சர்களும் வளர்த்த அதே முறையின் அடிப்படையில் நிலவர ஏற்பாட்டுத் துறையின் கொள்கைகளும் செயல்முறைகளும் அமைந்திருப்பதால், அக்பருடைய நிதிசார்ந்த ஏற்பாடுகள் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவையாகின்றன. பரந்த பேரரசில் வாழ்ந்த பல சமயங்களையும் சமூகங்களையும் சார்ந்த மக்களுக்கிடையே கூட்டுறவினை வளர்க்க முற்பட்ட முதல் இந்தியப் பேரரசர் அக்பர் என்பதையும் நாம் நினைவு கூர்தல் வேண்டும். இந் நூலின் 6ஆம் இயலில் அக்பருடைய ஆட்சிமுறைபற்றிய விளக்கத்தைக் காணலாம்.

### அவரது சமயக் கருத்துகள்

ஏறக்குறைய வடஇந்தியா முழுவதையும் வென்று, தக்கணத்தின் தென்கோடிவரை தாக்குதல் செய்து, பதினான்காம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், இந்தியாவில், முதலாவது முஸ்லீம் பேரரசினை அலாவுதீன் கில்ஜி நிறுவினார். அவர் இரண்டாவது அலெக்சாந்தராக வர எண்ணியதோடு, 'புனிதரான நபிநாயகத்தைப்போலவே தாமும் ஒரு புதிய சமயத்தைத் தோற்றுவிக்கவேண்டுமென்றும் கனவு கண்டார்'; ஆயின், டில்லியின் கொத்தவாலான அலா உல்முல்க் என்பார் அவருக்கு நல்ல யோசனை அளித்து சமயம் செய்வதை அருள்தொண்டரிடம் விட்டுவிடுமாறு கூறினார். அவரது யோசனையை சுல்தானும் ஏற்று நடக்கலானார்.

பேரரசு நன்கு வலிமையுடன் அமைந்துவிட்டதால் அக்பரும் புதிய சமயத்தை உருவாக்க எண்ணினார். அவரது சமயக் கருத்துகளின் வளர்ச்சியுற்ற சூழ்நிலைகள் அவரது ஆரம்பகால அரசியல் வாழ்க்கை வரலாற்றுடன் மிகுதியாகக் கலந்து நிற்கின்ற காரணத்தால், அவைகளைப்பற்றி இங்கே குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

அவரது ஆட்சியின் தொடக்க காலத்தில் இருந்த நாட்டின் நிலை, இராஜபுத்திரருடன் ஒற்றுமை, எல்லா வகுப்பாரையும் தம்வயப்படுத்துதல் ஆகிய கொள்கைகளை இன்றியமையாதனவாகச் செய்தது. தமது மணிமுடிக்காக ஷெர் ஷாவின் சந்ததியார்களுடன் போர்புரிந்ததைப் போலவே படைத்துறைசார்ந்த பிரபுக்களின் ஆதிக்கத்தோடும் அவர் தீவிரமாகப் போராடினார். பல்வேறு இந்திய அரசுகளை ஒருங்கு இணைத்து ஒன்றுபட்ட பேரரசை நிறுவுவதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. தமது குடிமக்களில் பெரும்பான்மையினரான இந்துக்களின் ஒத்

துழைப்பு இல்லாது அத்தகைய ஒற்றுமையைத் தோற்றுவிப்பது இயலாது என்பதை அவர் வெகு விரைவில் உணர்ந்தார். இயல்பாக அவரிடம் அமைந்த சமயப் பொறைப் பண்பை சில சூழ்நிலைகள் மேலும் வளர்த்தன. பல வழிகளில் தற்கால வேந்தரின் வகையைச் சார்ந்தவரானுர். நன்ருகவும் பயனுள்ள முறையிலும் ஆட்சி செய்யவேண்டுமாஞல், மாறுபட்ட சமயக் கருத்துகளைக் கொண்டிருக்கும் மக்களிடையே எவ்வித வேற்றுமையும் காட்டக்கூடாது என்ற சிறந்த கொள்கையை முற்றிலும் உணர்ந்திருந்தார். தமது துணைவர்களிடம் திறமை ஒன்றையே அவர் காண விழைந்தார். நல்ல முறையில் ஒருவர் பணிபுரிவாராஞல், அவரது சமயத்தைப் பற்றி அக்பர் கவலை கொள்ளவில்லை. இக் கொள்கையின் அடிப்படையிலேயே அவர் இராஜபுத்திரரிடம் விருப்பம் காட்டினுர். இதன் அடிப்படையிலேயே ஜெய்ப்பூர் இளவரசியையும் மேவார் இளவரசியையும் அவர் மணந்துகொண்டார். சமய நோக்கம் ஏதுமின்றிப் பட்டங்களையும் பதவிகளையும் அவர் வாரி வழங்கியதற்கு இக் கொள்கையே முக்கியக் காரணமாகும். முகம்மதிய சமய அடிப்படை உண்மையில் அவருக்கு எழுந்த ஐயப்பாட்டிஞல் முதலில் இத்தகைய சமயப் பொறைக் கொள்கையை அவர் போற்றவில்லை. எப்படி இருப்பினும், அவர் பிற சமயக் கோட்பாடுகளை ஆர்வத்தோடு கேட்டார். இறுதியில் தமது சமயத்தைச் சார்ந்த மரபு வழாதவரிடம் அவர் பகைமை கொண்டார்.

அக்பரின் சமய வரலாற்றினை மூன்று பகுதிகளாகக் கொள்ளுதல் முறையாகும். 1575ஆம் ஆண்டு வரையில் யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பெற்ற சுன்னி பிரிவைச் சார்ந்த முஸல்மாஞக வாழ்ந்துவந்தார். ஒழுங்காக வழிபாடுகளை நடத்திஞர். ஆர்வத்துடன் மசூதிகளைக் கட்டிஞர். அருள்தொண்டர்களின் கல்லறைகட்கு, குறிப்பாக ஆஜ்மீரிலிருந்த புனிதரின் கல்லறைக்கு அடிக்கடி சென்றுவந்தார். 1575 முதல் 1578வரையில் மூன்ருண்டுகளுக்கு மரபு வழாத முஸ்லிம் சமய அறிஞர்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகளை விளக்கக் கேட்டார். அவர்கள் தங்களுக்குள் ஓயாது போரிட்டுவந்ததிலிருந்து முஸ்லீம் சமயக் கோட்பாடுகள் ஐயத்திற்கிடமற்று இருப்பவையல்ல என உணர்ந்தார். எவ்வாறெனில், அச் சமய அறிஞரிடையே ஏராளமான கருத்து வேற்றுமைகள் இருந்ததால் உண்மை நிலை அவருக்கு விளங்கியது. அவர் இஸ்லாம் சமயத்தில் ஒற்றுமைக்குப் பதிலாகப் பல பிரிவுகளைத்தான் கண்டார். மூத்த சகோதரரான பைஸியிஞல் 1574-ல் அறிமுகம் செய்துவைக்கப்பெற்ற அபுல்

ஃபாஸல் இத்தகைய விவாதங்களில் முக்கியப் பங்கு கொள்ளவில்லை. இதற்கிடையில் அவர்களுடைய தந்தையாகிய ஷேக் முபாரக் 1579ஆம் ஆண்டில் தாம் எடுக்கவிருந்த பெரிய நடவடிக்கைக்கான சூழ்நிலையை உருவாக்குவதில் முனைந்திருந்தார்.

அவ்வாண்டில் ஒரு நாள் மாலைவேளையில் சமயக் கூட்டங்களுக்கென்றே தனிப்பட்ட முறையில் அக்பரால் பயன்படுத்தப் பெற்ற 'இபதத் கானு' (I' badat Khana) எனும் வழிபாட்டு இல்லத்தில் நடைபெற்ற விவாதத்தில் நீண்ட சொற்போருக்குக் காரணமான பொருள் ஒன்றை ஷேக் முபாரக் புகுத்தினார். அரசரைச் சமயஞ் சாரா உலகியல் சார்ந்த தலைவராக மட்டும் கருதாது, குடிமக்களின் ஆன்ம வளர்ச்சிக்கான வழிகாட்டியாகவும் கொள்ளவேண்டுமென்பதே அப் பொருளின் சாரமாக அமைந்தது. இக் கொள்கை இஸ்லாத்தின் அடிப்படைக் கருத்தைத் தகர்ப்பதாக அமைந்தது. ஏனெனில், இஸ்லாத்தின் கருத்துப்படி கொரானே தனித் தலைமை இடத்தை வகிக்க வல்லது. கடந்த மூன்று ஆண்டுகளாகப் பெரிதும் முரண்பட்டு நின்ற மரபு வழாத சமய அறிஞர்கள் முபாரக்கின் கருத்தினை அடியோடு மறுக்கும் நிலையில் இல்லை. அதனால் ஒருவகையான சமரச முயற்சி தோன்றியது. ஆவணம் ஒன்று வரையப் பெற்றது. அதில் நேர்மையான பேரரசர் என ஏற்றுக்கொண்டதற்கு இணங்க 'இமாம்-இ-அதில்' ('Imam-i-A'dil') (நேர்மையான தலைவர்) எனும் பட்டம் அக்பருக்கு அளிக்கப்பெற்றது. இஸ்லாமின் சட்டங்களைப் பேரரசர் மாற்றக்கூடாது என்ற வாசகத்தைப் புகுத்தியதால் உலாமாக்கள் அமைதியடைந்தனரெனினும், அந்த ஆவணத்தின் பயனாக அக்பர் இஸ்லாமின் சட்டங்களை விளக்கவல்ல தனிப்பெருந் தலைவரானார்.

இதனுடைய விளைவு மிக முக்கியமானது. அக்பருடைய வாழ்விலும் ஆட்சியிலும் இது ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. அவர் பல சமயங்களைச் சார்ந்த சாதுக்களையும் அறிஞர்களையும் தம் அரசவைக்கு அழைக்கத் தொடங்கினார். மற்றச் சமயங்களைப் பொறுத்தவரையில் முழு அளவில் சமயப் பொறை வழங்கப்பெற்றது. ஆனால், மரபு வழாத முஸ்லீம் சமயத்தவர் அவமதிப்பிற்குள்ளாயினர். ஒரு முறை ஃபதேபூர் சிக்ரியில் முறையான சமய குருவை நீக்கிவிட்டு, அக்பரே பீடத்தின் மீதேறி பைஸி ஆக்கித்தந்த பாடல்களைப் படித்தார். பொது வழிபாடுகளில் முகம்மதின் பெயரைப் பயன்படுத்தக்கூடாதென்று 1580ஆம் ஆண்டில் அவர் தடைவிதித்ததாகக் கூறப்படுகின்றது. புதிய பட்டத்தைப் பெற்றதும், முறைமன்றங்களில் இருந்த சமய

மரபு வழாத முகம்மதியர்களைப் பதவியிலிருந்து நீக்கும் வேலையை முதலில் செய்தார். அதன் மூலமாக நீதிபதி அல்லது குற்ற வழக்கு நடுவருக்குமுன் எழுந்த பிரச்சினையில் சமயக் கருத்துகள் புகுதல் கூடாது என்பதை அவர் குறிப்பாக உணர்த்தினார்; இத்தகைய மாற்றங்களினால் அக்பருக்குப் பல தொல்லைகள் நேர்ந்தன. அவரது வாழ்விலேயே 1581ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடியான ஆண்டாக இருந்தது எனலாம். செல்வாக்கு மிகுந்த முகம்மதியர் அனைவரும் அவருக்கெதிராக இருந்தனர். அவரைச் சுற்றிலும் துரோகிகள் உலாவினர். கிழக்கு மாநிலங்கள் புரட்சி செய்தன.

### ஹகீம் மீர்ஸாவின் படையெழுச்சி

அக்பரின் தம்பியாகிய ஹகீம் படையெடுத்துவந்ததால் பேரிடர் தோன்றியது. அக்பர் அவரை முறியடித்தார். அதன் பிறகு அவரது மனப்பளு மிகக்குறைந்தது. அப்போதிருந்து அவர் எதிர்ப்பேதும் இன்றி அதிகாரம் செலுத்த முடிந்தது. அவரது சமய வாழ்க்கையின் மூன்றாவது கட்டம் 1582-ல் துவங்கியது. ஜைன, பார்ஸி, இந்து, கிறிஸ்தவ சமயங்களைச் சார்ந்த அறிஞர்கள் அவர் முன்னிலையில் நடத்திய விவாதங்களினால் இஸ்லாத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை அடியோடு நாசமாகியது. முல்லா ஒருவருக்கும் ஜெசூட் சமயப் பரப்பாளர் ஒருவருக்கும் இடையே நடந்த விவாதத்தோடு தொடர்பு கொண்ட நிகழ்ச்சியை நன்கு குறித்துவைத்துள்ளனர். அப்போது ஜெசூட் சமயப் பரப்பாளர் தீயில் குதிக்க ஆயத்தமாக இருந்தார் என்றும், அவ்வாறு செய்ய முல்லா மறுத்தார் என்றும் தெரிய வருகின்றது.

### தீன் இ லாஹி (Din–i–lahi) (தெய்விக சமயம்)

இதற்கிடையில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பொருத்தமான புதிய சமயத்தைத் தோற்றுவிக்கவேண்டுமென்று அக்பர் எண்ணினார். பல சமயங்களுக்கிடையே உள்ள பகைமை நாட்டில் அரசியற் கட்சிக் கும்பல்கள் தோன்றுவதற்குக் காரணமாகும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் சமய ஒருமைப்பாட்டை நாட்டில் புகுத்த வேண்டுமென்று விரும்பினார். இங்ஙனம் 1582ஆம் ஆண்டில் தீன் இ லாஹியை விளம்பரப்படுத்தினார். உலகில் தாமே கடவுளின் பிரதிநிதியென்றும், ஆண்டவரின் விருப்பத்தை விளக்கும் அதிகாரம் கொண்டவரென்றும் அறிவித்தார். தீன் இ லாஹி முற்றிலும் இயற்கைச் சமயமாகத் தோன்றுகின்றது. ஒரே கடவுள்

தான் உண்டு. அவர்முன் எல்லோரும் பயபக்தியுடன் வணங்க வேண்டும். யாவரும் தீய உணர்வுகளை ஒடுக்கி, ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். மனிதருடைய அதிகாரத்திற்குப் பணியாது மெய்யறிவிற்கே தலைவணங்கவேண்டும். தெய்விகத் தன்மையைக் காட்சிவடிவில் கொள்ளவேண்டுமானால், சூரியன், கோள்கள், தீ ஆகியவற்றை வழிபடலாம்; சமய குருவோ, பொது வழிபாடோ தேவையில்லை. தமது மக்களின் விருப்பு வெறுப்புகளை மதித்தே கோள்களை வழிபட அக்பர் அனுமதி தந்தார் என நம்பப்பெற்றபோதிலும், பார்ஸி கருத்துகளும் சடங்குமுறைகளும் அவர்மீது செல்வாக்குச் செலுத்தின. தீர்க்க தரிசிகளின்மீது அக்பர் நம்பிக்கை கொள்ளவில்லை. சிலவேளை களில் தம்மையே அந் நிலையில் வைத்து எண்ணினார். 'எப் போதும் அவர் மானிட மெய்யறிவையே நம்பியிருந்தார். அவர், சமயத்தில் தலையிடும் உரிமை கொண்டாடியது சமயம் சாராத அமைதிகாப்பு நடுவரின் கடமை என்ற அடிப்படையில்தான்.'

தமது சமயத்தைப் பிறர் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு மெய்யெனக் காட்டி நம்பவைக்கும் கலையையே பெரிதும் சார்ந்து நின்றபோதிலும், அக்பர் சில சமயங்களில் தம்மைப் பிறர் பின்பற்றுமாறு செய்யப் படைபலம் கொண்டு பயமுறுத் தினார் அல்லது கையூட்டுக் கொடுப்பதாக ஆசைகாட்டினார். எப்படி இருப்பினும், புதிய சமயத்தைப் புரிந்துகொள்ளமுடியாத பாமரமக்கள் அதன்மீது பற்றுதல் கொள்ளவில்லை. அரசவையில் இருந்த அவரது நம்பிக்கைக்குரிய சிலரும் அச் சமயத்தின்மீது கொண்ட வெறுப்பை வெளிப்படுத்தினர். இராஜபுத்திரரான ராஜா பகவன் தாஸே முதன்முதலாக மறுப்புக் குரல் எழுப் பியவர். அவரது வளர்ப்பு மகனான கன்வார் மான்சிங் சில ஆண்டுகட்குப் பின்னர் அதே உளப்பாங்கினை வெளியிட் டார்: 'சீடராதல் என்பது ஒருவருடைய உயிரையும் அர்ப் பணிக்கத் தயாராக இருத்தல் என்று பொருள்படுமானால், யான் ஏற்கெனவே எனது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ் கிறேன். அதைவிடச் சான்று வேறு என்ன வேண்டும்? அவ் வாறின்றி அச் சொல்லுக்கு வேறொரு பொருள் இருந்து, அது சமயத்தைக் குறிக்குமானால், யான் நிச்சயமாக ஓர் இந்து சமயத் தவனே. தாங்கள் ஆணையிட்டால் யான் முஸல்மானாக மாறு வேன். ஆனால், இரண்டையும் தவிர வேறு சமயத்தை யான் அறியேன்' என மொழிந்தார்.

ஆழ்ந்து நோக்குவோமானால், சமயப் பொறையை அவர் யாவருக்கும் சமமாக அளிக்கவில்லை என்பதைத்தான் அக்பரின்

சமயக் கொள்கை குறிக்கின்றது. அவர், வழக்கு மீறிய தாராளத் தன்மையோடு இந்துக்களை நடத்தினர். தமது ஆட்சியின் தொடக்க காலத்திலேயே ஜெஸியாவையும், புண்ணியச் செலவு வரியையும் நீக்கினர். இராஜபுத்திர மங்கையரை மணந்து கொண்டார். சமரசப்படுத்துவதற்கான எல்லா வழிமுறைகளை யும் பின்பற்றினர். இவற்றிற்கு மாருக, முகம்மதிய சமயத்தோடு தொடர்பு கொண்டவை அனைத்திலும் மிகக் கடுமையாக நடந்துகொண்டார். தங்களது குழந்தைகளுக்கு 'முகம்மது' எனப் பெயர் சூட்ட மக்களுக்கு அனுமதியில்லை. அராபிய மொழி கற்பது தடை செய்யப்பெற்றது. தாடியை மழிக்கும் பழக்கம் புகுந்தது. முஸ்லீம் பொது ஆண்டிற்குப் பதிலாக சூரிய ஆண்டு பயன்படுத்தப்பெற்றது. அரசர்முன் மண்டியிட்டு வணங்கும் பழக்கம் வந்தது. அதனைச் சமய மரபு வழாத முஸ்லிம்கள் பெரிதும் வெறுத்தனர். புதிய மசூதிகள் கட்டப் பெறவில்லை. பழைய மசூதிகள் செப்பனிடப்பெறவில்லை. மொத்தத்தில் அக்பருடைய வாழ்க்கை முறையானது முஸ்லி முடையதன்று. அவரது மாற்றங்களுக்குட்பட்ட இந்து தருமத் தின் அடிப்படையில் அமைந்த வாழ்க்கையையே அது ஒத் திருந்தது. தாம் பிறந்த சமயத்தின் மீதான வெறுப்பு மற்ருெரு தீவிரக் கொள்கைக்கு அவரது மனத்தைத் திருப்பியது நன்கு விளங்கும்; கோவாவிலிருந்து ஜெசூட் சமயப் பரப்பாளர்களை இருமுறை தமது அரசவைக்கு அக்பர் அழைத்தார். அக்வா விவா (Aquaviva) 1583ஆம் ஆண்டில் முதல் முறையாக அரசவைக்கு வந்தார். தாம் கிறிஸ்தவ சமயத்தை ஆதரித்த தாக வெளிப்படையாக ஒப்புக்கொண்டதில்லை என்ருலும், பேரரசர் அச் சமயத்தின்மீது பரிவுகாட்டினுர் என்பது உண்மை. ஜெசூட் சமயப் பரப்பாளர்களில் ஒருவர் இளவரசர் சலீமிற்குச் சமய போதனை அளிக்க அவர் அனுமதித்தார். பொதுவாக ஏசுநாதரின் உருவச்சிலைக்கும், கன்னி மேரியின் உருவச் சிலைக்கும் மரியாதை செலுத்தினர்.

முஸ்லீம் சட்ட வல்லுநர்கள் இந்துக்களிடம் காட்டிய சமய வெறி உணர்ச்சியை அவர் வெறுத்தார். சமயப் பொறைக் கொள்கை மட்டுமல்லாமல் அரசியல் காரணங்களுக்காகவும் அவர் இந்துக்களைப் பரிவுடன் நடத்தினர். அவர்களது பழக் கங்களில் சிலவற்றைப் பின்பற்றினர். மற்றவற்றை ஊக்கு வித்தார். ஏற்கெனவே சமயப் பொறை கொண்ட பேரரசர் மீது அவர்தம் உவளகத்தில் இருந்த இராஜபுத்திரப் பெண்கள் பெருஞ் செல்வாக்குச் செலுத்தினர் என ஊகிக்கலாம். இவை யெல்லாம் இருந்தபோதிலும், கொடுமைமிக்க நேர்மையற்ற

சமயப் பழக்கங்களைப் பொறுத்துக்கொள்ளும் அளவிற்கு அக்பருடைய சமயப் பொறை அமையவில்லை. சதி எனும் உடன் கட்டை ஏறும் சடங்கினைச் செய்யுமாறு ஒரு பெண்ணை யாரும் வற்புறுத்தக்கூடாது எனக் கட்டளையிட்டார். இத்தகைய மாற்றங்கள் இந்துக்களிடம் எத்தகைய விளைவினைத் தோற்றுவிக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளாது விதவைகளின் மறுமணத்தையும் சட்டமுறையானதாக்கினர்.

**தக்கணப் படையெடுப்பு**

புவியியல் அடிப்படையிலும் பிற பண்புகளிலும் தக்கண மேட்டு நிலத்திலிருந்து மாறுபட்ட, தனித்த நிலப்பரப்பாகவே வட இந்தியா விளங்கிவந்துள்ளது. செய்தித் தொடர்புகள் வளர்ந்திருக்கும் இந் நாளிலும் தென்னிந்தியாவிற்கும் வட இந்தியாவிற்குமிடையே நிறைய வேற்றுமைகள் காணப்பெறுகின்றன. வரலாற்று மரபுகளும் மாறுபட்டு இருக்கின்றன. இவை இரண்டிற்கும் இடையே தடையாக இருப்பது விந்திய மலையாகும். முறையான போக்குவரவு வசதி இல்லாத நிலையில், 16ஆம் நூற்றுண்டு வரையில், இந்தியாவின் வடபகுதியில் தான் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எப்போதும் வட இந்திய ஆதிக்கம் தென்னிந்தியாவில் நுழைய முற்பட்டதே ஒழிய, தென்னிந்திய ஆதிக்கம் வட இந்தியாவில் நுழைய முற்படவில்லை.

வட இந்தியா முழுவதையும் வெற்றிகொண்ட மன்னர்களுக்குத் தக்கணத்தை வென்றடக்கவேண்டுமென்ற பிரச்சினை எப்போதும் எழுந்தது. ஆரம்பகாலத்திலிருந்தே இந்த உண்மை புலப்படும். ஆரியர்களும் பௌத்தர்களும் ஆரம்ப காலத்தில் தெற்கே முன்னேறினர். அலாவுதீன் கில்ஜியின் வெற்றித் தளபதியாம் மாலிக் காஃபூரின் பயனுள்ள தென்னிந்தியப் படையெடுப்புகளும் வரலாறு அறிந்த உண்மையாகும். எப்படியிருப்பினும், வட இந்தியாவிலேயே அச் சுல்தானின் பணி முற்றுப் பெறவில்லை. தென்னிந்தியாவைப்பற்றியோ கேட்க வேண்டியதில்லை. 'சிந்தனையாளரான' முகம்மது பின் துக்ளக் என்பாரே அடுத்து வந்த ஆற்றல்மிக்க சுல்தாஞவார். அவரது பேரரசில் தக்கணப் பகுதிகள் சில இணைந்திருந்தன. ஆயின், வட இந்தியாவில் தோன்றிய சீரழிவின் காரணமாகத் தென்னிந்தியாவிலும் சீர்குலைவு ஏற்பட்டது. அங்கே பல உரிமை வாய்ந்த அரசுகள் தோன்றலாயின.

முகலாயர்களில் தென்னிந்தியாவைப்பற்றி எண்ண அவகாசம் பெற்ற முதல் அரசர் அக்பரே. தக்கணத்தில் உரிமை

பெற்ற அரசுகள் சில வாழ்வது அவரது வெற்றிப் படைகளுக்கு அவமானம் விளைவிப்பது போலிருந்தது. மேலும், பொருளைத் தேட வேண்டுமென்றும், அதிகாரத்தை வளர்க்க வேண்டு மென்றும் அக்பர் விரும்பினர். அதேசமயத்தில் 'தமது கிறிஸ்தவ நண்பர்களைக் கடலுக்குத் துரத்துவதற்காக'த் தக்கணத்தில் காலூன்றவேண்டுமென்றும் விழைந்தார்.

வடமேற்கில் டார்டார் அப்துல்லாகான் உஸ்பெக்கிடமிருந்து (Tartar Abdullah Khan Uzbeg) வரும் இடரைத் தவிர்ப்பதற் கெனப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு லாகூரிலேயே அக்பர் வாழ்ந்துவந்தார். அக் காலத்தில் போரிடாமலேயே தென்னிந் திய சுல்தான்களின் பணிவைப் பெறுதற்காக நான்கு வெல் திறத் தூதுக்குழுக்களைத் தக்கணத்திற்கு அனுப்பினர். அக் குழுக்கள் அநேகமாக எல்லா இடங்களிலும் தோல்வியே கண்டன. காண்டேஷில்மட்டும் ஓரளவு வெற்றி கிட்டியது.

அதன் பிறகு அஹமது நகர் இராச்சியத்தில் குழப்பம் தோன்றியது. அரியணைமீது உரிமை கொண்டாடிய பலரை ஆதரித்த கட்சிகள் அங்கே தோன்றின. அதிகாரத்திலிருந்த கட்சியினர் அக்பரின் உதவியை நாடினர். அக்பரும், இளவரசர் மூராதையும் கான்கானுனை அப்துர்ரஹீமையும் படையுடன் அனுப்பி வைத்தார். அவர்கள் 1593ஆம் ஆண்டில் படை யெடுப்பைத் துவங்கினர். சாந்து பீபி என எல்லோராலும் போற்றப்பெற்ற சாந்த் சுல்தானே தமது தலைநகரைத் தீரத் துடன் காத்துநின்றார். தமது கோட்டையில் முகலாயர் ஏற்படுத் திய பிளவினை அடைத்துப் பழுதுபார்க்கும் வேலையை அவர் முழுக் கவசமணிந்து மேற்பார்வை செய்துவந்தார். ஓரிரவு முழு வதும் தீரத்துடன் தம் இடத்தைவிட்டு நகராமலே இருந்தார். இறுதியில் 1596ஆம் ஆண்டு கையெழுத்தான உடன்படிக்கை யின்படி பேரரசர் மீதான தமது உரிமையைப் பேரரசருக்கு விட்டுக் கொடுக்க அஹமது நகர மன்னர் இணங்கினர். இங்ஙனம் நாடகத்தில் ஒரு காட்சி முடிவுற்றது.

பேரரசரின் எல்லைகளை வரையறுப்பது எளிதானதன்று என் பதை முராத் விரைவில் உணர்ந்துகொண்டார். அஹமது நகர், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகியவற்றின் கூட்டுப் படை யுடன் போரிடவேண்டிய நிலையில் நின்றார். காண்டேஷ்மட்டும் அவர் பக்கம் இருந்தது. அதன் விளைவாகப் பயனுள்ள வெற்றி கிட்டவில்லை. சிறிது காலமாகவே இளவரசர் முராதிற்கும் கான்கானுனுக்கும் இடையே இருந்த தகராறுகள்

காரணமாக முகலாயர் நலன்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டன. எனவே, அவர்கள் இருவரையும் திரும்ப அழைத்துக் கொண்டு அவர்களிடத்தில் அபுல் ஃபாஸலை அமர்த்துவது என்றும், தாமே தக்கணத்திற்குப் படையெடுத்துச் செல்வது என்றும் பேரரசர் முடிவு செய்தார். அவர் வருவதற்கு முன்பே 1599ஆம் ஆண்டில் தௌலதாபாத்தை முகலாயர் கைப்பற் றினர். அஹமது நகர் முற்றுகைக்குள்ளாகியது. சாந்து பீபி கொலை செய்யப்பட்டதால், அந் நகரம் 1660ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் எளிதாக வீழ்ந்தது. இளைஞரான மன்னர் குவாலியர் கோட்டைக்கு அனுப்பப்பெற்றார். ஆயின், மற்றொரு பொம்மை அரசர் அரியணையேறினார். இங்ஙனம் 1633ஆம் ஆண்டுவரையில் நைஸாம் ஷாஹி குலம் அடியோடு அழிந்து விடவில்லை. அஹமது நகரம் வீழ்வதற்கு முன்னால் காண்டே ஷின் வேந்தரான மீரான் பகதூர் ஷா முகலாயர் ஆதிக்கத்தை உதறித்தள்ளினார். அதனால் அவரை உடனே தாக்குவது என அக்பர் தீர்மானித்தார். 1599ஆம் ஆண்டில் காண்டேஷுக்குள் புகுந்து அதன் தலைநகரைக் கைப்பற்றினார். அதன் பிறகு வெல்லுதற்கரியது எனக் கருதப்பெற்ற அசிர்கர் கோட் டையை முற்றுகையிடுவது என முடிவு செய்தார். அதைவிட வலிமை வாய்ந்த கோட்டை ஒன்று உண்டு என்றோ, பீரங்கி களும், போர்த்தளவாடங்களும், பிற பொருள்களும் அதிக மாகக்கொண்ட கோட்டை வேறொன்று உண்டு என்றோ கருத முடியாத அளவிற்கு அசிர்கர் கோட்டை சிறப்புற்று விளங் கியது. பேச்சுவார்த்தை தொடர்வதற்காக வரவழைக்கப் பெற்ற மீரான்பகதூர்ஷாவை அக்பர் நம்பிக்கைக் கேடான முறையில் நிறுத்திவைத்துக்கொண்டார். ஆயினும், கோட்டை யிலிருந்த காவற்படை பணிய மறுத்தது. படைவலிமையினால் பெறமுடியாததைக் கையூட்டு மூலமாகப் பெறப் பேரரசர் முயன்றார். இவ்விதம் சில முக்கிய அதிகாரிகளை அவர் விலை கொடுத்து வாங்கினார். கோட்டை வாயில்கள் திறந்துவிடப் பெற்றன. ராஜா மான்சிங்கின் துணையுடன் உதய்பூருக்கு எதி ராகப் போரிடவேண்டி ஆஜ்மீரில் விட்டுவந்த மூத்த மகனை இளவரசர் சலீம் புரட்சி செய்து அலகாபாத்தில் பேரரச அதிகா ரத்தைக் கைப்பற்றிய காரணத்தால், அக்பர் தமது இறுதி வெற் றியை விரைவில் அடையத் துடித்தார். அதற்காக நயவஞ்சகத் தையும் லஞ்சத்தையும் பயன்படுத்தினார். புதிதாக வென்ற பகுதி களை மூன்று சுபாக்களாகப் பிரித்து, அவற்றையும் மாளவம், குஜராத் ஆகியவற்றையும் இளவரசர் தானியாலின் பொறுப்பில் விட்டார். இதனால் முகலாயப் பேரரசிலிருந்த சுபாக்களின் எண்ணிக்கை பதினைந்தாக உயர்ந்தது. இங்ஙனம் அக்பர்

தமது வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டு, புரட்சிக் கலகத்தில் ஈடுபட்டிருந்த சலீமைச் சமாளிப்பதற்காக 1601ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆக்ரா திரும்பினர்.

**இளவரசர் சலீமின் நடத்தை**

அக்பர், தமது மகனின் கடமையை உணர்த்தும் விதமான கடிதமொன்றை அனுப்பினர். இளவரசரும் தமது செய்கைக்கு வருந்துவதுபோலக் காட்டிக்கொண்டார். அதன்பேரில் வங்காளத்திற்கும் ஒரிஸ்ஸாவிற்கும் ஆளுநராக நியமிக்கப்பெற்ருர். ஆனல், 1602-ல் தக்கணத்திலிருந்து திரும்பிவந்துகொண்டிருந்த அபுல் ஃபாஸல் எனும் பேரரசரின் நெருங்கிய நண்பரைக் கொல்லுமாறு செய்ததன்மூலமாக அவர் தமது தந்தையின் உணர்ச்சிகளை உதாசீனம் செய்தார். இச் சதியில் சலீமின் பங்கினை அறியாத அக்பர், அவருடன் சமரசம் செய்வதற்காக பேரரசக் குடும்பத்தைச் சார்ந்த பெண்மணி ஒருவரை அனுப்பி வைத்தார். அரசவைக்கு வந்த சலீம் பேரரசருக்குப் பணிந்தார். உதய்பூர் இராணுவின்மீது மீண்டும் போர் தொடுக்குமாறு அவருக்கு ஆணை பிறந்தது. ஆனல், அவர் பல சாக்குகளைச் சொல்லிப் படையெடுத்துச் செல்வதைத் தள்ளிப்போட்டு வந்தார். அதன் பிறகு அவர் அலகாபாத்திற்குச் சென்று அங்கே வீணுகக் காலங்கழித்தார். காமக்களியாட்டங்களில் மூழ்கி அக்பருக்குப் பிடிக்காத செயல்களைச் செய்துவந்தார். அவரை ஆக்ராவிற்கு வருமாறு அக்பர் அழைத்தார். தமது மூத்த மகன் குஷ்ருவைத் தமக்குப் பதிலாக அரியணையில் ஏற்றி விடுவார்களோ எனப் பயந்த சலீம் ஆக்ராவிற்கு வந்தார். அக்பர் அவரைக் கடுமையாகக் கண்டித்துக் கன்னத்தில் அறைந்தார். சிறிது காலத்திற்குச் சிறையிலடைத்துவைத்து அதன் பின்னர் மருத்துவர் ஒருவரின் பொறுப்பில் அவரை ஒப்படைத்தார். அப்போது அளித்த தண்டனை போதுமானதாக இருந்திருக்க வேண்டும். அக்பரின் மீதமிருந்த ஆட்சிக் காலத்தில் சலீமின் நடத்தை திருப்திகரமாகவே இருந்தது. உயிருடன் இருந்த புதல்வர் சலீம் மட்டுமே என்பதால் அவருடன் சமரசம் செய்துகொள்ள அக்பர் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

1599ஆம் ஆண்டு மே மாதத்தில் தக்கணத்தில் இருந்த முராத் குடிப்பழக்கத்தினுல் மாண்டார். ஐந்து ஆண்டுகட்குப் பின்னர் அதே தீய பழக்கத்திற்கு தானியாலும் பலியானர் (1604ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்). இங்ஙனம் கானி ஆஸிம், ராஜா மான்சிங் போன்ற சிலர் சுயநல நோக்கத்தோடு

குஷ்ருவை ஆதரித்தபோதிலும், அரியணைக்குற்ற வாரிசு என எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றவர் சலீமே ஆவார்.

அக்பரின் அந்திய காலம் நெருங்கியது. 1605ஆம் ஆண்டு இலையுதிர் பருவத்தின்போது அவருக்குக் கடுமையான சீதபேதி கண்டது. அக்டோபர் மாத நடுவில் அது ஆபத்தான நிலைக்கு உயர்ந்தது. அக்பரின் மரணப் படுக்கைக் காட்சியை அவரது மகனே விளக்கியுள்ளார். பிரபுக்கள் அனைவரையும் வரவழைத்த அக்பர், சலீமை அவர்கள் மன்னித்துத் தமது வாரிசாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுகொண்டார். சலீமும் அழுதுகொண்டே தந்தையின் காலடியில் வீழ்ந்தார். அப்போது தம் எதிரிலேயே அரசருக்குரிய வாளை இறுகப் பிடிக்குமாறு சலீமிற்கு அக்பர் சைகை காட்டினார். உவளக மாதர்களின் நலனைப் பேணுமாறும், தமது பழைய நண்பர்களையும் ஆலோசகர்களையும் மதித்து நடக்குமாறும் அறிவுரை புகன்றார். 1605ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் தேதி அக்பரின் ஆவி பிரிந்தது. ஆக்ராவிற்கு அருகே சிக்கந்தராவில் ஓரளவிற்கு அவரே திட்டமிட்டுக் கட்டிய கல்லறையில் அவரது சடலம் புதைக்கப்பெற்றது. ஆயின், 1691ஆம் ஆண்டில் அவரது கல்லறையை ஜாத்துக்கள் சூறையாடினர். அதிலிருந்த அணிகலன்களைக் கொள்ளையிட்டதோடு அக்பருடைய எலும்புகளை வெளியே எடுத்துக் கொளுத்திச் சாம்பலாக்கினர்.

அவருக்கு நஞ்சிடப்பெற்றது என்ற வதந்தி அவர் இறந்த பிறகு உலவியது. ஆனால், அதைப்பற்றித் திடமாக முடிவு செய்யப் போதுமான ஆதாரம் இல்லை.

**முடிவுரை**

அக்பரின் உண்மையான பணி நிறைவேறியது. வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொண்ட காலமாக அவரது ஆட்சிக் காலம் அமைந்தது. முகலாயர்களுக்குள்ளேயே தலைசிறந்த வெற்றி வீரராகவும், அரசியல் அறிஞராகவும், ஆட்சியாளராகவும் விளங்கியவர் அக்பரே. முல்தானும் மலைப்பகுதியும் நீங்கலாகவுள்ள பஞ்சாபும், அம்பாலா, மீரட் ஆகிய மண்டலங்களில் சில பகுதிகளும் அடங்கிய நாட்டிற்கே அவர் வாரிசாக வந்தார். காபூல் அவரது இளைய சகோதரருக்குக் கிடைத்தது. பெரும் படையுடன் சிக்கந்தர் சூர் போட்டியிட்டதால் பஞ்சாபின்மீது அக்பரின் ஆதிக்கம் உறுதியானது என்று கூற முடியாது. இந்துஸ்தானத்தில் அவருக்குச் சொந்தமான சிறு பகுதிக்கு வேறு இரண்டு சூர் குலத்தவர் போட்டியாக வந்தனர். அரியணையில் அமர்ந்த சிறிது காலத்திற்குள் ஹீமு என்பார்

மற்றப் பகைவர்களை முறியடித்துவிட்டுத் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றிக்கொண்டார் என்றும், அவர் பஞ்சாபை நோக்கி வந்துகொண்டிருந்தார் என்றும் அக்பருக்குச் செய்தி கிடைத்தது. அவரது தந்தையின் அனுபவமிக்க படைத்தலைவர்களில் பெரும்பாலோர் காபூலுக்குப் பின்வாங்குவதை ஆதரித்தனர். ஆனால், பதினைந்து கோடைகளையே கண்ட இளமை ததும்பும் பேரரசர் தமது அரியணைக்காக ஆண்மையுடன் போரிடுவது என முடிவு செய்தார். இத்தகைய திடமான மனவுறுதி பிற்காலத்தில் அவருக்குப் பேருதவியாக இருந்தது. ஆட்சிக்கு உரிமை கொண்டாடிய அனைவரையும் முறியடித்து வீழ்த்தினர். பன்னிரண்டு மாதங்களுக்குள் பாபரின் ஆதிக்கத்தில் இருந்த பகுதிகள் அனைத்தும் அவரது பேரனை அக்பரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டன. இங்ஙனம் நல்லபடியாகத் துவங்கிய அவரது வாழ்க்கை, முகலாய இந்திய வரலாற்றிலேயே மிகுந்த சிறப்பு வாய்ந்த ஆட்சிக் காலங்களில் ஒன்ருகத் திகழ்ந்தது. பட்டம் எய்திய இருபது ஆண்டுகளுக்குள் அஸ்ஸாம் மலைப்பகுதிகளிலிருந்து கோரேசான்வரையில் அவரது ஆதிக்கம் உறுதியுடன் நிலைத்து நின்றது. அவரது முன்னேர்களுக்கு முட்களாக இருந்த இராஜபுத்திரத் தலைவர்களில் ஒருவர் நீங்கலாக, மற்ற அனைவரும் அவருக்கு அடங்கியதோடு பற்றுறுதி கொண்ட பணியாளராகவும் மாறினர். முல்தான், சிந்து, குஜராத், காஷ்மீர், மாளவம், வங்காளம் ஆகிய முகம்மதிய அரசுகள் மறைந்தொழிந்தன; வட இந்தியா முழுவதிலும் ஆஃப்கானிஸ்தானத்திலும் அக்பருடையஆதிக்கம் உறுதியான அடிப்படையில் நிறுவப்பெற்றது. புரட்சிக் கலகங்கள் ஒவ்வொன்ருக ஒடுக்கப்பெற்றன. பேரரசரின் அதிகாரத்திற்கெதிராக வந்த ஒவ்வொரு சவாலும் அதனை மேன்மேலும் வலுவடையச் செய்தது. அவரது வெற்றிப் படைகள் விந்தியத்திற்கு இப்பாலும் வந்தன. அவர் இறப்பதற்குமுன் தக்கணத்தில் மூன்று மாநிலங்கள் பேரரசில் இணைந்தன. இங்ஙனம் அவர் கிழக்கு நாடுகளில் வாழ்ந்த வலிமை வாய்ந்த பேரரசர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இந்திய மன்னர் எவரும் அவரை எதிர்த்து நிற்கத் துணிந்தார் இல்லை. சலீமின் புரட்சிகரமான நடத்தை இல்லாதிருந்தால், தக்கணத்தில் தமது ஆதிக்கத்தை அவர் மேலும் உறுதியுள்ளதாகச் செய்திருப்பார்.

### அக்பரின் குண இயல்பு

அக்பர் நடுத்தர உயரம் கொண்டவர். மிகுந்த உடல் வலிமை பெற்றிருந்தார். ஓரளவு கருமை நிறம் கொண்டவரெனினும் கம்பீர முகத்தைப் பெற்றிருந்தார். ஒவ்வோர் அங்குல

மும் அரசராகத் திகழ்ந்தார். அவரது கண்கள் ஒளிவிட்டு மின்னின. பிற்காலத்தில் அவர் இந்துக்களைப் பின்பற்றித் தாடியை மழித்துக்கொண்டார். அவர் இனிய பண்புகளைப் பெற்றிருந்தார். அவருடன் பழகிய அனைவரும் அவர்தம் இனிய பேச்சையும், அருள் சுரக்கும் உள்ளத்தையும் புகழ்ந்து பேசியுள்ளனர். மிதமான உணவைக் கொண்ட அவர் கனிகளைப் பெரிதும் விரும்பினார். தந்தையைப் போலவும் பாட்டனாரைப் போலவும் வெறிமிக்க மதுவையும் அபினியையும் உட்கொள்வதில் மாறாத பற்றுக் கொண்டார். பிற்காலத்தில் அவர் அபினையே மிகுதியாக விரும்பினார்.

அவர் மதிநுட்பம் வாய்ந்த பொறித்துறை வினைஞராக விளங்கினார். துப்பாக்கிகள் செய்வதிலும், புதிய பீரங்கிவகைகளை உருவாக்குவதிலும் தனிப்பட்ட இன்பம் கண்டார். அரண்மனைக்குள்ளேயே பெருந் தொழிற் கூடங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. அவர் பல புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தார் என்றும், ஏற்கெனவே இருந்தவற்றைச் செம்மைப்படுத்தினார் என்றும் புகழ்ந்து பேசப்படுகின்றார்.

அக்பர் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளவில்லை எனக் கூறலாம். ஆயினும், அவர் ஒன்றும் அறியாத மூடரல்லர். நூல்களை உரக்கப் படிக்கக் கேட்பதில் பேரார்வம் காட்டினார். அறிஞர்களுடன் உரையாடுவதில் பெருமகிழ்ச்சி கொண்டார். வியக்கத்தகு நினைவாற்றல் அவருக்குப் பேருதவியாக இருந்தது. கல்வியறிவு அற்றவர்[1] என்று கூறப்படினும், அது அவரது மேம்பட்ட ஆட்சிக்குத் தடையாக நிற்கவில்லை. செய்திகளைப் பற்றிய நுணுக்கங்களை அறிந்துகொள்வதில் அற்புத சக்தி அவரிடம் இருந்தது. நல்ல ஆட்சியாளர், திறமை வாய்ந்த படைத்தலைவர் என்பதோடு, அமைதிக் காலத்திலும் போர்க்காலத்திலும் ஒழுங்கு முறை வகுக்கும் ஆற்றல் கொண்டவராகவும் விளங்கினார். இத்தகைய குணங்களுக்காக அவர் மிகுதியான போற்றுதலுக்குள்ளானார். பேரறிஞர்களின் நூல்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவற்றிலிருந்து பல செய்திகளை எளிதாக எடுத்துரைக்கும் வல்லமையும் பெற்றிருந்தார். வாதிடுவதில் வல்லவரான அவரது பேச்சைக் கேட்டவர்கள், அவர் ஆழமாகக் கற்ற அறிஞர் என்ற கருத்தினைக் கொண்டனர். பிற இந்திய மன்னர்களைப் போலவே அக்பரும் யானைச்சண்டை, வேட்டையாடுதல், செண்டாட்டம் முதலான

[1] நான்காம் இயலில் இப் பிரச்சினைபற்றி விரிவான ஆய்வுரையைக் காணலாம்.

விளையாட்டுகளில் தனி விருப்பம் கொண்டிருந்தார். இயற்கையில் முன்கோபம் கொண்ட அவர், தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளப் பழகிக்கொண்டார். ஆயினும், சினம் மிகுந்த வேளைகளில் அவர் எதையும் செய்யத் தயங்குவதில்லை. எப்படியாயினும், இதுபோன்ற தவறுகள் மிகக் குறைவே.

ஆசையே அவரது வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்தது. நாடு பிடிப்பதிலேயே அவரது வாழ்நாள் முழுதும் செலவழிந்தது. அவரது கருத்துப்படி, 'அரசர் நாடு பிடிப்பதிலேயே குறியாக இருக்க வேண்டும்; அப்படி இல்லையானல், அண்டை நாட்டவர் அவர்மீது படையெடுப்பர். படையினைப் போர்க்களத்தில் பயன்படுத்த வேண்டும்; இல்லையானல் அது மனம்போன போக்கில் சென்றுவிடும்.'[1] அவரது நீண்ட ஆட்சியில் பல போர்கள் நிகழ்ந்தன. அவற்றில் பங்குகொண்ட அவர் தமது அதிகாரத்திற்குப் பணிந்த தோல்வியுற்ற மன்னர்களைப் பெருந்தன்மையோடு நடத்தியபோதிலும், தமது ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிந்தவர்களை அவர் எளிதாக மன்னிப்பதில்லை. இராணு பிரதாபுடன் அவர் நடத்திய போரையும், குஜராத்தின் முஸபர்ஷாவையும் காண்டேஷின் பகதூர்ஷாவையும் அவர் நடத்திய முறையையும் போற்ற முடியாது. சமயச் செய்திகளில் ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்தார். ஆயின், அவரது ஆராய்ச்சிகள் பல தொல்லைகளைத் தந்தன. இத்தகைய சமய ஆய்வுகளில் அவர் ஈடுபட்டிருந்தபோதிலும், தமது இளமைக் காலச் சமயத்தில் அவர் நம்பிக்கை இழக்கவில்லையென்று கூறப்படுகின்றது. ஆயினும், அவர் அநேகமாக இஸ்லாத்தின் கொள்கைகளை முற்றிலும் மறுத்தார் என்பதை வலியுறுத்தவல்ல பல நிகழ்ச்சிகளோடு இவ்விதக் கருத்தினை இணைப்பது கடினமாகும். இஸ்லாமிய சமயக் கட்டளைகளையும் தடைகளையும் புறக்கணித்தல், முகம்மது என்ற பெயரையே வெறுத்தல், அராபிய மொழிக்கே உரித்தான எழுத்துகளைக் கொண்ட சொற்களைத் தவருக உச்சரிக்கவேண்டுமென்று குழந்தைத்தனமாகக் கட்டளையிடுதல், மசூதிகளை அழித்தல் ஆகிய அக்பரது செயல்கள் இஸ்லாமிய சமயத்தை எதிர்த்தார் என்பதைத் தெளிவாக்குகின்றன. மேலும், 'தாமே முஸ்லிமாக இல்லாதபோது மற்றவரை அவ்வாறு மாறவற்புறுத்துவது கேவலமாகும்' என்பது போன்ற அவரது கூற்றுகளும் இதனை நன்கு விளக்கும். இஸ்லாமிய அருள்தொண்டர்களை அவர் மதிக்கவில்லையென்பது திண்ணம். பிற்காலத்

[1] Vincent Smith, 'Akbar', பக். 346.

தில் ஆஜ்மீரிலிருந்த முயின் உத்தீன் சிஸ்தியின் திருநிலை மாடத்திற்கு யாத்திரை செய்வதையும் முற்றிலும் கைவிட்டார்.

பல துறைகளில் அக்பர் சிறப்புற்று விளங்கினர். அவர் துணிச்சல் மிக்க வீரராக, பெரும் படைத்தலைவராக, பெருந் தன்மையுள்ள வேந்தராக, சிறப்பியல்புகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிறந்த நடுவராக விளங்கினர். தமது ஆள்களின் மீது அவர் தனிப்பட்ட மேலாண்மை செலுத்தினர். தன் முனைப் பாட்சி அவரை ஓரளவு கெடுத்தபோதிலும், தமது பெருங் குண நலன்களின் துணைகொண்டு தவறுகளின் விளைவுகளிலிருந்து தம்மைக் காத்துக்கொண்டார். அவருடன் தொடர்பு கொண்டவர்கள் அவரை நேசித்தபோதிலும், குடிமக்கள் அவரிடம் அச்சமே கொண்டிருந்தனர். அவ்வாறு அவர் தூண்டிய அச்சம் காரணமாகவும் அவரது சமய, அரசியல் முரண்பாடுகளாலும் பல கலகங்கள் தோன்றியபோதிலும், அவரைக் கொல்லுதற்கான ஒரே முயற்சிபற்றித்தான் குறிப்புக் கிடைக்கின்றது. அவரது நீண்ட ஆட்சிக் காலத்தில் 1564ஆம் ஆண்டில் டில்லியில் புலாஸின் முயற்சி யொன்றே குறிப்பிடப் பெறுகின்றது.

அவர் மக்களின் பிறவித் தலைவராவார். வரலாறு கண்ட வலிமை வாய்ந்த பேரரசர்களில் தாமும் ஒருவர் என அவர் நேர்மையுடன் உரிமைகொண்டாடலாம். தம்மிடம் இருந்ததைக் காட்டிலும் அதிகமான போர்த்தளவாடங்களைக் கொண்டு, நாட்டில் ஏராளமான ஆதரவாளர்களைப் பெற்றிருந்த பகைவர்களோடு இந்திய அரசிற்காகப் போராடிய படைத்துறை சார்ந்த துணிகர வீரரான அக்பர், தமது நிலையை உறுதி செய்து கொண்டதோடு, ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு இருந்த தமது ஆட்சியில் வலிமைவாய்ந்த எந்தப் பேரரசோடும் போட்டியிடக்கூடிய சக்தி வாய்ந்த பேரரசையும் நிறுவினர். மேலும், ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்குப் பகைவர் எவரும் போட்டிக்கு வராத அளவிற்கு இந்தியாவின்மீது ஆதிக்கம் செலுத்தவல்ல அரசகுலத்தையும் அவர் தோற்றுவித்தார். இங்ஙனம் சாதாரணப் படையெடுப்பாளராக இருந்த முகலாயர்கள் நிலையான இந்திய அரசகுலத்தினராக மாறியது அக்பரின் ஆட்சிக் காலத்திலேதான்.

# 3. ஜஹாங்கீர்

## 1605ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஜஹாங்கீர் அரசு எய்துதல்

மரணப் படுக்கையில் இருந்த அக்பர், உயிருடன் வாழ்ந்த ஒரே மகன் சலீம், தமக்குப் பிறகு பட்டத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினர். பின்னவரும் நூருத்தீன் முகம்மது ஜஹாங்கீர் பாதுஷா காஸி (Nuru-d din Muhammad Jahangir Padshah Ghazi) எனும் விருது பெயருடன் 1605ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் தேதியன்று அரியணை யேறினர். பொதுவாக அவர் ஜஹாங்கீர் (உலகத்தை வெல்பவர்) எனும் பெயராலேயே அழைக்கப்படுகின்றார். முப்பத்தெட்டு வயது நிரம்பிய அந்தப் பேரரசர் ஆற்றல் மிக்கவர். அவரது குண இயல்பினை வின்சென்ட் ஸ்மித் என்பார் பின்வருமாறு சுருங்கக் கூறுவார்: 'மென்மைத் தன்மையும் கொடுமையும், நேர்மையும் நிலையற்ற நடத்தையும், மேம்பட்ட பண்பும் மிருகத்தனமும், நல்லறிவும் குழந்தைத் தன்மையும் ஒருங்கிணைந்த விநோதக் கலப்பு' மதுவையும் அபினையும் ஓயாது குடித்துவந்ததால், குடிமரபாக வந்த அவரது உடற்கட்டும் தளர்ந்தது. அவரது வாழ்க்கையின் பிற்பகுதியில் தமது மனைவி, அன்னாரது பேராசை கொண்ட குடும்பத்தினர் ஆகியோர் கையில் சிக்கிய கருவியாக வாழ்ந்திருந்தார். இத்தகைய குறைபாடுகள் இருந்தும் அவர் நற்பண்புகள் சிறிதும் அற்றவர் என்று கூறுவதற்கில்லை. அவர் கலையையும் இலக்கியத்தையும் ஆதரிப்பதில் ஆர்வங் கொண்டிருந்தார். தமது முன்னோரான பாபரைப்போலவே தமது வாழ்க்கைக் குறிப்புகளை எழுதிவைத்தார். பேரரசர் கைப்பட எழுதிய நூலாகக் கருதப்பெறும் வாகியத்-இ-ஜஹாங்கிரி, 1605 முதல் 1642 வரையிலான காலப்பகுதிக்குரியது. பாபருடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் போன்ற அதே வெளிப்படையான நடையில் அமைந்த ஜஹாங்கீரின் வாழ்க்கைக் குறிப்புகளும் ஆசிரியருடைய குற்றங்களையோ குறைகளையோ மறைக்கவில்லை. பாபரைப்போலவே ஜஹாங்கீரும் இயற்கை எழிலில் திளைத்தவர் என்பதையும் அவை எடுத்துக்காட்டுகின்றன.

ஜஹாங்கீருக்குத் தீவிரப் போட்டியாளராக வந்தவர் அவரது புதல்வரான குஷ்ருவேயாவார். அக்பரின் அந்திய காலத்தில் ஜஹாங்கீருக்குப் பதிலாகக் குஷ்ருவை அரியணையில் அமர்த்தும் முயற்சி தோல்வியுற்றபோதிலும், பலரைக் கவரும் ஆளுமை பின்னவரிடம் இருந்த காரணத்தால் அவருக்கு ஏராளமான ஆதரவாளர்கள் இருந்தனர். அவர்களில் முதன்மையானவர் ராஜா மான்சிங் ஆவர். அவர்களைச் சமரசப்படுத்துவதற்காகத் தமது மகனை ஆதரித்தவர்களையெல்லாம் மன்னித்துவிடுவதாக ஜஹாங்கீர் வாக்களித்தார். அதைத் தொடர்ந்து சமய மரபு வழாமையில் தமக்கு நம்பிக்கை உண்டு என அறிவித்து, இஸ்லாத்தைக் காப்பதாகவும் வாக்குறுதி தந்தார்.

### அரசு எய்தியபோது ஜஹாங்கீர் வெளியிட்ட ஆணைகள்

கீழ்வரும் பன்னிரு ஆணைகளின் அறிவிப்போடு புதிய ஆட்சி தொடங்கியது:

1. தீர்வைகளுக்குத் (jakat) தடை.

2. வழிப்பறிக் கொள்ளை, திருட்டு ஆகியவைபற்றிய ஒழுங்குமுறை விதிகள்.

3. இறந்தவர்களின் சொத்துகளைக் கட்டுப்பாடின்றி மரபுரிமையாகப் பெறுதல்.

4. திராட்சை ரச மதுவையும், பிற போதைதரும் மதுவகைகளையும் விற்பதற்குத் தடை. ('வாக்கியத்-இ-ஜஹாங்கீரி'யில் இத் துறையில் தமது அனுபவத்தைப்பற்றிப் பேரரசரே விளக்கியுள்ளார். தாம் குடிக்கும் மதுவின் அளவைக் குறைக்க முயல்வதாகவும், இரவில் மட்டுமே குடிப்பதாகவும், அதுவும் 'தமது உணவு செரிப்பதற்காகச்' சிறிது குடிப்பதாவும் குறித்துள்ளார்.)

5. வீடுகளைக் கைப்பற்றுவதற்கும், குற்றவாளிகளின் மூக்கையும் காதுகளையும் துண்டிப்பதற்கும் தடை.

6. சொத்தினை (ghasbi) வலிந்து கைப்பற்றுவதற்குத் தடை.

7. மருத்துவமனைகளைக் கட்டி நோயாளிகளைக் கவனிப்பதற்காக மருத்துவர்களை நியமித்தல்.

8. சில குறிப்பிட்ட நாள்களில் இறைச்சிக்காக விலங்குகளைக் கொல்வதற்குத் தடை.

9. ஞாயிற்றுக் கிழமைக்கு உரிய மதிப்பளித்தல். (அந்த நாளைப் பெரிதும் மதித்த தமது தந்தையின் நினைவைப் போற்றும் வகையில் இவ்வாறு செய்தார்.)

10. நவாப்புகளையும் ஜாகீர்தார்களையும் அவரவர் பதவிகளில் நிலைநிறுத்துதல்.

11. ஐமா (aima) [1] நிலங்களை உறுதி செய்தல்.

12. கோட்டைகளிலும், எல்லாவகையான சிறைச்சாலைகளிலும் இருந்த எல்லாக் கைதிகளுக்கும் மன்னிப்பு அளித்தல்.

**இளவரசர் குஷ்ருவின் புரட்சிக் கலகம்; அதன் பிறகு அவரது வாழ்க்கை**

அசோகரும் வேறு அரசர்களும் வெளியிட்ட ஆணைகளை நினைவுபடுத்துவனபோல அமைந்த இவ்வாணைகள் நடைமுறை சார்ந்த பயனேதும் அளிக்கவில்லை. பேரரச ஆணைகளைப் பிறப்பிப்பதைவிடத் தீவிரமான பணியில் ஜஹாங்கீர் ஈடுபடவேண்டி வந்தது. இளவரசர் குஷ்ரு புரட்சியிலீடுபட்டுப் பஞ்சாபிற்கு ஓடினார். புரட்சிக் கலகத்தை அடக்குவதில் வழக்கு மீறிய செயலார்வம் காட்டிய ஜஹாங்கீர், பெரும் படையுடன் தமது மகனைத் துரத்திச் சென்றார். அவரது படைத்தலைவர்களில் ஒருவரான திலாவர்கான், லாகூர்க் கோட்டைக்குள் புகுந்து கொண்டு அதனைக் குஷ்ரு பிடித்துக்கொள்ளாமல் காத்தார். இளவரசரின் படைகள் எளிதில் விரட்டப்பெற்றன. ஜீலம் ஆற்றைக் கடக்க முற்பட்டபோது இளவரசரும் அவரது ஆள்கள் சிலரும் பிடிபட்டனர். அப்போது லாகூருக்கு வந்து சேர்ந்த ஜஹாங்கீரின்முன் சிறைப்பட்ட இளவரசரைக் கொண்டு வந்து நிறுத்தினர். வஞ்சம் தீர்த்துக்கொள்வதில் பழைய தைமூரியரின் முரட்டுக் குணத்தை ஜஹாங்கீரும் வெளிப்படுத்தினார். குஷ்ருவின் முக்கிய ஆதரவாளர்களும், பேரரசப் படையினரால் பிடிபட்டவர்களுமான உசேன் பெக்கும் அப்துல் அஜீஸும் முதலில் தண்டனை பெற்றனர். இவ்விரு போக்கிரிகளையும் பசுவின் தோலிலும் கழுதையின் தோலிலும் வைத்துச்

[1] 'வழிபாட்டிற்காகவும் புகழுக்காகவும் விடப்பெற்ற நிலங்களை ஐமா என 'வாக்கியத்-இ-ஜஹாங்கீரி' விளக்குகின்றது. அதற்கு ஈடாக 'ஃபிராங்கல் மோய்ன்' நிலமானியக் குத்தகை முறையினைக் (frankal-moign) குறிப்பிடலாம்.

சுருட்டி, அவர்களது முகம் வால்பக்கம் இருக்குமாறு கழுதை மேல் ஏற்றி, நகரைச் சுற்றி வலமாகக் கொண்டுசெல்லத் தாம் ஆணையிட்டதாக ஜஹாங்கீர் குறிப்பிட்டார். கழுதையின் தோலை விடப் பசுவின் தோல் விரைவில் உலர்ந்துவிடுமாகையால், நான்கு நாள்களில் உசேன் பெக் உயிர்துறந்தார். கழுதைத் தோலில் கட்டப்பெற்ற அப்துல்அஜீஸ், தோலில் ஈரம் கசிந்ததால் உயிர் பிழைத்தார்.[1] வேறு சில வெறுக்கத்தக்க விளக்கங்களையும் 'இக்பால் நாமா' தருகின்றது. அடுத்தபடியாகப் புரட்சியில் முதன்மையாக இருந்தவர்கள் தண்டனை பெற்றனர். 'நமது ஆட்சியை நிலைநிறுத்தவும் வலுப்படுத்தவும் தோட்டத்திலிருந்து நகரம்வரையில் நெருக்கமாக, வரிசையாகக் கழிகளை நட்டு, கலகத்தில் ஈடுபட்ட புரட்சியாளர்களையும் பிறரையும் கழுவில் ஏற்ற வேண்டும். இங்ஙனம் அவர்கள் தகுதிக்கேற்ற சித்திரவதைத் தண்டனை அடையவேண்டும்'. பரிதாபத்திற்குரிய குஷ்ரு பின் தொடர, தமது வஞ்சத்திற்குப் பலியானவர்கள் தொங்கிய கழுமரங்களுக்கிடையே ஜஹாங்கீர் ஆடம்பரமாகச் சென்றார். அதன் பின்னர் இளவரசரைக் குருடாக்கினர். ஆயின், அவர் முற்றிலும் கண்பார்வையை இழந்துவிடவில்லை. இங்ஙனம் குஷ்ருவைப் பட்டத்திற்கு வரத் தகுதியற்றவராகச் செய்த பிறகு, பேரரசரின் இரண்டாவது மகனாகிய பார்வஸ் பட்டத்து இளவரசர் என அறிவிக்கப்பெற்றார். அடுத்த பத்தாண்டுகளுக்குக் குஷ்ரு சிறையிலேயே வதிந்தார். பிற்காலத்தில் அவரது சிறை வாழ்க்கையின் கடுமை குறைந்தது. அரைக் குருடராகிச் சிறையில் வாழ்ந்திருந்தபோதிலும் அந்த இளவரசரின் கவர்ச்சி குன்றாமலிருந்தது. சர் தாமஸ் ரோவுடன் (Sir Thomas Roe) வந்த பாதிரியான டெர்ரி (Terry) என்பார் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'அழகிய தோற்றமும் நேர்த்தியான நடத்தையும் கொண்ட நன்மகனாகத் திகழ்ந்ததால் பொதுமக்கள் அவரைப் பெரிதும் விரும்பினர். டைடஸைப் (Titus) பற்றி அன்பானவர், நேர்த்தியானவர் என்றெல்லாம் ஸீடோனியஸ் (Suetonius)குறிப்பிட்டதைப்போல, அவர் பொதுமக்களுடைய அன்பின் உருவாகவும் ஆனந்தத்தின் உறைவிடமாகவும் விளங்கினார். அப்போது ஏறத்தாழ முப்பத்தைந்து வயது நிரம்பியவராக இருந்தார் (இருபத்தொன்பது என ஸ்மித் வயது குறிப்பிடுவார்). அவர் ஒரு மனைவியோடு மனநிறைவு பெற்றார். அவரது துன்பகரமான நாள்களிலெல்லாம் அம் மாதரசி அன்போடும் பரிவோடும் அவரைப் பின் தொடர்ந்

1 வஸீராபாத்தில் அமைதியை நிலைநாட்டுதற்காக ரஞ்சித்சிங் காலத்தில் தளபதி அவிடபைல் (General Avitabile) என்பார் இந்த வகையான தண்டனை அளித்தார்.

தார். அதனால், பலரை மணக்கலாம் எனச் சமயம் உரிமை அளித்தபோதிலும், அவர் வேறு மனைவியரைக் கொள்ளவில்லை.'

பத்தாண்டு மிதமான சிறைவாசத்திற்குப் பிறகு குஷ்ருவை நூர்ஜஹானின் சகோதரரான அசஃப்கானின் பொறுப்பில் விட ஜஹாங்கீர் தீர்மானித்தார். அசஃப்கானே பேரரசரின் மூன்றாவது மகனும், இளவரசர் பார்வஸிற்குப் பிறகு பட்டத்து உரிமை கொண்டவருமான இளவரசர் குர்ரத்தின் ஆதரவாளர். நல்வாய்ப்புக் கொண்ட இளவரசர் குஷ்ரு, அசஃப்கானின் ஆதரவிலிருந்து உடன்பிறந்தவரான இளவரசர் குர்ரத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பெற்றார். இளவரசர் குர்ரம் பரிவு காட்டும் பாதுகாப்பாளராக இருப்பதற்கில்லை. எதிர்பார்த்தபடி குஷ்ருவின் முடிவு விரைந்துவந்தது. அதிகாரபூர்வமான வாரிசான இளவரசர் பார்வஸ் மிகைக் குடியினால் செத்துக் கொண்டிருந்தார். எனவே, அரியணைக்கும் இளவரசர் குர்ரத்துக்கும் இடையே தடையாக நின்றவர் அரைக்குருடரான குஷ்ரு ஒருவரே. 1622ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் குடல்நோயினால் குஷ்ரு இறந்தார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதையே தமது குறிப்பேட்டில் ஜஹாங்கீரும் ஏற்று எழுதியுள்ளார். ஆயின், உண்மையில் இளவரசர் குர்ரத்தின் கட்டளைப்படி ரஸாகான் பகதூர் எனும் கொலைகாரனே குஷ்ருவின் கழுத்தை நெரித்துக் கொன்றவன். மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த குஷ்ரு மறைந்தபிறகு அருள்தொண்டர்களில் ஒருவராகப் போற்றப்பெற்றார். இங்ஙனம் நல்வாய்ப்பற்ற குஷ்ருவும், அவரது மைத்துனரான இளவரசர் தாராஷிக்கோவும், அவர்களிடம் மாறாத நம்பிக்கையும் பற்றார்வமும் கொண்டிருந்த மனைவியரும் முகலாயர் வரலாற்றில் துயரமிக்க சிறு குழுக்களாக வாழ்ந்தனர்.

### சீக்கிய குருவான அர்ஜுன் சிங்கிற்கு மரணதண்டனை அளித்தல்; ஜைனசமயக் குருமாரை ஒறுத்தல்

குஷ்ருவின் வெற்றி பெறாத புரட்சிக் கலகத்தின் விளைவாக சீக்கியர்களின் ஐந்தாவது குருவும், 'கிரந்த சாஹிபை' (Granth Sahib) எழுதியவருமான அர்ஜுன் சிங் மடிய நேர்ந்தது. இந்த சீக்கிய குருவானவர் முன்பின் அறியாது குஷ்ருவிற்குப் பணம் கொடுத்து உதவினார். அதனால் பெரும் பொருள் தண்டமாக அளிக்கவேண்டுமென்று ஜஹாங்கீர் ஆணையிட்டார். அவ்வாறு செய்ய அர்ஜுன் சிங் மறுக்கவே, அவரைச் சித்திரவதை செய்து கொல்லுமாறு செய்தார். வின்செண்ட் ஸ்மித் குறிப்பிடுவது



ஆஜ்மீர் குவாஜா சாஹிப் தர்காவுக்கு ஜஹாங்கீர்
வருகைபுரிவதைக் காட்டும் முகலாய ஓவியம்

போல அர்ஜுன் சிங்கிற்குத் தண்டனை அளித்தது சமய ஒறுப்புச் செயல் அன்று; புரட்சிக் கலகத்தை ஆதரித்ததற்கான தண்டனையே. இந்த இடத்தில் அக்பர்முதல் அவுரங்கசீப்வரை யிலான முகலாய மன்னர்கள் முஸ்லிம் அல்லாத குடிமக்களைப் பொறுத்தவரை சமயப் பொறைக் கொள்கையைப் பின்பற்றினர் என்ற கருத்தினை ஏற்க முடியாது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஜஹாங்கீரின் ஆட்சியிலும் ஷாஜஹானின் ஆட்சி யிலும் சமய ஒறுப்புச் செயல்கள் நடந்ததற்கான சான்றுகளைக் காணமுடிகிறது. குஜராத்தில் வாழ்ந்த ஜைனர்களை ஜஹாங்கீர் நடத்திய விதம்பற்றி 'இன்டிகாப்-இ-ஜஹாங்கீர் ஷாஹி' எனும் இலக்கியம் பின்வரும் குறிப்பினை அளிக்கின்றது. 'அவர்களை நாட்டிலிருந்து விரட்டி அவர்களின் கோயில்களை இடிக்குமாறு பேரரசர் ஆணையிட்டார். மசூதிக்கான மேல்படிக்கட்டின்கீழ் அவர்களுடைய கடவுளின் படிமம் புதைக்கப்பெற்றது. அன்றுட வழிபாட்டிற்காக மசூதிக்கு வரும் மக்களின் கால்களில் அது மிதிபட்டது. பேரரசரின் இத்தகைய ஆணையினால் இஸ்லாம் உயர்ந்தது; முஸ்லிமல்லாதவர்கள் அவமானத்திற்குள்ளாயினர்'.

### நூர்ஜஹான்

ஆரம்பகாலத்தில் மிஹிருன்னிஸா (Mihru-n-Nisa) எனப் பெயர் பெற்ற நூர்ஜஹானை 1611ஆம் ஆண்டில் ஜஹாங்கீர் மணந்தார். அத் திருமணம் அவரது வாழ்க்கையிலும் ஆட்சி யிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியது. நூர்ஜஹான், பாரசீகச் சீமானான மீர்ஸா கியாஸ்பெக் என்பவரின் மகளாவார். மீர்ஸா கியாஸ்பெக் செல்வம் தேடுதற்காக அக்பர் காலத்தில் இந்தியா விற்குக் குடும்பத்துடன் வந்தார். வரும் வழியில் காண்டஹாரில் மிஹருன்னிஸா பிறந்தார். அப் பாரசீகக் குடும்பத்தை அக்பர் நன்கு வரவேற்றார். இலக்கியத்தில் தேர்ச்சி பெற்றிருந்த கியாஸ்பெக் அரண்மனை மேற்பார்வையாளர் பதவிக்கு உயர்ந் தார். சில ஆண்டுகட்குப் பின்னர் மிஹருன்னிஸாவை ஷெர் ஆஃப்கன் என்ற அலிகுலிபெக்கிற்கு மணமுடித்துவைத்தனர். அதன் பிறகு வங்காளத்தில் உள்ள பாதுவானில் ஜாகீர் ஒன்றை ஷெர் ஆஃப்கான் ஜஹாங்கீரிடமிருந்து பெற்றார். அக்பர் வாழ்ந்த காலத்திலேயே ஜஹாங்கீர் மிஹருன்னிஸாவைக் கண்டு காதலித் தார் என்றும், அவர்களைப் பிரிப்பதற்காகவே மிஹருன்னிஸா விற்கு விரைவாகத் திருமண ஏற்பாட்டினை அக்பர் செய்தார் என்றும் கூறும் பழங்கதை ஆதாரமற்றது. எவ்வாறாயினும், அரண்மனையில் இருந்த பெண்களை அக்பர் ஐயத்துடன் கவனித்துவந்தார் என்று தெரிகின்றது. தமது மகனுடன் அதிகமாக நெருங்கிப் பழகினார் என்று ஐயங்கொண்டு அனார்

கலியை உயிருடன் புதைக்குமாறு அக்பர் ஆணையிட்டார் என்பது உறுதியாகின்றது. பிற்காலத்தில் லாகூரில் அனார்கலியைப் புதைத்த இடத்தில் ஜஹாங்கீர் எழுப்பிய எழில்மிகு கல்லறையும்,[1] அதில் பொறிக்கப்பெற்றுள்ள உணர்ச்சி ததும்பும் வாசகங்களும் அக்பருடைய ஐயப்பாடு உண்மையானதே என்பதை வலியுறுத்துகின்றன.

வங்காளத்தில் ஜாகீரைப் பெற்ற சிறிது காலத்திற்குள் ஷெர் ஆஃப்கன் பேரரசரின் வெறுப்பிற்குள்ளானார். அவரைக் கைது செய்து அரசவைக்குக் கொண்டுவருவதற்காகப் பேரரசர் தமது உடன் பிறவாச் சகோதரரான குத்புதீனை வங்காளத்திற்கு அனுப்பினார். ஷெர் ஆஃப்கன் பணிய மறுத்து எதிர்த்துப் போராடினார். அப்போது நடந்த கைகலப்பில் அவரும் குத்புதீனும் மாண்டனர். ஷெர் ஆஃப்கனின் விதவையான மிஹருன்னிஸாவை அரண்மனைக்கு அனுப்பிவைத்தனர். அவர் சிறிது காலத்திற்கு அக்பரின் இல்லத்தரசியரில் ஒருவரான ருக்கியா சுல்தானாவின் ஆதரவில் வாழ்ந்துவந்தார். அதன் பிறகு நடந்தவற்றை 'இக்பால் நாமா'வில் கண்டவாறே குறிப்பிடலாம். 'சிறிது காலத்தில் யாருடைய கவனத்தையும் கவராது மிஹருன்னிஸா வாழ்ந்திருந்தார். ஆயின், அவர் உலகத்தின் அரசியாகவும், அக் காலப் பேரரசியாகவும் வரவேண்டுமென்று விதி இருந்ததால், (1611ஆம் ஆண்டில்), பேரரசரின் ஆறுவது ஆட்சியாண்டுப் புத்தாண்டு விழாவில் கலந்துகொண்ட அவர் பேரரசரின் பார்வையில் பட்டார். ஜஹாங்கீரின் மனத்தை மிகவும் கவர்ந்து, அவரது தேர்ந்தெடுத்த உவளக மாதரில் ஒருவரானார்'. மிஹருன்னிஸாவின் மதிப்பும் செல்வாக்கும் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வந்தன. முதலில் அவர் 'உவளகத்தின் ஒளிவிளக்கு' எனும் பொருள்படும் 'நூர்மஹல்' என்ற பட்டப் பெயரைப் பெற்றார். ஆயின், சிறிது காலத்திற்குப் பிறகு 'உலகின் ஒளிவிளக்கு' என்ற பொருளில் 'நூர்ஜஹான் பேகம்' என்று போற்றப்பெற்றார். அவரது உற்றார் உறவினர் அனைவரும் பொருளும் பதவியும் பெற்று உயர்ந்தனர். அவரது முத்திரையின்றிப் பெண் எவருக்கும் நிலத்தை மானியமாக அளிப்பது கிடையாது. சில அரசர்களைப்போலப் பட்டப் பெயர்களை அளித்ததோடு ஜஹாங்கீர் நின்றுவிடவில்லை. அவர் நூர்ஜஹானுக்கு இறைமை சார்ந்த உரிமைகளையும் அரசாங்க அதிகாரங்களையும் அளித்திருந்தார். சில சமயங்களில் நூர்ஜஹான் முன்னிலை

[1] அது 1857 முதல் 1887 வரை ஊர்க்கோவிலாக இருந்தது. இப்போது ஆவணக்களரியாக விளங்குகின்றது.

மாடத்தில் அமர்ந்து] தம்முன் நின்ற செல்வந்தர்களுக்கு ஆணை கள் இட்டார். அவரது பெயரால் நாணயங்கள் வெளிவந்தன. அவற்றில் 'மன்னர் ஜஹாங்கீரின் ஆணைப்படி அரசி நூர் ஜஹான்பேகத்தின் பெயரைப் பதிப்பதால் பொன்னிற்குப்பெருஞ் சிறப்பு ஏற்படும்' என அச்சிடப்பட்டது. அரச ஆணைகள் அனைத்திலும் மன்னரது கையொப்பத்தோடு 'அரசி நூர்ஜஹான் பேகம்' என்ற தொடரும் ஒன்ருக இணைக்கப்பெற்றது. இறுதி யில் பேரரசர் பெயரளவிற்கே அரசர் என்ற நிலை வருமளவிற்கு நூர்ஜஹானின் அதிகாரம் வளர்ந்திருந்தது. நூர்ஜஹான் பேகத் திடம் இறைமையை ஒப்படைத்துவிட்டதாக அவர் அடிக்கடி கூறிவந்தார். அவர் பின்வருமாறு குறிப்பிடுவதுண்டு: ஒரு சேர் திராட்சை ரசமும் அரைச்சேர் இறைச்சியும் எனக்குத் தேவையானவை. இராணியாரின் அழகையும் மதிநுட்பத்தை யும் விவரித்தல் இயலாது. இடர்ப்பாடு தோன்றும்போது எந்தப் பிரச்சினையையும் அவர்முன் வைத்தால், அதனை அவர் உடனே தீர்த்துவிடுவார். அவரது பாதுகாப்பில் இருந்தவர்கள் கொடுங்கோன்மையிலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் விடு படுவர். ஆதரவற்று அனுதையாக இருக்கும் மங்கையைப்பற்றிக் கேள்வியுற்ருல், அவளுக்கு மணமுடித்துவைத்துத் திருமணப் பரிசு பொருளும் வழங்குவார். இங்ஙனம் அவரது ஆட்சிக் காலத்தில் அநேகமாக 500-க்கு மேற்பட்ட அனுதைப் பெண்கள் பரிசு பொருளோடு மணமுடித்துவைக்கப்பெற்றிருப் பார்கள்'.

நூர்ஜஹான் தலைசிறந்த பெண் அரசியாகத் திகழ்ந்திருக்க வேண்டும். சமகாலத்தில் எழுதப்பெற்ற உருவப்படங்களை நம்புவதானுல், கிழக்கு நாடுகளில் வாழ்ந்த பெண்கள் பலரைப் போன்று அல்லாது வாழ்நாளின் பிற்பகுதியிலும் நூர்ஜஹான் பேரழகுடன் மிளிர்ந்தார் எனலாம். மேலே குறித்த மேற்கோள் வாசகத்திலிருந்து மதுவிலும் அபினிலும் மூழ்கியிருந்த பேரரசர் மீது நூர்ஜஹான் மிகுந்த செல்வாக்குச் செலுத்தினுர் என்பது தெளிவாகின்றது. எப்போதும் அவர் பேரரசரின் பக்கத்தி லேயே இருந்துவந்தார். விளையாட்டுகளிலும் வேட்டையிலும் அவருடன் பங்குகொண்டு மகிழ்ந்தார். வேட்டையாடும்போது வெறும் பார்வையாளராக மட்டும் நூர்ஜஹான் இல்லை என் பதைப் பேரரசரின் குறிப்பேட்டில் உள்ள பின்வரும் பகுதி வலி யுறுத்துகின்றது: 'அண்டைப் பகுதியில் உள்ள மக்களுக்குத் துன்பம் விளைத்த புலியைப்பற்றி எமது வேட்டைக்காரர்கள் புகார் செய்தனர். பல யானைகளின் உதவியோடு புலியை வளைத்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டோம். மாலையில் பணி

யாளர்களுடன் யானை மீதேறிச் சென்றோம். எமது கையால் விலங்குகளைக் கொல்வது இல்லையென விரதம் பூண்டதால், எமது துப்பாக்கியால் சுடுமாறு நூர்ஜஹானைக் கேட்டுக் கொண்டோம். புலிக்குட்டியைக் கண்ட யானை அமைதியின்றி ஆடி அசைந்துகொண்டிருந்ததால் அதன்மீது அமர்ந்து நல்ல குறிவைப்பது கடினமாக இருந்தது. எம் பின்னுல் இருந்த மீர்ஸா ருஸ்தம் மிகுந்த தேர்ச்சி பெற்ற துப்பாக்கி வீரரல்லர். அவர் யானையொன்றின்மீதிருந்து மூன்று நான்கு முறை சுட்டதால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. ஆயின், முதல் குண்டடியிலேயே நூர்ஜஹான் அப் புலியைச் சுட்டு வீழ்த்தினுர்'.

தமது முதல் கணவருக்குப் பிறந்த மகளைப் பேரரசரின் இளைய மகனுன ஷாரியருக்கு மணமுடித்துவைத்ததன்மூலமாக அரண்மனையில் தமது செல்வாக்கை நூர்ஜஹான் மேலும் வளர்த்துக் கொண்டார். இதிமாத்-உத்-தௌலா எனும் விருது பெயர் பெற்ற அவரது தந்தையார் அரசவையில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற செல்வந்தராகத் திகழ்ந்தார். 1621ஆம் ஆண்டுவரை வாழ்ந்து இறந்த இதிமாத்-உத்-தௌலாவைப்பற்றித் தமது குறிப்பேட்டில் ஜஹாங்கீர் குறித்தபோது, 'இத்தகைய திறமையும் பற்றுறுதியும்கொண்ட அமைச்சரையும், பகுத்தறிவும் பரிவும் கொண்ட நண்பரையும் இழந்ததால் சொல்லொணுத் துயரம் ஏற்பட்டது' என எழுதினுர். நூர்ஜஹானின் சகோதரரும் அசஃப்கான் எனும் பட்டம்பெற்றுப் பேரரசரின் நம்பிக்கை வாய்ந்த ஆலோசகர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பேரரசரைச் சுற்றி இத்தகையதோர் உள்வட்டம் இருந்ததைப் பழம் பெருஞ் செல்வந்தர்கள் கடுமையாக எதிர்த்தனர். மேலும், அந்த உள் வட்டத்தினர் பேரரசின் பொருளாதாரத்தை மோசமாக நிர்வகித்ததால் அவர்கள்மீதான வெறுப்பு மேலும் வளர்ந்தது.

### மேவார் இராணுவுடனும் அகமது நகர அரசருடனும் போர்

ஜஹாங்கீரின் ஆட்சியின் முற்பகுதியில் பேரரசப் படைகள் பல போர்களில் ஈடுபட்டிருந்தன. வங்காளத்தில் எழுந்த சிறு குழப்பங்கள் எளிதில் ஒடுக்கப்பெற்றன. ஆயினும், மிக முக்கியத்துவம்வாய்ந்த இரு போர்கள் தொடர்ந்தன. முந்தைய ஆட்சிகளின் மரபாக வந்த மேவாருடனுன போர் அவற்றில் ஒன்ருகும். அதில் இறுதியாக இராணு அமர்சிங்கும், அவரது மகன் கரனும் இளவரசன் குர்ரத்தின் தலைமையிலிருந்த பேரரசப் படையிடம் 1614ஆம் ஆண்டில் சரணடைந்தனர். ஜஹாங்கீரும், தந்தை

கையாண்ட இராஜபுத்திரரை இணக்குவிக்கும் கொள்கைக்கு இணங்க, மேவாரின் மன்னரைப் பெருந்தன்மையோடு நடத்தினர். மேவார் ஒரு கப்பம் செலுத்தும் நாடாக மாறிய போதிலும்,அதற்கு அளித்த உரிமைக்கூறுகள் தாராளத்தன்மை கொண்டவை. ஆயின், பேரரசப் படைகள் தக்கணத்தில் அத்துணை வெற்றிவாய்ப்பினைப் பெறவில்லை. ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் அஹமது நகரப் படைகளுக்கு எதிராக எழுந்த போர் நீண்ட காலத்திற்கு நடைபெற்றது. அபிசீனியாவைச் சேர்ந்த அலியான மாலிக் ஆம்பர் அஹமது நகரப் படைத்தலைவராக விளங்கினர். திறமைவாய்ந்த அப் படைத்தலைவர் கொரில்லாப் போர்முறையை வெற்றிகரமாகப் பயன்படுத்தினர். முகலாயப் படைத்தலைவர்களுக்குள் ஏற்பட்ட ஓயாத பூசல் காரணமாகப் பேரரசப் படைகளின் துன்பங்கள் பெருகின. முதலில் இளவரசர் பார்வஸும், பிறகு இளவரசர் குர்ரமும் பெயரளவிலான படைத்தலைவர்களாக இருந்தனர். ஆனல், கான் கானனை அப்துர்ரஹீமிடமே உண்மையான அதிகாரம் இருந்தது. இவர்கள் தங்களுக்குள்ளேயே சச்சர விட்டுக்கொண்டும், ஒருவரைப்பற்றி ஒருவர் பேரரசரிடம் புகார் செய்துகொண்டும் காலத்தைக் கழித்தனர். 1616ஆம் ஆண்டில் இளவரசர் குர்ரம் அஹமதுநகரைக் கைப்பற்றி ஓரளவு வெற்றியைத் தேடித்தந்தார். இத்தகைய வெற்றியைப் பெற்றதற்காக 'ஷாஜஹான்' எனும் பட்டத்தையும் பெரும் பரிசு பொருளையும் அவர் அடைந்தார். ஆயினும், அஹமது நகரைக் கைப்பற்றியதால் போர் முடிந்துவிடவில்லை. அது ஜஹாங்கீரின் ஆட்சிக் காலம் முழுவதும் நீடித்தது. 1626ஆம் ஆண்டுவரை மாலிக் ஆம்பர் உயிர்வாழ்ந்திருந்தார். 'இக்பால் நாமா'வில் அவரைப்பற்றிப் பின்வரும் குறிப்பு வருகின்றது: ''அடிமையாக இருந்தபோதிலும் ஆம்பர் ஆற்றல் மிக்கவர். போர்க்கலையிலும் படைத்தலைமையிலும், சிறந்த முடிவெடுப்பதிலும், ஆட்சித் துறையிலும் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். தக்கண மொழியில் 'பார்கி கிரி' (Bargi giri) (Kazzaki) என்று பெயர் கொண்ட மறைந்திருந்து தாக்கும் போர்முறையை நன்கு புரிந்துகொண்டிருந்தார். நாட்டிலிருந்த அடங்காத சக்திகளை அடக்கிவைத்திருந்தார். இறக்கும் வரையில் மிக உயர்ந்த நிலையிலேயே வாழ்ந்துவந்தார். பெருமிதத்துடன் தமது வாழ்க்கையின் முடிவினைக் கண்டார். வேறு எந்த அபிசீனிய அடிமையும் அத்தகைய உன்னத நிலைக்கு வந்ததை வரலாற்றில் காண்பதரிது''. தக்கண அரசிற்கு அவரது மரணம் பேரிழப் பாகும்; அதிலிருந்து அது மீளவேயில்லை.

**காங்ராவைக் கைப்பற்றுதல்**

அக்பர் தோல்வியுற்ற ஒன்றில் ஜஹாங்கீர் வெற்றி பெற்ருர். பல இந்திய மன்னர்களின் தாக்குதல்களுக்குப் பணிய மறுத்த வலிமை மிக்க காங்ரா கோட்டையை ஜஹாங்கீர் கைப்பற்றினர். 'வாக்கியத்-இ-ஜஹாங்கீரி'யின் குறிப்புப்படி அக் கோட்டை வெல்ல முடியாதது என நம்பப்பெற்றது. 'இஸ்லாத்தின் ஆதிக்கமும் முகம்மதிய சமயமும் இந்தியாவில் நிலைபெறத் தொடங்கிய நாளில் இருந்துவந்த வலிமைவாய்ந்த சுல்தான் எவரும் அக் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை.' எவ்வாருயினும், இக் கூற்று முற்றிலும் உண்மையானதன்று. எப்படியெனில், இயற்கை அரண் மிகுந்த வலிய கோட்டையாக அது விளங்கியபோதிலும் மாமூது கஜினியும் ஃபிரோஸ் துக்ளக்கும் அதனைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

அதை அடுத்து அவ்விடத்திற்கு ஜஹாங்கீர் சென்ருர். அவர் தமது வெற்றியைக் கொண்டாடிய விதம் இந்துக்களுக்கு வெறுப்பூட்டுவதாக இருந்தது. '24ஆம் தேதி அக் கோட்டையைக் காணச் சென்ருேம். காஸியையும், தலைமை நீதிபதியையும், பிற இஸ்லாம் சமயச் சட்ட வல்லுநர்களையும் எம்முன் வந்து எமது சமய மரபுப்படி சடங்குகளைச் செய்யுமாறு பணித்தோம். அரைக்காஸ் (kos) தூரம் சென்றதும் அம்பாரியில் ஏறிக் கோட்டைக்குச் சென்ருேம். ஆண்டவரின் அருளால் வழிபாடு நடந்தது. குத்பா வாசிக்கப்பட்டது. பசு பலியிடப்பெற்றது. மேலும், அக் கோட்டை தோன்றிய நாள்முதல் இன்றுவரையில் அது காணுத பல செயல்கள் நிறைவேற்றப்பெற்றன. இவை அனைத்தும் எம் முன்னுலேயே நடந்தேறின. முன்பு வந்த மன்னர் யாவரும் பெறமுடியாத பெருவெற்றியைப் பெற்றுத் தந்ததற்காக ஆண்டவருக்குத் தலைவணங்கினேம். அதன் பின்னர் அக் கோட்டையில் பெரிய மசூதி ஒன்று கட்டுமாறு கட்டளையிட்டோம்' (Wakiat-i-Jahangiri).

**ஜஹாங்கீரின் சமயம்**

இங்ஙனம் இஸ்லாம் சமயத்தின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியதால் சமயமரபு வழாத முஸ்லிம்கள் மனநிறைவு கொண்டிருக்கலாம். ஆயின், இத்தகைய வெளிப்படையான ஆர்வம் காட்டிய போதிலும், ஜஹாங்கீர் மாருப் பற்றுறுதி கொண்ட முகமதியரல்லர். அவரது தந்தையைப் போலவே அவர் தம் சமயக் கருத்துகளும் தெளிவாக இயற்கைச் சமயக் கோட்பாடு சார்ந்தவையாக இருந்தன. தமது அரசவைக்கு

வந்த ஜெசூட்களுக்கும் முல்லாக்களுக்கும் இடையேயான சமயச் சர்ச்சைகளைக் கேட்பதில் பெருமகிழ்ச்சி கொண்டார். எப்போதும் கலை அன்பராக விளங்கிய ஜஹாங்கீர், தம்மைச் சுற்றிலும் ஏராளமான சமயப் படங்களை, குறிப்பாகக் கிறிஸ்துவ சமயம் சார்ந்த படங்களை வைத்திருந்தார். அச் செயலால் அரசவையினர் வெறுப்புக் கொண்டனர். கிறிஸ்துவச் சின்னங்கள் பொறித்த முத்திரை ஒன்றைப் பயன்படுத்தும் அளவிற்கு அவர் மனம் மாறியிருந்தது.

## ஷாஜஹானின் புரட்சி

பேரரசரின் இறுதியாண்டுகளில் புரட்சிக் கலகமும் பேரழிவும் தோன்றலாயின. அவர் உடல்நலம் குன்றியது. அவருக்குப் பின்வாரிசாக வர அவரது மக்கள் ஆவலோடு காத்திருந்தனர். அத்தகைய நெருக்கடியான வேளையில் தலைநகரில் இல்லாதிருந்தால் அவர்களுக்குக் கேடு நேரலாம். அதனால் 1622ஆம் ஆண்டில் பாரசீகர் காண்டஹாரைக் கைப்பற்றிய போது அதனை மீட்பதற்குப் படைகொண்டு செல்ல வேண்டுமென்று ஷாஜஹானுக்கு ஆணை பிறந்தது. ஆயின், அவர் அவ்வாறு செய்ய மறுத்துப் புரட்சிக் கலகத்தில் ஈடுபட்டார். பல ஆண்டுகளுக்குப் பேரரசரின் ஆதரவைப் பெற்றிருந்த கான் கானுன அப்துர்ரஹீமும் புரட்சி செய்த இளவரசருடன் இணைந்துகொண்டார். அவர் இவ்வாறு கட்சி மாறியதைப் பேரரசர் கடுமையாகக் கண்டித்தார். ‘எமக்கு ஆசான் எனும் மிக உயர்ந்த பதவியை வகித்த கான்கானுன் இப்போது கலகக்காரராக மாறிவிட்டார். தமது எழுபதாவது வயதில் நம்பிக்கைக்கேடு எனும் கரியைத் தமது முகத்தில் பூசிக்கொண்டார். ஆயின், இயற்கையிலேயே அவர் துரோகியும் புரட்சியாளரும் ஆவார். எமது மதிப்பிற்குரிய தந்தையாரிடம் அவரது அப்பாரும் (பைராம்கான்) இது போன்றே வெட்கம் கெட்ட முறையில் நடந்துகொண்டார். அவர் தமது தந்தையின் வழியையே பின்பற்றித் தள்ளாத வயதில் தகாப் பெயர் கொண்டார்’. (Wakiat-i-Jahangiri). ஆக்ராவிற்குப் படையோடு சென்று அங்கு சேர்த்துவைக்கப்பெற்றிருந்த பெருநிதிக் குப்பையைக் கைப்பற்றுவதே ஷாஜஹான் முதலில் கொண்ட நோக்கமாகும். ஆயின், பெயரளவில் இளவரசர் பார்விசைத் தலைவராகவும், மகபத்கானை ஆலோசகராகவும் கொண்ட படை ஒன்று ஷாஜஹானின் வழியை அடைத்தது. தில்லிக்குத் தெற்கேயுள்ள பிலோச்பூரில் இருபடைகளும் சந்தித்தன. ஷாஜஹான் முழுத் தோல்வியுற்ருர். தெற்கே ஓடிய அவரை மகபத்கான் துரத்திச்

சென்றுர். வயோதிகரான கான்கானுன் விருப்பப்படியே சர ணடைந்தார்; பரிவுடன் நடத்தப்பெற்றுர். மாளவத்திலும் தக்கணத்திலும் திரிந்த பிறகு, ஷாஜஹான் வங்காளத்தைக் கைப்பற்றி, அங்கே மற்றுமொரு படையினைத் திரட்டினுர். ஆயின், மகபத்கான், அவருக்கு ஓய்வு அளிக்காது மற்ருெரு சண்டையில் முறியடித்துத் தக்கணத்திற்கே மீண்டும் விரட் டினுர். ஷாஜஹான் அடுத்த சில ஆண்டுகளுக்கு மாலிக் ஆம்பர் போன்ற பலரைத் தம்முடன் கூட்டுச் சேருமாறு கோரிப் பல இடங்களில் சுற்றிவந்தார்.

இறுதியாக 1625ஆம் ஆண்டில் பேரரசருடன் அவர் சமரசம் செய்துகொண்டார். அவரது புதல்வர்களான தாராஷீக் கோவும் அவுரங்கசீப்பும் பேரரசரிடம் வந்து சேர்ந்தனர். அன்ஞேர் அநேகமாக ஷாஜஹானின் நன்னடத்தைக்கான பிணையாக வந்திருக்கவேண்டும். தமது தந்தை இறக்கும்வரை யில் ஷாஜஹான் தக்கணத்திலேயே தங்கிவிட்டார்.

### மகபத்கானின் புரட்சி

ஷாஜஹானின் புரட்சிக் கலகம் அடங்கியதோ இல்லேயோ, கூடிய விரைவிலேயே மற்ருேர் ஆபத்து தோன்றியது. வெற்றி பெற்ற படைத்தலேவரான மகபத்கானின் சாதனைகளைக் கண்டு நூர்ஜஹானும், அவரது சகோதரரான அசஃப்கானும் பொருமை கொண்டனர். வங்காளத்தில் கைப்பற்றிய யானைகளை மகபத் கான் பேரரசரிடம் ஒப்படைக்கவில்லை யென்றும், அரசாங்கத் திற்குச் சேரவேண்டிய பெருந்தொகையை அவரே எடுத்துக் கொண்டார் என்றும் கூறி,அவரை அரசவைக்கு அழைக்குமாறு ஜஹாங்கீரை வற்புறுத்தினர். தம்மை அழிப்பதற்கே இத் தகைய சூழ்ச்சியென்பதை மதிநுட்பம் கொண்ட மகபத்கான் உணர்ந்துகொண்டார். ‘இங்ஙனம் அவரைத் (மகபத்கானை) திரும்ப அழைத்தது அசஃப்கானின் தூண்டுதலினுல்தான், அவ்ரை அவமானப்படுத்துவதும், அவரது மதிப்பு, சொத்து, உயிர் ஆகியவற்றைப் பறிப்பதும் அசஃப்கானின் நோக்கமாகும்’ (Iqbal-Nama). அதனுல் மகபத்கான் புரட்சி செய்யத் தீர்மானித் தார். ஜீலம் ஆற்றங்கரையில் இருந்த பேரரசப் பரிவாரம் தங்கி யிருந்தஇடம்வரையில் மகபத்கான் வேகமாகமுன்னேறிவந்தார். பேரரசரின் பாசறையை வளைத்துக்கொண்டு ஜஹாங்கீரைச் சிறைப்படுத்தினுர். ஆயின்-நூர்ஜஹான் சிறையிலிருந்து தப்பிச் சென்று, படைபலத்தைக்கொண்டு பேரரசரை மீட்க முயன்று தோல்வியுற்றுர். மகபத்கானும் பேரரசரைக் காபூலுக்குக் கொண்டுசென்றுர். அங்கே நூர்ஜஹான் தந்திரமாக மகபத்கானை

ஏமாற்ற முற்பட்டார். மகபத்கான் ஏமாறிய சமயத்தில் அவரும் பேரரசரும் தப்பிச் சென்று ரோடாஸை அடைந்தனர்; அங்கே பேரரசரின் ஆதரவாளர்கள் ஒரு பெரும் படையினைத் திரட்டி வைத்திருந்தனர். தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மகபத்கான், இன்றியமையாததை ஏற்றுப் பேரரசரின் ஆணைகளுக்குப் பணிந்தார். அதே சமயத்தில் முன்னால் கைது செய்திருந்த அசஃப்கானையும் விடுவித்தார். அப்போது சிந்திலிருந்து தட்டா கோட்டையைக் கைப்பற்றிப் புதியதொரு புரட்சியில் ஈடுபட ஷாஜஹான் முயன்றதாக வதந்தி வந்தது. அதனால் மகபத்கானைப் பேரரசர் தட்டாவிற்குப் படையுடன் செல்லுமாறு பணித்தார். எப்படியிருப்பினும், மகபத்கான் ஷாஜஹானுடன் போரிடுவதற்குப் பதிலாக அவருடன் சமாதானம் செய்துகொண்டார். அரியணைக்குப் போட்டியாக இருக்கக்கூடிய இளவரசர் பார்வஸ் இறந்ததால் ஷாஜஹானின் நிலை திடப்பட்டது. இளவரசர் பார்வஸ் பல ஆண்டுகளுக்கு ஓயாத குடியில் மூழ்கியிருந்தார். அதுவே அவர் 1626ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இறப்பதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆயின், அவரை ஷாஜஹானே நஞ்சிட்டுக் கொன்றார் என்று பலமான வதந்திகள் உலவின. பிற்காலத்தில் அவுரங்கசீப் இக் குற்றத்தை ஷாஜஹான்மீது சுமத்தினார். பேரரசருக்கு அவுரங்கசீப் எழுதிய கடிதமொன்றில் (Prof. Sarkar எழுதிய 'History of Aurangazeb'[1] எனும் நூலில் எடுத்து எழுதியவாறு), 'தாங்கள் பட்டத்திற்கு வருவதற்கு முன்பு, தங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாத குஷ்ருவையும் பார்வஸையும் கொன்ற தாங்கள், அவர்களது நினைவை இன்னும் எவ்வாறு போற்றிவருகிறீர்கள்?' என எழுதியிருந்தார்.

**பேரரசரின் மறைவு**

ஷாஜஹான் நீண்ட நாள்கள் காத்திருக்கவில்லை. காசநோயினால் துன்புற்றிருந்ததோடு, அளவு மீறிய நுகர்ச்சி காரணமாகப் பேரரசருடைய உடல் நலிந்தது. வழக்கமாகச் செல்லும் காஷ்மீர்ப் பயணத்திலிருந்து 1627ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் திரும்பிவந்தார். அவர் வேட்டையாடிக்கொண்டிருந்தபோது அவரது வேட்டை வீரர்களில் ஒருவன் உயிருக்கு ஆபத்தான விபத்தில் சிக்கினான். அவன் செங்குத்துப் பாறையொன்றின்மீதிருந்து வீழ்ந்ததால் பேரரசர் கண்முன்னாலேயே இறந்துபட்டான். பரிதாபத்திற்குரிய அவனது மரணம் பேரரசரைப் பெரிதும் பாதித்தது. அதன்மூலமாக அவர் மரண

1 Vol. iii, பக். 155,

தேவதையைக் கண்டதுபோலத் தோன்றுகிறது. அதிலிருந்து அவர் அமைதியிழந்து தவித்தார். அவர் நிலை முற்றிலும் மாறு பட்டது. இரண்டு நாள்களுக்குப் பயணம் தொடர்ந்தது. அடுத்த நாள் அவர் ஒரு கோப்பை திராட்சை ரசம் கொண்டு வருமாறு கூறினர். ஆயின், அக் கோப்பையை அவரது உதட்டில் வைத்தபோது அவரால் மதுவைப் பருகமுடியவில்லை. அன்றிரவு அவரது நிலை மோசமாகியது. மறுநாட் காலையில் தமது 22ஆம் ஆட்சியாண்டில் அவர் மரணமடைந்தார் (Iqbal-nama). அவரது சடலம் லாகூருக்குக் கொண்டுவரப் பட்டது. ரவி ஆற்றங்கரையில் ஷாதராவில் அமைந்த அழகிய கல்லறையில் அவரது உயிரற்ற உடலைப் புதைத்தனர். ஜஹாங்கீரின் குண இயல்புபற்றி ஏற்கெனவே விளக்கம் தரப் பெற்றது. அவரது ஆட்சிபற்றிப் பொதுவாகக் குறிப்பிடும் வகையில் வின்செண்ட் ஸ்மித் பின்வருமாறு எழுதுவார்: 'பொதுவாக அக்பர் காட்டிய வழிகளிலேயே அரசாங்கம் நடைபெற்றது. ஒப்புயர்வற்ற தந்தையோடு ஒப்பிட்டுப் பார்க் கும்போது, தனிப்பட்ட முறையில் ஜஹாங்கீரிடம் காணப்பெற்ற தரக்குறைவு காரணமாக எழுந்த சிறிதளவு சிதைவுடன் தொடர்ந்த அக்பரின் ஆட்சியே ஜஹாங்கீரினுடையது எனலாம்'.[1]

### ஐரோப்பிய சக்திகளுடன் முகலாயரின் தொடர்பு

ஜஹாங்கீரின் ஆட்சியின் அரசியல், படைத்துறை சார்ந்த நிகழ்ச்சிகள் சிறப்பு மிக்கவை அல்லவாயினும், ஐரோப்பிய சக்தி களுடன் முகலாயப் பேரரசு கொண்டிருந்த தொடர்பு அக் காலப் பகுதியிலேயே மிக முக்கியமான கூறுகும். ஒரு நூற்றுண்டிற்கு முன்னரே கள்ளிக்கோட்டைத் துறைமுகத்திற்குள் வாஸ்கோட காமா போர்ச்சுகலின் கொடியைக் கொண்டுவந்தார். இத் தகைய சிறு தோற்றத்திலிருந்து அவர்கள் இந்து மாகடலில் வல்லமைமிக்க சக்தியாக மாறினர். அவர்களுடைய பெருமை மிக்க அரசப் பகர ஆளான ஆல்புகர்க் (Albuquerque) பீஜபூர் சுல்தானிடமிருந்து கோவாவைப் பெற்றுர். அதுவே போர்ச்சு கீசியருடைய இந்தியக் குடியேற்றங்களில் தலைசிறந்து விளங் கியது. பாரசீக வளைகுடாவிலும் மலாக்கா நீர்ச் சந்தியிலும் அவர்கள் குடியேற்றங்களை அமைத்திருந்தனர். ஆயினும், பல காரணங்களினுல் அவர்களது ஆதிக்கம் குறையலாயிற்று. அவர்களுடைய வன்முறை சார்ந்த சமய ஒறுப்பினுல் மக்கள் அவர்களை வெறுத்தனர். குறிப்பாகப் பரந்த மனப்பான்மை

[1] 'History of India', பக். 387.

கொண்ட அக்பர் போன்ற அரசர்கள் அவர்களை அடியோடு வெறுத்தனர். ஏழைமை மிகுந்த பிற்போக்கான நாடாகிய போர்ச்சுகல் நாடுபிடிக்கும் கொள்கையால் நலிந்தது. பரந்த பேரரசை வைத்துக் காக்கும் தகுதி அதனிடமில்லை. மேலும், போர்ச்சுகலை ஸ்பெயினுடன் தற்காலிகமாக (1580-1640) இணைத்தல், போர்ச்சுகீசியப் பேராசைக் கனவுகளுக்குப் பேரிடியாக வந்தது. இத்தகைய இணைப்பினால் கிழக்குக் கடல்களில் இரண்டாவது ஐரோப்பிய சக்தி—டச்சுக்காரர்களுடையது—தோன்றியது. புதிதாகத் தோன்றிய டச்சுக் குடியரசு ஸ்பெயினுடன் போரிட்டுவந்தது. இந் நிலையில் ஸ்பெயினும் போர்ச்சுகலும் ஒன்றுகிவிட்டதால், கிழக்குநாட்டு வாணிபத்தில் டச்சுக்காரர்கள் அவர்களுக்குப் போட்டியாக வந்தனர்.

ஜஹாங்கீரின் காலத்தில் இங்கிலாந்து எனும் மூன்றுவது ஐரோப்பிய சக்தி இந்தியாவில் தோன்றலாயிற்று. எலிசபத் இராணியாரின் காலத்துப் புகழ்வாய்ந்த மாலுமிகள் பெரும்பாலும் மேற்கு உலகில் செயலாற்றுவதோடு அமைந்தனர். எலிசபத் இராணியார் ஆட்சியின் கடைசி ஆண்டில்தான் (1600) கிழக்கு இந்தியக் கம்பெனி உருவாகியது. முதலாம் ஜேம்ஸ் மன்னர் பட்டத்திற்கு வந்ததோடு, புதிய உலகில் ஸ்பானிய நாடுகளைக் கைப்பற்றும் திட்டங்களைக் கைவிடும் ஸ்பானிய ஆதரவுக் கொள்கையைப் புகுத்தியதாலும், கிழக்கில் இங்கிலாந்தின் நலத்தைப் பேணி வளர்க்கவேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது. இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகள் தொடர்ந்த, மிகப் பழைய இடமான சூரத்திற்கு 1608ஆம் ஆண்டில் காப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ் (Captain William Hawkins) என்பார் வந்து சேர்ந்தார். கம்பெனிக்கு வாணிபத் தனியுரிமை பெற்றுத் தருவதற்காக ஜஹாங்கீருக்கு முதலாம் ஜேம்ஸ் எழுதிய கடிதத்தோடு அவர் சூரத்தை அடைந்தார். முகலாய அரசவையில் தனியுரிமைகளை அனுபவித்துவந்த போர்ச்சுகீசியர்கள் ஹாக்கின்ஸின் வருகையைத் தீவிரமாக வெறுத்தனர். அவரது வழியில் பல தடைகளை உருவாக்கினர். எவ்வாருயினும், ஹாக்கின்ஸ் பேரரசரைக் காண்பதில் வெற்றி பெற்றதோடு, அன்னுரது ஆதரவையும் பெற்றுர். அவருக்கு ஜஹாங்கீர் அரசியல் பதவியும் ஊதியமும் அளித்தார். இராக் களியாட்டங்களில் நன்னயமுள்ள மது அருந்தும் தோழராக அவரைக் கொண்டார். மூன்று ஆண்டுகளுக்கு இந் நிலை தொடர்ந்தது. ஆயின், போர்ச்சுகீசியரின் இடைவிடாத சூழ்ச்சிகளால் தமது நாட்டவருக்கு நடைமுறையில் பயனளிக்கக் கூடிய எதையும் பெறமுடியாததைக் கண்டு அவர், 1611ஆம்

ஆண்டில் அரசவையை விட்டு நீங்கி, தமது மரக்கலத்திற்குத் திரும்பினர். அவரது குறிப்பேடுகள், முகலாய அரசவைபற்றிய சுவை மிக்க செய்திகளை விளக்குகின்றன.

அடுத்த ஆண்டில் போர்ச்சுகீசியருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே வெளிப்படையான போராட்டம் துவங்கியது. இரண்டு ஆங்கிலக் கப்பல்களான ட்ராகனும், சிறு படகான ஒஸியாண்டரும் (Dragon and Osiander) பெரும் போர்ச்சுகீசிய நாவாய்ப் படையுடன் வெற்றிகரமாகப் போரிட்டன. இச் சண்டையை அநேகமாக 'ரெவெஞ்சில்' (Revenge) வரும் கிரன்வில் (Grenville) சண்டைக்கு ஒப்பிடலாம். இந்த வெற்றிச் செய்தி பேரரசரின் மனத்தில் நன்கு பதிந்தது. அவர் ஆங்கிலேயருடைய வீரத்தைப் பற்றி உயர்வாக எண்ணலானர். முகலாயப் பேரரசு ஆதிக்கத்தின் உச்சநிலையில் இருந்தபோதுகூடக் குறிப்பிடக்கூடிய அளவிற்கு வலிமைகொண்ட நாவாய்ப் படை ஏதும் வைத்திருக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் அப்போது வீழ்வதற்கு இதுவும் ஒரு காரணம் என்று வின்செண்ட் ஸ்மித் கருதுகின்றர்.[1] ஆணவம் மிக்க சமய ஒறுப்புச் செயல்களைப் போர்ச்சுகீசியர் தொடர்ந்து செய்யலாயினர். 1613ஆம் ஆண்டில் பேரரசிற்குச் சொந்தமான கப்பல்கள் சிலவற்றைத் தாக்கிக் கொள்ளையிடவும் துணிந்தனர். வேண்டுமென்றே செய்த இத்தகைய வலுத்தாக்குதல்களுக்காக எதிர்நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியமாகியது. ஜஹாங்கீரின் பேரரசில் வாழ்ந்திருந்த போர்ச்சுகீசியரில் பெரும்பாலானேர் வெளியேற்றப்பட்டனர். கிறிஸ்துவ சமயத்திற்கு அளித்த சலுகைகளும் நீக்கப்பெற்றன. போர்ச்சுகீசியரின் செல்வாக்குக் குன்றியதைப் பயன்படுத்திக்கொண்டு முதலாம் ஜேம்ஸிடமிருந்து மற்ருெரு கடிதத்துடன் வில்லியம் எட்வர்ட்ஸ் என்பார் 1615ஆம் ஆண்டில் அரசவைக்கு வந்தார். பேரரசர் அவரை நன்கு வரவேற்ருர். தமது வெறுப்பிற்குள்ளான போர்ச்சுகீசியருக்குப் போட்டியாக வந்த ஆங்கிலேயர்களைக் கண்டு மகிழ்ந்தார். ஆயினும், வில்லியம் எட்வர்ட்ஸ் முடிவாக எதையும் பெறவில்லை. அதே ஆண்டில் மேலும் முறைசார்ந்த தூதுக்குழு ஒன்று இங்கிலாந்திலிருந்து வந்தது. அப்போது வந்த சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) என்பவர் அனுபவம் மிக்க படைவீரராகவும் வெல்திறத்தில் வல்லவராகவும் விளங்கினர். அவர் வந்த காரியத்திற்கு அவரைவிடத் தகுதி வாய்ந்த ஒருவரை அநேகமாக அனுப்பியிருக்க முடியாது. அவர்

1 இந் நூலின் பதினேராம் இயலைக் (இரண்டாம் பாகம்)காண்க.

முதலாம் ஜேம்ஸிடமிருந்து பல பதவிச் சின்னங்களைப் பெற்றிருந்தார். பேரரசருக்கான ஏராளமான பரிசு பொருள்களையும் கொண்டுவந்தார். அவற்றைத் திருடுவதற்காக வழியில் பல முயற்சிகள் நடைபெற்றதால் அவற்றைப் பேரரசரிடம் கொண்டுசேர்ப்பது பெரும்பாடாயிருந்தது. பேரரசரிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்ற ரோ அரசவையில் மூன்றுண்டுகள் தங்கியிருந்தார். அவருடைய குறிப்பு நூலும், அவர்தம் சமய குருவான டெர்ரியின் குறிப்பு நூலும் முகலாய அரசவையின் அன்றுட நடவடிக்கைபற்றிச் செய்திதரும் மிக முக்கிய ஆதார நூல்களாகின்றன. இவ்விரு நூல்களில் டெர்ரியினுடையது சிறந்ததாகும். எவ்வாறெனில், ரோவினுடைய நூலில் காண முடியாத விரிவான விளக்கங்கள் டெர்ரியின் நூலில் நிறைந்துள்ளன. நடைமுறையிலான உடன்படிக்கை ஏதும் கையெழுத்தாகவில்லை. எனினும், ரோவின் தூதுக்குழு வெற்றிபெற்றது என்பதில் ஐயமில்லை. தமது நாட்டு மக்களுக்கான ஏற்பினையும் சிறப்புரிமைகளையும் ரோ பெற்றுத்தந்தார். அப்போதிருந்து இந்திய விவகாரங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு முக்கியக் கூருக விளங்கத் தொடங்கியது எனலாம்.

# 4. ஷாஜஹான்

**அரசுரிமைப் போட்டி**

பிம்பாருக்கு அருகில் இருந்த சிங்கிஸ் ஹட்லி எனுமிடத்தில் 1627ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஜஹாங்கீர் இறந்தபோதும், அவரது மைந்தரான ஷாஜஹான் மதிப்பிழந்த நிலையிலேயே தக்கணத்தில் வாழ்ந்திருந்தார். ஷர்ஆஃப்கன் மூலமாகப் பிறந்த தமது மகளை மணமுடித்துவைத்ததன்மூலமாகத் தமது மருமகனுக்கிக்கொண்ட இளவரசர் ஷாரியரைக் கூடுமானவரை பெரும்படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு தம்மிடம் வருமாறு கோரி இரகசியச் செய்தியொன்றை நூர் ஜஹான் உடனடியாக அனுப்பிவைத்தார். ஷாரியரும் காலம் கடத்தாது லாகூரில் தம்மைப் பேரரசர் என அறிவித்துக்கொண்டார். அம் மாநிலத்தின் கருவூலத்தைக் கவர்ந்து தாராளமாகப் பணத்தை வாரியிறைத்துப் படையினருடைய பற்றுறுதியையும் பிரபுக்களின் ஆதரவையும் ஒருங்கே பெற்ருர்.[1] இதற்கிடையில் நூர்ஜஹானின் சகோதரரான அசஃப்கான், தமது மகள் மும்தாஜ் மஹாலை மணந்திருந்த இளவரசர் ஷாஜஹானை ஆதரிப்பதில் தீவிரமாக இருந்தார். அவர் பேரரசருடன் காஷ்மீருக்கு வந்திருந்த மற்ருெரு செல்வந்தரான இராதத்கானையும் கலந்துகொண்டு நூர்ஜஹானை நடைமுறையில் சிறையில் வைத்தார். நடந்ததுபற்றி அறிவிப்பதற்காகத் தொலைவிலுள்ள தக்கணத்தில் வாழ்ந்திருந்த ஷாஜஹானிடம் தூதுவர்களை விரைந்து அனுப்பினுர். இதற்கிடையில் நூர்ஜஹானின் உவளகத்தில் இருந்த இளவரசர்களான முகம்மது தாராஷுக்கோ, முகம்மது ஷாஷுஜா, முகமது அவுரங்கசீப் ஆகிய ஷாஜஹானின் மக்களைத் தம்மிடம் மீட்டுக்கொள்வதிலும் அவர் வெற்றிபெற்ருர். காஷ்மீரில் பேரரசப் பரிவாரங்களுடன் இராதத்கானின் பொறுப்பில் இருந்தவரும், மறைந்த இளவரசர் குஷ்ருவின் மூத்த புதல்

1 ஒரு வாரகாலத்தில் ஷாரியர் படையினருக்கும் பிரபுக்களுக்கும் எழுபது இலட்ச ரூபாய்கள் வழங்கியதாகக் கூறப்படுகின்றது. அதில் நாற்பத்தைந்து இலட்ச ரூபாய்களை அவர் வீழ்ச்சியுற்றபிறகு ஷாஜஹான் மீட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது. Beni Prasad எழுதிய 'Jahangir', பக். 436-7.

வருமான இளவரசர் தவார்பக்ஷை தெற்கேயிருந்து ஷாஜஹான் வரும்வரையில் தற்காலிகமாக அரியணைமீது அமர்த்தினர். அதனால் பேரரசரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பெற்ற பிம்பரில் தவார் பக்ஷின் பெயரிலேயே குத்பா வாசிக்கப்பெற்றது. அதன் பின்னர் பேரரசப் பரிவாரங்கள் லாகூரை நோக்கிப் புறப்பட்டன. ஆயினும், அசஃப்கானும் இராதத்கானும் தங்களது படைகளுடன் நூர்ஜஹானுக்கு ஒருநாள் முந்தியே முன்னேறி வந்தனர்.

லாகூரின் அருகிலேயே தங்கியிருந்த ஷாரியர், அசஃப்கானின் படையினை எதிர்த்துப் போரிடுவதற்காக மறைந்த இளவரசர் தானியாலின் மைந்தரான மீர்ஸா பெய்சிங்கரின் (Mirza Baisinghar) தலைமையில் தமது படைகளை ரவி ஆற்றிற்கப்பால் அனுப்பினர். ஆயினும், பயிற்சியும் அனுபவமும் மிக்க பேரரசப் படைக்குமுன் அவரது பயிற்சியற்ற படை நிற்க முடியவில்லை, அசஃப்கானின் முறையான படைவீரர்கள் நடத்திய முதல் தாக்குதலையே ஷாரியரின் படை தாங்கமுடியாது சிதறியது, பெய்சிங்கர் லாகூருக்குப் பின்வாங்கினர். அதே சமயத்தில் கோழைத்தனமும் திறமையின்மையும் கொண்ட ஷாரியர்[1] மனம் தளர்ந்து லாகூர்க் கோட்டையில் இருந்த பெண்கள் வாழும் பகுதியில் ஒளிந்துகொண்டார். எவ்வாறாயினும், சிறிது காலத்திற்குள் அலியொருவன் அவரைப் புதிய பேரரசர் முன் கொண்டுவந்து நிறுத்தினன். இங்ஙனம் பணிந்த ஷாரியரை ஷாஜஹான். சிறையிலடைத்துச் சில நாள்களில் கண்களைப் பறிக்குமாறும் செய்தார். குறுகிய போராட்டம் இங்ஙனம் முடிவுற்றது. இதற்கிடையில் ஷாஜஹான் தில்லியை நெருங்கி வந்துகொண்டிருந்தார். அவர் அசஃப்கானிடமிருந்து செய்தியறிந்ததும் உடனடியாக குஜராத்தின் வழியாக ஆக்ராவை நோக்கிப் பயணமானர். அப்போது லாகூரிலிருந்த தமது மாமனரான அசஃப்கானுக்கு அவசரக் கடிதமொன்றும் எழுதினர். அதில் குஷ்ருவின் மகனாகிய தவார் பக்ஷ், உடன்பிறந்த உதவாக்கரையான ஷாரியர், இளவரசர் தானியாலின் மக்கள் ஆகியோரை இவ்வுலகிலிருந்து வெளியேற்றிவிடுவது நல்லது என எழுதியிருந்தார். அவர் மேவாரைக் கடந்து சென்றபோது,

1 திறமையும் மதிநுட்பமும் அற்ற காரணத்தால் ஷாரியருக்கு 'நஸ்புதானி' (Na-sbudani), அதாவது, 'உதவாக்கரை' என்ற நையாண்டிப் பெயரை ஷாஜஹான் நல்கியிருந்தார்; அப் பெயராலேயே அவர் பொதுவாக அழைக்கப்பெற்றார். Elliot and Dowson எழுதிய நூலின் vol. vii, பக் 5.

ராணுகரன் தமது தலைநகரான கோகிந்தா[1]வில் பற்றுறுதியுடன் வரவேற்று உபசரித்தார். அந் நகரில்தான் ஷாஜஹான் தமது முப்பத்தெட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடினார். அதன் பிறகு 1628ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆக்ராவை அடைந்தார். அங்கே தாமே பேரரசர் என அறிவித்தார். நூர்ஜஹானைக் கட்டுப்படுத்துவதற்காகத் தீவிர உடனடியான நடவடிக்கைகள் எடுத்த அசஃப்கானின் விழிப்புடனான செயல்கள் காரணமாக ஷாஜஹான் எளிதில் வெற்றிபெற்றார். கட்டற்ற நிலையில் நூர்ஜஹான் வாழ்ந்திருந்தால் அரசுரிமைப் போராட்டம் மேலும் நீண்டிருக்கும். இங்ஙனம் ஷாரியாரை முரியடித்ததும் எதிர்ப்பு முற்றிலும் முடிவடைந்தது. ஷாஜஹான் ஆக்ராவை அடைந்துவிட்டார் என்ற செய்தியை அவர்தம் மாமனார் கேள்வியுற்றதும் தாவார் பக்ஷை அரியணையில் அமர்த்திய போலி நாடகம் முடிவுற்றது. அந்தப் பரிதாபத்திற்குரிய இளவரசரை அரியணையிலிருந்து நீக்கிச் சிறையிலடைத்தனர். ஆயின், சிறிது காலத்திற்குப் பிறகு அவர் பாரசீகத்திற்குச் செல்ல அனுமதி கிடைத்தது. அங்கே அவர் வாழ்நாள் முழுவதும் ஷாவின் தயவில் வாழ்ந்திருந்தார். எவ்வாறிருப்பினும், அவரைப்போன்ற கிளைக்குலத்து இளவரசர்கள் ஷாஜஹானின் ஆணைக்கிணங்க இவ்வுலகத்திலிருந்தே வெளியேற்றப்பெற்ற நிலையில் அவர்மட்டும் உயிருடன் தப்பிச் சென்றது அவரது நல்வினைப் பயனே எனலாம். ஊழ்வலி உறுத்தும் எனும் நியதிப்படி இத்தகைய கொடிய செயலுக்கு ஷாஜஹான் தண்டனை பெறவேண்டியிருந்தது. அவரது மகனுடைய ஆணையின் பேரிலேயே அவர் தமது வாழ்வின் இறுதிக் காலத்தைச் சிறையில் கழிக்கவேண்டியிருந்தது.

**ராஜா ஜுஜார்சிங், கான்ஜஹான் லோடி ஆகியோரின் புரட்சிக் கலகங்கள்**

ஷாஜஹானின் ஆட்சி தொடங்கிய முதல் ஆண்டில் கிளர்ச்சிமிக்க பந்தேல் இராஜபுத்திரர்கள், தீரமிக்க ராஜா ஜுஜார்சிங்கின் தலைமையில் புரட்சி செய்தனர். எளிதில் வென்றடக்க முடியாத தங்களது நாட்டின் இயற்கையமைப்பினை அவர்கள் பயன்படுத்திக்கொண்டனர். ஜஹாங்கீரின் நண்பரும் ஆதரவாளருமான ராஜா பீர்சிங் பந்தேலாவின் புதல்வரே ஜுஜார்சிங்காவார். ஜஹாங்கீர் இளவரசர் சலீமாக

[1] அச் சமயத்தில்தான் ராணுகானை கௌரவிப்பதற்காக வாளையும் தலைப்பாகையையும் ஷாஜஹான் அன்னாருக்கு வழங்கினார். அவை இரண்டும் இன்றும் அக் குடும்பத்தாரிடம் இருக்கின்றன.

இருந்தபோது ராஜா பீர்சிங்கின் துணைகொண்டே ஷேக் அபுல் ஃபாஸலைக் கொலைசெய்தார். 'பாதுஷாநாமா'வின் ஆசிரியர் பின்வருமாறு எழுதுவார்: 'இத்தகைய கொடிய செயல் மூலமாக ராஜா பீர்சிங், ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்தபிறகு பல சலுகைகளையும் நன்மதிப்பையும் பெற்றார். ஆயின், அவரது இழிந்த தன்மை காரணமாக நீண்ட நாள்கள் அந் நிலை நீடிக்கவில்லை. அவர்தம் இறுதிக் காலத்தில் ஜஹாங்கீரின் வெறுப்பினைப் பெற்றார். ஜஹாங்கீர் இறப்பதற்கு மூன்று நான்கு திங்களுக்கு முன் அவர் உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவரது மகன் ஜுஜார்சிங் வாரிசானார்.' பிந்தியவர் வெளிப்படையாகவே புரட்சியிலிறங்கினார். படைகளைச் சேகரிப்பதிலும், கோட்டைகளை வலுப்படுத்துவதிலும், போர்த்தளவாடங்களை வழங்குவதிலும், சாலைகளை அடைப்பதிலும் அவர் கவனம் செலுத்தினார்.[1] அதனால் மகபத்கான் தலைமையில் பேரரசப் படையொன்று வந்து புரட்சிக் கலகத்தை விரைவில் ஒடுக்கியது. ஆனால், ஜுஜார்சிங் பேரரசப் படையிடம் சிக்காது தப்பி மலைக் கோட்டையில் தஞ்சம் புகுந்தார். அந்த வாய்ப்பான இடத்தில் இருந்துகொண்டு ஐந்தாண்டுக் காலத்திற்கு அவர் பேரரசப் படையினருக்குப் பெருத்த தொல்லைகள் தந்துவந்தார். அவரது கலகச் செயல்களை ஒடுக்குதற்கு 1634ஆம் ஆண்டில் மற்றொரு தீவிர நடவடிக்கை எடுக்கப்பெற்றது. வலிமை வாய்ந்த பந்தேல கோட்டைகள் பேரரசப் படையினரிடம் ஒன்றன்பின் ஒன்றாகச் சிக்கின. பகைவர் துரத்திவர, ஜுஜார்சிங்கும் தமது குடும்பத்தாருடன் நாட்டைவிட்டே வெளியேறவேண்டியதாயிற்று. அவ்வாறு அவர் தப்பியோடியபோது கானகப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டிருந்த கோண்டுகளுடன் சண்டையிட்டார். அச் சண்டையில் அவர் கொல்லப்பட்டார். ஆயினும், அந்த பந்தேலா தலைவரினால் மிகுந்த தொல்லைகளுக்கும் சஞ்சலத்திற்கும் உள்ளான பேரரசத் தளபதியான கான் தௌரான், ஜுஜார்சிங் இறந்தபிறகும் அவரைத் தண்டிக்காதுவிட விரும்பவில்லை. 'பாதுஷா நாமா'வில் அப்துல் ஹமீத் லஹாரி பின்வருமாறு எழுதுவார். 'பகைவர்களுடைய சடலங்களைக் கண்டெடுக்க கான் தௌரான் குதிரைமேல் விரைந்து சென்றார். அவற்றைக் கண்டவுடன் தலைகளைக் கொய்து அரசவைக்கு அனுப்பிவைத்தார்'.

ஷாஜஹானின் இரண்டாம் ஆட்சியாண்டில் கான் ஜஹான் லோடி எனும் வலிமைமிக்க ஆப்கானியச் செல்வந்தர் அகமதுநகரை ஆண்ட நைஸாம் ஷாஹி சுல்தான்களில் இறுதியரச

1 Elliot and Dowson, vol. vii, பக். 6-7.

ருடன் இணைந்து தெற்கில் கலகம் விளைவித்தார். அது முகலாய குலத்திற்கு எதிராக ஆப்கானியர் கொண்ட மரபாக வந்த பகைமையின் தொடர்ச்சியாகவே எழுந்த புரட்சி எனலாம்.[1] பந்தேல தலைவருடைய புரட்சிக் கலகத்தைவிட கான்ஜஹானின் கலகம் முக்கியத்துவம் வாய்ந்தது. எவ்வாறெனில், அதன் விளைவாக முன்பு எப்போதையும்விட முகலாய மன்னர்கள் தக்கணத்தின் விவகாரங்களில் அதிகமாகத் தலையிடவும் ஆதிக்கம் செலுத்தவும் முற்பட்டனர். ஜஹாங்கீர் மடிந்து ஷாஜஹான் பட்டத்திற்கு வருவதற்குமுன் இருந்த மூன்று மாத இடைவெளியில் தக்கணத்தின் ஆளுநர் என்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கான்ஜஹான் நிஜாமுல் முல்குடன் கூட்டுச்சேர்ந்து கொண்டார். பாலகாத் நாட்டை நிஜாமிற்கு வழங்கிவிட்டு மாளவத்தைக் கைப்பற்றும் நோக்கத்தோடு பெரும் படையொன்றுடன் மாண்டுவிற்குச் சென்றார். ஆனால், இதற்கிடையில் ஷாஜஹான் ஆக்ராவை வந்தடைந்தார். 1628ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பேரரசர் என முடிசூட்டிக்கொண்டார். அதனால் சிறிது காலத்திற்காவது நிலைமை மாறியது. இராஜபுத்திரத் தலைவர்கள் கான்ஜஹானைக் கைவிடத் தொடங்கினர். பேரரசக் கட்டளைக்குப் பணிந்த கான்ஜஹான் ஆக்ராவிற்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் சிறிது காலத்திற்கு அரசவையில் தங்கினார். ஆயின், அவரைக் கைதுசெய்யப்போகிறார்கள் என்ற வீணான வதந்தியினால் அவர் நிதானமிழந்து தலைநகரை விட்டு மெதுவாக நழுவிச் சென்றார். அதைப்பற்றி அப்துல் ஹமீத் லஹாரி பின்வருமாறு எழுதினார்: 'இரவின் முதலாவது காவல் மாறியவுடன் தமது மைத்துனரான பகதூருடனும் பிற சுற்றத்தாருடனும் கான்ஜஹான் ஓட்டமெடுத்தார். அதைப்பற்றிய செய்தியைக் கேட்டவுடன் அவரைப் பின்தொடர்ந்து சென்று பிடித்துவருவதற்காக குவாஜா அபுல் ஹாசனைப் பேரரசர் அனுப்பிவைத்தார். பிந்தியவரும் ஆக்ராவிற்கு முப்பது கல் தொலைவில் சாம்பல் ஆற்றங்கரையில் அமைந்த தோல்பூரில் ஆப்கானியரைத் தடுத்து நிறுத்தினார். மனவுறுதி தளர்ந்திருந்த கான்ஜஹான் லோடியின் வீரர்கள் சிறிது நேரத்திற்குத் தீவிரமாக எதிர்த்துப் போராடினர். இவ்வாறு அவர்கள் தங்களைச் சார்ந்த மற்றவர் ஆற்றைக் கடந்து தப்பிச் செல்ல வழிவகுத்தனர்.[2]

இங்ஙனம் பாதுகாப்புடன் பந்தேல நாட்டை அடைந்த கான்ஜஹான், ஜுஜார்சிங்கின் புதல்வரான விக்ரமஜித்தின்

1 Vincent Smith எழுதிய 'History of India', பக். 392.
2 Elliot and Dowson, vol. vii, பக். 9.

துணையோடு, அதிக நடமாட்டமில்லாத சாலைகளின் வழியாகச் சென்று தக்கணத்தை அடைந்து நிஜாமுல்முல்குடன் இணைந்து கொண்டார். இத்தகைய இக்கட்டான நிலையை ஷாஜஹானால் உணர முடிந்தது. தெற்கத்திய அரசுகளைக் கூட்டாக இணைத்து அவைகளின் கூட்டுப் படைகளுக்கு கான்ஜஹானே தலைமை வகிக்கும் முயற்சியில் அவர் வெற்றி பெற்று விடுவாரானால், அதனால் நேரக்கூடிய இடரினையும் ஷாஜஹான் நன்குணர்ந்தார்; பேரரசரின் தெற்கு மாநிலங்களைக் கட்டிக் காப்பது கடினமாகும் என்பதையும் புரிந்துகொண்டார். அதனால் அத்தகைய புரட்சிக் கலகத்தை ஒடுக்குதற்காகக் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த படையினைத் தக்கணத்திற்கு அனுப்பினார். புரட்சியிலீடுபட்ட லோடி தலைவர் இங்குமங்கும் துரத்தப்பட்டார். அவருடன் இணைந்திருந்த மராத்தியரும் முகம்மதிய தலைவர்களும் நம்பிக்கை இழந்த நிலையில் அவரை விட்டு விலகினர். அதனால் பஞ்சாபில் வாழ்ந்த ஆப்கானியரிடமிருந்து உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு கான் ஜஹான் அங்குச் சென்றார். ஆனால், அவருடைய நடமாட்டத்தைப்பற்றி முன்கூட்டியே உணர்ந்த ஷாஜஹான் அதற்கேற்ப முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை மேற்கொண்டார். இதனால் கான்ஜஹான் லோடியினால் பஞ்சாபை அடைய முடியவில்லை. அவர் தமது பழைய நண்பர் விக்ரமஜித்தின் உதவியைப் பெறலாம் என்ற எண்ணத்தோடு பந்தேல்கண்டிற்குப் பயணமானார். ஆயினும், உரிய காலத்தில் பேரரசரிடமிருந்து எச்சரிக்கை வந்ததால், பந்தேல தலைவரும் கான்ஜஹானுக்கு உதவி செய்வதற்கு மாறாக அவரது முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தார். இங்ஙனம் தப்பிக்கும் வகைஅறியாது, நண்பர்களையும் நெருங்கிய உறவினரையும் இழந்து நின்ற கான்ஜஹான் லோடி நம்பிக்கை இழந்த நிலையில் முசபர்கானின் தலைமையில் தொடர்ந்து வந்த பேரரசப் படையுடன் இறுதியாகப் போரிடத் துணிந்தார். அந்நிகழ்ச்சியை 'பாதுஷா நாமா'வின் ஆசிரியர் பின்வருமாறு விளக்குவார்: 'தமது மைந்தர்களையும் துணைவர்களையும் இழந்த கான்ஜஹான் பெருந் துயரம் கொண்டார். தப்பிச் செல்லும் நம்பிக்கையும் நாசமாகியது. அதனால் அவர் தமது துணைவர்களிடம், வாழ்க்கையில் சலிப்புக் கொண்டதாகவும், வாழ்க்கையின் முடிவை எய்திவிட்டதாகவும், உய்யுமாறு ஏதும் இல்லையென்றும் கூறினார். அவர்கள் ஒவ்வொருவரும் தம்மால் இயன்றதனைத்தையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர்களில் ஒருசிலர் இறுதி வரையில் அவருடன் இருந்துவிடுவது என உறுதி கொண்டனர். ஆனால், பலர் உயிருக்குப் பயந்து ஓடிவிட்டனர். இப்போது மதுசிங்கின்

தலைமையிலான பேரரசப் படையின் முன்னணி அவரை நெருங்கி வந்தது. அப்போது கான்ஜஹான், தாம் மிகவும் அன்பு பாராட்டிய மகன் அஜீஸுடனும், அய்மாலுடனும், தம்முடன் தங்கிவிட்ட ஆப்கானியருடனும் எஞ்சியிருந்த இரு யானைகளை முன்னிறுத்தி முசபர்ஜங்கைச் சந்திக்க முன்னேறினர். தாக்குதல் தொடங்கியது. பகைவர் தம்மை எப்படியும் பிடித்து விட உறுதி பூண்டிருப்பதைக் கண்ட கான்ஜஹான், தமது குதிரைமீதிருந்து இறங்கிக் கண்மண் தெரியாது சண்டையிட்டார். இங்ஙனம் தீவிரமாகச் சண்டை நடந்துகொண்டிருந்த போது மதுசிங் தமது ஈட்டியால் கான்ஜஹானைக் குத்தினர். அவ்விடத்திற்கு முசபர்கான் வருவதற்கு முன்னரே கான் ஜஹானின் அஞ்சாநெஞ்சம் படைத்த துணைவர்கள் அவரையும் அவரது அருமை மக்களான அஜிஸ், அய்மால் ஆகிய இருவரையும் வெட்டி வீழ்த்தினர்.[1] இங்ஙனம் தம்மை அடிமை கொள்ள வந்த பேரரசப் படையுடன் மூன்று ஆண்டுகளுக்குப் போரிட்ட தீரமிக்க அந்த லோடி செல்வந்தரின் வாழ்வு முடிவுற்றது.'

### 1630-2ஆம் ஆண்டுகளில் தக்கணத்திலும் குஜராத்திலும் பஞ்சம்

ஷாஜஹானின் நான்காவது ஐந்தாவது ஆட்சியாண்டுகளில் மழையின்மை காரணமாகத் தக்கணத்திலும் குஜராத்திலும் கடுமையான பஞ்சம் தோன்றியது. அம் மாநிலங்களில் வாழ்ந்த மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பங்கள் பற்றி அப்துல் ஹமீத் லஹாரி விரிவாக விளக்கியுள்ளார். 'இவ்விரு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் தீவிரமாகப் பாதிக்கப்பட்டனர். ரொட்டித் துண்டிற்கு உயிரையும் அளிக்கச் சித்தமாய் இருந்தனர். ஆயின், அதனை வாங்குவோரைத்தான் காணேம். பணியாரத் துண்டிற்குப் பதவியை விற்கத் தயாராக இருந்தனர். ஆனால், அதனை ஈந்துவார் யாருமிலர். வரையாது வழங்கிய வள்ளல்கள் வயிற்றிற்குணவின்றிக் கையேந்தும் நிலையிலிருந்தனர். மனநிறைவு எனும் மலர்ப் பாதையில் நடந்த மெல்லடிகள் உயிர்வாழ்வதற்கான உணவினை நாடி அலைந்தன. நீண்ட காலத்திற்கு ஆட்டிறைச்சிக்குப் பதிலாக நாயின் இறைச்சி விற்கப்பட்டது. மாவுடன் எலும்பினைப் பொடி செய்து கலந்து விற்றனர். இதனைக் கண்டுபிடித்தபோது அவ்வாறு விற்ற வணிகர்கள் தண்டனை அடைந்தனர். மனிதரை மனிதர் பிடுங்கித் தின்னும் அளவிற்கு வறுமை தலைவிரித்தாடியது. காதற்கினியாளை விட்டுக் காமுறு மைந்தனை உணவாகக் கொள்ளும் கொடிய நிலை ஏற்பட்டது. பலர் மடிந்து வீழ்ந்ததால் சாலைகள் அடைபட்டன.

1 Elliot and Dowson, vol. vii, பக்கம் 21.

எல்லோருக்கும் சாக்காடு துன்பங்களிலிருந்து விடுதலை அளிக்க வில்லை. நகரும் சத்தி படைத்தவர்கள் அண்டை நாடுகளில் இருந்த நகரங்களிலும் கிராமங்களிலும் சுற்றியலைந்தனர்.[1]

### 1632 ஆம் ஆண்டில் ஹூக்ளியைக் கைப்பற்றுதல்

ஷாஜஹான் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி 1632 ஆம் ஆண்டில் ஹூக்ளியிலிருந்த போர்ச்சுகீசியருடைய குடியேற்றத்தை அழித்ததாகும். அக் காலத்தில்தான் ஹூக்ளி நகரம் சிறப்புற்று விளங்கத் தொடங்கியது. அங்கே போர்ச்சுகீசியர் பெருங் கட்டடங்களை எழுப்பி யிருந்தனர். பீரங்கிகள், பிற போர்க்கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு அந் நகரை அரண்செய்தனர். அதன் ஒரு புறத்தில் ஆறும், மற்ற மூன்று புறங்களிலும் அவ்வாற்றிலிருந்து வந்த நீர் நிரம்பிய அகழியும் சூழ்ந்திருந்தன. போர்ச்சுகீசியரின் வாணிப அளவு பெருகியது. அதனால் அண்டையிலிருந்த சட்கோன் அங்காடிகள் சீர்குலையத் தொடங்கின. அதன் விளைவாக வங்காள மாநில அரசின் வருவாய் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதைத் தவிர, போர்ச்சுகீசியர் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டதும், போர்ச்சுகீசிய வணிகர் சமய நடவடிக்கையிலும் பேரரசருக்கு ஆத்திரமூட்டினர். அவர்கள் (போர்ச்சுகீசியர்) சில குடிமக்களைப் பலவந்தமாகவும், பலரை ஆசை காட்டியும் நஸாரின் (கிறிஸ்துவ) போதனையை ஏற்குமாறு செய்தனர். அவர்களைக் கலங்களில் ஐரோப்பாவிற்கு அனுப்பினர். இத் தகைய வெறுக்கத்தக்க செயல்கள் போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான பகுதிகளில்மட்டும் நடைபெறவில்லை. ஆற்றங் கரையில் தங்கள் பிடியில் சிக்கிய அனைவரையும் போர்ச்சுகீசியர் இவ்வாறு செய்தனர். பேரரசர் பட்டத்திற்கு வருவதற்கு முன்பே இவற்றினைக் கவனித்தார். அரியணை ஏறினால் இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று அப்போதே உறுதி பூண்டார். நாணயங்கள் அனைத்தும் சிறப்புமிக்க தமது குலத்தின் பெயரையே தாங்கி நிற்கவேண்டுமென்றும், அக் குலத்தின் குத்பாவே வழிபாட்டுப் பீடங்களை அணிசெய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தார். அவர் அரசுரிமை எய்தியதும் கறீம்கானை வங்காள அரசப் பகர ஆளாக நியமித்தார். குறும்பு செய்யும் போர்ச்சுகீசியரை அழிக்கும் கடமையை அவர் மனத்தில் நன்கு பதியுமாறு செய்தார்.[2]

1 Elliot and Dowson, vol. vii, பக். 24.

2 Elliot and Dowson, vol. vii, பக். 32.

அதற்கிணங்க ஆயத்தங்கள் செய்யப்பெற்றன. 1632ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் ஹூக்ளி நகர முற்றுகை துவங்கியது. வங்காளத்தில் இருந்த முகலாயப் படையில் ஆற்றல் படைத்தவரான ஆலன் யார்கானுடைய துணையுடன் தமது மகன் தலைமையில் பலவகையான ஆயுதங்களுடன் 150,000 வீரர்களைக் கறீம்கான் முற்றுகைக்காக அனுப்பிவைத்தார். ஆயின், ஹூக்ளியில் இருந்த காவற்படையில் ஏறக்குறைய 300 ஐரோப்பியரும், 700 இந்திய கிறிஸ்துவ வீரர்களும் இருந்தனர். முற்றுகை மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்தது. பலத்த தாக்குதல்களுக்கிடையே அச் சிறு படை தீரத்துடன் போரிட்டு மூன்று மாதங்களுக்குப் பண்டசாலையைக் காத்து நின்றதிலிருந்து அதனுடைய படைசார்ந்த கட்டுப்பாடு எத்தகையது என்பது எளிதில் விளங்கும். பேரரசப் படையில் 1,000 பேர்கள் இறந்ததாகக் கூறப்படுகின்றது. 'முற்றுகை தொடங்கி முடியும் வரை பகைவரில் ஆண்களும் பெண்களும், வயது வந்தவரும் இளைஞருமாக 10,000-க்கும் மேற்பட்டவர் மடிந்தனர்' என்றும், 'அவர்கள் வெடி மருந்து வெடித்ததாலோ, நீரில் மூழ்கியோ, தீப்புண்பட்டோ இறந்தனர்' என்றும் அப்துல் ஹமீத் லஹாரி குறித்துள்ளார்.[1] சிறைப்பட்ட நாலாயிரத்திற்கு மேற்பட்ட கிறிஸ்துவர்கள் 'சமயப் புரவலரான பேரரசரின்' முன்னல் கொண்டுவரப்பட்டனர். சமய மாற்றமா, சிறைவாசமா அல்லது கடுமையான கட்டுப்பாடுகள் மலிந்த அடிமை வாழ்வா என்பதை அவர்கள் தேர்ந்தெடுக்கலாம். அவர்களிற் சிலர் மானமிழந்து உயிரைக் காத்துக்கொள்ளத் துணிந்தனர். ஆயின், பலர் 'பாதுஷா நாமா'வின் ஆசிரியர் குறிப்பிட்டதைப் போலச் 'சிறைச்சாலையிலிருந்து நேராக நரகத்திற்குச் சென்றனர்.' அவர்கள் வழிபட்டுவந்த கடவுட் படிமங்கள் உடைக்கப்பெற்று யமுனை ஆற்றில் எடுத்து எறியப்பெற்றன.

**1632ஆம் ஆண்டில் இந்துக்களின் கோயில்களை இடித்தல்**

இஸ்லாம் சமயமா அல்லது சாவா என்பதைத் தேர்ந்தெடுக்கவேண்டிய நிலையில் ஆக்ராவிற்குக் கொண்டுவரப்பெற்ற ஹூக்ளியைச் சார்ந்த போர்ச்சுகீசிய கிறிஸ்துவர்கள் இருந்த அதே சமயத்தில், 'சமயப் புரவலரான பேரரசரின்' செயல்களினல் பனாரஸில் வாழ்ந்த இந்துக்களும் சமய அடிப்படையில் பேரிழப்புகட்கு உள்ளாயினர். 'பாதுஷா நாமா'வில் அப்துல் ஹமீது லஹாரி பின்வருமாறு எழுதுவார்: 'இந்து சமயத்தின் கோட்டை போன்று விளங்கிய பனாரஸில் சென்ற ஆட்சியில்

1 Elliot and Dowson, vol. vii, பக். 35.

ஏராளமான கோயில்கள் எழ ஆரம்பித்தன என்பதையும், ஆயின், அவற்றில் பல அரைகுறையாகவே இருந்தன என்பதையும் பேரரசர் அறிந்தார். உண்மைச் சமயம் சாராதவர்களான இந்துக்கள் அக் கோயில்களைக் கட்டிமுடிக்க இப்போது விருப்பங் கொண்டனர். ஆயின், பனாரஸிலும் பேரரசின் பல இடங்களிலும் கட்டத் தொடங்கிய கோவில்களையெல்லாம் இடித்துத் தள்ளுமாறு சமயப் புரவலரான பேரரசர் ஆணையிட்டார். பனாரஸ் மாவட்டத்தில் எழுபத்தாறு கோயில்கள் இடிக்கப்பெற்ற செய்தி அலகாபாத்திலிருந்து இப்போது வந்துள்ளது'.[1]

பேரரசின் பிற பகுதிகளில் இடிக்கப்பெற்ற கோயில்களைப் பற்றிய குறிப்பு இல்லாத நிலையில், இந்துக்களின் இழப்பு எவ்வளவு என்பதைத் தெளிவாக அறிதல் அரிது. ஆயின், பெருமளவில் அழிவு நேர்ந்தது என்பதில் ஐயமில்லை. குறிப்பாகப் பேரரசரைப் போலவே இஸ்லாம் சமயவெறி கொண்ட ஆளுநர்கள் இருந்த மாநிலங்களில் நாசவேலை அதிகமாகவே இருந்தது. ஹிந்து சமயத்திடம்[2] ஜஹாங்கீர் கொண்டிருந்த வெறுப்பினை ஷாஜஹானும் மரபாகப் பெற்றார். அவ்வுணர்வை அவர் தமது வாரிசான அவுரங்கசீப்பிடம் விட்டுச் சென்றார். அன்னார் தமது குடிமக்களில் பெரும்பாலான மக்கள் கொண்ட பற்றுறுதியை இழக்கும் அளவிற்கு அக் கொள்கையைக் கொண்டு செலுத்தினர் என்பதைப் பின்னர்க் காணலாம்.

### 1631ஆம் ஆண்டில் மும்தாஜ் மஹாலின் மறைவு

உலக விந்தைகளில் ஒன்று எனக் கருதப்பெறும் ஆக்ரா கல்லறைக்குக் காரணமாக இருந்த மும்தாஜ் மஹால் அல்லது நவாப் அலியாபேகம், கணவரான பேரரசரை மாளாத் துயரத்திலாழ்த்திவிட்டு 1631ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மண்ணுலக வாழ்வை நீத்தார். அர்ஜுமந்த் பானு பேகம் எனப் பெயர் பெற்றுப் பிற்காலத்தில் 'அரண்மனையின் அணிகலன்' எனப் பொருள்படும் 'மும்தாஜ் மஹால்' எனப் பட்டப் பெயரோடு வாழ்ந்த அவர், நூர்ஜஹானின் உடன்பிறந்தவரான அசஃப் கானின் மகளாவார். அவர் இளவரசர் குர்ரமான ஷாஜஹானுக்கு 1612ஆம் ஆண்டில் மணமுடித்துவைக்கப்பெற்றார்.

1 Elliot and Dowson, vol. vii, பக். 36.

2 குஜராத்தில் வாழ்ந்த ஜைனர்களை ஒறுத்தல், காங்ரா கோயிலின் கருவறையில் பசுக்களைக் கொல்லுதல், அரசியல், சமய நோக்கங்களோடு அர்ஜுன் சிங்கிற்கு மரண தண்டனை அளித்தல் போன்ற சமய ஒறுப்பு நடவடிக்கைகளில் ஜஹாங்கீர் ஈடுபட்டதை முன் வந்த அதிகாரத்திலேயே குறிப்பிட்டோம்.

அப்போது மணமகனுக்கு இருபது ஆண்டுகளும் மூன்று மாதங்களுமே நிறைந்திருந்தன. மணமகள் அவரைவிடப் பதினான்கு மாதங்கள் இளையவர். அந்த இளந் தம்பதிகள் பத்தொன்பது ஆண்டுகளுக்கு இன்பமயமான இல்லற வாழ்க்கை நடத்தினர். அதன்பிறகுதான் மும்தாஜ் மஹால் தமது முப்பத்தொன்பதாவது வயதில் மகப்பேற்றின்போது பர்ஹான்பூரில் மரணமடைந்தார்.

மும்தாஜ்மஹால் சமயப்பற்று மிகுந்த முஸ்லிம் மாதரசி எனக் கூறப்பெறுகின்றது. அவர் ஏழைகளையும் ஏதிலாரையும் காப்பதற்காக ஏராளமான பணத்தை வாரி வழங்கினார். அன்னாருடைய பேரழகிற்காகவும், போற்றுதலுக்குரிய ஒழுக்கசீலங்களுக்காகவும் ஷாஜஹான் அவரிடம் மாறாக் காதல் கொண்டிருந்தார். அவருடைய நினைவைப் பற்றுறுதியுடன் போற்றும் வகையில் மேலும் முப்பத்தைந்து ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்த அப் பேரரசர், மறுமணம் செய்துகொள்ளவில்லை.

### காண்டஹாருக்கு எதிரான படையெடுப்புகள்

இந்தியாவிற்கும் பாரசீகத்திற்கும் இடையேயான வாணிபசாலையில் முக்கிய வணிக நிலையமாக விளங்கிய காண்டஹார் நகரம் படைத்துறை ரீதியிலும் வாய்ப்பாக அமைந்திருந்ததால், அதனைக் கொள்ளப் பாரசீகத்தின் ஷாவும் இந்தியப் பேரரசரும் போட்டியிட்டனர். 1545ஆம் ஆண்டில் அந் நகரை ஹுமாயூன் தமது உடன்பிறந்தவரான அஸ்காரியிடமிருந்து கைப்பற்றித் தில்லிப் பேரரசுடன் இணைத்தார். ஆயின், அவர் நாடிழந்து அலைந்தபோது அது மீண்டும் பாரசீகத்தோடு இணைந்திருந்தது. அந்நகரின் பாரசீக அதிகாரி ஒருவரின் உதவியால் அக்பர் அதனை 1595ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மீட்டுக்கொண்டார். 1623ஆம் ஆண்டுவரையில் ஏறக்குறைய 28 ஆண்டுகளுக்கு அது தில்லியின் ஆதிக்கத்திலேயே இருந்துவந்தது. ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் ஐந்து நாட்கள் முற்றுகைக்குப் பிறகு அந்நகரை மாமன்னர் ஷா அப்பாஸ் கைப்பற்றினார். உள்நாட்டுத் தொல்லைகள், இளவரசர் ஷாஜஹானின் புரட்சி, மகபத்கானின் கலகம் ஆகியவை காரணமாக காண்டஹார் பகுதியைக் கைப்பற்றுதற்கான தீவிர முயற்சியில் ஜஹாங்கீரால் ஈடுபடமுடியவில்லை. அதனால் மேலும் பதினைந்து ஆண்டுகளுக்கு காண்டஹார் நகரம் பாரசீகர் வசமே இருந்துவந்தது. 1638ஆம் ஆண்டில் காண்டஹாரை ஆண்ட பாரசீக ஆளுநரான அலி மர்தன் கானுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு காபூலி



ஷாஜஹானின் தர்பார்

யில் சூழ்ச்சித்திறமிக்க முகலாய ஆளுநர் வெற்றிபெற்றார். அலிமர்தன் கானை பாரசீகப் பேரரசருக்குத் துரோகம் செய்யுமாறு செய்து, காண்டஹார் கோட்டையைப் பெறுவதில் வெற்றியடைந்தார். கோட்டையை நெருங்கிப் பேரரசப் படைகள் வந்த போது அவற்றை அலிமர்தன் கான் கோட்டைக்கு இட்டுச் சென்று அதனை அவர்களிடம் ஒப்படைத்தார். காபூலின் முகலாய ஆளுநர் காண்டஹாருக்குச் சென்று, ஓர் இலட்ச ரூபாய்களை அலிமர்தன் கானுக்குப் பரிசாக வழங்க வேண்டுமென்று கட்டளை பிறந்தது. அதன் பிறகு அவர் அலிமர்தன் கானைக் காபூலுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து அவரது சுற்றமும் சூழலும் உடன்வரப் பாதுகாப்புடன் பேரரச அவைக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்றும் ஆணை வந்தது.' இவ்வாறு 'பாதுஷா நாமா'வின் ஆசிரியர் எழுதினார்.[1] ஆக்ராவில் அலிமர்தன் கானுக்கு ஆரவாரமான வரவேற்பு கிடைத்தது. பல முக்கியப் பதவிகளைப் பேரரசர் அவருக்கு அளித்துக் கௌரவித்தார்.[2]

இங்ஙனம் அலிமர்தன் கான் எனும் அரசப் பகர ஆளின் நய வஞ்சகம் காரணமாகப் பாரசீகர் காண்டஹாரை மீண்டும் இழந்தனர். ஆயினும், கிழக்கு எல்லையில் அமைந்த இம் முக்கிய நகரத்தை மீட்கும்வரை ஷா அக்பர் ஓய்வதாக இல்லை. காண்டஹாரையும் அதன் அருகே அமைந்த பாஸ்ட், ஜமீன்தவார் கோட்டைகளையும் கைப்பற்றுவதற்கெனப் பெரும் படையொன்றை ஷா அக்பர் 1648ஆம் ஆண்டில் ஏவினார். பிந்தைய கோட்டைகள் சிறிது காலத்திற்கு வன்மையாக எதிர்த்துப் போராடின. ஆயினும், காண்டஹாரின் திறமையற்ற முகலாய ஆளுநரான தௌலத்கான் தம் உயிரைக் காத்துக்கொள்வதிலேயே குறியாய் இருந்ததால், இளவரசர் அவுரங்கசீப்பின் தலைமையில் உதவிப் படைகள் வரும்வரையில் காண்டஹாரைக் காப்பதற்கான சீரிய முயற்சி ஏதும் செய்யவில்லை. 1649ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர் பகைவரிடம் சரணடைந்தார். அதனால் தில்லி அரசர் காண்டஹாரை நிரந்தரமாக இழக்க வேண்டியதாயிற்று. மே மாத முதலில் பணி நீங்கியவுடன் காண்டஹார் கோட்டையை மீட்பதற்காக இளவரசர் அவுரங்கசீப்பும் முதலமைச்சர் சாதுல்லாகானும் படை கொண்டுசென்றனர். ஆயினும், பாரசீகருடைய மேம்பட்ட படைமுறைத்

1 Elliot and Dowson, Vol. vii, பக். 64.

2 அலிமர்தன்கான் காஷ்மீரின் ஆளுநராகவும், காபூலின் ஆளுநராகவும் பதவி வகித்திருக்கிறார். பொறியியல் வல்லுநரும் படைத்தலைவருமான அவர், லாகூரிலுள்ள ஷாலிமார் பூங்கா, தில்லிக்கு அருகில் அமைந்த பெருங் கால்வாய் போன்ற பொது மராமத்து வேலைகளைத் திட்டமிட்டு அமைத்ததால், இந்திய வரலாற்றில் மிகுந்த புகழுடன் விளங்குகின்றார்.

திறத்தினுல் அவர்கள் தோல்வியே கண்டனர். எவ்வாருயினும், காண்டஹாரை மீட்கும் திட்டத்தை ஷாஜஹான் கைவிட்டு விடவில்லை; இங்ஙனம் காண்டஹாரைக் கொள்ளும் முதல் முயற்சி ஏற்பட்டதற்குச் சரியாக மூன்ருண்டுகள் கழிந்து, அதாவது ,1652ஆம் ஆண்டு மே மாதத்தில் அவுரங்கசீபையும் சாதுல்லாகானையும் ஷாஜஹான் மீண்டும் அனுப்பிவைத்தார். தாக்குதலுக்கான தளவாடங்களும் உணவுப் பொருள்களும் சரிவரக் கிடைக்கச் செய்வதற்காகத் தாமே காபூலில் சென்று தங்கிஞர். ஆயின், பேரரசப் படையினர் மறுபடியும் தோல்வியே கண்டனர். அடுத்த ஆண்டிலும் (1653) மற்ருெரு முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. 'நனி நல்வாய்ப்புக் கொண்ட'[1] இளவரசர் தாரா ஷிக்கோவும் தமது இளவல் அடைந்த கதியே அடைந்தார்.

ஷாஜஹானின் முன்ஞேரான தைமூருக்குச் சொந்தமாயிருந்த பால்க், படக்ஷான் ஆகிய இரு முக்கிய மத்திய ஆசியப் பகுதிகளையும் மீட்க ஷாஜஹான் தமது படைகளை ஏவிஞர். ஆயினும், 1645 முதல் 1649 வரை மலைப்பகுதிகளில் நடைபெற்ற அத் தாக்குதல்கள் காண்டஹாரின் மீதான தாக்குதல்கள் போலவே முற்றிலும் தோல்வியுற்றன. இப் படையெடுப்புகளால் அன்னியர்களுக்கு எதிராக முகலாயப் படைகள் வலிமையற்றிருந்தன என்பது தெளிவாகியது. ஷாஜஹானுக்குப் பின் வந்த முகலாய அரசர் ஆட்சிக் காலங்களில் இத்தகைய சீர்குலைவு வெளிப்படையாகவே தோன்றலாயிற்று எனினும், அவரது காலத்திலேயே அது நிச்சயமாகத் தொடங்கியது எனலாம்.

**தக்கணப் போர்கள் 1630 — 56**

இக் காலப்பகுதி முழுவதிலும் ஷாஜஹானின் ஆட்சிக் காலம் நெடுகிலும் தக்கண அரசுகளுடஞன போர் தொடர்ந்து நடைபெற்றது. அதஞல் ஷாஜஹானின் இருபத்தைந்து ஆண்டுக் கால ஆட்சியில் தக்கணத்தின்மீதான பேரரசக் கொள்கைபற்றியும், அங்கே பேரரசப் படைகள் நடத்திய சண்டைகள்பற்றியும் கோவையாக விளக்குவது எளிதாக அமையும்.

அக்பரின் ஆட்சியின் கடைசி ஐந்து ஆண்டுகளில் நைசாம் ஷாஹி அரசான அகமத்நகருக்கு எதிராக அக்பர் அநேகமாகத்

1 ஷா புலாக்த் இக்பால். அவர் பேரரசரின் செல்வப் பிள்ளையாவார் வரது தந்தையே இப் பெயரை அவருக்கு அளித்தார்.

தொடர்ந்து போர் தொடுத்துவந்தார் என்பதை முன்னேர் அதிகாரத்திலேயே குறித்துள்ளோம். காண்டேஷைக் கொள்வதிலும், பேரரசின் ஒரு பகுதியை இணைத்துக்கொள்வதிலும் அவர் வெற்றி பெற்ருர். ஆயினும், இளவரசர் சலீமின் புரட்சியும் பேரரசரின் திடீர் மரணமும் பேராசைத் திட்டங்கள் நிறைவேற முடியாமல் செய்தன. எவ்வாருயினும், தக்கணப் போரில் முன்னேற்றக் கொள்கை அக்பரிடமிருந்து அவரது சந்ததியார்களுக்கு ஒரு குலமரபு போலவே தொடர்ந்துவந்தது. அவ்வாறு வந்த சந்ததியார்களில் ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகிய மூவரும் தத்தமக்குற்ற பங்கை ஓரளவு நிறைவேற்றிவந்தனர். இறுதியாக வந்த அவுரங்கசீப், எஞ்சி வாழ்ந்திருந்த கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய இரு சுல்தானியங்களையும் அழித்ததன்மூலமாக முகலாய குலத்தின் நோக்கத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றிவைத்தார்.

முகலாயப் பேரரச எல்லைக்கு மிக அருகில் இருந்த காரணத்தால், அகமதுநகர அரசை ஆண்ட நைஸாம் ஷாஹி குலத்தவரே முதலில் ஜஹாங்கீருடன் போரிடவேண்டி வந்தது. ஆயினும், அவர்களின் ஆற்றல் மிகுந்த வஸீரான மாலிக் ஆம்பர் என்பார் நிலைமையை வெற்றிகரமாகச் சமாளித்து, தாம் வாழ்ந்த வரை அகமதுநகர அரசைக் காத்துவந்தார்.

எவ்வாருயினும், 1626ஆம் ஆண்டில் மாலிக் ஆம்பர் மறைந்ததும் நைஸாம் ஷாஹி குலத்தின் வலிமையும் வளமும் குன்றத் தொடங்கின.

தக்கணத்தில் புரட்சி செய்த முகலாய ஆளுநரான கான் ஜஹான் லோடியுடன் நைஸாம் உல்முல்க் கூட்டுச் சேர்ந்ததால், அகமதுநகரைத் தாக்குதற்கு ஷாஜஹானுக்கு ஏது ஒன்று கிடைத்தது. அந்த நாட்டில் பெருகியிருந்த உள்நாட்டுப் பூசல்கள் பேரரசரின் திட்டங்களுக்கு உகந்தனவாயிருந்தன. மாலிக் ஆம்பருடைய புதல்வரும் தலைமை அமைச்சருமான ஃபதேகானுக்கும் சுல்தானுக்குமிடையே சச்சரவு தோன்றியிருந்தது. ஃபதேகானும் தமக்கிழைத்த அவமானத்திற்காக சுல்தானைப் பழிவாங்கும் நோக்கத்தோடு முகலாயப் பேரரசருடன் தொடர்புகொண்டார். சுல்தான் நைஸாம் உல்முல்கின் தீய குணம் காரணமாகவும், பேரரசருக்குப் பகையாக இருந்தாலும் அவரைத் தாம் காவலில் வைத்திருப்பதாகப் பேரரசர் ஷாஜஹானுக்குச் செய்தியனுப்பினர். இத்தகைய சேவை செய்ததற்காகப் பேரரசரிடமிருந்து வெகுமதி கிடைக்குமென அவர்

நம்பினர். பாதுஷா நாமாவின் ஆசிரியர் பின்வருமாறு எழுதினர்: 'அவரது (ஃபதேகான்) நேர்மையான பற்றுறுதியை நிரூபிக்க வேண்டுமானால், ஒன்றிற்கும் உதவாத கெடுமதியாளரான சுல்தானை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று அவருக்குப் பதில் வந்தது. இத்தகைய குறிப்பைப் பெற்ற ஃபதேகான் நைஸாம் உல்முல்கை இரகசியமாகக் கொன்றுவிட்டு, அவர் இயற்கை மரணம் எய்தியதாக அறிவித்தார். நைஸாம் உல்முல்கின் பத்து வயது நிரம்பிய மகனை ஹூசேன் ஷாவை அரியணை யேற்றினர்.'[1] இப்போது ஃபதேகான் நாட்டில் முதன்மையான வராகத் திகழ்ந்தார். ஆயின், அவர் தமது எஜமானரிடம் பற்றுறுதியற்ற முறையில் நடந்துகொண்டதைப்போலவே ஷாஜஹானிடமும் நடந்துகொண்டார். ஷாஜி பான்ஸ்லேயின் துணையுடன் பீஜப்பூரின் படைகள் தௌலதாபாத்தை முற்றுகையிட்ட போது அதனைக் காப்பதற்காக 1331ஆம் ஆண்டில் பேரரசருக்காக மகபத்கான் படையுடன் சென்றபோது ஃபதேகான் கட்சி மாறினர். தௌலதாபாத் கோட்டையை மகபத்கானிடம் ஒப்படைக்க மறுத்தார். அதனால், மகமத் கான் அக் கோட்டையை முற்றுகையிட வேண்டியதாயிற்று. ஆயினும், அக் கோட்டை வலிய அரண் கொண்டிருந்த காரணத்தால் அங்கிருந்த காவற் படையினர் தாக்குதலைச் சமாளித்து நின்றனர். இரண்டு மாத முற்றுகைக்குப் பிறகும் வெற்றி கிடைக்காததைக் கண்டு பொருமிய மகபத்கான், ஃபதேகானுக்கும் காவற்படையினருக்கும் ஏராளமான பொருள் கொடுத்து அக் கோட்டையைத் தம்வசப்படுத்திக்கொண்டார். தமது யானைகளையும் ஒட்டகங்களையும், அரசாங்கப் பணத்திலிருந்து பத்து இலட்சத்து ஐம்பதினுயிரம் ரூபாய்களையும் கானிகானன், ஃபதேகானிடம் அனுப்பிக் கோட்டையைத் தமக்கு அளித்துவிடுமாறு கோரினர். ஃபதேகானும் கோட்டையின் சாவிகளைக் கானிகானனிடம் அனுப்பிவிட்டுக் கோட்டையைவிட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானர்.[2]

தௌலதாபாத் சரணடைந்த பிறகு வயது நிரம்பாதிருந்த சுல்தான் ஹூசேன் ஷாவை அவர் வாழ்நாள் முழுவதிலும் குவாலியர் கோட்டையில் அடைத்துவைத்தனர். அகமதுநகர அரசு இல்லாதொழிந்தது. நயவஞ்சகமான நடத்தைக்காக ஃபதேகான் ஷாஜஹானிடமிருந்து நிறைய வெகுமதிகள் பெற்றார். பேரரச சேவையில் பெரும் பதவியையும் தாராள ஊதியத்தையும் அவர் ஒருங்கே பெற்றார்.

1 Elliot and Dowson, vol. vii பக். 27.
2 Elliot and Dowson, vol. vii, பக். 41.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பாமினி அரசு பிளவு பட்டதால் தோன்றிய தக்கணத்து ஐந்து சுல்தானியங்களில் பேராரில் இருந்த இமாத் ஷாஹி, அகமதுநகரில் இருந்த நைஸாம் ஷாஹி ஆகிய இரு அரசுகளும் வளர்ந்துவந்த முகலாயப் பேரரசில் இணைந்து. இருந்த இடம் தெரியாது போயின. ஆயின், பீடாரில் வாழ்ந்த பரீத் ஷாஹி சுல்தான் களின்[1] ஆதிக்கம் ஏற்கெனவே அழிந்திருந்தபோதிலும், பீஜப்பூரில் முகம்மது அதில்ஷாவும், கோல்கொண்டாவில் குதுப் உல்முல்க்கும் வலிமை பெற்று விளங்கினர். அடுத்து அவர்கள் மீது ஷாஜஹான் தமது கவனத்தைத் திருப்பினார்.

கோல்கொண்டா மன்னர்களுக்குச் சொந்தமான பகுதிகள் வடக்கே ஏறக்குறைய ஒரிஸ்ஸாவரையில் கிழக்குக் கடற்கரை யோரமாக அமைந்திருந்தன. இங்ஙனம் முகலாயப் பேரரசின் எல்லையைத் தொட்டு நின்ற கோல்கொண்டாவின் வடபகுதி யில்தான் 1629ஆம் ஆண்டில் முதன்முதலில் முகலாயப் படைகள் தாக்குதல் நடத்தின. ஒரிஸ்ஸாவிலிருந்த முகலாய ஆளுநரான பாகீர்கான் அந்த ஆண்டின் குளிர்காலத் தொடக் கத்தில் தாக்குதலைத் துவக்கினார். குதுப் உல்முல்க் சுல்தானியத் திற்கும் ஒரிஸ்ஸா மாநிலத்திற்கும் இடையே அமைந்த குறுகிய கணவாயைக் காக்கும் வகையில் கோல்கொண்டா மன்னர் கட்டியிருந்த மன்சூர்கர் எனும் கோட்டையை முதலில் தகர்க்க முற்பட்டார். காப்பு நிலைக்குரிய எல்லாவித நலன்களையும் கோல்கொண்டா படையினர் பெற்றிருந்தபோதிலும், அவர் களால் பேரரசப் படைகளின் தாக்குதலைச் சமாளிக்க முடிய வில்லை. அப்துல் ஹமீத் லொஹாரி குறிப்பிடுவதைப் போல, 'அக் காவற்படையினர் வழக்கமாகச் செய்வதைப் போல, புல்லைப் பற்களுக்கிடையே வைத்துப் பகைவர்க்குப் பணிந்தனர்.' அடுத்த ஆண்டில் கோல்கொண்டா அரசின் வடகிழக்கு மாநில மாகிய தெலிங்கானாவைத் தாக்குமாறு மற்றொரு முகலாயப் படைத்தலைவரான நஸிரி கானுக்குக் கட்டளை பிறந்தது. காண்டஹார் கோட்டையைக் கைப்பற்றிய பேரரசப் படைகள் தெலிங்கானா மாநிலத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கைப் பற்றின. இங்ஙனம் கோல்கொண்டா நாட்டில் தில்லி அரசின் ஆக்கிரமிப்புத் தொடங்கியது.

எவ்வாறாயினும், பீஜப்பூரின் மன்னரான முகம்மது அதில் ஷாவுடனான போரே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

1 பாமினி அரசின் எஞ்சிய பகுதியாக இருந்த பீடாரின் பரீத் ஷாஹி சுல்தானியம் 1619ஆம் ஆண்டில் பீஜப்பூருடன் இணைக்கப்பட்டுவிட்டது.

1631ஆம் ஆண்டில் பேரரசப் படைகள் அகமது நகரின்மீது படையெடுத்துவந்தபோது அதே கதி தமது நாட்டிற்கும் ஏற்படலாம் எனஅஞ்சிய பீஜப்பூரின் அதில்ஷா, நைஸாம் முர்ட்டாஸாவுடன் சேர்ந்துகொண்டார். இங்ஙனம் அவர் முகலாயப் பேரரசரின் சீற்றத்திற்குள்ளானுர். அவரது தலைநகரை முற்றுகையிடுமாறு பேரரசர் அசஃப்கானுக்கு ஆணையிட்டார். ஆயினும், பீஜப்பூர்ப் படைகள் தலைநகரை விடாமுயற்சியுடன் காத்து நின்றன; மராத்தியருடன் இணைந்து முகலாயப் படையினருக்குப் பெருந் தொல்லைகள் விளைவித்தன. அதன் விளைவாக, இறுதியில் முகலாயப் படையினர் முற்றுகையைக் கைவிடவேண்டியதாயிற்று. இங்ஙனம் பீஜப்பூர் தப்பியது. ஷாஜஹானும் ஆக்ராவிற்குத் திரும்பினுர். அங்கே அதே ஆண்டில் அவரது பேரன்பிற்குரிய இல்லத்தரசியாம் மும்தாஜ் மஹால் மாண்டதால், தக்கணத்தின் சுல்தானியங்களுக்கெதிரான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பெற்றன.

1635-6ஆம் ஆண்டுகளில் தென்னிந்தியாவின்மீதான படையெடுப்பு மீண்டும் தொடர்ந்தது. இம்முறை முன்பு எப்போதைக்காட்டிலும் படையெடுப்பு தீவிரமாக இருந்தது. மராத்தியத் தலைவரான ஷாஜி அல்லது சாஹு'வின் நடவடிக்கைகளினுல் இது அவசியமாகியது. அவர் மறைந்த, அகமதுநகர அரசின் பெயரளவிலான மன்னராக மற்ருெரு நைஸாம் ஷாஹி சிறுவனுக்கு முடிசூட்டினுர். அந்த நைஸாமின் பேரால் கடல்வரையில் பரவியிருந்த அகமது நகர அரசின் மேற்குப் பகுதியை மீட்டார். அப்போது கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் சுல்தான்களுக்குப் பேரரசர் எழுத்துமூலமாக ஆணைகள் விடுத்தார். அதன்படி, அவர்கள் பேரரசரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு முறையாகத் திறை செலுத்த வேண்டும். ஷாஜிக்கும் அவரது கூட்டாளிகளான அகமது நகரத்தார்க்கும் ஆதரவு தருதல் கூடாது. அவ்வாறு செய்ய மறுத்தால் அவர்களது நாட்டின் மீது படையெடுத்துவருவதாக அச்சுறுத்தினுர். கோல்கொண்டாவின் மன்னர் முகலாயப்படையினுல் ஏற்கெனவே துன்பத்திற்குள்ளானவர். 1629ஆம் ஆண்டில் வாய்ப்பான மன்சுர்கரையும் இழந்தார். அடுத்த ஆண்டில் தெலிங்கானுவின் ஒரு பகுதியை முகலாயரிடம் பறிகொடுத்தார். அதனுல் முகலாயருடைய சக்திக்கு எதிராக நிற்கமுடியாது என்பதை உணர்ந்த அவர், பேரரசருடைய கோரிக்கைகளுக்கெல்லாம் பணிந்தார். 'பாதுஷா நாமாவின்' ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுவார்: 'கோல்கொண்டாவிற்கு வந்த தூதுவரான அப்துல் லதீஃப் நகரத்தை நெருங்கியபோது, அவரை வரவேற்பதற்காக சுல்தான் குதுப்

உல்முல்க் ஐந்து காஸ் (kos) முன்னேறிச் சென்றார். வந்த தூதுவரை மிகுந்த மதிப்பு ஆரவாரத்துடன் நகருக்குள் அழைத்துவந்தார். பேரரசரின் பேரால் குத்பாவை உரக்க வாசிக்குமாறு செய்தார். அங்ஙனம் வாசிக்கும்போது பலமுறை அதில் கலந்துகொண்டார். குத்பா வாசித்தவருக்கு வெகு மதிகள் வழங்கினார். பேரரசரின் பெயரை நாணயங்களில் பொறித்து, அவற்றில் சிலவற்றைப் பேரரச அவைக்கு அனுப்பி வைத்தார்.'[1]

ஆனால்; இதற்கு மாறாக எதிர்த்து நிற்கும் வல்லமை தம்மிடம் உண்டு என நினைத்த பீஜப்பூர் சுல்தான் பேரரசக் கட்டளைக்குப் பணிய மறுத்தார். அதனால் அவரது நாட்டைத் தாக்குதற்கான ஆயத்தங்களில் ஷாஜஹான் ஈடுபட்டார். 'பீஜப்பூர்ப் பகுதிகளில் கூடுமானவரையில் மக்களைக் கொன்று பொருளைச் சூறையாடுமாறு தமது படையினரைப் பணித்தார்'. பேரரசப் படைகள் இரு பிரிவுகளாகப் பிரிந்துசென்றன. கான் ஸமானின் தலைமையில் இருந்த படை ஷாஜிக்கு எதிராக முன்னேறிச் சென்றது. கான் தௌரானின் தலைமையில் இருந்த மற்றொரு படை பீஜப்பூர் சுல்தானுடைய தலைநகரை முற்றுகையிட விரைந்தது. பகைவருக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காது செய்தல், குடிநீர்க் கிணறுகளில் நஞ்சிடல் போன்ற காலாகாலமாக வந்த பழைய முறைகளையே கையாண்டு முகலாயருக்குத் தொல்லை விளைவிக்க முயன்றனர். ஆயின், வழக்கமாக வெற்றி தரும் முறையினால் அவர்களுக்கு அதிகப் பயன் கிட்டவில்லை. ஏனெனில், அவர்கள் பீஜப்பூர் நகரத்தைக் காக்கப் பாடுபட்ட போதிலும், நாட்டின் மற்றப் பகுதிகளைப் பேரரசப் படைகள் கொள்ளையிட்டு அழிப்பதை அவர்களால் தடுக்க முடியவில்லை. இளையவர் முதியோர் என்றும், ஆண்கள் பெண்கள் என்றும் பாராமல் முகலாயப் படையினர் பீஜப்பூர் மக்களைக் கொன்று குவித்தனர். சான்றாக, கல்யாண் நகரில் 2,000 ஆடவர் கொல்லப்பெற்றனர். மற்றொரு நகரத்தில் ஏறக்குறைய அதே எண்ணிக்கையுள்ள ஆண்களும் பெண்களும் சிறைப் பட்டு அடிமைகளாக விற்கப்பெற்றனர். இங்ஙனம் சமாதானத்தைக் கோரவேண்டிய கட்டாயம் பீஜப்பூர் சுல்தானுக்கு ஏற்பட்டது. 1636ஆம் ஆண்டு மே மாதத்தில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இருபது இலட்ச ரூபாய்கள் சமாதானக் காணிக்கையாக அளிக்க முகம்மது அதில் ஷா ஒப்புக்கொண்டார். தமக்கு அடங்கிய சிற்றரசாகப் பேரரசர்

1 Elliot and Dowson, vol. vii, பக். 53.

கருதிய கோல்கொண்டாவின் உரிமையை மதித்து நடக்கவும் அதில் ஷா இணங்கினுர். இவற்றிற்கு ஈடாக ஆண்டுதோறும் எட்டு இலட்சம் வருவாய் தரவல்ல சிறு பகுதி, அகமது நகர அரசிலிருந்து பீஜப்பூர் சுல்தானுக்குக் கிடைத்தது. கான் ஸமானின் தலைமையில் சென்ற இரண்டாவது படையும் வெற்றி பெற்றது. அதனை எதிர்த்துப் போரிடுவதில் பயனில்லை என்பதை உணர்ந்த ஷாஜி பேரரசரிடம் பணிந்தார்.

முகலாயர் பெற்ற வெற்றியின் பயனுகத் தக்கணத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு அமைதி நிலவியது. அகமதுநகர அரசு அடியோடு அழிந்தது. கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் மன்னர்கள் தில்லிப் பேரரசரின் ஆணைக்குட்பட்ட சிற்றரசர்களாக இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தெற்கில் மேலும் செய்ய வேண்டியது எதுவும் இல்லையாதலால், இளவரசர் அவுரங்கசீபைத் தக்கணத்தின் அரசப் பகர ஆளாக அமர்த்தி விட்டு, 1636ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஷாஜஹான் ஆக்ரா விற்குப் புறப்பட்டார். அவுரங்கசீபின் பொறுப்பில் இருந்த பகுதி அல்லது முகலாயத் தக்கணத்தில் காண்டேஷ், பேரார், தெலிங்கானு, தௌலதாபாத் ஆகியவை அடங்கியிருந்தன. ஓரளவு பரப்பு மிகுந்த இப் பகுதியில் அறுபத்துநான்கு வலிய கோட்டைகள் இருந்தன. ஆண்டுதோறும் ஐந்து கோடி ரூபாய்கள் வருவாய் கிடைக்குமென மதிக்கப்பெற்றது. அவ் வருவாயிலிருந்தே பொது ஆட்சித் துறை, படைத்துறை சார்ந்த செலவுகளை அவுரங்கசீப் கவனித்துக்கொள்வார் என்று கருதப்பெற்றது. அந்த இளவயதினரான இளவரசர் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு அம் மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திவந்தார். ஆயினும், அவர் தமது சகோதரியான ஜஹாஞரா கடுமையான நோயுற்றிருந்த சமயத்தில் அவரைப் பார்ப்பதற்காக ஆக்ரா விற்குச் சென்றபோது தக்கணத்தின் ஆளுநர் பதவியைத் துறக்க வேண்டியிருந்தது. சிறிது காலத்திற்கு அவர் பொது வாழ்வில் ஈடுபடாது ஓய்வு பெற்ற வாழ்க்கை நடத்திஞர்.

1635ஆம் ஆண்டில் தக்கணத்தில் செய்த ஏற்பாடு அவுரங் கசீப் இரண்டாவது முறையாக ஆளுநராக வந்தபோது சண் டைகள் மூளும்வரையில் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் நிலைத்திருந்தது. தக்கணத்து ஆளுநர் பதவியைத் துறந்து சென்ற அவ்விளவரசர், 1645ஆம் ஆண்டில் குஜராத்தின் ஆளு நராகப் பதவியேற்ருர். அதன் பிறகு 1649 – 52ஆம் ஆண்டு களுக்கிடையே அவர் பால்க், படக்ஷான் ஆகிய மத்திய ஆசிய

நாடுகளின் மீதும் காண்டஹார் மீதும் படையெடுத்துச் செல் வதில் ஈடுபட்டிருந்தார். ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அந்தப் படையெடுப்புகள் தோல்வியில் முடிந்தன. தமது மூத்த சகோதரரான தாரா ஷிக்கோவின் பகைமையாலும், தந்தை காட்டிய வெறுப்புக் காரணமாகவும் அவுரங்கசீபினல் அரசவை யில் தங்க முடியவில்லை. தக்கணத்திலேயே அவர் இன்பம் கண் டார். அதனல் அப் பகுதியை ஆளும் பொறுப்பைத் தமக்கு அளிக்குமாறு வற்புறுத்தினர். காண்டஹாரிலிருந்து அவர் திரும்பியதும், 1653ஆம் ஆண்டில் தக்கணம் அடைந்தார். 1653ஆம் ஆண்டில் நர்மதை ஆற்றைக் கடந்து அவர் மாநிலத்தின் அரசப் பகர ஆள் எனும் பழைய பதவியை மீண்டும் ஏற்ருர்.

தக்கணத்தின் நிதி நிலைமையைச் சீர்படுத்துவதே அவுரங்க சீபின் முதல் வேலையாக இருந்தது. அவர் அம் மாநிலத்தில் இல்லாத எட்டு ஆண்டுகளில் பல ஆற்றலற்ற அதிகாரிகள் ஒருவர்பின் ஒருவராக வந்தனர். அவர்கள் ஆட்சியில் தக்க ணத்தின் நிதி நிலைமை மோசமடைந்தது. நல்ல வேளையாக முர்ஷீத் குலிகான் எனும் மிகுந்த திறமை கொண்ட நிதித்துறை சார்ந்த அதிகாரி அவுரங்கசீபிற்குத் துணையாக இருந்தார். அவர் நிதி நிலைமையைச் சீர்படுத்தி, தலச் சூழ்நிலைகளுக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களுடன், தோடர்மால் கொண்டுவந்த நிலத்தை அளந்து தீர்வை விதிக்கும் திட்டத்தைத் தக்கணத் திற்கும் விரிவுபடுத்தினர். அதன் பிறகு அவுரங்கசீப் கோல் கொண்டா, பீஜப்பூர் ஆகிய சுல்தானியங்களின் மீது தம் கவனத்தைச் செலுத்தினர். அந்த அரசுகளின் ஷியா மன்னர் கள் உரிமையோடு வாழ்வது சுன்னி பிரிவைச் சேர்ந்த வேந்தர் களின் தில்லிப் பேரரசின் வளர்ச்சிக்கு இடர் விளைப்பதாகும். அவற்றின் விவகாரங்களில் தலையிடுவதற்கான சாக்குகளுக்குப் பஞ்சமே கிடையா. கப்பம் கட்டும் சிற்றரசு என்ற நிலையை ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட கோல்கொண்டா அடிக்கடி திறை செலுத்துவதில் பாக்கி வைத்திருந்தது. வேண்டுமென்றல், சுல்தான்களின் மீது சீற்றம் கொள்வதற்கான காரணங்கள் எளிதில் கிடைத்துவிடும். 1556ஆம் ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் சுல்தான் குதுப் உல்முல்கிற்கு எதிராகப் போர் தொடுக்குமாறு அவுரங்கசீபின் புதல்வரான இளவரசர் முகம் மது சுல்தானுக்கு ஆணை பிறந்தது. அதற்கிணங்க அவர் ஐதராபாத்திற்குள் நுழைந்தார். அவரது படைவீரர்கள் நாட் டைச் சூறையாடினர். சில வாரங்களுக்குப் பின் அவுரங்க சீபே படையுடன் நேரில் வந்து கோல்கொண்டா நகரை

முற்றுகையிட்டார். போரை நிறுத்தவேண்டுமென்று இளவரசர் தாரா ஷிக்கோ வற்புறுத்தியதன் பேரில் ஷாஜஹான் தலையிட்டிருக்கவில்லையானால், கோல்கொண்டா அரசு முழுவதையும் அவுரங்கசீப் பேரரசுடன் இணைத்திருப்பார்.

1656ஆம் ஆண்டு நவம்பரில் முகம்மது அதில் ஷா இறந்ததை அடுத்து பீஜப்பூரில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களைக் காரணமாகக் காட்டி அந் நாட்டின் மீது அவுரங்கசீப் படையெடுத்துச் சென்றார். துரோகியான மீர் ஜும்லாவின்[1] உதவியுடன் 1657ஆம் ஆண்டு ஜனவரி மாத ஆரம்பத்தில் அவுரங்கசீப் பீஜப்பூரைத் தாக்கினார். நீண்ட கால முற்றுகைக்குப்பின் பீடார், கல்யாண் ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். பீஜப்பூர் நாட்டுப் பகுதிகள் கடுமையாகத் தாக்கி அழிக்கப்பெற்றன. அந் நிலையில் அதற்கு முந்திய ஆண்டு அவுரங்கசீபின் நாடு பிடிக்கும் பேராசைக் கனவிலிருந்து கோல்கொண்டாவைக் காத்தது போல் இப்போதும் ஷாஜஹான் தலையிட்டு அதில் ஷாஹியினருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார். ஆயின், சமாதானத்தின் நிபந்தனைப்படி பீடார், கல்யாண், பேரண்டா ஆகியவற்றை பீஜப்பூர் மன்னர் முகலாயரிடம் ஒப்படைக்க வேண்டும்; பெரும் இழப்பீட்டுப் பணமும் தரவேண்டும். மேலும், சிறிது காலத்திற்குத் தக்கணத்தில் அவுரங்கசீப் தங்கியிருந்திருந்தால், அங்கிருந்த இரு சுல்தானியங்களைக் கைப்பற்றுவதற்கு தடையற்ற உரிமையை அநேகமாக அவரது தந்தையிடமிருந்து வற்புறுத்திப் பெற்றிருப்பார். ஆனால், அவ்வாறு நடைபெறுவதற்கில்லை. 1657ஆம் ஆண்டு செப்டம்பர் மாத முதலில் ஷாஜஹான் திடீரென்று நோய்வாய்ப்பட்டதால், அவுரங்கசீப் தமது உடன்பிறந்தாருடன் தில்லி அரியணையில் அமர்வதற்கான போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அதனால் தக்கணத்தில் வலுத்தாக்குதல் செய்ய அவரால் இயலவில்லை. இங்ஙனம் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்குத் தக்கண சுல்தானியங்கள் அழியாதிருக்க வகையேற்பட்டது.

1 அர்திஸ்தானத்திலிருந்து வந்த பாரசீக வணிகரே மீர் ஜும்லா: கூர்த்த மதி படைத்த அவ் வணிகர் கோல்கொண்டா சுல்தானின் சேவையில் ஈடுபட்டார். ஆண்டொன்றிற்கு நாற்பது இலட்சம் ரூபாய் வருவாய் தரும், அநேகமாக உரிமைபெற்ற அரசு ஒன்றை மெதுவாகத் தமக்கெனக் கர்நாடகத்தில் உருவாக்கிக்கொண்டார். அந்த வருவாயை வைத்துக்கொண்டு பெரும் படையொன்றை வைத்திருந்தார். முக்கியமாக ஐரோப்பிய வீரரைக்கொண்டு இயக்கிய வலிய பீரங்கிப் படை ஒன்றை வைத்திருந்தார். தமது பெயரளவிலான எஜமானர் கோல்கொண்டாவின் அரசருக்குப் பணியவேண்டுமென்ற நெருக்குதல் ஏற்பட்டபோது, மீர்ஜும்லா, ஷாஜஹானுடனும் அவுரங்கசீபுடனும் சேர்ந்து சூழ்ச்சி செய்யத் துவங்கினார்.

**1657 முதல் 1658 வரையிலான வாரிசுரிமைப் போர்**

ஷாஜஹானின் நான்கு புதல்வர்களான தாரா ஷிக்கோ, ஷுஜா, அவுரங்கசீப், முராத் பக்ஷ் ஆகியோர் 1657ஆம் ஆண்டில் அரசுரிமைக்கான போராட்டம் தொடங்கியபோது வயதுவந்தவர்களாக இருந்தனர். மூத்த மகனான தாரா ஷிக்கோவிற்கு 43 வயதாகியிருந்தது. ஷுஜா, அவுரங்கசீப், முராத் பக்ஷ் ஆகியோர் முறையே 41, 39, 33 வயது நிரம்பியவர்களாயிருந்தனர். அவர்கள் அனைவரும் படைத்துறை, பொது ஆட்சித்துறை சார்ந்த பல பதவிகளை வகித்து ஆட்சிக் கலையில் அனுபவம் மிகுந்திருந்தனர். மாநில ஆளுநர் என்ற வகையில் அந் நான்கு உடன்பிறந்தவர் ஒவ்வொருவரும் பெரும் நிலைப் படையொன்றை வைத்திருந்தனர். தாரா ஷிக்கோ பஞ்சாபின் ஆளுநராகவும், ஷுஜா, அவுரங்கசீப், முராத் பக்ஷ் முறையே வங்காளம், தக்கணம், குஜராத் ஆகிய மாநிலங்களின் ஆளுநர்களாகவும் திகழ்ந்தனர். நான்கு சகோதரர்களும் அரசுரிமைப் போட்டியில் செல்வாக்குச் செலுத்தவல்ல வெவ்வேறான குண நலன்களையும் நடைமுறைகளையும் கொண்டிருந்தனர். மூத்த புதல்வரான தாரா ஷிக்கோ அரசவையிலேயே அநேகமாகத் தங்கியிருந்தார். அவரது தந்தைக்குச் செல்வப் பிள்ளையாகத் திகழ்ந்தார். அவரிடம் இயற்கையாய் அமைந்த திறமை மிகுந்திருந்தபோதிலும், அரசுரிமைப் போட்டியில் அவர் வெற்றி பெறுவதற்குத் தடையாக இருக்கக்கூடிய குணங்குறைகளும் அவரிடம் காணப்பெற்றன. அவரது மூர்க்கத்தனமும், கர்வமும், படாடோபமும் அரசவையில் பல பகைவரை அவருக்குத் தேடித்தந்தன. அவர் அளவுக்கு மீறி வெளிப்படையாகப் பேசுபவர் என்றும், பிறருடைய ஆலோசனையை விரும்பாதவர் என்றும் கூறப்படுகின்றது. சமயச் செய்திகளில் அவர் கொண்டிருந்த பொதுநோக்கு அவர்தம் அரசியல் நலன்களுக்குப் பாதகமாக அமைந்தது. அவுரங்கசீபின் எண்ணங் கொண்டிருந்த மரபு வழாத சுன்னி பிரிவைச் சார்ந்த முஸ்லீம்கள் தாராவைப் புறச்சமயத்தவராகக் கருதினர். அதனால், அவர் தங்களது ஆதரவிற்கு அருகதையற்றவர் எனவும் எண்ணினர். இரண்டாம் மைந்தரான ஷுஜா அத்துணையளவிற்குக் குறிப்பிட்டுக் கூறும் குண நலம் கொண்டவரல்லர். அவர் தனிப்பட்ட முறையில் தீரம் மிகுந்தவர். வங்கத்தின் ஆளுநராகத் திறம்படச் செயலாற்றியவராகத் தெரிகின்றார். ஆயினும், அக் கால ஏடுகளில் அவர் தாரா ஷிக்கோவைப் போன்றோ, அவுரங்கசீபைப் போன்றோ சிறப்பித்துப் பேசப்படவில்லை. மேலும், அவர் ஆடம்பர வாழ்க்கையிலும் களியாட்டத்திலும் அதிக நாட்டம் கொண்டிருந்தார். இதனால் இறுதியில் அவரது அறிவாற்றல்

பழுதுபட்டது. நெருக்கடியான நேரங்களில் தக்க நடவடிக்கை எடுக்க முடியாதுபோயிற்று. மேலும், அவர் ஷீயா பிரிவைச் சார்ந்தவராதலால் அரசவையிலிருந்த சுன்னி பிரிவினரின் வெறுப்பிற்குள்ளானூர். ஆயின், இவற்றிற்கு மாருக, ஷாஜஹானின் மூன்ருவது மைந்தரான அவுரங்கசீப் பல வகைகளில் மேம்பட்டு விளங்கி இறுதியில் வெற்றியும் பெற்ருர். ஆட்சிக் கலையில் ஜயத்திற்கிடமற்ற ஆற்றல் பெற்றிருந்ததோடு, தாரா ஷிக்கோ, ஷுஜா ஆகியோர் போன்று அல்லாது, மரபு வழாத முஸ்லிம் என்ற வகையில் அவுரங்கசீப், பேரரசிலிருந்த பெருஞ் செல்வர்களில் சுன்னி பிரிவைச் சேர்ந்தவர்களின் பேராதரவைப் பெற்றிருந்தார். அப் பிரிவினரே அக்பரின் ஆட்சிக் காலத்திலிருந்து அரசவையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த கட்சியினர் என்பது குறிப்பிடத்தக்கது. முராத் அல்லது ஷுஜாவைப் போலவே அவுரங்கசீபும் மனவுறுதியிலும் தீரத்திலும் சிறிதும் சளைத்தவரல்லர். அதனோடு அவர் சிந்தனையாழமும், செயலில் சூழ்ச்சியும், பதற்றமின்றிப் பகுத்துரைக்கும் பண்பும் பெற்றவர். கடைசிச் சகோதரரான முராத் பக்ஷ் தீரமிக்க படைவீரர் என்றபோதிலும், அவர் ஒழுக்கங் கெட்டவராகவும் முன்கோபியாகவும் மூடராகவும் இருந்தார். அறிவற்றவரான அவர் எளிதில் ஏமாறினுர்.

பேரரசுக்காகப் போரிட இருந்த உடன்பிறந்த நால்வரும் இத்தகைய பண்புகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் எனினும், அவர்களிடம் சகோதர பாசம் தழைத்தோங்கவில்லை. உண்மையில் அரசுரிமைப் போட்டியென்பது முகலாயக் குடியினரின் மரபாகவே வந்துவிட்டது. ஹுமாயூனும் அக்பரும் உறவினர்களின் உதிரஞ் சிந்தவில்லையெனினும், அவர்களும் அரசுரிமைக்காக நெருங்கிய உறவினர்களுக்கெதிராகப் போராட வேண்டியிருந்தது. அங்ஙனமே ஜஹாங்கீருக்கும் வாய்த்தது. அவரது உடன்பிறந்த இருவரும் அவரது தந்தை இறப்பதற்கு முன்னரே இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டபோதிலும், அவரது புதல்வராகிய குஸ்ருவே அவருக்கு எதிரியாக இருந்தார். ஷாஜஹானும் குருதியாற்றைக் கடந்துதான் அரியணையேற முடிந்தது. இப்போது அவரது மைந்தர்கள் ஒவ்வொருவரும் தத்தமது உரிமையை நிலைநாட்டப் போரிடத் தயாராக இருந்தனர்.

1757ஆம் ஆண்டு செப்டம்பரில் ஷாஜஹான் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். நாள்தோறும் நடைபெறும் தர்பார் நின்றது. ஒவ்வொரு நாட் காலையிலும் ஜரோகா அல்லது மேன்

மாடத்திலிருந்து பேரரசர் பொதுமக்களுக்குத் திருமுகம் காட்டுவதும் ஒரு வாரம் அல்லது பத்து நாள்களுக்கு இல்லாதிருந்தது. அதே சமயத்தில் நோயுற்றிருந்த பேரரசரைக் காண முடியாதவாறு இளவரசர் தாராவின் ஆணை தடுத்தது. உடனே பேரரசர் இறந்துவிட்டார் எனும் புரளி பேரரசு முழுதும் பரவியது. இச் செய்தி மாநிலங்களில் பரவியவுடன் ஷாஜஹானின் புதல்வர்கள், வரப்போகும் போட்டிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்ய முற்பட்டனர். வங்காளத்தில் இருந்த ஷுஜாவும் குஜராத்தில் இருந்த முராதும் முதலில் பேரரசர் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். அவர்கள் இருவரும் தங்கள் பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டனர். வங்காளத்தை விட்டு வெளியேறிய ஷுஜா, பெரும் படையுடன் தில்லியை நோக்கி முன்னேறலானார். ஆயின், அவர் பனாரஸின் அருகில் வருவதற்குள் தாரா ஷிக்கோவின் மூத்த மைந்தரான சுலைமான் ஷிக்கோவின் தலைமையில் வந்த பேரரசப் படையினரின் தாக்குதலுக்குள்ளானார். சுலைமானிடம் இருந்த மீர்ஸா ராஜா ஜெய் சிங்கின் இராஜபுத்திரப் படையினர் ஷுஜாவை முறியடித்து வங்காளத்திற்குப் பின்னடையுமாறு செய்தனர்.

பதற்றமின்றி ஆழ்ந்து சிந்தித்துச் செயல்புரியும் பண்பு கொண்ட அவுரங்கசீப் எவ்வித அவசரச் செயலிலும் ஈடுபடவில்லை. தமது நடவடிக்கைகளை இரகசியமாக வைத்திருந்தார். நர்மதை ஆற்றின் துறைகளில் வலிய காவற்படைகளை நிறுத்தினார். தலைநகரமாகிய ஆக்ராவில் நடக்கும் செய்திகள் பற்றி அறிந்துகொள்வதற்காகத் தமது சகோதரியான ரோஷனாராவுடன் (ரோஷன் ராய்) தொடர்பு கொண்டார். அதன் பிறகு பேரரசைப் பகிர்ந்துகொள்ளும் ஒப்பந்தம் ஒன்றிற்கு அறிவிலியான முராதை ஆசைகாட்டி இணங்கவைத்தார். முராதிற்கு வரைந்த கடிதமொன்றில் பின்வருமாறு எழுதினார்: 'நிலையற்ற, ஏமாற்றும் இவ்வுலகில் அரசாங்கப் பொறுப்பு எதையும் எடுக்கும் விருப்பமோ ஆசையோ எனக்குச் சிறிதும் கிடையாது. ஆண்டவரின் திருக்கோயிலுக்கு யாத்திரை செய்வது ஒன்றே எனது விருப்பமாகும். ஆயின், நமது அவமானத்திற்குரிய சகோதரனின் (biradar-i-be-shukoh) தீய, நேர்மையற்ற நடத்தைக்கு எதிராக நீ மேற்கொள்ள முடிவுசெய்யும் எந்த வழியிலும் என்னை உனது நேர்மையான நண்பனாகவும் துணைவனாகவும் கொள்ளலாம்.'[1]

[1] Elliot and Dowson, vol. vii, பக்கம் 217. ஒப்பந்தத்தின் உரிமை வாசகங்கள்பற்றி அக்கில் கான் தந்த செய்தியை முராதிற்கு அவுரங்கசீப் எழுதிய கடிதமே வலியுறுத்துகின்றது. இதனைப் பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் எழுதிய 'Aurangzeb' எனும் நூலின் முதலாம் தொகுதி

அவுரங்கசீபிற்கும் முராதிற்குமிடையே இச் செய்திபற்றிய கடிதங்கள் பறந்தன. அவர்கள் இருவரும் வெகு விரைவிலேயே ஒன்றுபட்ட செயல்திட்டத்தை வகுத்தனர். உடன் பிறந்தார் இருவருக்குமிடையேயான ஒப்பந்தத்தின் உரிமை வாசகங்கள்பற்றி அவுரங்கசீபின் அந்தரங்க அதிகாரியான அகில் கான் ரஸி என்பவர் பின்வரும் சில விளக்கங்களைத் தந்துள்ளார்: '(1) வெற்றியின்மூலமாகக் கிடைக்கும் பொருளில் மூன்றில் ஒரு பங்கு முராத் பக்ஷிற்கும், இரண்டு பங்கு அவுரங்க சீபிற்கும் உரியவை. (2) பேரரசு முழுவதையும் கைக் கொண்ட பிறகு பஞ்சாப், ஆப்கனிஸ்தானம், காஷ்மீரம், சிந்து ஆகியவை முராதிற்குச் சொந்தமானவையாகும். அங்கே அவர் அரசராக முடிசூட்டிக்கொண்டு, நாணயங்களை வெளியிட்டு, அவரது பெயரையே (குத்பா) மன்னரின் பெயராக அறிவிக் கலாம்.'[1] இத்தகைய நேர்மையான வாக்குறுதிகளில் முராத் மயங்கினர். இரு சகோதரர்களும் ஆக்ராவை நோக்கி முன் னேறி, மாளவத்தில் உள்ள திபால்பூருக்கு வெளியே சந்தித் தனர். உஜ்ஜெய்னி வரும்வரையில் அவர்களுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை அந் நகரை நெருங்கியவுடன்தான் மார்வாரின் ஜெஸ்வந்த் சிங், காஸிம்கான் ஆகியோரின் தலைமையில் இருந்த தாரா ஷிக்கோவின் படையுடன் மோதலுற்றனர். 1658ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினைந்தாம் நாளில் உஜ்ஜெய்னிக்கு அருகில் அமைந்த தார்மாத் எனுமிடத்தில் பகைப்படைகள் ஒன்றையொன்று சந்தித்தன. தாராவின் படைகளின் தலைமை பிளவுபட்டிருந்தது. ராஜா ஜெய்வந்த்சிங்கும் அவருக்குச் சம நிலையில் இருந்த முஸ்லிம் தளபதியான காஸிம் கானும் பிளவு பட்டு நின்றதால் தீமை பயந்தது, இங்ஙனம் மகாராஜா ஜெய் வந்த் சிங்கின் ரதோர் படைப் பிரிவினர் விடாப்பிடியாக வீரத் துடன் போரிட்டபோதிலும் பேரரசப் படைகள் படுதோல்வி யடைந்தன. அவர்களில் ஐந்நூறு அல்லது அறுநூறு பேரே உயிர்தப்பினர்; மற்றையோர் வெட்டி வீழ்த்தப்பெற்றனர். வெற்றி பெற்ற இளவரசர்கள் விரைந்து முன்னேறி சாம்பல் பகுதிக்குச் செல்லும் வழியைத் தம்வசப்படுத்திக்கொண்டனர். அதன் பிறகு முன்னேறிக்கொண்டுவந்த முராத், அவுரங்கசீப்

---

336ஆம் பக்கத்தில் காணலாம். 'நான் எனது வாக்குறுதியைக் காப்பேன். ஏற்கெனவே முடிவுசெய்தவாறு பஞ்சாப், ஆப்கானிஸ்தானம், காஷ்மீரம், சிந்து ஆகிய பகுதிகள் அடங்கிய அராபிக் கடல்வரையிலுள்ள பிரதேசம் முழுவதையும் அவனுக்கு (மூராதைப் படர்க்கையில் இங்ஙனம் குறித்துள்ளார்) விட்டுவிடுவேன். அதற்கு எவ்விதத் தடையும் இல்லை. எனது இவ் விருப்பம் உண்மையானது என்பதற்கு அல்லாவும் நபிகள் நாயகமும் சாட்சிகளாவர்!'

1 Sarkar, 'Aurangzib', vol. i, p. 337.

ஆகிய இருவருடைய படைகளைத் தடுத்து நிறுத்துதற்காகத் தாரா ஷிக்கோ பெரும் படையொன்றைத் திரட்டிக்கொண்டு சென்றார். ஏற்கெனவே அவர் ஷுஜாவை எதிர்ப்பதற்காகத் தமது நம்பிக்கைக்குரிய நண்பர்களான தலைசிறந்த தளபதிகளின் தலைமையில் ஏறக்குறைய இருபத்திரண்டாயிரம் வீரர்கள் அடங்கிய வலிய படையொன்றை அனுப்பியிருந்தார். அதனால், ஆக்ராவில் அவரது நிலை மிகவும் மெலிந்திருந்தது. ராஜா ஜெய் சிங்கும் இளவரசர் சுலைமான் ஷுக்கோவும் பெனாரஸிலிருந்து திரும்பிவரும்வரையில் காத்திருக்குமாறு அவரது தந்தையாரும் நண்பர்களும் யோசனை கூறினர். ஆயின், அவசர புத்தியும் அகம்பாவமும் கொண்ட தாரா அதனைக் கேட்பதாக இல்லை. அவரிடம் இருந்த படையினர், குறிப்பாக முஸ்லிம் வீரர்கள் அவரிடம் கொண்ட அனுதாபத்தைவிட அவுரங்கசீபிடம் அதிக அனுதாபம் கொண்டிருந்தனர் எனலாம். இங்ஙனம் 1658ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதியன்று எதிரிப் படைகள் இரண்டும் ஆக்ராவிற்குச் சில கல் தொலைவிலுள்ள சமுகார் எனுமிடத்தில் சந்தித்தன. சமுகாரில் நடக்கப்போகும் சண்டை பேரரசின் தலைவிதியை நிர்ணயிக்கவல்லது என இரு தரப்பினரும் திடமாக நம்பினர். எப்படியும் வெற்றி பெறுவது என உறுதி பூண்ட அவுரங்கசீபும் முராதும் தங்கள் உயிர்களுக்கு ஆபத்து நேரும் என்று சிறிதும் தயங்காது போரில் முன்னணியில் நின்று போரிட்டனர். இளைய இளவலின் முகத்தில் மூன்று காயங்கள் ஏற்பட்டன. அவர் தம் யானையின் மீதிருந்த அம்பாரியில் அம்புகள் ஏராளமாகத் தைத்தன. பேரரசப் படையில் இளமை ததும்பும் தலைவரான ராம்சிங்கின் தலைமையில் இராஜபுத்திரர்கள் மிகுந்த தீரத்துடன் முழு மூச்சுடன் போரிட்டனர். 'தங்களது இனத்தின் மரபுகளுக்கு பெருமைப் தேடித் தந்தனர்'. ராம்சிங்கும் அவரது வீரர்களும் இளவரசர் முராதின் படைப்பிரிவைத் தாக்கி இறுதிவரை போரிட்டு மடிந்தனர். அவுரங்கசீபிற்கு எதிராகத் தாக்குதல் நடத்திய தாரா ஷிக்கோ நேரடியாகச் சண்டையில் இறங்கினார். தமது பரம வைரியான உடன்பிறந்தவருடன் நெருங்க முயன்று முன்னேறினார். முதலில் யாவும் தாராவிற்குச் சாதகமாகச் செல்வதாகத் தோன்றியது. ஆயின், அவர் அமர்ந்திருந்த யானையின் மீது அம்பு பாய்ந்து அதற்கு பலத்த அடிபட்டதால், அதை விட்டு நீங்கி குதிரையின் மீது ஏறிக்கொள்ளுமாறு அளித்த யோசனையை அவர் ஏற்று அதன்படியே செய்தார். 'அந்த ஒரு செயல் அப் போரின் தலைவிதியை நிர்ணயித்தது' என வின் சென்ட் ஸ்மித் குறிப்பிடுவார்; தாராவின் படையினர் அவரைக் காணாது திகைத்தனர். அதனால் அவர்களிடையே பீதி தோன்

றியது. பேரரசப் படையின் அணிகள் குலைந்தன. தமது பாசறையும் பீரங்கிகளும் வெற்றி பெற்ற இளவரசர்களிடம் சிக்க விட்டுத் தாரா ஷிக்கோ களத்திலிருந்து தப்பியோடினார். அன்று நடந்த போரையும் அரியணையையும் அவுரங்கசீப் வென்றார். அதற்குப்பின் தாரா ஷிக்கோ, அவரது புதல்வரான சுலைமான் ஷிக்கோ, ஷுஜா ஆகியோர் இழந்ததைப் பெறுதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராயின.

வெற்றி பெற்ற படைகள் ஆக்ராவை நோக்கிப் புறப்பட்டன. அங்கிருந்த வயோதிகப் பேரரசர் சிறிது காலத்திற்கு எதிர்த்து நின்றார். ஆயினும், 1658ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் தேதி தலைநகரத்தை அவுரங்கசீபிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. ஷாஜஹான் சிறையில் வைக்கப்பெற்றார். ஆக்ரா கோட்டையில் இருந்த நிதிக்குவியல்கள் அனைத்தும் அவுரங்கசீப், முராத் ஆகியோர் கையில் சிக்கின.

**அவுரங்கசீபும் அவர் உடன்பிறந்தவர்களும்**

ஆக்ராவின் வீழ்ச்சிக்குப் பின் அவுரங்கசீப் தலைமை உமராக்கள் அளித்த மரியாதைகளை ஏற்பதிலும், மத்திய அரசின் ஊழியர்களை மாற்றுவதிலும் ஐந்து நாள்களைக் கழித்தார். அவுரங்கசீப், முராத் ஆகிய இரு சகோதரர்களும் தாராவைப் பின்தொடர்வதற்காக ஜூன் மாதம் 13ஆம் நாளன்று ஆக்ராவைவிட்டுத் தில்லி நோக்கிப் புறப்பட்டனர். பத்து நாள்கள் கழிந்து மதுராவிற்கு அருகில் இருந்த ரூப் நகரை அடைந்தனர். அங்கே அவர்கள் சின்னாள்களுக்குப் பாசறை அமைத்துக் கொண்டு தங்கியிருந்தனர். நாள்கள் செல்லச் செல்ல முராதின் மனத்தில் பொறாமைப் புயல் வீசத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் முக்கியமான அமீர்கள் எல்லாம் அவுரங்கசீபிற்கே மரியாதை செய்ததைக் கண்ட அவர், அதிகாரம் தம்மை விட்டு நழுவுவதாக உணர்ந்தார். அதனால் அவர் தமது கூடாரத்திலேயே தங்கத் தலைப்பட்டார். அவுரங்கசீபைச் சென்று காணாது இருந்ததுடன், அவருக்கு எதிராக வேலை செய்யவும், தமது அதிகாரத்தை வலியுறுத்தவும் முற்பட்டார். எவ்வாறாயினும், அவர் ஏற்கெனவே சூழ்ச்சித் திட்டங்களை வகுத்துவிட்ட அவுரங்கசீபிற்கு இணையாகமாட்டார். முராதின் சொந்தப் பணியாளனான நூருத்தீன் என்பானை இலஞ்சம் கொடுத்து அவுரங்கசீப் தம் வசப்படுத்திக்கொண்டார். ஜூன் மாதம் 25ஆம் தேதி காலையில் வேட்டையிலிருந்து வந்துகொண்டிருந்த முராதை அவுரங்கசீபின் பாசறைக்குச் செல்லுமாறு அத்துரோகி அவரைத் தூண்டினான். அக் கணத்திலிருந்து முராதின்

முடிவு நெருங்கிவிட்டது. உடன்பிறந்தார் இருவருக்கும் உணவு பறிமாறப்பட்டது. வேட்டையாடிவிட்டுப் பசியுடன் வந்த இளவரசர் வயிருர உண்டார். பெர்னியரின் குறிப்புப்படி சிறிது மதுவும் தரப்பெற்றது. இன்தேறலின் மீது மாருப் பற்றுதல் கொண்ட முராத் அளவுடன் குடிக்க எண்ணவில்லை. அதனுல் அவர் அண்மையில் இருந்த படுக்கையில் ஓய்வெடுக்கச் சாய்ந்தார். அதே சமயத்தில் அவுரங்கசீப் சிறிது நேரத்திற்கு உவளகத்திற்குச் சென்ருர். ஆழ்துயிலில் முராத் ஆழ்ந்தபோது அவரைச் சிறைப்பிடிக்குமாறு அவுரங்கசீப் ஆணையிட்டார். ஆகூழற்ற அவ்விளவரசர் கண்விழித்துப் பார்த்தபோது தாம் கனமான சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். வீட்டிற்கு வந்த விருந்தாளியை மோசம் செய்துவிட்டதாக உடன்பிறந்தவரான அவுரங்கசீபை ஏசினுர். ஆனுல், அவரது எதிர்ப்புப் பயனற்றதாக இருந்தது. நல்வாய்ப்பற்ற அவ்விளவரசரை நம்பகமான குதிரைப் படையினரின் காவலில் அவுரங்கசீப் தில்லிக்கு அனுப்பிவைத்தார். அங்கே அவரை சலீம்கர் எனும் கோட்டையில் அமைந்த அரசாங்கச் சிறையில் அடைக்குமாறு செய்தார்; அதன் பிறகு 1659ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முராதை குவாலியர் கோட்டைக்குக் கொண்டுசென்றனர். அங்கே அவுரங்கசீபின் தூண்டுதலின் பேரில் அவர் மீது கொலைக்குற்றம் சாட்டப்பெற்றது.[1] இங்ஙனம் மூன்று ஆண்டுகள் கழிந்து, அதாவது, 1661ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முராத் மரண தண்டனையடைந்தார். எதிரிகளை ஒழிப்பதற்குச் சட்டத்தின் சடங்குகளையெல்லாம் அனுசரிப்பதில் இங்கிலாந்தின் மன்னரான எட்டாம் ஹென்றியை ஒத்திருந்தார் அவுரங்கசீப் என வின்சென்ட் ஸ்மித் குறிப்பிடுவார். 1658ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் தேதி முராதை ஒருவழியாகத் தீர்த்துக்கட்டிய பிறகு தாரா ஷீக்கோவிற்கு எதிராகப் படையெடுத்துச்செல்லும் பணியில் அவுரங்கசீப் ஈடுபட்டார். அவர் ஜூலை மாதம் ஐந்தாம் நாளன்று தில்லி

1. அலி நாகியின் மகன் தான் அவ்வாறு கொலைக்குற்றம் சாட்டியவன் அவன் தனது குற்றமற்ற தந்தையை முராத் பக்ஷ் கொன்றதற்கு நியாயம் வழங்கவேண்டுமென்று கோரினுன். திறமைக்கும் நேர்மைக்கும் பெயர்போன அலி நாகி என்பார், முராத் குஜராத்தின் ஆளுநராக இருந்தபோது அவரிடம் நிதி அமைச்சராகப் பணிபுரிவதற்காக ஷாஜஹானுல் அனுப்பிவைக்கப்பெற்றவர். ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டதும், அகமதாபாத்தில் முராத் பேரரசராக முடிசூட்டிக்கொண்டதும் நாகியின் எதிரிகள் அதனைப் பயன்படுத்திச் சூழ்ச்சிச்செய்தனர். அவர் தாரா ஷீக்கோவிற்கு ஆதரவுதர விரும்புவதாக அவரது முத்திரையுடன் பொய்க்கடிதம் ஒன்றைத் தயார்செய்தனர். அக் கடிதத்தைக் கண்ட இளவரசர் முராத், தமது அமைச்சரான நாகியைத் தம்முன் வரவழைத்துத் தமது ஈட்டியாலேயே அவரைக் கொன்ருர்.

நகருக்கருகே வந்துசேர்ந்தார். அப்போது தாரா லாகூரை அடைந்திருந்தார். எனவே, நெடுந்தூரம் கடந்துவந்த தமது துருப்புகளுக்குச் சிறிது ஓய்வு கொடுப்பதற்காக அவுரங்கசீப் மூன்று வாரகாலத்திற்குத் தில்லியிலேயே தங்கினார். இவ்வாறு கிடைத்த ஓய்வுக் காலத்தை அவர் தமது முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் பயன்படுத்திக்கொண்டார். குறிநூல் வல்லார் குறித்த நன்னாளான ஜூலை மாதம் இருபத்தோராம் நாளன்று 'ஆலம்கீர்' அல்லது 'உலகத்தை வென்றவர்' எனும் பட்டத்தோடு அவுரங்கசீப் பாதுஷாவாக அரியணையில் அமர்ந்தார். ஆறு நாள்கள் கழிந்த பின்னர் அவர் லாகூரை நோக்கிப் படையுடன் சென்றார்.

1658ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதியன்று சமுகாரில் தோல்வியுற்ற தாரா ஷீக்கோ தில்லி நோக்கிப் பயணமானார். ஜூன் மாதம் 5ஆம் தேதி ஏறக்குறைய 5,000 வீரர்களுடன் அந் நகரை அவர் அடைந்தார். ஆக்ரா நகரம் சரணடைந்தது பற்றியும், பேரரசர் சிறைப்பட்டதுபற்றியும் அவர் கேள்வியுற்றதும் லாகூருக்குச் சென்றார். அங்கே அவருக்கு நிறைய சொத்துகள் இருந்ததோடு, பேரரசின் பிரதான ஆயுதசாலையொன்றும் வெடிமருந்துக் கிடங்கொன்றும் அந் நகரின்கண் அமைந்திருந்தன. அவர்வசம் இருந்த லாகூர்க் கோட்டையில் உள்ள பெரும் பொருளைக்கொண்டு கூலிப்படையினரைத் திரட்டுதற்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய பஞ்சாப் மக்களையும் அவர் நம்பிச்சென்றார். ஜூலை மாதம் மூன்றாம் நாள் லாகூரை அடைந்த அவர், துரத்திவரும் அவுரங்கசீபின் படையைச் சமாளிப்பதற்காகப் புதிய படையொன்றைத் திரட்டுவதிலும், பிற ஏற்பாடுகளைச் செய்து முடிப்பதிலும் ஒன்றரை மாதங்களைக் கழித்தார். குறுகிய காலத்தில் அவர் 20,000 வீரர்களைத் திரட்டினார். மேலும், சட்லஜ் ஆற்றைக் கடந்து பஞ்சாபிற்குள் அவுரங்கசீப் புகுவதைத் தடுப்பதற்காக அவ்வாற்றின் படகுதுறைகளைக் காப்பதற்கான வழிகளையும் மேற்கொண்டார். அதனோடு மழைக்காலம் வந்துவிட்டதால் பல ஆறுகளும், பஞ்சாப்பின் சகதி நிறைந்த சாலைகளும் சிறிது காலத்திற்கு லாகூருக்கு வரமுடியாமல் அவுரங்கசீபைத் தடுத்துவிடும் என்றும் அவர் நம்பினார். ஆயின், பேராசிரியர் சர்க்கார் குறிப்பிட்டுள்ளதைப்போல 'இயற்கை அல்லது மனிதத் தடைகளையெல்லாம் தகர்த்தெறியக்கூடிய அவுரங்கசீபின் ஆற்றலையும் மனவுறுதியையும் கழித்துக் கணக்கெடுத்துவிட்டார்'.[1] மழை

[1] Sarkar, 'Aurangzeb,' vol. ii, p. *105*.

பெய்துகொண்டிருந்த காலத்திலேயே அவுரங்கசீப் நிதானமாக முன்னேறினர். அதனுல் தாரா, லாகூரை அடைந்த ஒரு மாத காலத்திற்குள் அவரது பகைவரின் முன்னணிப் படை சட்லஜ் ஆற்றைக் கடந்துவிட்டது. சில நாள்கள் சென்ற பின்னர், அதாவது, ஆகஸ்ட் மாதம் 14ஆம் தேதி தமது மூலப்படையுடன் அவுரங்கசீபே அவ் ஆற்றை வந்தடைந்தார். எதிர்த்து நிற்றல் பயனற்றது எனக் கண்ட தாரா, லாகூரைவிட்டுச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இங்ஙனம் அவர் தமது குடும்பத்தாருடனும் லாகூர் கோட்டையில் தமக்குக் கிடைத்த பெரும் பொருளுடனும் ஆகஸ்ட் மாதம் பதினெட்டாம் நாளன்று முல்டானுக்கு விரைந்து சென்ருர். மேலும், தம்மை அவுரங்கசீப் தொடர்ந்துவருவதைக் கண்ட அவர் முல்டானை யும் விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. சிந்து ஆற்றின் போக்கில் சென்றுகொண்டிருந்த அவர் செப்டம்பர் மாதம் 13ஆம் தேதி தட்டா கோட்டையைச் சென்றடைந்தார். அப்போது அவுரங்கசீப் தமது நம்பிக்கைக்குகந்த அதிகாரிகளைத் தாராவைத் தொடர்ந்து செல்லுமாறு விடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. வங்காளத்தில் மீண்டும் ஷுஜா தொல்லை தரத் தொடங்கியதால் அவுரங்கசீப் முல்டானுக்குத் திரும்பவேண்டிய தாயிற்று.

ஷாஜஹானின் உடல்நலமின்மைபற்றிக் கேள்வியுற்றதும் வங்காளத்தில் இருந்த ஷுஜா பேரரசர் என முடிசூட்டிக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் 1658ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாத நடுவில் அவர் ஆக்ராவை நோக்கிப் புறப்பட்டார். அவரை எதிர்த்துப் போரிடுவதற்காக தாரா ஷுகோ தமது புதல்வரான சுலைமான், ராஜா சிங் ஆகியோரின் தலைமையில் வலிய படையொன்றை அனுப்பினர். இரு படைகளும் காசிக்கு அருகேயுள்ள பகதூர்பூரில் சந்தித்தன. அப் போரில் ஷுஜா தோல்வியுற்ருர். அதனுல், அவர் தமது மாநிலத்திற்குப் பின்வாங்கினர். ஆயின், இதற்கிடையில் அவுரங்கசீப், முராத் ஆகிய இவர்களின் ஒன்றுசேர்ந்த படைகளிடம் மே மாதத்தில் தார்மத், சமூகார் எனும் இடங்களில் தாராவே தோல்வி கண்டார். அதனுல் அவர் ஷுஜாவைத் துரத்திச் செல்வதைக் கைவிட்டுத் திரும்பிவருமாறு தமது புதல்வர் சுலைமானை அழைக்க வேண்டியதாயிற்று. அதே சமயத்தில் ஷுஜாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த வங்காள மாநிலத்துடன் மேலும் சில பகுதிகளைக் கூட்டுவதாக வாக்குறுதியளிக்கும் அன்பு நிறைந்த கடிதமொன்றை அவுரங்கசீப் அவருக்கு எழுதினர். அதில், 'முன்னுல் பலமுறை பீஹார் மாநிலத்திற்காகப் பேரரசரை

வேண்டினாய். இப்போது நான் அதனை உனக்கு அளிக்கிறேன். அதனை அமைதியாக ஆளுவதிலும், சிதைந்த உனது சக்தியைச் சரிசெய்துகொள்வதிலும் சிறிது காலத்தைக் கழிப்பாயாக. தாராவுடனான போரை முடித்து நான் திரும்பிவந்த பிறகு உனது பிற ஆசைகளை நிறைவேற்றிவைக்க முயலுகிறேன். நிலமோ, பணமோ, நீ விரும்பும் எதையும் உண்மையான சகோதரனாகிய யான் மறுக்க மாட்டேன்',[1] என எழுதியிருந்தார். ஆயின், அவுரங்கசீபையும் அவரது வழிகளையும் ஷுஜா நன்கு அறிந்திருந்தார். அதனால், அக் கடிதத்திற்கு அவர் அதிக மதிப்பு தரவில்லை. ஆயினும், அதனால் அவருக்குச் சிறிது அவகாசம் கிடைத்தது. தமது நிதி நிலைமையைத் திருத்தி அமைத்துக்கொள்ள அந்த வாய்ப்பினை அவர் பயன்படுத்திக் கொண்டார். தாராவைப் பின்தொடர்ந்து சென்ற அவுரங்கசீப் இப்போது (1658ஆம் ஆண்டு செப்டம்பர் மாதவாக்கில்) பஞ்சாபில் இருந்ததால் ஷுஜாவின் பேராசை மீண்டும் துளிர்த்தது. அரியணையைக் கைப்பற்றுதற்கான மற்றுமொரு முயற்சியில் ஈடுபடுவது என அவர் தீர்மானித்தார். அதற்கிணங்க அவர் 1658ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தமது படையுடன் பாட்னாவிலிருந்து புறப்பட்டார். ரோடாஸ், சுனார், பனாரஸ் போன்ற நகரங்கள் அவருக்குப் பணிந்தன. டிசம்பர் மாத மூன்றாம் வாரத்தில் அவர் அலகாபாத் வரை முன்னேறினார். ஆனால், அவுரங்கசீபின் உடன்பிறந்தவரில் யாரும் அவரைச் சரியாக அறிந்திருக்கவில்லைபோல் தோன்றுகின்றது. ஏனெனில், அவர் குன்றா ஆற்றலும் குறையாச் செல்வமும் கொண்டவர். தமது சகோதரரின் நடவடிக்கைகள் பற்றிய செய்தியை அறிந்தவுடன் அவர் பஞ்சாபிலிருந்து கடிதில் திரும்பினார். சிறிதும் ஓய்வின்றி விரைந்து வந்து அலகாபாத்திற்கு அருகேயுள்ள கஜ்வாவை அடைந்ததும் 1659ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் நாளன்று ஷுஜாவுடன் போராட ஆயத்தமானார். நடைபெற்ற போரில் ஷுஜாவின் படை படுதோல்வியடைந்தது. ஷுஜா ஓட்டமெடுப்பதன்மூலம் உயிர் தப்பினார். பின்வாங்கிய படையைத் தொடர்ந்து செல்லுமாறு மீர்ஜும்லாவை அவுரங்கசீப் அனுப்பிவைத்தார். அப் படைத் தலைவர் ஷுஜாவை வங்காளத்திலிருந்து தக்கணத்திற்கு விரட்டினார். அங்கிருந்து இறுதியாக 1660ஆம் ஆண்டு மே மாதத்தில் அரக்கான் எல்லைக்கு அப்பால் விரட்டியடித்தார். அதன் பிறகு ஷுஜாவைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவரும் அவரது குடும்

[1] **Sarkar, 'Aurangzeb'**, vol. ii, p. 137.

பத்தினரும் அரக்கான் மக்களால் கொலைசெய்யப்பெற்றிருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகின்றது.[1]

ஷுஜாவின் எதிர்ப்பைக் குலைப்பதற்காகக் கிழக்குப்பகுதிக்கு அவுரங்கசீப் திரும்பியபோது, அவர் தாரா ஷீக்கோவைத் தட்டா கோட்டையிலேயே விட்டுச் சென்றார். தாராவைப் பின்தொடரும் பொறுப்பைத் தமது முக்கிய அதிகாரிகளிடம் விட்டிருந்தார். அவர்கள் அவ் வாய்ப்புக்கொண்ட அவ்விளவரசரை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரட்டியடித்தனர். தட்டாவைவிட்டு வெளியேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, தாரா சிந்து கழிமுகப் பகுதியைக் கடந்து கட்சிற்குள் புகுந்தார். அங்கேயும் அவரால் அமைதியாக வாழமுடியவில்லை. அவரது ஆதரவாளர்கள் விரைவிலேயே அவரைவிட்டுப் பிரியத் தொடங்கினர். தமது நிலைமை ஆபத்தானதைக் கண்டதும் அவர் கத்தியவாருக்குப் புறப்பட்டார். அங்கே முதன்மையாயிருந்த தலைவர்கள் அவருக்குப் பல வெகுமதிகளையும் உணவுப் பொருள்களையும் அளித்தனர். இங்ஙனம் அவர்களுடைய உதவியுடன் தாரா ஷீக்கோ குஜராத்தில் தங்கி வாழமுடிந்தது. அம் மாநிலத்தின் ஆளுநரான ஷா நவாஸ்கான் என்பார் தாராவிடம் பரிவுகொண்டவராதலால் நகரத்தின் வாயில்களை அவருக்காகத் திறந்துவிட்டார். அதன்பிறகு சூரத்தைக் கைப்பற்றுவதில் தாராவிற்கு உதவி செய்தார். தாரா ஷீக்கோ ஏறக்குறைய ஐந்து வாரங்களுக்கு குஜராத்தில் தங்கியிருந்தார். அகமதாபாத்தின் கருவூலத்தில் முராதிற்குச் சொந்தமான ஏறத்தாழப் பத்து இலட்ச ரூபாய்களைக் கைப்பற்றி, அவற்றைக் கொண்டு 22,000 வீரர்களைக்கொண்ட புதிய படையொன்றையும் திரட்டினார்.

அச் சமயத்தில் தக்காணத்திற்குத் தப்பிச் செல்வதற்கு தாரா ஷீக்கோவிற்கு வாய்ப்பிருந்தது. அங்கே அவரது பகைவரான அவுரங்கசீப்பினால் அண்மைக் காலத்தில் அதிகமான தொல்லைகளுக்குள்ளான கோல்கொண்டா, பீஜப்பூர் சுல்தான்களின் உதவியை அவர் நிச்சயமாகப் பெற்றிருக்க முடியும். ஏனெனில்,

1 ஷுஜாவின் கதி என்னவென்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அரக்கானிலிருந்து ஜான்டக் எனும் டச்சு வணிகர் அவுரங்கசீப்பிற்குப் பின்வருமாறு எழுதினார்: 'அரக்கானில் வாழ்ந்த முகலாயர், பத்தான்கள் ஆகியவர்களின் தூண்டுதலின்பேரில் அரக்கான் மன்னரைக் கொன்று அந் நாட்டைக் கைப்பற்றும் சதியில் ஷுஜா இறங்கினார். தக்க சமயத்தில் சதி கண்டுபிடிக்கப்பெற்றதால் ஷுஜா அண்டையிலுள்ள காட்டிற்கு ஓடினார். இரக்கத்திற்குரிய அவ்விளவரசரைத் துரத்திச் சென்ற மாகினர் (Maghs) கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தினர். Sarkar எழுதிய 'Aurangazeb', Vol II. பக். 287. G. E. Harwy எழுதிய 'History of Burma' (1925) எனும் நூலில் 146-7ஆம் பக்கங்களையும் காண்க.

அவர்களுக்காக அவர் பேரரசரிடம் பரிந்து பேசிக் கடுமையற்ற உரிமை வாசகங்களைப் பெற்றுத் தந்திருந்தார். இங்ஙனம் அவர் களுடைய துணையோடும் ஆதரவோடும் அவர் அவுரங்கசீப் பிற்கு ஆபத்தான எதிரியாகி யிருக்கமுடியும். ஆனால், அவர், செய்திகள் பற்றி அமைதியான, சீரான முடிவு எடுக்கவோ, நெருக்கடி நேரத்தில் மனவுறுதியைக் காக்கவோ அருகதை யற்றவராக இருந்தார். அவரது பகைவர்களின் நடமாட்டத்தை நன்கு அறிந்து சொல்லக்கூடிய திறமையும் சீரிய அமைப்பும் கொண்ட ஒற்றர் படையும் அவரிடம் இல்லை. 1659ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவுரங்கசீப்பை ஷுஜா தோற்கடித்தார் எனும் வதந்தியை நம்பிய தாரா, தக்கணத்திற்குச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு, கிழக்குப் பகுதியில் அவுரங்கசீப் இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு, மேற்கிலிருந்து ஆக்ரா விற்குச் சென்று ஷாஜஹானை மீண்டும் அரியணையில் ஏற்றுவது எனத் தீர்மானித்தார். ஆக்ராவிற்குச் செல்லும் வழியில் ஆஜ்மீர் இருந்ததால், அதன் தலைவரான ராஜா ஜெஸ்வந்த் சிங்குடன் செய்தித் தொடர்பு கொண்டார். அந்த இராஜபுத்திரத் தலை வரும் உதவி செய்வதாக வாக்குறுதி தந்தார். அவரது வாக் குறுதியை நம்பிய தாரா 1659ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஆஜ்மீர் நோக்கிப் புறப்பட்டார். இதற்கிடையில் ராஜா ஜெய்சிங்கின் இடையீட்டின் விளைவாக ஜெய்வந்த்சிங் அவுரங்க சீப்பின் ஆதரவைப் பெறலானார். அதன் விளைவாகப் பண்பாட் டிற்குப் பெயர்போன இராஜபுத்திர இனப் பண்பிற்குப் புறம்பாக, தாராவைக் காட்டிக் கொடுப்பதென ஜெய்வந்த் சிங் தீர்மானித்தார். ஆஜ்மீரை நெருங்கிய பின்னர்தான் அவரது நயவஞ்சகம் தாராவிற்குத் தெரியவந்தது. இராஜபுத்திரத் தலைவர் ஒருவர் கொடுத்த வாக்கை மீறியது அவருக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. அவர் பரிதாபகரமான நிலையில் இருந்தார். ஏறக்குறைய ஒரு மாதப் பயண தூரத்தில் இருந்த தால், குஜராத்தில் அமைந்த அகமதாபாத்திற்குத் திரும்புவது என்பது இயலாத ஒன்று. அதே சமயத்தில் அவுரங்கசீப்பும் ஆஜ்மீருக்கு அருகே வந்து சேர்ந்தார். அதனால் போரினைத் தவிர்க்க முடியாதுபோயிற்று. அதனால் தாரா பின்வருமாறு கூறியதாக பெர்னியர் குறிப்பிடுவார்: 'இங்கே மடிவதும் நல் லதுதான்; போட்டி சரிசமமானதாக இல்லை எனினும், நாம் முழு மூச்சுடன் மற்றுமொரு முறை சண்டையிடுவோம்.'

ஆஜ்மீரிலிருந்து நான்கு கல் தொலைவிலிருந்த தோரை எனும் குறுகிய கணவாய்க்கு அருகே தாரா ஷீக்கோ நிலை கொண்டார். அங்கு இருந்துகொண்டு தம்மைத் தாக்கவந்த

வர்களின் பெரும் படையைத் தமது சிறிய படைகொண்டு தடுத்து நிறுத்த முடியுமென்று அவர் நம்பினர். எண்ணிக்கையில் மிகுந்த அவுரங்கசீப்பின் படையைச் சமதரையில் சந்தித்துப் போரிடுவதைத் தாரா தவிர்த்தது சரியான செயலேயாகும். எங்ஙனமெனில், காஃபிகான் குறிப்பிட்டதைப்போல, அவரது பகைவர்கள் அவர் நிலைகொண்டிருந்த இடத்தைக் கைப்பற்றுதற்காக 1659ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதியிலிருந்து 14ஆம் தேதி வரையில் மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து செய்த முயற்சிகள் பயன் தரவில்லை. நான்காவது நாளில்தான் தாரா ஷீக்கோ இறுதியாகத் தோல்வியுற்றார். அதற்கு இராஜபுத்திர வீரர்களின் தீவிரமான தாக்குதல் ஒருவகையில் காரணமாகும்; மற்றொரு காரணம் ஷாநவாஸ்கானின் திறமையின்மையாகும்.[1] இளவரசர் தாரா அகமதாபாத்திற்கு ஓடினர். ஆனால், இம்முறை அந் நகரத்தின் வாயில்கள் அவருக்கு எதிராக அடைபட்டுக் கிடந்தன. அதனல் அவர் தட்டாவிற்குத் திரும்பினர். அங்கேயும் அவருக்கு நலம் விளையவில்லை.

ஆயினும், அவர் அங்கிருந்து காண்டஹாருக்குத் தப்பிச் சென்றிருக்கலாம். நாட்டைவிட்டு ஓடிய அவரது முன்னோரான ஹுமாயூனைப்போலத் தமது சகோதரரும் இந்தியாவின் பேரரசரும், பழைமைப் பண்பு கொண்ட சுன்னி சமயப் பிரிவைச் சார்ந்தவருமான அவுரங்கசீப்பிற்கு எதிராக ஷியா சமயப் பிரிவைச் சார்ந்த பாரசீக மன்னரின் உதவியைத் தாராவும் பெற்றிருக்கக்கூடும். ஆனல், துரதிட்டவசமாக அவ் வழியைத்தாரா ஷீக்கோ மேற்கொள்ளவில்லை. அச் சமயத்தில்தான் அவ்வாய்ப்புக் கொண்ட அவ்விளவரசர், அவருடன் அலைந்து, அவரது துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட அவரது அன்பு மனைவியாம் நதீரா பேகத்தைப் பறிகொடுத்தார். அகதிகள் போன்று தாதரை அடைந்தபோது அம் மாதரசி உயிர்நீத்தார். அவரது மறைவால் தாரா துன்பத்தின் எல்லையைக் கண்டார். அதன் பிறகு அவர் உயிர்வாழ்வதில் அக்கறை காட்டவில்லை. தைமூரிய அரசகுலத்தினர் பல மனைவியரைக் கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தபோதிலும், பல பெண்களுடன் உறவாடுவதில் கட்டுப்பாடின்றியிருந்தபோதிலும், கணவன் மனைவி ஆகியோரிடையே நிலவும் தீவிரக் காதல் உணர்வினை அவர்கள் உணர்ந்தவர்களே

1 தமது திட்டங்கள் அனைத்தையும் அவுரங்கசீப்பிற்கு அறிவித்துவிட்டதாக ஷாநவாஸ்கான்மீது தாரா ஷீக்கோ ஐயங் கொண்டார். பெர்னியரும் அவ்வாறே கருதினர். ஆயின், பேராசிரியர் சர்க்கார் அவர்கள் இக்கருத்தை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. Sarkar எழுதிய 'Aurangazeb', Vol. ii, பக். 176 அடிக்குறிப்பையும் காண்க.

என்பதைப் பல முறை வெளியிட்டுள்ளனர்.[1] மாலிக் ஜீவன்கான், தாரா ஷீக்கோவிற்குக் கடன்பட்டவர்தான். ஆயினும், பற்றுறுதி யற்ற அந்த ஆஃப்கானிய அதிகாரியானவர் இளவரசரின் துயரம் மிக்க நேரத்தில் கடந்த காலத்தில் பெற்ற நன்மைகளை மறந்து, பின்தொடர்ந்து வந்தவர்களிடம் அவரைக் காட்டிக்கொடுத்து விட்டார். 1659ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் தேதி தாரா ஷீக்கோ, அவரது இரண்டாம் மைந்தரான ஸிபிர் ஷீக்கோ, புதல்வியர் இருவர் ஆகியோர் பகதூர்கானிடம் ஒப்படைக்கப் பெற்றனர். தில்லி நகரத்திற்கு வந்த ஒரு வாரத்திற்குப்பின் சிறைப்பட்ட இளவரசரை நகரின் கடைவீதிகளிடையே ஊர்வல மாகக் கொண்டுசென்றனர். ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி யன்றுதான் அந்த அவமானம் விளைவிக்கும் ஊர்வலம் நடை பெற்றது. அழுக்கு நிறைந்த சிறு பெண் யானையின்மேல் விதானமில்லாத அம்பாரியின்மீது தாராவை ஏற்றி அவரைப் பெருத்த அவமானத்திற்குள்ளாக்கினர். பதினான்கு வயது பாலகனான அவர்து மகன் ஸிபிர் அவர் பக்கத்தில் இருந்தான். அவர்களுக்குப் பின்னால் நாஸர் பெக் எனும் சிறைக்காவலன் உருவிய வாளுடன் அமர்ந்திருந்தான். எஜமானரின் கட்டளைக் கிணங்கக் கொலைசெய்வதற்கோ அல்லது கொடுந்தொழில் புரிவதற்கோ சிறிதும் தயங்காக் கொடியோன் அவன். உலகி லேயே செல்வ வளம் மிகுந்த அரசின் வாரிசும், முகலாயப் பேரரசர்களிலேயே படாடோபம் மிகுந்த பேரரசின் செல்வத் தினால் சீரழிந்த இளவரசருமான தாரா ஷீக்கோ இப்போது நெடும் பயணத்தின் கறை படிந்த முரட்டு ஆடையையும், சாதாரணமாக வறுமையில் கிடந்துழலுபவர் அணியும் கருங் காவி நிறங்கொண்ட தலைப்பாகையையும் அணிந்திருந்தார். கழுத்து அணியோ, வேறு அணிகலன்களோ அவர் அணிந் திருக்கவில்லை. அவரது கைகளில் விலங்கு இல்லையெனினும் அவரது கால்களைப் பிணைத்திருந்தனர். ஒரு காலத்தில் அவரது ஆடம்பர, மாட்சிமை தங்கிய வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட இடங்களுக்கு ஆகஸ்டு மாத வெயிலில் சுடுமாறு அவரை அழைத்துச் சென்றனர். அவமானத்தைத் தாங்க முடியாத தாரா, தலையை நிமிர்த்தவோ, தமது பார்வை யைத் திருப்பவோ இல்லை. 'துவண்ட கொடிபோல்' அமர்ந் திருந்தார்.[2] இந்த அவலக் காட்சியில் துரோகியான மாலிக் ஜவான்கான் தாரா ஷீக்கோவிற்குப் பக்கத்தில் குதிரைமேல்

1 Vincent Srnith எழுதிய 'History of India,' பக். 414.

2 Sarkar எழுதிய 'Aurangzeb,' Vol. ii, பக். 221.

வந்தது பொதுமக்களின் வெறுப்பினைத் தூண்டியது. அதன் விளைவாக மறுநாளன்று ஜிவான்கானுக்கு எதிராகக் கிளர்ச்சி தோன்றியது. தமது சகோதரரின் உயிருக்கு உலைவைப்பது என ஏற்கனவே அவுரங்கசீப் எண்ணிக்கொண்டிருந்தார். பொது மக்களின் கிளர்ச்சி அச் செயலை விரைவுபடுத்தியது. பற்றுறுதி யற்றவராய் இருந்தாலும், மரபு வழுவாத இஸ்லாமியச் சமயத் திற்குப் புறம்பாகச் சென்ற காரணத்தாலும், தாரா ஷீக்கோ மரண தண்டனை பெறத்தகுந்தவர் என முஸ்லிம் சட்ட நூல் வல்லார் தீர்ப்பளித்தனர். ஆகஸ்டு மாதம் 30ஆம் தேதி கொலை யாளிகள் ஸிபீர் ஷீக்கோவைத் தந்தையின் கரங்களிலிருந்து பல வந்தமாகப் பிரித்தனர். கடுமையான போராட்டத்திற்குப் பின் தாரா ஷீக்கோவின் தலையைத் துணித்தனர். பகைவர் உண்மை யில் இறந்துபட்டார் என்று அவுரங்கசீப் மனநிறைவு பெறுதற் காகத் தாராவின் தலையை அவரிடம் அனுப்பினர். பேரரசரின் ஆணையின்பேரில், தாராவின் சடலத்தை யானைமீது வைத்து இரண்டாவது முறையாக வீதிகளில் வலமாகக் கொண்டு சென்று, அதன் பின்னர் ஹுமாயூனின் கல்லறையில் ஒரு விதா னத்தின்கீழ்ப் புதைத்தனர்.

தாரா ஷீக்கோவின் மூத்த மகனான சுலைமான் ஷீக்கோவைப் பற்றி இனிக் குறிப்பிடலாம். அவரது கதியும், அவர்தம் தந்தை அல்லது சிறியதந்தையாரின் கதியை ஒத்திருந்தது. 1658ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பகதூர்பூரில் ஷுஜாமீது வெற்றி கொண்ட சுலைமானைத் திரும்பிவருமாறு அவரது தந்தையிட மிருந்து அழைப்பு வந்தது. தர்மாத்தில் பேரரசப் படைகள் அவுரங்கசீப்பிடம் படுதோல்வியுற்றதே அதற்குக் காரணமாகும். ஆயின், அலகாபாத்திற்கு மேற்கே நூறு கல் தொலைவிலிருந்த தாராவை சுலைமான் நெருங்கியபோது, 1658ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டாம் நாளன்று சமுகாரில் தாரா ஷீக்கோ அடைந்த படுதோல்விபற்றிய செய்தி எட்டியது. அத் தோல்வி யினால் ஷாஜஹான், தாராஷீக்கோ ஆகியோருக்கு இறுதியில் பெருங்கேடு நேர்ந்தது என்பதுபற்றி ஏற்கெனவே குறித்துள் ளோம். இளம் சுலைமான் குழப்பத்திலாழ்ந்தார்; எவ் வழியைக் கடைபிடிப்பது என்பது அறியாது அல்லலுற்றார். படையுடன் வந்து தில்லியில் தம்முடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவரது தந்தையார் விரும்பினார். ஆனால், ராஜா ஜெய்சிங் திலீர் கான் போன்ற பேரரசப் படைத்தலைவர்கள் தோல்வியுறும் கட் சியை ஆதரிக்க இனியும் தயாராக இல்லை. அதனால் அவர்கள் சுலைமானை விட்டுப் பிரிந்தனர். அவர்களைப் பின்பற்றி வேறு பலரும் வெளியேறினர். இங்ஙனம் சுலைமானிடம் இருந்த படை

யில் மூன்றில் ஒரு பகுதியே, அதாவது, ஏறத்தாழ 6,000 வீரர்களே இப்போது அவருடன் இருந்தனர். தில்லிக்குச் செல்லும் பாதையையும் அவுரங்கசீப்பின் படையினர் மறைத்திருந்தனர். அதனால் சுலைமான் ஷீக்கோ அலகாபாத்திற்குத் திரும்பினார். அரண்மனைப் பெண்டிரையும், உபரியான சொத்தையும், பெரும் பொருளையும் பர்ஹாவைச் சார்ந்த சையது காசிம்கானின் பொறுப்பில் அலகாபாத் கோட்டையிலேயே வைத்துவிட்டு, சுலைமான் கங்கையைக் கடந்து ஹரித்துவாரத்தை நோக்கி முன்னேறினார். ஆயினும், அப் பக்கத்திலும் பஞ்சாபிற்குச் செல்லும் வழியை அவுரங்கசீப்பின் படையினர் அடைத்திருந்தனர். எனவே, பொறுமை இழந்து, செய்வதறியாது நின்ற இளவரசர், கார்வால் குன்றுகளின் இந்து அரசரின் உதவியை நாடினார். அவ்வரசரும் துன்பத்தில் துவண்ட சுலைமானை விருந்தினராக ஏற்று உபசரித்தார். இளவரசரின் தகுதிக்கு ஏற்ற அரண்மனையொன்றில் தங்குமாறு செய்து கவனமாகப் பணிவிடை செய்து வந்தார்.

ஓராண்டுக் காலத்திற்கு சுலைமான் அமைதியாக வாழ்ந்திருந்தார். ஆனால், அந்த ஆண்டின் முடிவில் அகதியாக வந்த இளவரசரைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று அவுரங்கசீப், ராஜா பிரித்வி சிங்கை வற்புறுத்தத் தொடங்கினார். தமது விருந்தினரைக் காட்டிக் கொடுக்கலாகாது எனப் பிரித்விசிங் ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குத் திடமாக இருந்தார். ஆனால், அவரது புதல்வரும் வாரிசுமான மேதினி சிங் என்பார் அச்சம் காரணமாகவும், தில்லியிலிருந்து பெரும் பரிசு கிடைக்கும் என்ற ஆசை காரணமாகவும் தமது தந்தைக்கு மாறாக நடந்துகொண்டார். ராஜா ஜெய்சிங்கின் தலைமையிலும், அவரது புதல்வரான குமார் ராம்சிங்கின் தலைமையிலும் வந்த பேரரசப் படைகள் கார்வால் நாட்டின் எல்லையில் ஏற்கெனவே சில படைவீடுகளை அமைத்திருந்தன. அதன் பிறகு ஸ்ரீநகரின் மீது படையெடுத்துவருவதாகப் பயமுறுத்தின. எனவே, 1660ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் தேதியன்று இளவரசர் சுலைமானைக் குமார் ராம்சிங்கிடம் மேதினிசிங் ஒப்படைத்தார். ஏழு நாள்கள் கழிந்து 1661ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் தேதியன்று சுலைமானைத் தில்லிக்குக் கொண்டுவந்தனர். அதன் பின்னர் அவரது சிறிய தந்தையாகிய பேரரசர் அவுரங்கசீப்பின்முன் அவரைக் கொண்டு நிறுத்தினர். அவர் பரிவுடன் பின்வருமாறு பேசலுற்றார்: ‘அஞ்சவேண்டாம்; ஆபத்தொன்றும் நேராது. நீ அன்புடன் நடத்தப்பெறுவாய். எல்லாம் வல்ல இறைவனின்மீது நம்பிக்கையோடு இருக்கலாம். உனது

தந்தையான தாரா சமயத்தைவிட்டுக் கபிராக மாறியதால் தான் உயிருடன் வாழ அனுமதிக்கப்படவில்லை.'[1] அதன் பிறகு கைதியான சுலைமானைக் குவாலியரிலிருந்து அரசாங்கக் காவற் கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவருக்கு அளித்த வாக்குறுதிகளெல்லாம் காற்றில் பறந்தன. சிறிது சிறிதாக போஸ்தா (posta) விஷம் அல்லது அபின் தரும் கசகசா விஷத்தைத் தந்து அவரைக் கொன்றனர். 1662ஆம் ஆண்டு மே மாதத்தில் இளவரசர் சுலைமான் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அரியணைக்குப் போட்டியாக வரக்கூடியவர்கள் அனைவரையும் இப்போது அவுரங்கசீப் தீர்த்துக்கட்டிவிட்டார்.[2] 1659ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தாரா ஷீக்கோ கொல்லப்பட்டார். 1660ஆம் ஆண்டு மே மாதத்தில் ஷூஜா இந்திய எல்லைக்கப்பால் அரக்கானுக்கு விரட்டப்பெற்றார். 1661ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொலைக்குற்றத்திற்காக முராத் மரண தண்டனை அடைந்தார். தாரா ஷீக்கோவின் மூத்த மைந்தரான சுலைமான் ஷீக்கோ, சிறிதுசிறிதாக நஞ்சு அளிக்கப்பெற்று 1662ஆம் ஆண்டு மே மாதத்தில் மேலுலகம் சென்றார். 1648ஆம் ஆண்டு ஜூன் மாதம் எட்டாம் தேதியன்றே பேரரசர் ஷாஜஹான் ஆக்ரா கோட்டையில் சிறை வைக்கப்பெற்றார். புதிய பேரரசரான அவுரங்கசீப் ஆறு வாரங்கள் கழிந்து, அதாவது, ஜூலை மாதம் 21ஆம் தேதி அவசரமாக முடிசூட்டு விழாவை நடத்தினார். இங்ஙனம் குருதிக் கறையோடு துவங்கிய ஷாஜஹானின் ஆட்சி அதைவிட மேலும் அவல நிலையில் முடிவடைந்தது எனக் கூறலாம்.

**முடிவுரை:** 1627ஆம் ஆண்டிலிருந்து 1658ஆம் ஆண்டு வரையிலான ஷாஜஹானின் முப்பது ஆண்டுக் கால ஆட்சியை முகலாயர் ஆட்சியின் பொற்காலம் எனக் குறிப்பிடுதல் வழக்கம். வெளிப்படையாகப் பார்க்கும்போது அது வளம் மிகுந்த பகுதியாகக் காட்சியளிக்கின்றது. அன்னியப் போர்கள் அதிகமில்லை. அப்படியே இருந்தாலும் அவை முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல. உள்நாட்டில் அமைதி நிலவியது. செல்வ வளம் நிறைந்திருந்ததாகத் தோன்றியது. அரசாங்கக் கருவூலம் நிறைந்து வழிந்ததாகத் தென்பட்டது. தந்தையிடமிருந்தும் பாட்ட

1 Sarkar எழுதிய 'Aurangzeb', vol. ii, பக். 235.

2 தாரா ஷீக்கோவின் மகன் ஸிபிர் ஷீக்கோ, முராத்தின் மகன் இஸித் பக்ஷ் ஆகிய இளவரசர்கள் இருவரும் கொல்லப்படவில்லை. அவர்கள் சிறிய தந்தையின் கண்காணிப்பில் வளர்ந்துவந்தனர். இறுதியில் அவுரங்கசீப்பின் புதல்வியர் இருவரை அவர்கள் மணந்துகொண்டனர்.

ஞரிடமிருந்தும் அளப்பரிய செல்வத்தை ஷாஜஹான் மரபுரிமையால் பெற்றிருந்தபோதிலும், பாரசீகத்தில் வலிய அரசாங்கம் இருந்த காரணத்தால், சாத்தியமான இந்தியாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் இடையேயான வாணிபம் பெருகியபோதிலும், ஐரோப்பாவுடன் ஏற்பட்ட வாணிபத் தொடர்பினுல் முகலாயப் பேரரசிற்கு ஓரளவு இலாபம் வந்தபோதிலும், ஷாஜஹானின் ஆட்சி, முகலாயப் பேரரசிற்கும் அதன் பொருளாதார நலனுக்கும் சாவு மணியடித்தது எனலாம். ஆடம்பரமான அதிகாரிகளுக்காகவும், ஷாஜஹானின் ஆட்சியின் மாட்சியை என்றென்றும் நிலைபெறச் செய்யக்கூடிய அழகிய கட்டடங்களைக் கட்டுவதற்காகவும் பேரரசின் ஆணிவேர்போல் இருந்த பயிர்த்தொழிலிலும், பல கைத்தொழில்களிலும் ஈடுபட்டிருந்த மக்கள்மீது தாங்கமுடியாத சுமை வீழ்ந்தது. இங்ஙனம் நாட்டில் பொருளாதார நொடிப்புத் தோன்றலாயிற்று. அதுவே ஷாஜஹானின் வாரிசாக வந்தவரின் ஆட்சிக் காலத்தில், அக்பர், ஜஹாங்கீர் ஆகியோரிடமிருந்து வழிவழியாக வந்த பேரரசு அமைப்புக் குலைவதற்கு ஒரு முக்கியக் காரணமாக அமைந்துவிட்டது. மேலும், ஏற்கெனவே யாம் குறித்தவாறு, அரசர் என்ற முறையில் அக்பர் கடைப்பிடித்ததும், இந்துஸ்தானத்து மக்களின் ஆதரவைப் பெற்றுத்தந்ததோடு பேரரசை ஒருங்கிணைத்ததுமான தாராள, அகல் விரிவான மனப்பான்மையானது முகலாயரது ஆதிக்கம் வலுவடைந்ததும் கைவிடப்பெற்றது. அக்பரின் புதல்வரான ஜஹாங்கீர் இஸ்லாம் சமயத்தின்மீது கொண்ட ஆர்வம் காரணமாக குஜராத்தில் வாழ்ந்த ஜைனர்களின் இரத்தத்தைச் சிந்திஞர். பஞரஸ், மற்றும் பல இடங்களில் இருந்த இந்து கோயில்களை இடித்ததன்மூலமாக ஷாஜஹானும் சமயப் பொறையற்ற பிரிவினை மனப்பான்மையை வெளிப்படுத்திஞர். அவுரங்கசீப் பிற்காலத்தில் இக் கொள்கை முழுமை பெற்றது. சிலைகளைவழிபட்ட இந்துக்களை மட்டும் அவர் துன்புறுத்தவில்லை; தக்கணத்திலிருந்த ஷியா அரசுகளின் அழிவிற்கும் திட்டம் தீட்டிஞர். அவற்றை அழித்துப் பேரரசோடு இணைத்துக்கொண்டார்.

# 5. அவுரங்கசீப், 1658-1707

## அவுரங்கசீப்பின் ஆட்சி; அந்த ஆட்சிக் காலத்தின் பிரிவுகள்

ஐம்பது ஆண்டுகளுக்கு நீடித்திருந்த அவுரங்கசீப்பின் ஆட்சியை இரு சமமான பிரிவுகளாகப் பிரிப்பது இயல்பு. ஒவ்வொரு பிரிவும் இருபத்தைந்து ஆண்டுகள் நீடித்திருந்தது. அண்மைக் கால அறிஞர்[1] குறிப்பிடுவதைப் போல ஒவ்வொரு பிரிவிலும் நன்கு வரையறுக்கப்பெற்ற பண்புகள் மேலோங்கி நின்று, ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துக் காட்டுகின்றன. இவற்றில் முதலாவதான காலப்பிரிவில், அதாவது, 1658 முதல் 1681 வரை பேரரசர் தில்லியிலோ அல்லது ஆக்ராவிலோதான் தங்கியிருந்தார். அநேகமாகப் பொது ஆட்சித்துறை, படைத் துறை சம்பந்தமான முக்கிய மாறுதல்கள் அனைத்தும் வட இந்தியாவைச் சார்ந்தனவாகவே அமைந்தன. தென்னிந்தியா வானது நெடுந்தொலைவில் உள்ளது போன்று அநேகமாக முக்கியமற்றதாகக் காட்சியளித்தது. அவரது ஆட்சியின் பிற் பகுதியில் நிலைமை தலைகீழாக மாறியது. வட இந்தியாவில் இருந்த அரசியல் ஈர்ப்புத்தானம் தென்னிந்தியாவிற்கு மாறியது. தமது குடும்பத்தோடும், அரசவையினரோடும், படையின் பெரும் பகுதியோடும் பேரரசர் 1681ஆம் ஆண்டில் தெற்கு நோக்கிப் பயணமானார். அதிலிருந்து அவர் இறக்கும்வரையில் தக்கணத்து சுல்தானியங்களோடும் மராத்தியரோடும் நீண்ட, பயனற்ற போரில் காலத்தைக் கழித்தார். பீஜப்பூர், கோல் கொண்டா ஆகிய அரச குலங்களை அழிப்பதில் அவர் வெற்றி பெற்றார் எனினும், அவர் வெறுத்து ஒதுக்கிய இந்துக்கள் புதி தாகத் தோற்றுவித்த அரசினை அழிக்க முடியவில்லை. மராத்தி யரின் போட்டியைச் சமாளிப்பதற்காகப் பேரரசின் பொருள்கள்

[1] J. N. Sarkar எழுதிய 'Aurangzeb'.

அனைத்தும் தக்கணத்தில் குவிக்கப்பெற்றிருந்தன ஆயின், அளவிட முடியாத பொருளும் அதிக காலமும் செலவழிந்த போதிலும் பிரச்சினை தீராமலே இருந்தது. அப்போராட்டம் பேரரசிற்கு அழிவு தருவதாக அமைந்தது. பின்வரும் பக்கங்களில் குறிப்பிடப்போவதைப் போல அது வேறு சில காரணங்களோடு சேர்ந்து முகலாயப் பேரரசின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது. அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் பேரரசின் சீர்குலைவு வெளிப்படையாகத் தோன்றலாயிற்று. 1658 ஆம் ஆண்டில் அவர் அரியணையேறியபோது முகலாயப் பேரரசு செல்வவளம் கொழிக்கும் அரசாகத் தோற்றமளித்தது. ஆயினும், 1707 ஆம் ஆண்டில் அவர் இறக்கும்போது சீர்குலைவின் குறிகள் தெளிவாகத் தெரியலாயின.

அக்பரின் மேதைமையினால் உருவாக்கப்பெற்று ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோரால் அநேகமாகச் சிதையாது காக்கப்பெற்ற பேரரசு எனும் பெருமாளிகையானது நேரவிருந்த அழிவின் சின்னங்களை வெளிப்படுத்தியது. அவுரங்கசீப் இறந்து இருபது ஆண்டுகளில் அது அடியோடு அழிந்தது. அவுரங்கசீப்பின் ஆட்சிபற்றி அறிந்துகொள்வதில் பிற்கால முகலாயரின் வரலாறு தனிச்சுவை யூட்டுகிறது.

### பேரரசர் பதவியேற்றல்

அவுரங்கசீப் பேரரசைக் கைப்பற்றியதுபற்றி முன் அத்தியாயத்திலேயே குறிப்பிட்டோம். 1658ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் தேதியன்று சடங்குகள் அதிகமின்றி அவுரங்கசீப் அரியணையேறினார் என்பதையும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஆயின், முறையான முடிசூட்டு விழாவை ஒத்திப்போட்டார் என்பதையும் கண்டோம். 1659ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவுரங்கசீப் 'ஆலம்கீர்' எனும் விருது பெயரைத் தாங்கிய போதும், அவரது பெயரால் குத்பா வாசிக்கப்பட்டபோதும்தான் அவர் தம் உண்மையான முடிசூட்டு விழாச் சடங்கு முற்றுப்பெற்றது. அப்போது இன்றியமையாது தேவைப்பட்ட சில துயர்துடைப்பு நடவடிக்கைகளும் முடிசூட்டு விழாவையொட்டி எடுக்கப் பெற்றன.

### பஞ்சமும் பரிதவிப்பும்; உதவி நடவடிக்கைகள்

165‍7 முதல் 58 வரையில் நடைபெற்ற அரசுரிமைப் போரின் போது பேரரசின் பல பகுதிகளில் பொதுத்துறை சார்ந்த அரசாட்சி வீழ்ச்சியுற்றது. அரசாங்கம் செயலற்று இருந்த

தோடு மழை பெய்யத் தவறியதால் நிலைமை மேலும் மோசமாகியது. பஞ்சகால விலையில்தான் தானியங்கள் கிடைத்தன. மிகுந்த கண்டிப்புடனும் தீவிரமாகவும் அரசாங்க அதிகாரிகள் தண்டிய பல உள்நாட்டுக் கலால் வரிகளைச் செலுத்துவதை மக்கள் பெருஞ்சுமையாக உணர்ந்தனர். பொதுவாக இருந்த நிலைமைபற்றிக் காஃபிகான் பின்வருமாறு எழுதுவார்: 'மக்களுக்கு உதவி அளிக்கவும் அவர்களின் துயர்துடைக்கவும் என்று நெடுஞ்சாலைகள், எல்லைகள், துறைகள் ஆகிய இடங்களில் இருந்து தண்டுவதன்மூலமாக அரசாங்கத்திற்குப் பெருமளவு வருவாய் அளித்த 'ராதாரி' (rahdari) எனும் சுங்க வரியைப் பேரரசர் வஜா செய்தார்.[1] நாடு முழுவதிலும் வணிகர்கள், வியாபாரிகள், புலால் விற்போர், மட்கோவர், பச்சைக் காய்கறி விற்பனையாளர், ஒப்பனைக் கலைஞர், அணிகலம் செய்வோர், நிதியகத்தார் போன்ற ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய 'பந்தாரி' (pandari) எனும் மனை அல்லது வீட்டு வரியும் நீங்கி, இத் தலைப்பில் சந்தையில் இருந்த ஒவ்வொரு துண்டு மனைக்கும் ஒவ்வொரு கடைக்கும் சட்டப்படி அரசாங்கத்திற்குத் தீர்வை கிடைத்து வந்தது. அதன்மூலமாகப் பல இலட்ச ரூபாய்கள் அரசாங்கத்திற்கு வருவாய் வந்தது. ''சார்-ஷுமாரி' (sar-shumari) 'பஸ்–ஷுமாரி' (buz-shumari) (வெள்ளாடுகளின் மீதான வரி), பஞ்ஜராக்களில் இருந்துவந்த 'சராய்' (charai) (கால்நடை மேய்ப்பதற்கான வரி) போன்ற முறையானவும் முறையற்றவுமான பல தீர்வைகள் விதிக்கப்பெற்றன. மேலும், முகம்மதிய சாதுக்களுக்கான திருவிழாக்களின்போது நடைபெறும் சந்தைகளிலிருந்தும், நாட்டின் பல பகுதிகளில் இந்து கோயில்களுக்கு அருகே இந்துக்கள் கொண்டாடும் திருவிழாக்களின்போது இலட்சக்கணக்கான மக்கள் கூடிப் பல பொருள்களை வாங்குவது விற்பது போன்ற செயல்களில் ஈடுபடும்போதும் கொள்ளப்பெறும் 'துவாணு' எனும் வருவாயும் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. மதுபானங்கள், சூதாட்ட மனைகள், விலைமாதர் விடுதிகள் ஆகியவற்றின்மீதான வரிகளும், தண்டப் பணமும், நேர்த்திக் கடன் பொருள்களும், கடன்காரர்களிடமிருந்து அரசாங்க மாஜிஸ்ட்ரேட்டுகளின்மூலமாக மீட்கப்பெற்ற பணத்தில் கிடைக்கும் கால்பகுதி போன்றவையும் அரசாங்கத்

1 'அரசருக்குச் சொந்தமான நிலங்களில் மட்டும் சாலைக் காவல்வரி (ராதாரி) ஆண்டொன்றிற்கு 25 இலட்ச ரூபாய்கள் தந்தது. ஜாகிர்தார்கள், ஜமீன்தாரகள் ஆகியோருடைய பொறுப்பில் இருந்த நிலங்களிலிருந்து கொள்ளப்பெற்ற 'ராதாரியும்' அரசாங்கச் சிப்பந்திகள் கோரிப் பெற்ற இலஞ்சத் தொகைகளும் சேர்ந்து வணிகருக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தின என்று கூறினால் தவறாகாது.' Sarkar, 'Aurangzeb', vol. iii, பக். 89.

திற்கு வரவாய் இனங்களாயின. இவையும் இவைபோன்று ஏறக்குறைய எண்பது இத, வரிகளும் பல கோடி ரூபாய்களை அளித்தன. அவையனைத்தையும் இந்துஸ்தானத்தின் எல்லாப் பகுதிகளிலும் அவுரங்கசீப் நீக்கினர். இவையேயன்றி தானியங்களின் அகவிலையைக் குறைப்பதற்காக முறையாக இருபத்தைந்து இலட்ச ரூபாய்கள் வருவாய் அளித்த தானியங்களின் மீதான வரியையும் தள்ளிவைத்தார்.[2]

இத் தீர்வைகளிற் பலவற்றைப் பதினன்காவது நூற்ருண்டிலேயே பிரோஸ்ஷா துக்ளக் நீக்கியிருக்கிருர். அதன் பிறகு அக்பரும் அவ்வாறே செய்தார். ஆனல், பிற்கால அரசர்கள் அவற்றினை மீண்டும் விதித்தனர். அதே போன்று பேராசை கொண்ட அதிகாரிகளும் ஜமீன்தார்களும் தலத்தில் அவற்றை மீட்டனர். பின்வரும் அதிகாரம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதைப் போல இப்போதும் அவுரங்கசீப்பின் ஆணைகள் பெரும்பான்மையில் பயனற்றுப்போயின.

### அயல்நாட்டுத் தூதுக் குழுக்கள்

1659ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவுரங்கசீப் இரண்டாவது முறையாக முடிசூட்டிக்கொண்டு இரண்டு ஆண்டுகள் கழித்து இந்தியாவுடன் வாணிபத் தொடர்பு கொண்ட இஸ்லாமிய நாடுகளிலிருந்து பல தூதுக் குழுக்களை அன்னர் வரவேற்ருர். முகலாய அரசவையின் ஆடம்பரத்தைக் கண்டு அத் தூதுவர்கள் வியந்தனர். அன்னிய நாட்டு அரசர்களுக்கும் அவர்களுடைய தூதுவர்களுக்கும் பரிசு பொருள்களை வாரியிறைத்து அவர்தம் கண்களை மறைப்பது முதலில் அவுரங்கசீப்பின் கொள்கையாய் இருந்தது என்ருலும், அதன்மூலமாக அவர் தந்தைக்கும் உடன்பிறந்தவர்களுக்கும் இழைத்த கொடுமைகளை வெளியுலகத்து இஸ்லாமியர் மறக்குமாறு தூண்ட அல்லது பணத்தை வாரியிறைக்கும் நிலையில் இருந்த வெற்றிகரமான செயல்வீரர் என்ற முறையிலும் இந்தியாவின் அளப்பரும் செல்வத்தின் அதிபதி என்ற வகையிலும் தமக்கு அவர்கள் மரியாதை அளிக்குமாறு செய்ய அவுரங்கசீப் எண்ணினர் என்று பேராசிரியர் சர்க்கார் குறிப்பிடுவார்.[2] இவ்வாறு வந்த தூதுக் குழுக்களில் பாரசீகம், பாஸ்ரா, மவாரா–உன்–நஹர் (Mauvara-un-Nahr), ஆகிய இடங்களிலிருந்தும் மெக்காவின் ஷெரீஃப்,

1 Elliot and Dowson, vol. vii, பக். 246—47.

2 Sarkar, 'Aurangazeb', vol. iii; பக். 115.

அபிசீனிய அரசர் ஆகியோரிடமிருந்தும், டச்சுக் கிழக்கிந்தியக் குடியேற்றங்களிலிருந்தும் வந்த தூதுவர்கள், முக்கியமானவர்கள். பெர்னியர், மனூக்கி, அக் காலத்து வாழ்ந்த பாரசீக அறிஞர் ஆகியோர் பேரரசருக்கும் வெளிநாடுகளிலிருந்து வந்த சில தூதுவர்களுக்குமிடையேயான சந்திப்புபற்றி எழுதியுள்ளனர். பாரசீகத்தின் 2 ஆம் ஷா அப்பாஸ் அனுப்பிய தூதரான புதாக் பெக் (Budaq Beg) என்பாருக்குப் பேரரசர் அளித்த வரவேற்புபற்றிப் பேராசிரியர் சர்க்கார் கூறியவாறு எடுத்தெழுதுதல் சாலச் சிறந்த ஒன்றும். 1661ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதியன்று அத் தூதுவர் தில்லி வந்தடைந்தார். அளிக்கக்கூடிய மரியாதைகள் அனைத்தும் அவருக்கு அளிக்கப் பெற்றன. 'தூதுவர் வரும் சாலையில் ஒரு காத தூரத்திற்குப் படைவீரர்கள் பாதையின் இருமருங்கிலும் நின்றிருந்தனர். பிரதான வீதிகளில் இருந்த கடைகளும், வீட்டுச் சாளரங்களும் நன்கு அலங்கரிக்கப்பெற்று இருந்தன. இன்னிசை முழங்க, தாரைகளும் தப்பட்டைகளும் ஒலிக்க, பல அதிகாரிகள் உடன்வர, அத் தூதுவர் அந்தச் சாலைகளின் வழியே அழைத்துவரப்பெற்றூர். கோட்டை அல்லது அரசர் வாழ்ந்த அரண்மனையில் அவர் நுழைந்தபோது பீரங்கிகள் முழங்கி வணக்கம் தெரிவித்தன. ஏறக்குறைய ஒரே உயரமும், தோற்றமும், நீண்ட கைகால்களும், பெரிய மீசையும் கொண்ட கம்பீரத் தோற்றமுடைய 500 குதிரை வீரர்கள் நன்கு அலங்கரிக்கப்பெற்ற பரிகளின்மீது ஆடம்பரமாக அமர்ந்துவர, அவர்களுக்கு முன்னுல் அத் தூதர் வந்தது கண்கொளாக் காட்சியாக அமைந்தது'.[1] அவரைப் பேரரசர் மிகுந்த மரியாதையுடன் வரவேற்றூர். அவர் கொண்டுவந்த பரிசு பொருள்களைக் கண்டு மகிழ்வெய்தினூர். 'அவற்றுள் விரைந்து செல்லும் 66 பாரசீகப் பரிகளும், 27 காரட் எடையும் 60,000 ரூபாய் மதிப்புக் கொண்ட வட்டவடிவ முத்தும் அடங்கும். அவை அனைத்தின் மொத்த மதிப்பு 4,22,000 ரூபாய்களாகும்'.[2] அரசவையில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்த பிறகு ஜுலை மாதம் 27ஆம் தேதியன்று பேரரசரிடமிருந்து 5,35,000 ரூபாய்கள் பெறுமானமுள்ள ஏராளமான பரிசு பொருள்களைப் பெற்றுக்கொண்டு அத் தூதர் தம் நாட்டிற்குப் பயணமானூர்.

### கிழக்கு எல்லையில் போர்கள், 1661-6

வட இந்தியா முழுவதையும் அக்பர் வென்று உறுதியான அரசாங்கத்தை அமைத்தபிறகு இந்துஸ்தானத்தின் அமைதி

1 Sarkar எழுதிய 'Aurangzeb', vol. iii, பக். 122.
2 Sarkar எழுதிய 'Aurangzeb', vol. iii, பக். 123.

யைக் குலைப்பதற்கு யாதொன்றும் நடைபெறவில்லை. அவரது வழித்தோன்றல்களான ஜஹாங்கீரும் ஷாஜஹானும், ஏற்கெனவே குறித்தவாறு, காண்டஹாரைத் தங்கள் வசம் வைத்துக் கொள்வதற்கென்று பாரசீகத்தின் ஷாவுடன் போரிடுதல் அல்லது தெற்கே இருந்த ஷியா முஸ்லிம் அரசுகளை அழித்தலிலே முக்கியக் கவனம் செலுத்தினர். வட இந்தியாவின் எல்லைக்குள் அதிகம் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்த அவுரங்சீபின் அதிகாரிகளும் தங்களுடைய வலிமையைக் காட்டுதற்குக் கிழக்கு எல்லையில் வாய்ப்பிருந்தது.

முகலாயப் பேரரசின் வடகிழக்குக் கோடியில் குச்பீஹார், அஸ்ஸாம் அரசுகள் விளங்கிவந்தன. நாட்டின் இப் பகுதி இயற்கை அரண் கொண்டதாக அமைந்துள்ளது. இதனைச் சுற்றிலும் கடத்தற்கரிய அடர்ந்த காடுகளும், மரங்கள் மலிந்த மலைகளும், பாறைகள் நிறைந்த பள்ளத்தாக்குகளும் காணப் பெறுகின்றன. அதனால் தாக்கவரும் படைகள் இந்தப் பகுதிக்குள் ஊடுருவிவருதல் அருமையே. இங்ஙனம் நீண்ட காலத்திற்கு இவ்விரு கிழக்கு அரசுகளும் இந்தியாவின் மீது படையெடுத்துவந்த முகம்மதியப் படையெடுப்பாளர்களினால் தொல்லையுறவில்லை. இவற்றில் வாழ்ந்த மக்களும் உரிமையுடன் கூடிய தேசிய வாழ்க்கை வாழ்ந்துவந்தனர். எவ்வாறாயினும், பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் முகலாயப் பேரரசின் எல்லைக் கருகே அமைந்த குச்பிஹார் அரசானது தில்லிப் பேரரசரின் சக்தியை உணரத் தலைப்பட்டது. உள்நாட்டுப் பூசல்கள் காரணமாகவும் அரசு சீர்குலைந்த காரணத்தாலும், காமரூப மாவட்டமும் சங்கோஷ் ஆற்றிற்குக் கிழக்கே அமைந்த பகுதியும் குச்பீஹாரின் மன்னரான நரநாராயணரின் உறவினரான ரகுதேவின் தலைமையில் உரிமை பெற்ற தனியரசாக விளங்கத் தொடங்கின. இவ்விதம் தோன்றிக் குடும்பத் தகராறு காரணமாக ரகுதேவின் மகனும் வாரிசுமான பரீட்சித்தின். நாட்டைத் தாக்குமாறு நரநாராயணரின் மகனும் வாரிசுமான இலட்சுமி நாராயணன் என்பார் தக்கண்த்தை ஆண்ட முகலாய ஆளுநரைத் தூண்டினார். அதன் விளைவாக முகலாயர் காமரூப நாட்டை வென்று, 1612ஆம் ஆண்டில் அதனைப் பேரரசோடு இணைத்துக்கொண்டனர். இங்ஙனமாகக் கிழக்கு அஸ்ஸாமில் வாழ்ந்த அஹோம் அரசர்களோடு முகலாயர் தொடர்பு கொள்ளலாயினர்.

பதின்மூன்றும் நூற்றாண்டில் மேல்பர்மாவிலிருந்து அஸ்ஸாமிற்கு வந்த மங்கோலிய இனத்தைச் சார்ந்த மக்களே

அஹோம்கள் என அழைக்கப்பெற்றனர். அஸ்ஸாமின் பழங் குடி மக்களைக் காட்டிலும் உடலுறுதியும் போர்க்குணமும் கொண்ட அவர்கள் வெகு விரைவிலேயே தங்களது ஆதிக் கத்தை ஏற்படுத்திக்கொண்டனர். பதினைந்து, பதினாறுவது நூற்றாண்டுகளிலும் அஹோம் அரசின் எல்லை தொடர்ந்து விரி வடைந்துவந்தது. ஆயின், கர்லப்போக்கில் இந்திய நாக ரிகமும் இந்து சமயமும் அவர்கள்மீது செல்வாக்குச் செலுத்தத் தொடங்கின. குச்பீஹார் குடும்பங்களோடு அவர்கள் மண வினைத் தொடர்பு கொண்டனர். இந்து குருமாரையும் தொழிற் கலைஞர்களையும் அஸ்ஸாமிற்குள் வர அனுமதித்தார். இங்ஙனம் ஐம்பது ஆண்டுகளுக்குள் அஹோம் மன்னர்கள் ஆண்ட பகுதி யில் திருமாலுக்கு என்று எடுத்த கோயில்கள் ஏராளமாக எழுந் தன. அஹோம் அரசர்களும் அவர்களுடைய குடிமக்களும் இந்து சமயத்தையும் பெயர்களையும் ஏற்றுப் போற்றலாயினர். பதினாறுவது நூற்றாண்டின் இறுதியில் அவர்கள் அநேகமாக முற் றிலும் இந்துக்களாகவே மாறிவிட்டனர் எனலாம். காஃபிகான் கூறுவது போல, ‘அவர்கள் இந்தியாவில் கடவுட் படிமங்களை வணங்குவோருடன் ஒன்றறக் கலந்துவிட்டனர்.’ ஆயின், அவர்கள் எத்துணை தான் இந்து கருத்துகளை ஏற்றுக்கொண்ட போதிலும், இறந்தவரைப் புதைத்தல் போன்றவற்றில் பழைய பழக்கங்களையே கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் இறந்தவரை அடக்கம் செய்யும் பழக்கத்தைப்பற்றி முஸல் மான் வரலாற்று அறிஞரான காஃபிகானே பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்: ‘நாட்டின் அரசரோ அல்லது பெரும் ஜமீன் தாரோ இறந்தால், அவர்கள் நிலத்தில் பெருங்குழி தோண்டினர் அல்லது நிலவறையொன்று கட்டினர். அதில் மாண்டவருடைய மனைவியர், காமக்கிழத்தியர், பயன்படுத்திய குதிரைகள், ஆடை அணிகலன்கள், கம்பளங்கள், பொன் வெள்ளியினாலான பாத் திரங்கள், தானியங்கள் முதலானவற்றையும் வைத்தனர். மேலும், அந் நாட்டு மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்களை யும், மனைவியரும் பிரபுக்களும் பயன்படுத்திய அணிகலன் களையும், பல நாள்களுக்குப் போதுமான கனிகளையும் நறுமணப் பொருள்களையும் வைத்தனர். இறந்தவருடைய இறுதி யாத் திரைக்குத் தேவையான பொருள்கள் இவை என அவர்கள் கொண்டனர். இவற்றை யெல்லாம் திரட்டிக் கல்லறைக்குள் வைத்த பிறகு அதன் கதவை அடைத்தனர்.’[1]

1 Elliot and Dowson, vol. vii, பக். 264-5. முகலாயப் படைவீரர்கள் இக் கல்லறைகளைத் திறந்து அவற்றில் இருந்த பெருமளவிலான பொன், வெள்ளி முதலானவற்றை எடுத்துக்கொண்டனர் எனவும் இந் நூலாசிரி யர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, 1612ஆம் ஆண்டில் காமருபத்தை வென்று பேரரசுடன் இணைத்துக்கொண்டதால், கிழக்கு அஸ்ஸாமில் வாழ்ந்த அஹோம் மன்னர்களுடன் முகலாய அரசாங்கம் தொடர்பு கொள்ளவேண்டி வந்தது. முகலாயருக்குச் சொந்தமான காமருப எல்லையைத் தாக்குவதிலேயே குறியாக இருந்த அஹோம்களுடன் நீண்ட போரொன்றில் ஷாஜஹான் ஈடுபடவேண்டியிருந்தது என காஃபிகான் குறித்துள்ளார். 'வங்காளத்தில் இருந்த பேரரசின் பகுதிகளை அவர்கள் தாக்குவது வழக்கமாக இருந்தது. குடியானவர்களையும் முசல்மான்களையும் அவர்கள் சிறைபிடித்துச் சென்றனர். மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பெருஞ் சேதம் விளைந்தது. முகம்மதிய சமயத்திற்குப் பேரவமானம் ஏற்பட்டது.'[1]

வாரிசுரிமைப் போர் நடந்துகொண்டிருந்தபோது (1656-8) கிழக்கு எல்லைப் பாதுகாப்பற்றிருந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்ட குச்பிஹாரர், அஸ்ஸாம் ஆகியவற்றின் அரசர்கள் பேரரசின் பகுதிகளைத் தாக்கிக் காமருபத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். மூன்றுண்டுகட்குத் தொல்லையேதும் இன்றி வாழ்ந்தனர். ஆயின், 1660ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்ததும், அவர்களுடைய செயலுக்கு வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் காலம் வந்தது. பேரரசு இழந்த பகுதிகளை மீட்குமாறும், மறக்க முடியாத அளவில் அஸ்ஸாமியருக்குப் பாடங் கற்பிக்குமாறும் டாக்காவின் ஆளுநரான மீர் ஜும்லாவிற்கு அவுரங்கசீப் ஆணையிட்டார்.

மீர் ஜும்லாவும் 1661ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டாக்காவிலிருந்து புறப்பட்டார். அவர் தம்முடன் 12,000 குதிரைகளையும் 30,000 காலாட் படையினரையும் கொண்டுசென்றார். மேலும், பீரங்கிப் படையையும் முற்றுகைக்கு வேண்டிய பொருள்களையும் எடுத்துச் சென்றார். அவையேயன்றி, அந்தப் பகுதிகளில் போரிடுவதற்கு இன்றியமையாது தேவைப்பட்ட படகுகள் பலவற்றையும் கொண்டுபோனார். இங்ஙனம் அவர் மூன்று வாரகாலத்தில் குச்பீஹாரின் தலைநகரை அடைந்தார். அந்நாட்டு மன்னர் ஏற்கெனவே பூடானுக்குத் தப்பி ஓடிவிட்டார். அவரது மகன் முகலாயரிடம் பணிந்தார். குச்பீஹார் பேரரசோடு இணைக்கப்பெற்றது. 'கான் கானனை' மீர் ஜும்லா பேரரசரின் பெயரால் குத்பாவைப் படிக்குமாறும், நாணயங்களை

[1] Elliot and Dowson, vol. vii, பக். 264-5.

வெளியிடுமாறும் செய்தார். குச்பீஹாரில் இருந்த பழைய அரசாங்கம் அழிக்கப்பட்டது. அதன் தலைநகரில் முஸ்லிம் படையொன்று நிறுத்தப்பெற்றது. இருவாரங்கட்குப் பிறகு அஸ்ஸாமியரைத் தண்டிப்பதற்காக முகலாய கவர்னர் குச்பீஹாரை விட்டுச் சென்ருர். படையெடுத்துச் சென்ற சேனைக்கு இயற்கை தந்த இன்னல்களையெல்லாம் சாதாரணப் போர்வீரர்களுடன் பகிர்ந்துகொண்டு மூன்றரை மாதம் வெற்றிகரமாக முன்னேறி, 1662ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17ஆம் தேதியன்று அஹோம் நாட்டின் தலைநகரை அடைந்த மீர் ஜம்லா போற்றுதற்கு உரியவர். எதிர்த்து நின்ற எதிரிகளின் காவற்படைகள் எளிதில் வீழ்ச்சியுற்றன. அஹோம்களுக்குச் சொந்தமான முக்கியக் கோட்டைகள் முகலாயர் வசம் வந்தன. அவற்றை முஸ்லிம் படைவீரர்கள் காத்துவரலாயினர். இராஜா ஜயத்வாஜ் தமது தலைநகரையும் சொத்துகளையும் படையெடுப்பாளர் கையில் சிக்குமாறு விட்டு ஓட்டமெடுத்தார். 'அஸ்ஸாமிலிருந்து பல பொருள்கள் முகலாயருக்குக் கிடைத்தன. அவையாவன : யானைகள் 82, ரொக்கமாக 3 இலட்ச ரூபாய்கள், பீரங்கிகள் 675, சுழல் பீரங்கிகள் 1343, 'ராம்சங்கிஸ்'[1] (Ramchangis) 1200, பழங்காலத் துப்பாக்கிகள் 6750, வெடிமருந்து 340 மணங்கு, படகுகள் ஆயிரத்துச் சொச்சம், ஒவ்வொன்றும் 10 முதல் 1000 மணங்கு தானியங்கள் கொண்ட களஞ்சியங்கள் 173.'[2]

தலைநகரைப் படைகொண்டு கைப்பற்றியதோடு மீர் ஜம்லாவின் வெற்றி முடிவடைந்தது. பாதுகாக்கும் எதிரிகள் செய்யமுடியாததை இயற்கை செய்தது. மழைக்காலம் வந்த காரணத்தால் மீர் ஜம்லாவின் படைகள் பாடிவீடுகளில் சென்று தங்கவேண்டி வந்தது. அங்கே அவர்கள் உடல்நலத்திற்கு ஒவ்வாத தட்ப நிலையாலும் உணவுப் பற்றுக்குறையாலும் அவதியுற நேர்ந்தது. 'முகலாயர் பாசறையில் நாள்தோறும் காய்ச்சலும் குருதிக் கழிச்சலும் ஆயிரம் பேரைக் கொண்டுசென்றன. மருந்திஞல் பயன் ஏற்படவில்லை. ஏராளமானவர் இறந்துபட்டதால் அவர்களை முறையாக அடக்கம் செய்யக்கூட முடியவில்லை. முகலாயரது பாசறையில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இதமான உணவோ அல்லது வசதியோ கிடைக்கவில்லை. மட்டமான அரிசியை உண்டே அனைவரும் உயிர்வாழவேண்டியிருந்தது. நெய்யோ, சர்க்கரையோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

1 துப்பாக்கிகள்

Sarkar, 'Aurangeb', vol. iii, P. 183.

அகவிலை கொடுத்தாலும் சிறிதளவே அபினும் புகையிலையும் கிடைத்தன.'[1] அடியோடு அழிக்கப்படாத அஹோம்களும் வெகு விரைவிலேயே தங்களுடைய படைகளை ஒன்றுதிரட்டிக் கொண்டு முகலாயரைத் தாக்கத் தொடங்கினர். முகலாயப் படைவீரர்களிடையே மனநிறைவின்மை மிகுதியாக இருந்தது. சில அதிகாரிகள், ஆலோசனை கலந்தபிறகு, மீர் ஜும்லாவை அவரது தலையெழுத்து எப்படியோ ஆகட்டுமென்று பாசறையை விட்டு நீங்க முடிவுசெய்தனர். ஆயின், இச் சதிபற்றித் தளபதிக்கு உரிய காலத்தில் செய்தி எட்டியது. அதனால் அவசியம் காரணமாக உடனடியாகப் பின்வாங்குமாறு மீர் ஜும்லா தமது படையினருக்கு ஆணையிட்டார். இங்ஙனம் முகலாயப் படையினர் செல்லுவதைப்பற்றிய தகவல் அறிந்த அஹோம்கள் அவர்களைத் தாக்கினர். ஆயினும், முகலாயர் அப்போதும் போரிடும் நிலையில் இருந்தனர். தீரமிக்க திலீர்கான் பகைவர் படுதோல்வியுறுமாறு செய்தார். அதனோடு அவமானம் தரும் உடன்படிக்கையில் இராஜா ஜெயத்வாஜைக் கையொப்பமிடுமாறும் செய்தார். காஃபிகான் குறித்தபடி, '120,000 தோலா வெள்ளியும், 2,000 தோலா தங்கமும், ஐம்பது யானைகளும், தமது அழகற்ற புதல்வியருள் ஒருவருமானோரைப் பேரரசருக்கு அளிப்பதாக இராஜா ஜெயத்வாஜ் ஒப்புக்கொண்டார். மேலும், பதினைந்து யானைகளும், சிறிது பணமும், சில பொருள்களும் சேர்த்து மற்றொரு மகளையும் கானிகானனிடம் அனுப்புவதாகவும் ஒப்புக் கொண்டார்.'[2]

வங்காள எல்லைக்கு அருகே அமைந்த பயிர்வளமிக்க மாவட்டத்தின் கோட்டைகள் சிலவற்றையும் நகரங்கள் சிலவற்றையும் பேரரசுடன் நிரந்தரமாக இணைத்துக்கொண்டனர். ஆயின், அஸ்ஸாம் படையெடுப்பு முடிவுபெற்றதும், தலைசிறந்த படைத்தலைவர் ஒருவரை அவுரங்கசீப் இழந்துவிட்டார். படையெடுப்பில் பட்ட துன்பங்கள் மீர் ஜும்லாவின் உயிரைக் குடித்தன. அவர் டாக்காவிற்குத் திரும்பும் வழியில் 1663ஆம் ஆண்டு மார்ச்சு 30ஆம் தேதியன்று பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.

சிறிது காலத்திற்கு முன்னர்தான் தக்கணத்திலிருந்து வரவழைக்கப்பெற்று வங்காளத்தின் புதிய ஆளுநராக நியமன

1 Sarkar, 'Aurangzeb', vol. iii, பக். 194.

2 Elliot and Dowson, vol. vii, பக். 268. *தங்கத்தின் அளவுபற்றியும் யானைகளின் எண்ணிக்கைபற்றியும் பேராசிரியர் சர்க்கார் தரும் செய்தி சிறிது மாறுபடுகின்றது.*

மாகியிருந்த செயிஷ்டாகான்[1] என்பாருக்குக் கிழக்கு எல்லையில் நிறைய வேலை இருந்தது. முகலாயக் கப்பற்படையானது சிதறிக் கிடந்த காரணத்தால்,[2] அரன்கான் மன்னர் துணிச்சல் கொண்டார். போர்ச்சுகீசியத் துணிகர வீரர்கள், அவர்களுடைய சந்ததியார்கள் போன்ற அன்னியரை அமர்த்தித் தமது கடற்படை வலிமையைப் பெருக்கிக்கொண்டார். வங்காள விரிகுடாவில் கடற்கொள்ளை இடுவதையே முக்கியத் தொழிலாகக்கொண்டிருந்த போர்ச்சுகீசியரை சிட்டகாங்கிற்கு அருகே கடலோரப் பகுதியில் குடியேற ஊக்குவித்தார். அங்ஙனம் குடியேறிய போர்ச்சுகீசியருடைய கொள்ளைத் தாக்குதல்கள் டாக்காவிற்கும் பரவின. அதனால் வங்காள ஆளுநருக்குச் சங்கடமாக இருந்தது.

அக் காலத்து முஸ்லிம் வரலாற்று அறிஞர் பின்வருமாறு வரைந்துள்ளார்: 'மாக் இனத்திலிருந்தும் பரங்கியரிலிருந்தும் (போர்ச்சுகீசியர்) வந்த அரக்கானைச் சார்ந்த கடற்கொள்ளைக்காரர்கள் நீர்வழியாக வந்து வங்காளத்தைக் கொள்ளையடிப்பது வழக்கமாக இருந்தது. அவர்கள் கையில் சிக்கிய இந்துக்களையும் முஸ்லிம்களையும் தூக்கிச் சென்றனர். அவ்விதம் பிடிபட்டவர்களின் உள்ளங்கையில் துளையிட்டு, அத் துளையின் வழியாகப் பிரப்பங்கொடியை நுழைத்துப் பிணைத்துக் கப்பலின் அடித்தளத்தில் அடைத்தனர். ஒவ்வொரு நாள் காலையிலும் கோழிகளுக்குத் தானியங்களைத் தூவுவதுபோல வேகவைக்காத அரிசியை அவர்களிடையே தூவினர். தங்கள் இடத்தை அடைந்ததும், அந்தக் கொள்ளைக்காரர்கள் பிழைத்திருந்த உடல் வலிமை மிக்க சிலரை நிலத்தைக் கொத்துதல்போன்ற கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தினர்; மற்றவரைத் தக்கணத் துறைமுகங்களில் இருந்த டச்சு, ஆங்கில, ஃபிரஞ்சு வணிகர்களிடம் விற்றனர். அவர்கள் நீண்ட காலத்திற்கு வங்காளத்தைத் தொடர்ந்து தாக்கியதால் அம் மாநிலம் நாளுக்கு நாள் சீர்குலைந்துவந்தது. அதனுடைய எதிர்க்கும் சக்தியும் குறைந்துகொண்டேவந்தது. சிட்டகாங்கிலிருந்து டாக்காவரையில் அவர்கள் வழக்கமாக வரும் ஆற்றின்

1 செயிஷ்டாகான் என்பார் அவுரங்கசீப்பின் தாய்மாமனாவார். சிவாஜியிடம் தோற்றதால் அவர் 1664ஆம் ஆண்டில் தக்கணத்திலிருந்து திரும்ப அழைக்கப்பெற்றார்.

2 ஏற்கெனவே குறித்தவாறு, முகலாயரின் ஆதிக்கம் உச்சநிலையில் இருந்தபோது அவர்கள் வலிமை வாய்ந்த கடற்படையை வைத்திருக்கவில்லை. இக்குறை பேரரசு சீர்குலைவதற்கான மறைமுகக் காரணங்களில் ஒன்றாகியது.

இரு கரைகளிலும் அமைந்த வீடுகளில் யாரும் வாழ்ந்திருக்க வில்லை.'[1] பெர்னியரும் அவர்களைப் பற்றி மிகத் தாழ்வாகப் பேசியுள்ளார்: 'இவர்கள் வெறுக்கத்தக்கவர்கள். எந்தவித மனக்கிலேசமோ, இரக்கமோ இன்றி ஒருவரை மற்றவர் கொலை செய்துகொண்டனர் அல்லது நஞ்சிட்டுக் கொன்றனர். சில சமயங்களில் தங்களுடைய குருமார்களையும் கொல்ல அவர்கள் தயங்கியதில்லை. அத்தகைய குருமார்களில் பலர் கொலைகாரர் களான அந்தக் கொள்ளையரைவிடக் கொடியவர்களாக இருந் தனர்.' பேரரசருடைய அனுமதியோடு பல புதிய கப்பல்களைச் சேர்த்து வங்காளத்தின் கடற்படையை வலியத் தாக்கினார் செயிஷ்டகான். அதன்பிறகு அவர் 1666ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கடற்கொள்ளையரின் கோட்டையாகவிருந்த சிட்ட காங்கை அரக்கான் மன்னரிடமிருந்து வலிந்து பெற்றார். வங் காள விரிகுடாவில் இருந்த சோந்திப் தீவையும் கைப்பற்றினார். எவ்வாறாயினும், இத்தகைய வெற்றிகளைத் தவிர அவுரங்க சீபின் ஆட்சிக் காலம் முழுவதிலும் நிலவிய கடற்கொள்ளை களைத் தடுத்து நிறுத்துதற்கு அதிகமாக ஒன்றும் செய்யப்பட வில்லை.

### ஆஃப்கானியப் போர், 1667–8

கிழக்கு எல்லையில் படையெடுப்பு முடிந்தவுடன் பேரரசின் வடமேற்கு எல்லையில் தொல்லை தோன்றியது. முதலில் அது ஸ்வாத், பஜார் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்த யூசுப் சாஹி எனும் பத்தானியர் வாயிலாகத் தோன்றியது. தீரமும் போர்த்திறமும் உடலுரமும் கொண்ட அக் கூட்டத்தார் பன்னெடுங்காலமாகக் கொள்ளையடித்தே வாழ்ந்துவந்தனர். சிந்து, காபூல், ஸ்வாத் ஆறுகள் மூன்று பக்கங்களிலும், காஷ்மீரத்துக் குன்றுகளின் அடி வாரம் மற்றொரு புறத்திலும் சூழ்ந்திருந்த அரைவட்டம்போல் அமைந்த ஸ்வாத், பஜார் பள்ளத்தாக்குகள், வட பெஷாவர் சமவெளி ஆகியவற்றில் அக் கூட்டத்தாரின் வீடுகளும் ஊர்களும் அமைந்திருந்தன. அங்கே அவர்கள் அன்னியருடைய தாக்கு தல்கள் இன்றிப் பாதுகாப்பாக வாழ்ந்துவந்தனர். அங்கு இருந்து கொண்டு சமவெளிகளைத் தாக்கி, வடமேற்குப் பஞ்சாபில் இருந்த வளமான நகரங்களை அச்சுறுத்திப் பொருள் பறித்தனர். பதினாறும் நூற்றாண்டில் அவர்கள் குடியேறிய நாளிலிருந்து இவ் விதம் செய்துவந்தனர். வடமேற்கு எல்லையில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சியில் அக்பர் ஈடுபட்டார். ஆனால், அக் கூட்டத்தினரை அடக்குவதற்காகப் பேரரசப் படையினர்

Shahabud-din Talash. Sarkar *எழுதிய* '**Aurangzeb**', vol. iii, பக். 225.

மேற்கொண்ட முயற்சிகள் பயன் தரவில்லை. மேலும், 1586ஆம் ஆண்டில் புகழ் வாய்ந்த இராஜா பீர்பாலின் தலைமையிலான பேரரசப் படையினை யூசுப் சாஹியினர் ஸ்வாத் நில இடுக்கில் துண்டித்ததும், நடைபெற்ற போரில் அப் பெருவீரர் உயிரிழந்ததும் ஆஃப்கானியருடைய வலிமைபற்றிய அச்சத்தை வளர்த்தன. இறுதியாக அக்பர் தமது முயற்சிகளைக் கைவிட்டார். மலைநாட்டு மக்களின் தலைவர்களுக்கு உதவிப்பணம் அளித்தும், அவர்களுடைய கொள்ளைகளைக் கவனியாதுவிட்டும் பொருளற்ற தற்காலிகப் போர்நிறுத்த உடன்பாட்டைச் செய்துகொண்டார். ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியோர் காலங்களில் நிலைமையில் எவ்வித மாறுதலும் இல்லை. ஆயின், அவுரங்கசீப் தமது தந்தையார், பாட்டனூர் ஆகியோரைக் காட்டிலும் உறுதியுடன் போராடினூர். மாநில ஆளுநரின் அடங்காமையையோ அல்லது பேரரசின் ஒரு பகுதியில் வேந்தரின் புகழுக்கு இழுக்கு வருவதையோ அவர் பொறுப்பதில்லை. அதனுல் அவர் பெரும் பொருட் செலவும் நீண்ட போரும் ஏற்படும் என்றபோதிலும் எல்லைகளில் அமைதியைக் காப்பதென்று உறுதி பூண்டார். அதற்கிணங்க முதலில் அஸ்ஸாமியருக்கு எதிராகவும், அதன் பிறகு ஆஃப்கானியருக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கலானூர்.

பாகு எனும் யூசூஃப் சாஹியினரின் தலைவர் 1667ஆம் ஆண்டில் 5,000 வீரர்கள் அடங்கிய படையைச் சேர்த்துக் கொண்டு ஹசாரா மாவட்டத்தில் உள்ள பக்லியைத் தாக்கினூர். அதிலிருந்து போர் மூண்டது. அங்கிருந்த முகலாய அதிகாரிகளை அவர் எளிதில் முரியடித்தார். அதே சமயத்தில் பெஷாவர், அட்டாக் மாவட்டங்களில் காபூல் ஆற்றின் மேற்குக் கரைப் பகுதிகளை யூசுஃப் சாஹி கூட்டத்தினர் கொள்ளையடித்தனர். அதனுல் கிடைக்கக்கூடிய படையைத் திரட்டிக்கொண்டு புரட்சிக்காரர்களுக்கு எதிராகச் செல்லுமாறு அட்டாக்கின் ஆளுநருக்குப் பேரரசர் ஆணையிட்டார். அதே சமயத்தில் 13,000 வீரர்கள் அடங்கிய படையுடன் வந்து யூசுஃப் சாஹியினரின் நாட்டைத் தாக்குமாறு காபூலின் ஆளுநருக்குக் கட்டளையிட்டதோடு, தலைநகரிலிருந்து பீரங்கிப் படையுடன் 10,000 வீரர்கள் அடங்கிய சேனையொன்றையும் அனுப்பிவைத்தார். ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஹரூன் ஆற்றங்கரையில் கடுமையான போர் ஒன்று நடைபெற்றது. அதில் அட்டாக்கின் பாஜ்தாரான கமீல்கான் (Kamil Khan) என்பவர் பகைவரைப் படுதோல்வியடையச் செய்தார். ஆயினும், உடனடியாக யூசுஃப் சாஹிகளின் நாட்டைத் தாக்கும் அளவிற்கு முகலாயப் படை வலிமை கொண்டதாக இல்லை. அதனுல் மே மாத முதல் வாரத்தில்

லாகூரிலிருந்தும் காபூலிலிருந்தும் உதவிப் படைகள் வரும்வரை யில் கமீல்கான் ஹஸனிலேயே நீண்ட நாள்கள் தங்கவேண்டி வந்தது. அதன் பிறகு ஆஃப்கானியர் ஒடுக்கப்பெற்றனர். அவர்களுடைய வீடுகள் தீக்கிரையாயின. பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. இங்ஙனம் செப்டம்பர் மாதம் முடிய சில சிறு சிறு மோதல்கள் இருந்தபோதிலும் முகலாயரின் வெற்றி முழுமையானது. பல ஆண்டுகளுக்கு எல்லைப் பகுதியில் அமைதி குலையாதிருந்தது. முகலாயர் மேற்கொண்ட கடுமை யான நடவடிக்கைகளினால் யூசுஃப் சாஹியினர் பணிந்து விட்டதுபோலத் தோன்றியது.

எவ்வாறாயினும், 1672ஆம் ஆண்டில் மீண்டும் தொல்லை ஏற்பட்டது. அஃப்ரிடி (Afridi) எனும் கூட்டத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவரான அக்மல்கான் என்பவர் (Acmal Khan)[1] அரசராக முடிசூட்டிக்கொண்டு முகலாயருக்கெதிராகப் போர் தொடுத்தார். கைபர் கூட்டத்தினர் ஏற்கெனவே முகலாயர் ஆட்சியில் அதிருப்தி கொண்டிருந்தனர். முகலாயருடனான போரை அக்மல்கான் அறிவித்ததும் பெரும் எண்ணிக்கையில் அவர்கள் அவருடன் சேர்ந்தனர். இப்போது கைபர் கணவாயி லிருந்து அலி மஸ்ஜித்வரையிலான காபூல் சாலை அக்மல்கானின் ஆள்கள் வசம் வந்தது. காபூலின் ஆளுநரான முகம்மது அமீன்கான் மாரிக்காலத்தை பெஷாவரில் கழித்துவிட்டு, 1672ஆம் ஆண்டின் வசந்தத்தில் தமது தலைநகருக்குத் திரும்பியபோது, தமது பாதை முழுதும் அடைபட்டுக் கிடப்பதைக் கண்டார். தமது பகைவரின் வலி அறியாது அவர் மடத்தனமாக ஆஃப்கானியருடன் போரிடத் துவங் கினார். அப் போரில் முகலாயப் படைக்குப் பேரிழப்பு ஏற்பட்டது. முகலாயப் படையில் தோன்றிய குழப்பம் பற்றி அக் கால அறிஞர் ஒருவர் பின்வருமாறு குறித்துள் ளார்: 'எல்லோரும் குன்றுகளுக்கோ அல்லது பாலைவனத் திற்கோ ஓடி ஒளிந்தனர். பிள்ளைகள் தந்தையரிடமிருந்தும், பெண்கள் தாய்மாரிடமிருந்தும், மனைவியர் கணவர்களிட மிருந்தும், பணியாள்கள் எஜமானர்களிடமிருந்தும் பிரிந்தனர். போர்க்களத்தில் பத்தாயிரம் பேர் பகைவரின் வாளுக்கிரையா யினர். இருபதாயிரம் ஆண்களையும் பெண்களையும் பகைவர் பிடித்து மத்திய ஆசியாவில் விற்றனர்.'[2] முகமது அமீன்கானும், அவரது பிரதானத் துணைவர்களில் சிலரும் உயிர்தப்பிப் பெஷா

1 இங்ஙனம் சர்க்கார் குறித்துள்ளார்; மற்றவர்கள் 'ஐமால்' (Aimal) என்றே குறித்துள்ளனர்.

2 Sarkar எழுதிய 'Aurangzeb', vol. iii, பக். 262.

வரை அடைந்தனர். இங்ஙனம் அக்மல்கான் பெற்ற பெரு வெற்றி அவரது புகழை வளர்த்தது. அவர்தம் கூட்டத்தைச் சேராதவர்களும் அவருடன் வந்து சேரத் தலைப்பட்டனர். அவர் தோற்றுவித்த இயக்கமானது பெருகித் தீவிரமடைந்தது. அநேகமாக காந்தாரத்திலிருந்து அட்டாக்வரையில் வாழ்ந்த பத்தான்கள் அனைவரும் புரட்சியில் ஈடுபட்டனர். இத்தகைய பேரதிர்ச்சியைப்பற்றிக் கேள்வியுற்ற பேரரசர், பஞ்சாபிற்குள் பகைவர் புகுந்துவிடாதவாறு தடுப்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். படையுடன் பெஷாவருக்கு விரைந்து செல்லுமாறு லாகூரின் ஆளுநருக்குக் கட்டளையிட்டார். முகம்மது அமீன்கானுக்குப் பதிலாகப் பெருவீரரான மகபத்கானைக் காபூலின் ஆளுநராக நியமித்தார். மதிப்பிழந்த முகம்மது அமீன்கான் குஜராத்திற்கு அனுப்பப்பெற்றார். அப்போது ஜம்ருடின் (Jamrud) காவல் நிலையங்களைக் கண்காணித்துவந்த மகாராஜா ஜெஸ்வந்த் சிங்கிற்கும் கபத்கானுடன் ஒத்துழைக்குமாறு ஆணை வந்தது. எழுபது வயதை எட்டியிருந்த ஜெய்வந்த்சிங் கடுமையாகப் போராடும் நிலையில் இல்லை. அதனால் பேரரசரிடமிருந்து பல முறை ஆணைகள் வந்த பிறகே அவர் காபூலுக்குச் சென்றார். 1672ஆம் ஆண்டில் சத்நாமிகளின் (Satnami) கலகத்தை அடக்கிப் பெயர் பெற்ற ஷீஜாத்கானின் தலைமையில் மற்றொரு பெரும் படையும் காபூலுக்கு அனுப்பப்பெற்றது. இங்ஙனம் முகலாயப் படைத்தலைவர்களிடம் இருந்த படைகள் எடுத்த காரியத்தை முடிக்கப் போதுமானவையாக இருந்தன. ஆயின், துரதிட்டவசமாகப் பேரரசப் படையின் அதிகாரிகள் பலரிடையே ஒற்றுமையும் ஒத்துழைப்பும் இல்லை. மகமத்கானும் ஜெஸ்வந்த் சிங்கும் ஷீஜாத்கான் தாழ்வானவர் என்றும், ஏதோ குருட்டு அதிர்ஷ்டம் அடித்ததால் அப்போதிருந்த நிலைக்கு உயர்ந்துவிட்டார் என்றும் கருதினர். ஷீஜாத்கானும் திடீரென்று உயர்ந்த அற்பரைப்போல ஆணவத்துடன் நடந்துகொண்டார். மற்றவர் அளித்த அறிவுரையை மதிக்காது அவர் காபூலுக்கு முன்னேறிச் சென்றார். 1674ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் காரபா (Karapa) கணவாயின்மீது ஏறினர். அப்போது அவரைப் பகைவர் சூழ்ந்துகொண்டனர். சரமாரியாக அம்புகளை வீசிப் பேரரசப் படையினரைக் கலங்கவைத்தனர். ஷீஜாத்கான் அங்கேயே மாண்டார். அவரது படை தலைவனில்லாது தவித்தது. ஆயின், மகாராஜா ஜெஸ்வந்த் சிங் ஷீஜாத்கானின் படைப்பிரிவிற்கு உதவி செய்வதற்கென மதிநுட்பத்தோடு அனுப்பிவைத்திருந்த 500 வீரர்களைக்கொண்ட தீரமிக்க

ரதோர் (Rathor) படைப்பிரிவு சமயத்தில் வந்து சேர்ந்ததால், பேரரசப் படை அழியாது தப்பியது.

பேரரசின் மதிப்பை மீட்பதற்குப் பெருமுயற்சி தேவை என்பதை காரபா நிகழ்ச்சியிலிருந்து அவுரங்கசீப் உணர்ந்து கொண்டார். அதனுல் ராவல்பிண்டிக்கும் பெஷாவருக்கும் நடுவே இருந்த ஹாஸன் அப்தல் என்னுமிடத்திற்குத் தாமே நேரில் சென்று, ஓராண்டுக் காலத்திற்கு அங்கே தங்கியிருந்து போர்நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார். முந்திய ஆட்சிகளில் ஆஃப்கனிஸ்தானத்தில் போர் புரிந்த வயது முதிர்ந்த வீரர்கள் அனைவரையும் தம்முடன் அழைத்துச் சென்ருர். முன்னுல் பல சமயங்களில் ஆஃப்கானியருடன் போரிட்டுப் புகழ் பெற்றிருந்த ஆகாகானைத் தம்முடன் கொண்டுசெல்வதற்காக அவரைத் தக்கணத்திலிருந்து வரவழைத்தார். படைபலத்தையும் வெல்திறத்தையும் உரிய முறையில் பயன்படுத்தினுர். அதனுல் குறுகிய காலத்தில் அவரால் பெஷாவர் பகுதியில் அமைதியை நிலைநாட்ட முடிந்தது. காபூலின் ஆளுநராக இருந்த மகபத்கான் அப் பதவியிலிருந்து நீக்கப்பெற்ருர்.[1] அவருக்குப் பதிலாக ஃபைதிகான் நியமிக்கப்பெற்ருர். ஃபைதிகானுக்குத் துணையாகச் செல்லுமாறும், கைபர் கணவாய் அடைபடாதிருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஆக்ாகானுக்கு ஆணைகள் பிறந்தன. மூப்பது முதல் நாற்பதாயிரம் எண்ணிக்கை கொண்ட பகைவர்களுடன் கண்டமக் எனுமிடத்தில் ஆகாகான் சந்தித்துப் போரிட்டார். இருதரப்பிலும் சேதம் மிகுதியாக இருந்தது. ஆயினும், முகலாயர்கள் மிகக் கொடூரமாக வஞ்சம் தீர்த்துக்கொண்டனர். அதனுல் இந்த நிகழ்ச்சிக்குப் பல ஆண்டுகளுப் பின்னரும் அச்சம் தரும் ஆகாகானின் பெயர் ஆஃப்கனிஸ்தானத்தின் தாய்மார்களிடையேயும் குழந்தைகளிடையேயும் மறையாது நின்றது.[2]

அடுத்த ஆண்டாகிய 1676-ல் மேலும் இரு முக்கியச் சண்டைகள் நடைபெற்றன. அப்போது ஆஃப்கானியருடைய

1 ஷுஜாத்கான் அழிவிற்கு மகபத்கானும் காரணம் என அவுரங்கசீப் ஐயங்கொண்டார். தமது நிலையை விளக்கும் வகையில் மகபத்கான் கடுமையான கடிதமொன்றைப் பேரரசருக்கு அனுப்பினுர். அதில் அவர் ஷுஜாத்கான் போன்ற இழிந்த ஆதரவாளர்களைப் பேரரசர் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டினுர். ஆயினும், பதவியிழந்த பிறகு மகபத்கான் நீண்ட காலம் உயிர்வாழவில்லை. மூன்று மாதங்களுக்குள் (1674 டிசம்பரில்) இவ்வுலக வாழ்வை நீத்தார்.

2 ஒத்த, ஆனுல், அண்மைக் கால நிகழ்ச்சி ஒன்றை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. அதாவது, தீரம் மிகுந்த சீக்கியத் தளகர்த்தரான ஹரிசிங் நால்வாவின் பெயரைச் சொல்லி இன்றளவும் பத்தானியப் பெண்கள் தங்களது குழந்தைகளை அச்சுறுத்துகிருர்கள்.

எதிர்ப்பு அடியோடு அழிந்தது. கொடுமை இழைத்து அச்சுறுத்துதல், சலுகைகள் காட்டி இணக்குவித்தல் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்த அவுரங்கசீபின் கொள்கை முழு வெற்றி தந்தது. அப்போதிருந்து அவுரங்கசீபின் ஆட்சிக் காலம் முடியும்வரை எல்லையோரத்தில் சீரிய தொல்லைகள் ஏதும் எழவில்லை.

**அவுரங்கசீபின் சமயக் கொள்கையின் வளர்ச்சி**

மூத்த சகோதரரான தாரா ஷூக்கோவின் புறச்சமயம் சார்ந்த கொள்கைகளுக்கும் பழக்கங்களுக்கும் எதிராக மரபு வழாத இஸ்லாம் சமயத்தின் காப்பாளர் என்ற வகையில் அவுரங்கசீப் அரியணைக்கு உரிமை கொண்டாடினார். போட்டி ஏதுமின்றி நாட்டின் பேரரசராகத் திகழ்ந்த அவர், அரசுரிமைப் போர் தொடங்கிய காலத்தில் தமது அறிக்கையின்மூலமாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முற்பட்டார். அதற்கிணங்க, 'ஆட்சித் துறையில் மரபுவழாத இஸ்லாமிய விதிகளை மீட்கவும், குரானின் போதனைக்கு இணங்க மக்களின் வாழ்க்கையைக் கொண்டுவரவுமான' பல பேரரசக் கட்டளைகளை 1659ஆம் ஆண்டில் வெளியிட்டார். பேரரசரே எடுத்துக்காட்டாக விளங்கினார். கலீமாவை (முகம்மதியர் சமயத்தின் மீது கொண்ட பற்றுறுதியை ஒப்புக்கொள்ளும் வாசகம்) நாணயங்களில் பொறிப்பது முன்னால் வந்த முகலாயப் பேரரசர்களின் பழக்கமாகும். புனித வாசகங்கள் புறச்சமயத்தவர்களின் கைபட்டுக் கறைபடிந்துவிடும் என்பதற்காகத் தாம் வெளியிட்ட நாணயங்களில் அவுரங்கசீப் கலீமாவைப் பொறிக்கவில்லை. மரபுவழாத இஸ்லாம் சமயப் பழக்கத்திற்குப் புதுமையானது என்பதால், பாரசீகத்திலிருந்து வந்த நௌரோஸ் திருவிழாவையும் அவுரங்கசீப் தடைசெய்தார். அதேபோன்று இஸ்லாம் வழக்கிற்கு முரணானவை என்பதால் பஞ்சாங்கம் வரைதல் அல்லது வருங்கால நிகழ்ச்சிகளை முன்னறிவித்தல் போன்றவற்றைச் செய்தல் கூடாது என்று குறிநூல் வல்லாருக்கு எதிரான ஆணைகளையும் பிறப்பித்தார். இந்த எளிமை விரும்பியான பேரரசர், தமது பதினொன்றும் ஆட்சியாண்டில் அரசவையில் இசையையும் தடைசெய்தார். அதுவரையில் பெருமதிப்பும் பட்டமும் பெற்றிருந்த அரசாங்கப் பாடகர்களும் இசைவாணர்களும் உபகாரச் சம்பளம் தரப்பெற்று வீட்டுக்கு அனுப்பப்பெற்றனர்.[1] தனிப்பட்ட சொந்த வாழ்க்கைபற்றி அவர்

[1] இந் நூலின் எட்டாம் அதிகாரத்தைக் காணவும்.

உயர்ந்த கொள்கை கொண்டிருந்தார். தடை விதிக்கப்பெற்ற உணவு, உடை, பானம் ஆகியவற்றில் சிறிதும் திளைக்காமல் விலக்கியே வைத்திருந்தார். ஏற்கெனவே குறிப்பிட்டது போல் இன்னிசையைக் கேட்பதன்மூலமாக வரும் இன்பத்தையும் அவர் துறந்தார். மரபு வழாத முஸ்லீம் எவ்வாறு வாழ வேண்டுமோ அவ்வாறே சிறிதும் பிறழாது வாழவேண்டு மென்று முயன்றார். அவர் அரசர் என்ற வகையில் தோல்வி யுற்றதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். அல்வாய்ப்பாக அவர் ஆளவந்த நாடு முழுவதும் முகமதியர்களையே கொண் டது அன்று. சமயக் காரணங்களுக்காகப் பேரரசர் பெரிதும் வெறுத்த இந்துக்கள்தாம் அந் நாட்டில் பெரும் பான்மை யினராக இருந்தனர். அவரும் அவரைச் சார்ந்த சுன்னி உலேமாக்களும் விளக்கம் கொண்டவாறு, இஸ்லாம் சமயத் தைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கும் கொள்கையால் அவர்கள் பேரரசரின் தீராத பகைவர்களாக மாறினர். இந்துக்களின் சமய உணர்வுகளை ஜஹாங்கீரும் ஷாஜஹானும் அதிகமாக மதித்து நடக்கவில்லை என்பது உண்மையே. ஜஹாங்கீர் ஒரு முறை குஜராத்தில் வாழ்ந்த ஏராளமான ஜைனசமயக் குருமார்களைக் கொல்லுமாறு ஆணையிட்டார்; மற்றொரு முறை காங்கிரா கோயிலின் அருச்சகர்களை அவமதிப்பதற்காகப் பசுக்களின் இரத்தத்தைக் கொண்டு அக் கோயிலை மாசுபடுத்துமாறு ஆணையிட்டார். ஷாஜஹானோவெனில், தமது ஆறும் ஆட்சி யாண்டில் (1632) இந்துக்கள் புதிய கோயில்கள் கட்டுவதற்குத் தடைவிதிக்கும் ஆணையொன்றைப் பிறப்பித்தார். முற்றுப்பெரு திருந்த கோயில்களையும் தரைமட்டமாக்குமாறு செய்தார். ‘பனாரஸிலும், பேரரசரின் பல பகுதிகளிலும் கட்ட ஆரம்பித்த கோயில்களை யெல்லாம் தரைமட்டமாக்க வேண்டுமென்று இஸ்லாம் சமயத்தைக் காப்பவரான மாட்சிமை தங்கிய பேரரசர் ஆணையிட்டார்.’ ஆயின், இத்தகைய இந்து சமயத் திற்கு எதிரான கொள்கையை அதன் எல்லைக்கே கொண்டு சென்றார் அவுரங்கசீப். சமய நம்பிக்கையற்றவர் என அவர் கொண்டவர்களைத் தாக்குதற்குச் சூழ்ச்சித்திற முறைகளைக் கையாண்டார்.

தமது முதலாவது ஆட்சியாண்டில் பனாரஸில் வாழ்ந்த குருக்கள் ஒருவருக்கு உரிமைப் பத்திரம் ஒன்றினை அவுரங்கசீப் வழங்கினார். அதில் புதிய கோயில்களைக் கட்ட அனுமதி தருவ தற்குத் தமது சமயம் தடைவிதிக்கிறது என்றும், ஆனால், பழைய கோயில்களை அழிக்குமாறு கோரவில்லை என்றும் குறிப்பிட்ட ஷாஜஹானின் ஆணையொன்றையே வலியுறுத்தியிருந்தார்.

அந்த ஆணையின் வாசகம் பின்வருமாறு: 'எமது சமயச் சட்டத் திற்கிணங்க நீண்ட காலமாக இருந்துவரும் கோயில்களை அழிக் கக்கூடாது என்றும், ஆனால் புதிய கோயில்களைக் கட்ட அனு மதிக்கக்கூடாது என்றும் தீர்மானித்துள்ளோம். பனாரஸிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் இந்துக்களைச் சிலர் துன்புறுத்துவதாகவும், பழைய கோயில்களைப் பராமரிக்கும் பொறுப்பு ஏற்ற சில பிராமணர்களைத் துன்புறுத்தி அவர்களைப் பதவிலிருந்து நீக்க விழைவதாகவும் எமக்குச் செய்தி கிடைத் துள்ளது. அதனால் அப் பகுதிகளில் வாழும் பிராமணர்களுக்கும் பிற இந்துக்களுக்கும் யாரும் எதிர்காலத்தில் தொல்லை தரவோ, முறையின்றி அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடவோ கூடாது என்பது எமது கட்டளை'.[1] இந்தத் தடை ஆணைப்படி அவுரங் கசீப் நடந்திருப்பாரானால் தீமை வளர்ந்திருக்காது. இந்துக்கள் அநேகமாகத் தலைவிதியே என்று பணிந்துபோயிருப்பர். ஆனால், அவ்விதம் நடப்பதற்கில்லை, ஆண்டுகள் செல்லச் செல்ல அவுரங்கசீபின் சமய வெறி வளர்ந்துகொண்டேசென்றது. 1669ஆம் ஆண்டில் இந்துக்களின் கோயில்கள் அனைத்தையும் பள்ளிகளையும் இடித்துத் தள்ளுமாறு பொது ஆணையொன்றை அவுரங்கசீப் விடுத்தார். 'தட்டா, முல்டான், பனாரஸ் ஆகிய மாநிலங்களிலிருந்து, குறிப்பாகப் பிந்திய மாநிலத்திலிருந்து அறிவற்ற பிராமணர்கள் தங்கள் பள்ளிகளில் பயனற்ற நூல் களைக் கற்பிக்கின்றனர் என்றும், இந்து–முஸ்லிம் மாணவர்களும் அறிஞர்களும் அவர்கள் கற்றுத்தரும் கேடுபயக்கும் அறிவியல் களை அறிந்துகொள்ளும் ஆர்வம் காரணமாக நெடுந்தொலைவி லிருந்தும் வந்தனரென்றும், சமயக் காவலரான மாட்சிமை தங்கிய மன்னர் காதிற்கு 1079ஆம் ஆண்டு ரபிஉல்அவ்வல் மாதம் 17ஆம் தேதியன்று, அதாவது, 1669ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினெட்டாம் தேதியன்று எட்டியது. அதனால் 'சமய இயக்கு நரான' பேரரசர் உண்மைச் சமயம் போற்றாதவர்களின் கோயில் களையும் பள்ளிகளையும் இடித்துத்தள்ளுமாறு மாநிலத் தலைவர் களுக்கெல்லாம் ஆணைகள் பிறப்பித்தார். கடவுட் படிமங்களை வைத்து வணங்கும் எல்லாவித போதனைகட்கும் பழக்கங்களுக் கும் முற்றுப்புள்ளி வைக்குமாறும் கட்டளைகள் சென்றன.'[1]

முஸ்லிம் ஆளுநர்கள் இவ்வாணையை முழுமனத்தோடு நிறை வேற்றிவைத்தனர். பனாரஸிலிருந்த விஸ்வநாதர் ஆலயத்தை

[1] அவுரங்கசீபின் பனாரஸ் ஆணை (Benares farman) Sarkar எழுதிய Aurangzeb', vo ii, பக். 319-20.

[1] Elliat and Dowson, vol. vii, p. 183-4.

1669ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அழித்தனர். இராஜா பீர் சிங் பந்தேலா, ஜஹாங்கீரின் ஆட்சியில் முப்பத்துமூன்று இலட்ச ரூபாய்கள் செலவழித்துக் கட்டிய கோயிலாகிய மதுராவின் கண் அமைந்த கேசவராய் ஆலயம் தரைமட்டமாகியது என் பதை அடுத்த ஆண்டு (1670) ஜனவரி மாதத்தில் கேள்வியுற்ற அவுரங்கசீப் கழிபேருவகை கொண்டார். அவ்வாலயம் இருந்த இடத்தில் பெரியதும் பொருட் செலவு மிக்கதுமான மசூதி ஒன் றிற்கு அடிக்கல் நாட்டப்பெற்றது. இக் கோயிலின் அழிவு பற்றிக் குறிக்கவந்த 'மா–ஆசிரி-ஆலங்கீரின்' (Ma-Asir-i'-Alamgiri) ஆசிரியர் சமய எக்களிப்புடன் பின்வருமாறு எழுதினர்: 'இக் கோயிலைக் கட்ட முப்பது இலட்சம் ரூபாய் செலவழிந்தது. போலிக்கடவுளரை அழிக்கும் மன்னரின் ஆட்சியில் நிறைவேற்று தற்கு அரிய செயல் வெற்றிகரமாக முடிந்ததற்கு இஸ்லாமியச் சமயத்தை நமக்கு அளித்த ஆண்டவரின் புகழைப் பாடுவோ மாக. உண்மைச் சமயத்திற்கு அளிக்கப்பெற்ற இப் பேராதர வினால் ராஜாக்களின் ஆணவத்திற்குப் பேரடி கிடைத்தது. படி மங்களைப் போலவே அவர்களுடைய முகங்களும் பேயரைந்தாற் போலாயின. பொய்ச் சமயத்தவரின் கோயில்களிலிருந்து எடுக்கப்பெற்ற ஆபரணங்கள் பூண்ட விக்கிரகங்களை ஆக்ரா விற்கு அனுப்பினர்; உண்மையான சமயத்தவரின் காலில் மிதி படவேண்டும் என்பதற்காக அவைகளை நவாப் பேகம் சாகிபின் மசூதியின் படிகளில் வைத்தனர்.[1] அதே சமயத்தில் பீமதேவர் கட்டிய (1143–74) இரண்டாவது சோமநாத் ஆலயமும் இடிக் கப்பெற்றது. இராஜபுத்திரருடனான போர் நடைபெற்ற காலத் திலும் (1679–80), அதன் பிறகும் மேவாரில் மட்டும் சிறியவும் பெரியவுமான 240 கோயில்கள் அழிக்கப்பெற்றதாக அறியக் கிடக்கின்றது.

சமய ஒறுப்புக் கொள்கையில் அடுத்தபடியாகப் பேரரசர், முஸ்லிம் வணிகர்களுக்குச் சொந்தமான பொருள்களின் மீது ஆன சுங்கவரி அல்லது கலால் வரிவிலக்கு அளித்தார். ஆயின், இந்து வணிகர்களிடம் பழைய வீதத்திலேயே வரிகளைக் கொண்டார் (1667ஆம் ஆண்டு மே மாதம்). இதனைப் பற்றிப் பேராசிரியர் சர்க்கார் குறிப்பிடும்போது, 'குறிப்பிட்ட ஒரு சமயத்தாருக்குமட்டும் ஆதரவு காட்டுவது என்ற இந்த முறை யானது அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது நேர்மையற்றதாக இருப்பதோடு, அரசாங்க வருவாய்க்கு ஏற்பட்ட நேரடியான இழப்பு மிகப் பெரியதாகும். மேலும், இந்து வணிகர்கள் முஸ்லிம்

1 Elliot and Dowson, vol. vii, p. 184-5.

களுடன் சேர்ந்துகொண்டு தங்களுடைய பொருள்களைப் பின்னவர்களுடையனபோல் விற்க முற்பட்டதால், உண்மையில் அரசாங்கத்தின் இழப்பு மேலும் அதிகமானதாகும்'.[1]

பொருளாதார அடிப்படையில் இந்துக்களை அழுத்திவைக்க வேண்டுமென்ற திட்டத்திற்கிணங்க 1671ஆம் ஆண்டில் மற்றோர் ஆணையைப் பேரரசர் வெளியிட்டார். அதன்படி, அரச நிலங்களில் வரிகொள்ளும் அதிகாரிகள் முஸ்லிம்களாகத்தான் இருக்க வேண்டும். மாநில ஆளுநர்களும் தாலுக்தார்களும் தங்களிடம் பணிபுரிந்துவந்த இந்து தலைமை எழுத்தர்களையும் (peshkars) கணக்கர்களையும் (diwanian) வேலையிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களிடத்தில் முஸ்லிம்களை அமர்த்த வேண்டும்'.[2]

**ஜெஸியா வரியை மீட்டல்**

இஸ்லாம் சமயத்தைை வளர்ப்பதற்காகவும், புறச்சமயத்தவரின் பழக்கங்களை ஒழிப்பதற்காகவும் என 1679ஆம் ஆண்டில் முஸ்லிம் அல்லாதார் மீது ஜெஸியா வரியை விதித்தபோது, அவுரங்கசீப்பின் சமய ஒறுப்புக் கொள்கை உச்ச கட்டத்தை அடைந்தது எனலாம். மனுக்கி எழுதியது போல, 'இந்த வரியைச் செலுத்த முடியாது அதிகாரிகளிடம் அவமானம் அடைவதிலிருந்து விடுபடுவதற்காகப் பல இந்துக்கள் முகமதியராக மாறியதால்,[3] இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஜெஸியா உதவியது என்பது தெளிவு. தில்லிவாழ் இந்து குடிகள் அந்த வரியை வரவேற்ற விதம்பற்றி காஃபிகான் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'இத்தகைய ஆணை வெளிவந்ததும் தில்லி நகரம் முழுவதிலுமிருந்து பெருந்திரளான மக்கள் தாங்கள் அந்த வரியைச் செலுத்தமுடியாத நிலையில் இருப்பதுபற்றி எடுத்துக்கூறவும், அதற்கான கட்டளையை நீக்கிவிடுமாறு வேண்டவும் ஆற்றுப் பக்கம் இருந்த அரண்மனையின் பேரரசர் தரிசனம் தரும் மாடத்தின்[4] கீழ்க் கூடினர். ஆனால், அவர்களுடைய வேண்டு

1 Sarkar, 'Aurangzeb', vol. viii, p. 313.

2 Sarkar எழுதிய 'Aurangzeb,' Vol. ii, பக். 315. முற்காலத்தில் இந்துக்களின் உதவியின்றி ஆட்சி நடத்துவது இயலாது எனக் கண்டபோது நிதியமைச்சரின் அலுவலகத்திலும், சம்பள பட்டுவாடாத் துறையிலும் இருந்த பேஷ்கார்களில் (peshkars) பாதிப்பேர் இந்துக்களாகவும் மற்றவர் முஸ்லிம்களாகவும் இருக்கப் பேரரசர் அனுமதித்தார் எனப் பேராசிரியர் சர்க்கார் குறித்துள்ளார்.

3 Manucci, 'Storia', ii, பக். 234.

4 பேரரசர் நாள்தோறும் மக்களுக்குக் காட்சிதரும் மாடம்.

கோளுக்குப் பேரரசர் செவிசாய்க்கவில்லை. ஒரு நாள் அவர் பொது வழிபாடு நடத்துவதற்காகப் பெருமசூதிக்குச் சென்ற போது வரிப்பளுவிலிருந்து விடுதலை பெறும் நோக்கத்தோடு ஏராளமான இந்துக்கள் கூடி அரண்மனைக்கும் மசூதிக்கும இடையேயான சாலையை மறைத்தனர். நாணயம் மாற்று வோரும, தையற்காரரும், உருது சந்தையில் இருந்த சகல விதமான கடைக்காரர்களும், எல்லாவிதமான தொழிலாளி களும், தொழிற் கலைஞர்களும் தங்கள் தங்கள் தொழிலை விட்டுச் சாலையில் வந்து கூடினர். இந்த மக்கட் கூட்டத்தினிடையே வழி ஏற்படுத்துமாறு ஆணை பிறந்தும் பேரரசரால் மசூதியை அடைய முடியவில்லை. ஒவ்வொரு கணமும் கூட்டம் பெருகிக்கொண்டேயிருந்தது; பேரரசருடைய பரிவாரங்கள் நகரமுடியமல் நின்றன. அதன்பேரில் இறுதியாக யானைகளைக் கொண்டுவந்து அவற்றை மக்கள் கூட்டத்தின்மேல் ஏவுமாறு ஆணை வந்தது. யானைகளின் கால்களிலும் குதிரைகளின் குளம்பு களிலும் பட்டு ஏராளமானவர் உயிரிழந்தனர். மேலும், சிறிது காலத்திற்கு இந்துக்கள் பெருமளவில் கூடித் தங்களது குறை யினை எடுத்துக்கூறிவந்தனர். ஆயின், அவர்கள் இறுதியில் பணிந்து ஜெஸியா வரியைத் செலுத்தலாயினர்' [1]

இத்தகைய நேரடியான பொருளாதாரக் கெடுபிடியோடு இந்துக்களைச் சமயம் மாற்றுவதற்காக வேறு வழிகளையும் அவுரங்க்சீப் கையாண்டார். இஸ்லாமியச் சமயத்தைச் சேர்வ தாக் வாக்குறுதி அளித்தாலகான் நிதித்துறையில் இந்துக் களுக்குப் பதவிகள் வழங்கப்பெற்றன. சில சமயங்களில் சமயம் மாறிய இந்துக்களை மேளதாளத்துடனும் கொடிகளுடனும் ஊர் வலமாகச் சுமந்து சென்றனர். இராஜபுத்திரர்களைத் தவிர மற்ற இந்துக்கள் பல்லக்குகளில் அமர்ந்து செல்வதோ, உயர் சாதிப் பரியின்மீது ஏறிச் செல்வதோ, ஆயுதங்கள் தாங்கு வதோ கூடாது என்ற பேரறிவிப்பாணையை 1695ஆம் ஆண்டில் பேரரசர் வெளியிட்டார் என காஃபிகான் எழுதியுள்ளார். சில இந்துக்களின் திருவிழாக்களின் மீதும் தடைகள் விதிக்கப் பெற்றன.

**அதிருப்திக் கலகங்கள்; இந்துக்களின் எதிர்ச் செயல்**

பேரரசரது நடத்தையினால் பெருவாரியான இந்து குடிக ளிடம் மனநிறைவின்மையும் புரட்சிக் கலகமும் நிச்சயமாகத் தோன்றும். ஆயின், மற்றபடி அறிவாற்றல் மிக்கவரான அவுரங்க

[1] Elliot and Dowson, vol. vii, பக். 296.

சீப் தமது கொள்கையின் இறுதி விளைவினை எதிர்நோக்காது விட்டார் என்பதை நம்புவது கடினமாக உள்ளது. அவர் தமது செயல்களின் அரசியல் விளைவுகளை அறியாதவரல்லர் எனினும், அவற்றினால் வரக்கூடிய பொருள் இழப்பையும், தமது இந்து குடிகளைப் பகைத்துக்கொள்ளுவதால் பேரரசிற்கு ஏற்படக்கூடிய இடரையும் தமக்குக் கிடைக்கக்கூடிய ஆன்ம நன்மை ஈடுசெய்துவிடுமென்று மரபு வழாத முஸ்லிம் சமயத்தவரான அவர் திடமாக நம்பினார். ஒப்பற்ற கேசவ ராய் கோயிலை அழித்ததால் அளவற்ற சினங் கொண்ட மதுராவில் வாழ்ந்த ஜாத்துகள் 1669ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பேரரசிற்கு எதிராகக் கலகம் செய்தனர். அதன் பிறகு பல ஆண்டுகளுக்கு அவர்கள் பேரரசப் படைகளுக்குப் பெருந் தொல்லை தந்துவந்தனர்.[1]

## சத்நாமீகளின் (Satnamis) புரட்சிக் கலகம்

சத்நாமீகள் எனும் இந்து சமயப் பிரிவினரிடையே மற்றொரு கலகம் 1672ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தோன்றியது. அப் பிரிவினர் நர்நால், மேவாட் ஃபர்கானுக்களில் வாழ்ந்துவந்தனர். சந்நியாசிகளைப் போன்று உடை தரித்திருந்த அவர்கள் பெரும்பான்மையில் வணிகர்களாகவும் உழவர்களாகவும் இருந்தனர். சிறிய அளவில் ஆரம்பித்த அவர்களது கலகம் வெகு விரைவில் ஆபத்தான பெருங்கலகமாக மாறியது எனவும், 'தங்களது சமயத்தையும் இல்லத்தையும் காத்துக்கொள்வதற்காக் விடாப்பிடியாகப் போரிட்ட இந்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட சத்நாமீயரை அழிப்பதற்குள் பேரரசிற்குப் பெரும் பாடாகி விட்டது' எனவும் காஃபிகான் விளக்கி யுள்ளார். சத்நாமீயர் நர்நாலைக் கைப்பற்றினர். பேரரசப் படையை முறியடித்தனர். அதன் பிறகு 'அவர்களுக்கு எதிராக வாள்களும் அம்புகளும் துப்பாக்கிக் குண்டுகளும் பயனற்றுப்போகின்றன என்றும், பேரரசப் படையினர் மீது அவர்கள் எறிந்த அம்புகளும் குண்டுகளும் ஒவ்வொன்றும் இரண்டு மூன்று வீரர்களை வீழ்த்தின என்றும் பேரரசரிடம் வந்து சிலர் கூறினர். இங்ஙனம் அவர்கள் மந்திரமாயங்களில் வல்லவர்களாக இருந்தனர் என்று கூறப்பட்டது; அவர்களைப்பற்றி நம்பமுடியாத கதைகளும் கூறப்பெற்றன. அவர்கள் மெய்யான குதிரைகளைப் போன்ற மரத்தினால் செய்த மந்திரப் பரிகளைக் கொண்டிருந்த

1 எளிதில் அழிக்க முடியாத இத்தகைய எழுச்சியோடு பேரரசரைக் கொல்லுதற்கான சூழ்ச்சிகள் சிலவும் எழுந்தன. ஆயின், அவை யாவும் தோல்வியுற்றன. Sarkar, vol. iii, பக். 330.

னர் என்றும், ஆற்றின் மீது அவர்களுடைய பெண்கள் முன்னணிப் படையாக ஏறிவந்தனர் என்றும் செய்தி பரவியது.[1] அதனால் பேரரசப் படைத் தலைவர்கள் முன்னணியில் நின்று போரிடப் பயந்தனர். அதன் விளைவாகக் கலகக்காரர்கள் தில்லிக்கு இருபத்தைந்து மைல்வரையில் முன்னேறிவந்து விட்டனர். இதனைக் கேள்வியுற்ற அவுரங்கசீப் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டார். தமது வீரர்களின் அச்சத்தைப் போக்குதற்காகக் குளிகைகளையும் தாயத்துகளையும் தம் கையாலேயே தயாரித்து அவற்றைப் பேரரசக் கொடிகளில் கட்டினர். அவைகள் பகைவரின் மந்திர மாயங்களுக்கு மாற்றாக அமையும் என்றும் விளக்கினர். இறுதியில் கடுமையான சண்டைக்குப் பிறகு இரண்டாயிரம் சத்நாமியர்கள் போர்க்களத்திலேயே மடிந்தனர். புறமுதுகிட்டு ஓடியபோது மேலும் பலர் கொல்லப் பட்டனர். அவர்களில் உயிர் தப்பியவர்கள் அருமையே. அவர்கள் வாழ்ந்த பகுதியில் அவர்கள் இல்லாதொழிந்தனர்.

### இராஜபுத்திரரின் புரட்சி

1679ஆம் ஆண்டில் இராஜபுத்திரர் வெளிப்படையாகக் கலகத்தில் ஈடுபட்டனர். கைபர் கணவாய்ப் பகுதியில் எல்லைக் காவல் நிலையங்களின் படைத்தலைவராகப் பணிபுரிந்துகொண்டிருந்த நிலையிலேயே 1678ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மகாராஜா ஜெஸ்வந்த்சிங் ஜம்ருடில் உயிர்துறந்தார்.[2] உடனடியாக அவரது நாட்டைக் கைப்பற்றுவதற்காக அவுரங்கசீப் தமது அதிகாரிகளை அனுப்பினர். சிறிது காலத்திற்குப் பிறகு ஜெஸ்வந்த்சிங்கின் உறவினரும், பேரரசவையில் தங்கியவரும், பேரரசரிடம் பற்றுறுதி கொண்டவருமான நகோரின் இந்திரசிங்ராவை அந் நாட்டின் அரியணைமீது ஏற்றினர். மிக முக்கிய நாடாகிய மார்வாரின்மீது நீண்ட காலமாகவே அவுரங்கசீப் கண் வைத்திருந்தார். அதனைக் கைப்பற்றுவதற்கான உரிய தருணத்தை எதிர்நோக்கியே காத்திருந்தார்.[3]

[1] Elliot and Dowson, vol. vii, பக். 295.

[2] பேரரசரின் ஆணையின்பேரில் அவர் நஞ்சிட்டுக் கொல்லப்பெற்றார் என டோடும் (Tod) மனூச்சியும் குறிப்பிடுவர்.

[3] பல காரணங்களுக்காக மார்வார் இராஜ்ஜியத்தை அவுரங்கசீப் முக்கியமானதாகக் கருதினர். வளங்கொழிக்கும் தொழில் நகரமான அகமதாபாத்திற்கும் வாணிபப் பெருக்கம்கொண்ட காம்பே துறைமுகத்திற்கும் தலைநகருக்கும் இடையேயான குறுகியதும் எளியதுமான வாணிபச் சாலை மார்வார் வழியாகவே சென்றது. அதனால் அந் நாடு முகலாயப் பேரரசின் ஒரு பகுதியாக மாறிவிடுமானால், முகலாய வணிகரும் படைகளும் தலைநகரிலிருந்து மேற்கு இந்தியாவிற்கும் அரபிக்கடலுக்கும் செல்வது எளிதாகிவிடும். இங்ஙனம் வாணிப, படைத்துறை முக்கியத்துவம்

இதற்கிடையில் மறைந்த ஜெஸ்வந்சிங்கின் மனைவியர் இருவர் லாகூரை வந்தடைந்தனர். சில நாள்களில் இரு மக்களைப் பெற்றெடுத்தனர். அவற்றில் ஒன்று விரைவிலேயே மடிந்து விட்டது; மற்றது அஜித்சிங் எனும் பெயருடன் வாழ்ந்தது. அப்போது மறைந்த ஜெஸ்வந்த் சிங்கின் வாரிசாக அக் குழந்தையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இராஜபுத்திரர்கள் அவுரங்கசீப்பை வேண்டினர். ஆயின், பேரரசர் எவ் விதத் திடமான வாக்குறுதியும் அளிக்காது அக்குழந்தை தமது அந்தப்புரத்திலேயே வளர்ந்து வரவேண்டுமென்று ஆணையிட்டார். அஜித்சிங்கை ஜெஸ்வந்த்சிங்கின் வாரிசாக ஏற்பதற்கு அக் குழந்தை இஸ்லாமிய சமயத்தைத் தழுவவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பெற்றதாக ஓரறிஞர் குறிப்பிடுகின்ருர். பேரரசரின் கருத்தை அறிந்த இராஜபுத்திரர்கள் பெருங் கலக்கத்திற்குள்ளாயினர். அச்சிறுவனையும் அவனது தாயாரையும் பாதுகாப்பான இடத்திற்கு இட்டுச் செல்வதெனத் தீர்மானித்தனர். ஜெஸ்வந்த்சிங்கின் அமைச்சரான அஸ்கரன் என்பாரின் புதல்வர் துர்காதாஸின் தலைமையில் அவர்கள் சிறந்த திட்டமொன்றை வகுத்தனர். தில்லி நகரின் வீதிகளில் அவர்கள் கடுமையாகப் போரிட்டுப் பெரும்பான்மையோர் உயிர் துறந்த பின்பே எடுத்த காரியத்தில் வெற்றி கொண்டனர். தாயையும் மகனையும் துர்காதாஸ் பத்திரமாக மார்வாருக்கு அழைத்துச் சென்ருர். பல ஆண்டுகளுக்கு ஆபு மலையில் மறைந்திருந்த அஜித்சிங் தமது தந்தையின் வாரிசாளுர். ஜெஸ்வந்தின் விதவைகள் உதயபுரியின் (மேவாரின்) உதவியைக் கோரினர். அப்போது அந் நாட்டை ஆண்டுவந்த மகாராணு ராஜ்சிங் என்பார், கேட்ட உதவியைத் தயங்காது அளித்தார். இங்ஙனம் ஏற்கெனவே இந்து சமயத்திற்கெதிரான பல ஆணைகளினுல் ஆத்திரம் கொண்டிருந்த இராஜபுத்திரர்களுக்கும் பேரரசப் படையினருக்குமிடையே போர் மூண்டது. ஜெய்பூர் (ஆம்பர்) மட்டும் இராஜபுத்திரருடன் சேராது பேரரசிற்குத் துணையாக நின்றது.

ஆரம்பத்திலிருந்தே அச்சமூட்டும் அளவிற்குப் போர் பெருகியது. இராஜபுத்திரர் அதனை தேசியப் போராகக் கொண்ட

வாய்ந்தது மட்டுமல்லாது ஜெஸ்வந்தின் தலைமையில் உரிமையுடன் அல்லது ஓரளவு உரிமையுடன் வாழ்ந்த மார்வார் அவுரங்கசீப்பின் கண்களை உறுத்திவந்தது. இராணுபிரதாப் இறந்த பிறகு உதயபுரியின் நிலை தாழ்ந்தது. மார்வாரின் மன்னர்தான் தலைசிறந்த இந்து தலைவராகப் போற்றப் பட்டார். Sarkar எழுதிய 'Aurangzeb', Vol. iii, பக். 366-9.

னர். நாட்டையும் சமயத்தையும் காப்பதற்கு என அநேகமாக இராஜஸ்தானம் முழுவதும் திரண்டெழுந்தது. அதனால் போரினை நேரில் இருந்து நடத்துவதற்காக அவுரங்கசீப்பே ஆகஸ்ட் மாதத்தில் (1679) ஆஜ்மீருக்குப் புறப்பட்டுச் சென்றார். பல மாநிலங்களிலிருந்தும் பலத்த உதவிப் படைகள் வரவழைக்கப்பெற்றன.[1] மூஆஸம், ஆஸம், அக்பர் ஆகிய இளவரசர் மூவரும் தனித்தனிப் படைப்பிரிவுகளின் தலைவர்களாக நியமிக்கப்பெற்றனர். வழக்கமான தீரத்துடன் இராஜபுத்திரர் போரிட்டனர். 1679ஆம் ஆண்டின் இறுதியில் பேரரசுடன் மார்வார் முறையாக இணைக்கப்பெற்றபோதிலும் முகலாயரது வெற்றி முழு வெற்றியாகாது. 1680ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உதயபுரி மாவட்டத்தையும் பிப்ரவரித் திங்களில் சித்தூர் மாவட்டத்தையும் கைப்பற்றிய முகலாயர் நாட்டுப்புறங்களை அழித்தபோதிலும், மகாராணா ராஜ்சிங் தமது மலைக்கோட்டையில் வலிமையுடனும் பாதுகாப்புடனும் விளங்கினார். அவர் ஆரவல்லி மலையின்மீது நிலைகொண்டார். அத்தொடரின் கிழக்கிலும் மேற்கிலும் அமைந்த மேவார், மார்வார் நாடுகளில் நிறுத்தப்பெற்றிருந்த முகலாயப் படைகளின்மீது பாய்ந்து பெருந்தொல்லை விளைவித்தார். 1681ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இளவரசர் அக்பர் புரட்சியில் ஈடுபடுவதற்குமுன் இருந்த பத்து மாத காலத்தில் ரதோர், சிசோதயா கூட்டங்களைச் சார்ந்த இராஜபுத்திரர்கள் கும்பல் கும்பலாக வந்து முகலாயப் படையினைத் தாக்கினர். தளவாடங்கள் கொண்டுவந்தவர்களையும், திசை தப்பித் திரிந்தவர்களையும் துண்டித்தனர். இங்ஙனம் பகைவரின் காவல் நிலையங்களைப் பாதுகாப்பற்றவைகளாகச் செய்தனர். உண்மையில் அவர்கள் முகலாயப் படையினரிடையே பேரச்சத்தை விளைத்திருந்த காரணத்தால், முகலாயக் காவல் நிலையங்களின் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. பலவித சாக்குகளைக் கூறிப் படைத்தலைவர்கள் ஒவ்வொருவராக ஆபத்தான அப் பெருமை தரும் பதவியை ஏற்க மறுத்தனர். அவுரங்கசீப் பழியை இளவரசர் அக்பர்மீது சுமத்தினார். பெருஞ் சீற்றம் கொண்ட நிலையில் சித்தூரில் படைத்தலைவராக இருந்த அக்பரை அங்கிருந்து விலக்கி மார்வாருக்கு அனுப்பினார்.

1 ஆப்கானியருடன் போரை (1667-76) நீடிப்பது அறிவற்றது என்பதை இப்போது அவுரங்கசீப் உணர்ந்திருக்கவேண்டும். ஏனெனில், வளமற்ற கரடுமுரடான இராஜபுதனத்தில் பொரிடுவதில் மிகுந்த பயனுள்ள படைவீரர்களாக ஆப்கானியர் இருந்தபோதிலும், அவர்களை இராஜபுத்திரருடன் போரில் பயன்படுத்துவது இயலாத ஒன்றாகியது.

## இளவரசர் அக்பரின் புரட்சி

இருபத்துமூன்று வயது நிரம்பிய இளவரசர் அக்பர், வலிமையும் நம்பிக்கையும் ஆசையும் நிறைந்தவர். தம்மைப் பதவியிலிருந்து நீக்கிய அவமானத்தால் அவர் ஆவேசம்கொண்டிருந்தார். சிறிது காலத்திற்குப் பேரரசருக்குக் கடிதம் எழுதுவதையும் நிறுத்தியிருந்தார். அவுரங்கசீப்பின் அதிகாரத்தை அழிப்பதற்கு இதுவே தக்க தருணம் என இராஜபுத்திரர்கள் கருதியது இயற்கையே. அவர்கள் பெரிதும் போற்றிவந்த கோயில்களையும் கடவுட் படிமங்களையும் பேரரசர் அழித்ததாலும், மிகுந்த வெறுப்பிற்குள்ளான ஜெஸியா வரியை அவர் மீண்டும் விதித்ததாலும் இராஜபுத்திரர் அவரை மனமார வெறுத்ததில் வியப்பில்லை. அவுரங்கசீப்பைத் தில்லி அரியணையிலிருந்து இறக்கிவிட்டுத் தங்களுடைய சமயத்தைச் சகித்துக்கொள்ளக்கூடியவரும், குடிமக்களில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்குமிடையே வேற்றுமை பாராட்டும் வெறுக்கத்தக்க கொள்கையைப் புகுத்தியவருமான பேரரசருக்கு மாறாக நடக்கக்கூடிய அவரது புதல்வர்களில் ஒருவரை அரியணையில் ஏற்றுவது என இராஜபுத்திரர்கள் நினைத்தார்கள் என்றால், அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது? அவர்களது கவனம் இளவரசர் அக்பர்மீது திரும்பியது. இளவரசருக்கு அடுத்த நிலையில் இருந்த தஹவூர் கானை (Tahauur Khan) பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தரகராகக் கொண்டனர். 'எங்ஙனம் இராஜபுத்திரரை அழிக்க வேண்டுமென்ற அவுரங்கசீப்பின் வெறித்தனமான முயற்சி முகலாயப் பேரரசின் உறுதியைக் குலைக்கவல்லது என்பதனை மகாராணா ராஜ்சிங்கும் ரதோர் தலைவரான துர்காதாஸும் அக்பரிடம் எடுத்துக் கூறினர். மேலும், மரபாக வந்த சொத்தைக் காக்கவேண்டுமானால் அவர் ஆட்சியைக் கைப்பற்றுவதோடு, அவரது மூதாதையர்களின் அறிவுசான்ற கொள்கையை மீட்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இங்ஙனம் உண்மையான தேசிய அரசினை ஏற்படுத்துவதில் இராஜபுத்திரக் கூட்டத்தினரில் புகழ்பெற்ற சிசோதயா, ரதோர் ஆகிய கூட்டத்தினரின் படைப்பலம் முழுதும் அவருக்குக் கிடைக்குமென்று வாக்குறுதியும் அளித்தனர்.'[1] அவர்கள் அளித்த யோசனை ஆசையைக் கிளருவதாக இருந்தது. இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் அவுரங்கசீப் அவரது தந்தையிடமிருந்து அரியணையைக் கைப்பற்றியதுபோலத் தாமும் இராஜபுத்திரர்களின் தலைவராகச் சென்று தில்லி அரியணையைக் கைப்பற்ற வேண்டுமென்று இளவரசர் அச்பர் நினைத்தார். அதனால்,

1 Sarkar, 'Aurangzeb', vol. iii, பக். 404.

இறுதியில் அவர் இராஜபுத்திரரின் யோசனையை ஏற்றுக்கொண்டார். பேரரசின் மகுடத்தைக் கொள்வதற்காக 1681ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் தேதியன்று அக்பர் ஆஜ்மீரை நோக்கிப் புறப்படுவது எனத் தீர்மானமாகியது. அத் தினத்தில் இளவரசர் அக்பரும் இராஜபுதனத்துத் தலைசிறந்த போர்வீரர்களும் அடங்கிய 70,000 எண்ணிக்கை கொண்ட புரட்சிப் படையும் ஆஜ்மீரை நோக்கிச் சென்று ஜனவரி மாதம் 15ஆம் தேதியன்று பேரரசப் படைக்கு மூப்பது மைல்களுக்குள்ளாக நெருங்கினர். அது பேரரசருக்கு நெருக்கடியான நாளாகும். அவரது படைகளில் இரண்டு வெகு தொலைவில், அதாவது, சித்தூருக்கு அருகிலும் ராஜசமுத்திர ஏரிக்கு அருகிலும் தங்கியிருந்தன. பற்றுறுதி மிக்க பேரரசரின் காவல்படையும் வெகு தொலைவில் போரிட்டுக்கொண்டிருந்தது. ஆனால், துன்பம் வந்தபோதுதான் அவுரங்கசீப் தமது திறமைகளை வெளிப்படுத்தினார். அவர் வெல்திறத்தில் விற்பன்னராகவும் சூழ்ச்சியில் சகுனியாவும் விளங்கினார் என்பது யாவரும் அறிந்ததே. இம்முறையும் சூழ்ச்சிதான் அவரைக் காத்தது. இராஜபுத்திரர்களின் கையில் சிக்குமாறு அவர் எழுதிய கடிதத்தில் அக்பர் நயவஞ்சகம் செய்யக்கூடும் என்ற ஐயத்தை அவர்கள் மனத்தில் பதியுமாறு செய்தார். அவுரங்கசீப்பின் சூழ்ச்சி பலித்தது. அக்பரின் துணைக்கு வந்த இராஜபுத்திரர்கள் அவர் துரோகம் செய்யக்கூடும் என்று ஐயுற்று இரவோடு இரவாக அவரைத் தனியாக விட்டுத் தப்பிச் சென்றனர். பதினாறும் தேதி காலையில் தாம் தனியாக விடப்பெற்றதை அக்பர் உணர்ந்துகொண்டார். விரைவாகத் தமது செல்வங்களைச் சேகரித்துக்கொண்டு இராஜபுத்திரர்கள் சென்ற பாதையிலேயே விரைந்து சென்றார். சில நாள்களுக்குப்பின் அவுரங்கசீப்பின் சூழ்ச்சிக் கடிதத்தின் உண்மை வெளியானதும், துர்க்காதாஸ் இளவரசரிடம் திரும்பி வந்து 1681ஆம் ஆண்டு மே மாதத்தில் அவரைப் பாதுகாப்புடன் தக்கணத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே அக்பர் ஓராண்டுக் காலத்திற்கு சிவாஜியின் புதல்வரான சாம்பாஜியின் ஆதரவில் வாழ்ந்துவந்தார். அதன் பிறகு பம்பாய்க்குச் சென்ற அவ்விளவரசர் ஆங்கிலக் கப்பலில் ஏறி மஸ்காட்டிற்குச் சென்றார். அத் துறைமுகத்திலிருந்து பாரசீகத்தை வந்தடைந்தார். தமது தந்தை இறப்பதற்கு ஓராண்டிற்கு முன்னரே இறக்கும்வரையில் பல ஆண்டுகளுக்கு அந் நாட்டிலேயே வாழ்ந்தார்.

**இராஜபுத்திரர்களின் புரட்சி**

இளவரசர் அக்பர் தக்கணத்திற்கு ஓட்டமெடுத்ததோடு தீவிர மோதல்கள் முடிவடைந்தபோதிலும், இராஜபுத்திரர்

களுக்கும் முகலாயர்களுக்கும் இடையேயான போரானது மேலும் சிறிது காலத்திற்குத் தொடர்ந்துவந்தது. 1681ஆம் ஆண்டில் உதயபுரியின் மகாராணுவுடன் ஓர் உடன்படிக்கை உருவாகியது. அதில் இரு கட்சிகளும் விட்டுக்கொடுத்தன. தமது நாட்டிலிருந்து கோரிய ஜெஸியா வரிக்குப் பதிலாகச் சில பர்காணுக்களை மகாராணு முகலாயருக்களித்தார். பேரரசரும் 'வெறுக்கத்தக்க வரியை' வற்புறுத்துவது இல்லை என உறுதியளித்தார். ஆயினும், மார்வாரில் மட்டும் மேலும் முப்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து போர் நடந்தது. வெற்றி தோல்விகள் மாறிமாறி வந்தன. இறுதியில் அவுரங்கசீபின் புதல்வரும் வாரிசுமான முதலாம் பகதூர்ஷா, 1709ஆம் ஆண்டில் ஜோத்பூர் நாட்டை ஆளும் உரிமை அஜித்சிங்சிற்கு உண்டு என்பதை ஏற்றுக்கொண்ட பிறகுதான் சண்டை ஓய்ந்தது. பேரரசர் அவுரங்கசீபின் தவறான கொள்கையின் விளைவாக அக்பரின் காலத்திலிருந்து முகலாயர் குடியின் வழிவழியாக வந்த ஆதரவாளர்களாயிருந்த இராஜபுத்திரர்கள் தில்லி அரசிற்கு நிரந்தரப் பகைவர்களாயினர். பேராசிரியர் சர்க்கார் பின்வருமாறு குறிப்பிடுவார்: 'தலைசிறந்த இரு இராஜபுத்திரக் கூட்டங்கள் வெளிப்படையாகவே அவுரங்கசீப்பிற்கு எதிராக இருந்ததால், மிகுந்த பற்றுறுதிகொண்ட தலைசிறந்த வீரர்களை அவரது படை இழந்தது மேலும், மார்வார், மேவார் ஆகியவற்றுடன்மட்டும் தொல்லை நின்றுவிடவில்லை; ஹடா, கௌர் கூட்டத்தினரும் தொல்லை தரத் தொடங்கினர். இங்ஙனம் தொடங்கிய அமைதியின்மை மாளவத்திற்கும் வேகமாகப் பரவியது. அதனுல் மாளவத்தின் மூலமாகத் தக்கணத்திற்குச் சென்ற முகலாய நெடுஞ்சாலைக்கு ஆபத்து வந்தது. அவுரங்கசீபின் எஞ்சியிருந்த வாழ்நாள்களில் நடைபெற்ற போர்களில் பங்குகொள்ள பந்தேலா கூட்டத்தினரும், ஹடா, கச்வஹா குடும்பங்களில் சிலவும் மட்டுமே வீரர்களைத் தந்து உதவின. சமய ஒறுப்பு எனும் புயலைக் கிளப்பி, தேசிய இனங்களை அழிக்க முற்பட்டதால், ஜலாலுதீன் அக்பரின் பேரரான அவுரங்கசீப் அறுவடை செய்த பயன் இதுவேயாம்'.[1]

### குரு தேஜ்பகதூருக்கு மரணதண்டனை அளித்தல்; சீக்கியர்களின் வளர்ச்சி

அவுரங்கசீப் எழுப்பிய சமய வெறி எனும் புயலுக்குப் பல புனித ஆன்மாக்கள் பலியாயின. ஆயின், சீக்கியர் குருவான தேஜ்பகதூருக்கு மரண தண்டனை அளித்தபோது வேறு எப்

1 Sarkar's 'Aurangzeb', vol. iii, p, 425.

போதும் தோன்ருத தீவிர விளைவுகள் தோன்றின எனலாம். அச்செயல் பிற்காலப் பஞ்சாபின் வரலாற்றின்மீது மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. பதினெட்டாம் நூற்ருண்டிலும் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பாதியிலும் பஞ்சாப் மாநிலத்தின் அரசியல் வரலாற்றில் முக்கியப் பங்கு ஏற்றவர்களான சீக்கியரின் வரலாற்றினை இங்கே சுருக்கமாகக் கூறுதல் பொருந்தும். குரு நானக் என்பார் சீக்கிய சமயத்தை நிறுவினுர். பதினைந்தாம், பதினும் நூற்ருண்டுகளில் தோன்றிய பொதுவான சமய மறுமலர்ச்சியின் ஒரு பிரிவாகவே சீக்கிய சமய இயக்கம் எழுந்தது எனலாம். குரு நானக் லாகூருக்குத் தென்மேற்கே 35 கல் தொலைவிலுள்ள நங்கனு சாகிப் என வழங்கப் பெறும் தால்வாண்டி எனுமிடத்தில் 1469ஆம் ஆண்டில் அவதரித்தார். அவர் இளம்பருவத்திலிருந்தே பல பொருள்களைப் பற்றியும் சிந்தித்து ஆராய்ந்துபார்க்கும் மனம் கொண்டவராக இருந்தார். அவர் வளர வளர அவரது சமய ஆராய்ச்சியும் அதிகரித்துவந்தது. இறுதியில் அவர் தௌலத்கான் லோடியிடம் வகித்த பதவியை உதறித் தள்ளிவிட்டுப் பல இடங்களில் சுற்றித்திரிந்து போதனை செய்யும் சமய வாழ்வை மேற்கொண்டார். அவர் ஓர் உண்மையான பக்திமான். உண்மையான கடவுள் ஒருவர் மீது அசையாத நம்பிக்கை கொண்டு, அவரை உணரும் வகையில் ஒவ்வொருவரும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு ஒழுகுவதே அவரது சமயத்தின் சாரமாகும். இந்து சமயத்தைத் தூய்மைப்படுத்துவதிலும், சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதிலும் அவர் தமது வாழ்நாளைச் செலவிட்டார். தமக்கு முன்னுல் வாழ்ந்திருந்த கபீர் போன்ற சமயக் குரவர்களைப் போலவே நானக்கும் மரபாக வந்த நம்பிக்கைகளின் பொருளற்ற தன்மையையும், சமயச் சடங்குகளின் பயனற்ற தன்மையையும் எடுத்து விளக்கி அவற்றை எதிர்த்து நின்ருர். தனிப்பட்ட சொந்த முறையிலான, உண்மையில் வாழும் சமயத்தைத் தழுவுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். சமயத்தைப் பிழைப்புத தொழிலாகக் கொண்ட பிராமணர்களும் முல்லாக்களும் உண்மையை அடைவதற்கு உற்ற நேர்மையான வழிகாட்டிகள் அல்லரென்றும், குருடர்களை அழைத்துச் செல்லும் குருடர்களே அவர்கள் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறினுர். ஆண்டவரின் சேவையில் தம்மை அர்ப்பணித்துக் கொள்வதே உய்வதற்கான ஒரே வழியென்பதையும் வலியுறுத்தினுர்.

1539ஆம் ஆண்டில் தமது எழுபதாவது வயதில் இறந்தபோது, நானக் தமது பணியைச்சீடர்களில் ஒருவராகிய அங்காட்

(1538–52) என்பாரிடம் விட்டுச் சென்றார். அங்காடும் அவரை அடுத்து வந்த அமர்தாஸும் (1552–74) உயர்ந்த பண்புகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். ஆயின், மூன்றாவது குருவிற்குப் பிறகு தலைமைப் பதவி மரபாக வரத் தொடங்கியது. நான்காவது குருவான ராம்தாஸிற்குப் பிறகு அவரது புதல்வரான அர்ஜுன் தேவ் (1581–1606) தலைவரானார். அன்னாரது தலைமையில்தான் சீக்கிய சமயம் திடமாக உருப்பெற்றது. சீக்கியரிடம் ஏற்கெனவே சில ஒற்றுமைப் பண்புகள் காணப்பெற்றன. மதிநுட்பம் வாய்ந்த குரு அர்ஜுன் சீக்கிய சமயத்தினை மேலும் வலுவடையச் செய்வதற்கான வழிமுறைகள் சிலவற்றைக் கையாண்டார். அவர் ஆதிகிரந்தத்தை இயற்றினார். வெகு விரைவிலேயே சீக்கியர் அதனை பைபிளாக, குரானாக, வேதங்களாகப் போற்றத் தலைப்பட்டனர். குரு அர்ஜுன் தமது இருப்பிடத்தை அமிர்தசரஸிற்கு மாற்றினார். அது காலப்போக்கில் சீக்கியருடைய முக்கியப் புண்ணியத் தலமாக மாறியது. தம்மைப் பின்பற்றுவோர் அனைவரும் தங்களது மொத்த வருவாயில் பத்தில் ஒரு பங்கினைக் கட்டாயமாகச் சமயப் பாதுகாப்பிற்கு அளிக்க வேண்டுமென்று வற்புறுத்திய அர்ஜுன் தேவ், சீக்கிய சமயத்தின் பொருளாதார நிலையினைச் சீர்படுத்தினார். சுருங்கக் கூறுமிடத்து, இப்போது சீக்கியர் சமயம் சார்ந்த ஓர் அரசினை அமைத்துக்கொண்டனர் எனலாம். அவர்கள் ஆதிகிரந்தத்தைச் சமயச் சட்டத் தொகுப்பாகக் கொண்டனர். அமிர்தசரஸைப் புனித நகரமாகக் கொண்டனர். குருவை உற்ற தலைவராகக் கொண்டனர். அர்ஜுன் தேவ் தலைவராக வந்த பிறகு சீக்கிய குருவின் அதிகாரமும் பெருமையும் பெருமளவு பெருகியிருந்தன.

**அவுரங்கசீபும் சிவாஜியும்**

வட இந்தியாவில் சமயப் பரப்பில் அவுரங்கசீப் தீவிரமாக ஈடுபட்டு இருந்த சமயத்தில், தெற்கில் மராத்தியரின் விடுதலைக்கான போரில் சிவாஜி ஈடுபட்டிருந்தார். சிவாஜி எழுந்த வரலாற்றினை வரைவதற்கு முன்னால் மராத்தியரின் ஆரம்பகால வரலாற்றையும், அவர்களுடைய குணாதிசியங்கள் பற்றியும் சுருங்கக் கூறுவது அவசியமாகும்.

மராத்தியரின் நாடாகிய மகாராட்டிரம் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. அது தீபகற்ப இந்தியாவின் வடமேற்குப் பகுதியைத் தன்னகத்தே கொண்டது. இந்த நாட்டின் இருபுறங்களிலும் மலைத்தொடர்கள் வளர்ந்திருக்கின்றன. அவைகள் வடக்கு தெற்காக அமைந்

திருக்கும் சஹியாத்ரி மலைத்தொடரும், கிழக்கு மேற்காகச் செல்லும் விந்திய, சாத்பூரா மலைகளும் ஆகும். இயற்கையிலே அரண்மிகுந்த இந்நாட்டின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் வகையில் இம் மலைத்தொடர்களின் உச்சியில் அமைந்த மலைக் கோட்டைகள் சிறப்புற்று விளங்குகின்றன. இவைகள் அந்நாட்டின் அரசியல் வாழ்வில் பெரும் பங்கு கொண்டிருக்கின்றன. நல்ல, இதமான தட்பவெப்ப நிலையை மராத்தியர் அனுபவித்து வருகின்றனர். ஆயின், முறையாக மழை பெய்வது கிடையாதாகையாலும், மலைப்பாங்கான நிலமாதலாலும் மண் வளமற்று இருக்கின்றது. கடுமையாக உழைத்தாலும் உயிர்வாழ்வதற்குப் போதுமான குறைந்த அளவு பயனையே தருகின்றது. அதனால் இந்த நாட்டில் மக்கள் நெரிசல் இல்லை. ஆயினும், இத்தகைய நிலமும் தட்பவெப்ப நிலையும் குறைகளை நிறைவு செய்யும் வகையில் சில நலங்களை அளித்திருக்கின்றன. வளமான சமவெளிகளில் எப்பொழுதும் காண முடியாத தன்னம்பிக்கை, தீரம், விடாமுயற்சி, எளிமைத் தன்மை போன்ற உயர்ந்த பண்புகள் வளர அவை உதவியிருக்கின்றன. மராத்தியரிடம் இப் பண்புகள் வளர்ந்திருந்தன. அவர்கள் சுறுசுறுப்பும், கடின உழைப்பும், விடாப்பிடியான முயற்சியும், உடல் உரமும் மிக்கவர்கள். இத்தகைய உயர்ந்த பண்புகளோடு மகாராட்டிரத்தின் பொதுச் சமயத்தின் மூலமாக வளர்ந்தோங்கிய சமயத்துவ மனப்பான்மையும் இணைந்தது. பக்தி மார்க்கத்தைச் சார்ந்த சமயத் தலைவர்கள் கடவுளிடம் பக்தியையும், வகுப்பு வேற்றுமையோ பிறப்பு வேற்றுமையோ இன்றி ஆண்டவர் முன்னால் உண்மையான சமயத்தவர் சமமானவர், ஒன்றுபட்டவர் எனும் உணர்வையும் கொள்ளவேண்டுமென்று போதித்தனர். சமயச் சீர்திருத்தக்காரர்கள் துதிப்பாடல்களை மராத்திய மொழியில் இயற்றியதாலும், பதினைந்தாம் நூற்றாண்டிலும் பதினாறும் நூற்றாண்டிலும் பெரும்பான்மையான மராத்திய இலக்கியங்கள் படைக்கப்பெற்றமையாலும் மொழியும் இலக்கியமும் ஒருவகையில் ஒற்றுமையை வளர்த்தன. எவ்வாறெனின் இந்துக்கள் அனைவருடைய பொதுச் சொத்தாக வந்த பண்டைக் காலச் சமய இலக்கியங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும்தாம் இவ்விலக்கியங்களின் கருப்பொருள்கள் எடுத்துக் கையாளப்பெற்றிருக்கின்றன.

இங்ஙனம் அரசியல் ஒற்றுமையை பதினேழாம் நூற்றாண்டில் சிவாஜி வழங்குவதற்கு முன்பே மகாராட்டிரத்தில் மொழி, சமயம், வாழ்க்கைமுறை ஆகியவற்றில் குறிப்பிடத்தகுந்த ஒற்றுமை தோன்றியிருந்தது. அரசியல் பயிற்சியிலும் அந்

நாட்டு மக்கள் வளர்ச்சியடையாதவர்கள் எனக் கொள்வதற்கில்லே. தென்னிந்தியாவில் வாழ்ந்த முகம்மதிய மன்னர்களிடம் சேவை செய்த மராத்தியர்கள் படைத்துறையிலும் பொது ஆட்சித்துறையிலும் போதுமான அனுபவம் பெற்றிருந்தனர். கோல்கொண்டா மன்னர்களும் பீஜப்பூர் சுல்தான்களும் தங்களது நாட்டில் பொருளாதார, நிதித்துறைகளில் ஏராளமான மராத்தியரைப் பதவியில் அமர்த்தினர். சில சமயங்களில் மிக உயர்ந்த அமைச்சர் பதவிகளேயும் தக்காணத்து பிராமணர்கள் நிரப்பினர். மதன் பண்டிட், யாசு பண்டிட் போன்ற பலர் பீஜப்பூரை ஆண்ட அடில்ஷாஹி மன்னர்களின் அரசவையில் புகழ்பெற்று விளங்கினர். அந் நாட்டுப் படையில் ஏராளமான மராத்திய வீரர்கள், சிலாதார்,[1] பார்கீர்[2] துருப்பினராகத் தாராளமாகப் பதிவு செய்து கொண்டனர். அவர்கள் போரிடுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். பதினேழாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் தில்லியை ஆண்ட முகலாயப் பேரரசர்கள் நர்மதை ஆற்றிற்கு இப்பால் உள்ள நாடுகளில் தங்களது ஆதிக்கத்தை வளர்க்க முற்பட்டபோது, தெற்கே வாழ்ந்த மன்னர்கள் மராத்தியரைப் பெருமளவில் படையில் சேர்த்துக்கொண்டனர். குறிப்பாக மலேகளின் உச்சியில் அமைந்த மலேக்கோட்டைகளேப் பாதுகாப்பதற்கென்று மராத்தியரை மிகுதியாகப் பயன்படுத்தினர். இவ்வாறு கிடைத்த வாய்ப்பினேத் தங்கள் தேசீய நலனேப் பெருக்கிக் கொள்வதில் மராத்தியர் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். இப்போது அகமதுநகர், பீடார், கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய முஸ்லிம் அரசுகளில் மராத்திய அரசியல் அறிஞர்களும் மராத்தியப் போர்வீரர்களும் பல துறைகளேக் கட்டுப்படுத்திவந்தனர்.

### சிவாஜியின் தோற்றம் 1627

அநேகமாக அதே சமயத்தில் பிறவித் தலேவருக்கு வேண்டிய இன்றியமையாப் பண்புகளேப் பெற்றிருந்த சத்ரபதி சிவாஜி (Chattrapati Shivaji) 1627ஆம் ஆண்டில் இவ்வுலகில் தோன்றினுர். தமது ஐம்பத்துமூன்ரும் வயதில், அதாவது, 1680 ஆம் ஆண்டில் இறப்பதற்கு முன்னுல் அவர் ஒரு தேசீய மராத்திய அரசை நிலேநாட்டுவதில் வெற்றி பெற்ருர். அவர் உருவாக்கிய அந்தத் தேசீய அரசானது பத்தொன்பதாம்

1 சொந்தக் குதிரை கொண்டுவந்த வீரர்கள்.

2 அரசாங்கத்திடமிருந்து குதிரை பெற்ற வீரர்கள்.

நூற்றுண்டின் தொடக்கத்தில் மேலான அமைப்பினைக் கொண்ட அன்னிய அரசாங்கத்திஞல் அழிக்கப்பெறும் வரையில் அகில இந்தியாவின் அரசியல் நிகழ்ச்சிகளின்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தது.

ஜாகீர்தாரான ஷாஜி பான்ஸ்லே என்பாருக்கும், அவர்தம் அன்பு மனைவியாம் ஜீஜாபாய் என்னும் மங்கை நல்லாளுக்கும் மகளுகப் பிறந்தவர் சிவாஜி. அகமதுநகர் சுல்தானின் படையில் ஆரம்ப காலத்தில் போர்வீரராகச் சேர்ந்த ஷாஜி பொதுவாகப் புகழ் ஏணியில் ஏறத்துவங்கிப் பெரும் நிலப்பரப்பினைத் தமதாக்கிக்கொண்டார். அதன் பிறகு அவர் பீஜப்பூர் சுல்தானின் சேவையில் அமர்ந்தார். ஷாஜஹான் ஆட்சிக் காலத் தொடக்கத்தில் இந்த இரு அரசுகளின் அரசியலில் ஷாஜி எவ்வாறு முக்கியப் பங்குபெற்ருர் என்பதைப் பற்றி ஏற்கெனவே குறித்துள்ளோம். பீஜபூர் சுல்தானின் சேவையில் இருந்த காலத்தில்தான் கர்ஞடகத்தில் ஜாகீர் ஒன்றை ஷாஜி பெற்ருர். அதற்கு முன்பே, அகமதுநகர சுல்தான்களிடம் பணியாற்றிய காலத்தில், பூஞவில் பெருமளவு சொத்துகளைப் பெற்ருர். பூஞவில் இருந்த அவரது பண்ணையில்தான் இளைஞரான சிவாஜி காப்பாளரான தாதாஜி கோண்டதேவரின் கண்காணிப்பில் ஆட்சிக் கலையில் ஓரளவு பயிற்சி பெற்ருர். பூஞவிலிருந்த நிலங்களைக் கவனித்துக்கொள்வதற்கென்று ஷாஜி நியமித்திருந்த தாதாஜி நேர்மையும், அறிவும், ஆற்றலும் கொண்ட பிராமணராவார். அவர் ஏறக்குறையப் பெற்ரேருரின் பாசத்தை சிவாஜியிடம் காட்டிஞர். தமது பாதுகாப்பில் இருந்த சிவாஜிக்குத் தேவையான போர்ப்பயிற்சி, குதிரை ஏற்றப் பயிற்சி ஆகியவற்ரேடு மற்றத் தகுதிகளையும் வழங்கிஞர். மேலும், கட்டுப்பாடற்று இருக்கும் சக்திகளை எவ்வாறு அடக்கி ஒழுங்கிற்குக் கொண்டுவருவது என்ற பயனுள்ள முறைகளையும் சொல்லித்தந்தார்.

திறமை மிக்க சிவாஜியின் பண்பை வளர்ப்பதில் அன்ஞரது தாயாரும் பெரும்பங்கு கொண்டார் எனக்கூறப்படுகின்றது. அவர் ஆழ்ந்த பக்தியும் தெய்வ சிந்தனையும் மிகுந்த மங்கை நல்லார் என்றும், தீரமும் போரும் நிறைந்த பழைய புராண இதிகாசக் கதைகளை சிவாஜிக்கு எடுத்துக்கூறிஞர் என்றும், தமது கொள்கையாலும் செயலாலும் இந்துக்களில் போற்றுதலுக்குரிய பிராமணர்கள், பசுக்கள், சாதிமுறை ஆகிய மூன்றையும் காக்கவேண்டுமென்ற ஆர்வத்தை சிவாஜியிடம் தூண்டிஞர் என்றும் மராத்திய வரலாற்றை வரைந்த சில

அறிஞர் விளக்குவாராயினர். 'பெரிய மனிதர்களின் பெருமைக்கு அவர்களுடைய தாய்மார்கள் அளித்த தூண்டுதல் காரணமாக அமைந்திருக்குமாகுல், சிவாஜியின் வாழ்வை வளப்படுத்துவதிலும் அவரது வலிமையின் ஊற்றுக இருந்தது அவர் மீது ஜீஜாபாய் கொண்ட செல்வாக்கே' என நீதிபதி ரானடே குறிப்பிட்டுள்ளார். தமது தாயாரின் செல்வாக்கிற்குத் தாம் எத்துணை அளவிற்குக் கடமைப்பட்டவர் என்பதை சிவாஜி உணர்ந்திருந்ததாகத் தெரிகிறது. எவ்வாறெனில், அவரது வாழ்வில் ஏற்பட்ட பெருஞ்சிக்கல்கள் பற்றி ஜீஜாபாய் உயிர்வாழ்ந்திருந்தவரையில் அவரை சிவாஜி கலந்து ஆலோசித்துவந்தார்.

## சிவாஜியின் இளமைப் பருவம்

சிவாஜி, தமது இளமைப் பருவத்தில் சமவயது கொண்ட பல மாவலித் தலைவர்களுடன் நட்புக் கொண்டிருந்தார். அத்தகைய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு சுற்றியதில் மலைத் தொடர்களில் அமைந்த பள்ளத்தாக்குகள் பற்றியும் முகடுகள் பற்றியும் நன்கு அறிந்துகொண்டார். சிவாஜியின் பிற்கால வாழ்வில் மாவலித் தலைவர்களுடன் கொண்ட தொடர்பும், மலை நாட்டைப்பற்றி அவர் பெற்றிருந்த அறிவும் பேருதவியாக இருந்திருக்கின்றன. எவ்வாறெனில், மாவலியர்களிடையே யிருந்துதான் அவர் தலைசிறந்த வீரர்களைப் பெற்ருர். அந்த மலைநாட்டில்தான் அவர் தமது வீரவாழ்க்கையைத் துவங்கிஞர். பஞ்சாபின் ரஞ்சித் சிங்கைப்போலவே சிவாஜியும் விரைவில் முன்னேறிஞர். அன்னுரைப்போலவே பத்தொன்பது வயது கொண்ட இளமைப் பருவத்திலேயே பொதுவாழ்வைத் தொடங்கிஞர். 1646ஆம் ஆண்டில் பூனுவிற்குத் தென்மேற்கே இருபது கல் தொலைவில் இருந்த தோரணு எனும் மலைக்கோட்டையைக் கைப்பற்றிஞர். அக்கோட்டையின் அண்மையிலும், அது அமைந்த அதே பக்கமலையின் மீது அமைந்ததுமான மற்றொரு கோட்டையையும் கைப்பற்றி அதனை வலியத் தாக்கிஞர். அதுவே பிற்காலத்தில் ரெய்கார் கோட்டையென்று புகழ் பெற்று விளங்கியது. அடுத்த ஓரிரண்டு ஆண்டுகளில் அவர் கோண்டனு எனும் கோட்டையைப் பிடித்து அதற்குச் சிங்கர் எனப் பெயரிட்டார். அப்போதே நான்காவது கோட்டையான புரந்தரையும் பிடித்துக் கொண்டார். இப்போது அவரது காப்பாளரான தாதாஜி இறந்துவிட்டாதலும், அவரது தந்தையான ஷாஜி வெகுதொலைவில் இருந்த கர்னுடகப் பண்ணைகளில் இருந்ததாலும், சிவாஜி

தமது தந்தையின் பூனு பண்ணையின் மீது முறையான அதிகாரத்தை நிலைநாட்டினர். அவரது தந்தையால் நிர்வாகியாக நியமிக்கப்பெற்ற மாமனுகிய சாம்பாஜியிடமிருந்து சுபா (Supa) எனும் ஜாகீரையும் கைப்பற்றிக்கொண்டார். அவரது தந்தைக்குச் சொந்தமான பகுதியில் இருந்தவையும், பூனுவிற்குத் தென்கிழக்கே அமைந்தவையுமான பாரமதி, இந்தாபூர் என்ற மேலும் இரு கோட்டைகளையும் தமது நேரடி ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார்.

இங்ஙனம் சிவாஜி, தொடர்ச்சியாக இருந்த பல வலிய கோட்டைகளின் பாதுகாப்பினைப் பெற்ற பெரிய பண்ணையொன்றினைத் தமதாக்கிக்கொண்டார். அவரது வலுத்தாக்குதல் நடவடிக்கைகளை பீஜப்பூர் அரசாங்கம் தீவிரமானவையாக்க் கருதவில்லை. அண்மையில் அந் நாட்டின்மீது முகலாயர் படையெடுத்துவந்ததால் ஏற்பட்ட குழப்பம் அதற்கு ஓரளவு காரணமாகும். மற்ருெரு வகையில் அவரது கேடு பயக்கும் நடவடிக்கைகளைப்பற்றி அறிவிக்க வேண்டிய அதிகாரிகளுக்குக் கையூட்டு அளித்து அவர்களை ஊமைகளாக்குவதற்கான பகர ஆள்கள் பலரை சிவாஜி பீஜப்பூரில் வைத்திருந்ததும் ஒரு காரணமாக அமைந்தது. உண்மையில் குடும்பச் சொத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இக்கோட்டைகளை சிவாஜி கைப்பற்றியது பொது நன்மைக்காகவே என பீஜப்பூர் சுல்தான் நம்புமாறு செய்யப்பட்டது. இந்தக் கட்டத்தில் சிவாஜியின் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடவந்த காஃபிகான் பின்வருமாறு கூறுவார்: 'கொங்கணத்தின் மற்றப் பகுதிகளிலும் தக்கணத்திலும் அவரும் அவரது வழித்தோன்றல்ளும் பரப்பிய வன்முறையான திட்டத்தின் தொடக்கம் இதுவே. ஒரு செல்வம் கொழிக்கும் நகரத்தைப் பற்றியோ, வளமிக்க விவசாயிகள் வாழும் மாவட்டத்தைப் பற்றியோ அவர் அறிவாராளுல், அதனைக் கைப்பற்றிச் சூறையாடினர். தொல்லைமிகுந்த அக்காலத்தில் அந்தப் பகுதிகளின் ஜாகீர்தார்கள் பீஜப்பூருக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னரே பரிசு பொருள்களையும் பரிந்துரைகளையும் சிவாஜி அனுப்பினர். அவரது செயல்பற்றிச் செய்தியனுப்பி ஜாகீர்தார்கள் அல்லது சொந்தக்காரர்கள் தம்மை அவமதித்தார்கள் என்றும், அதனுல் அவர்களைத் தண்டிக்கவேண்டி வந்தது என்றும் குறிப்பிட்டு, அந்தப் பகுதிகளைத் தமது ஜாகீருடன் இணைப்பதானுல் முன்பணம் அளிப்பதாக அல்லது அரசாங்கத்திற்கு நேரடியாகவே வரி செலுத்துவதாக வாக்களித்தார். தொல்லைகள் மிகுந்த அக் காலத்தில் யார் எதைச் செய்கின்றனர் என்பது பற்றி அக்கறை காட்டாத அதிகாரிகளுக்கு இவ்வகையான செய்திகளை அனுப்பினர். அதனுல்

ஜாகீர்தார் புகார் செய்தபோது அவருக்கு எவ்விதக் கழிவும் கிடைக்கவில்லை. ஏனெனில், எவரும் அதில் அக்கறை காட்டவில்லை. தக்கணத்தில் எப்போதும் குழப்பங்களும் கொந்தளிப்புகளும் நிறைந்திருந்தன. அத்தகைய சூழ்நிலையில் அதிகாரிகளும், குடியானவர்களும், படைவீரர்களும் பேராசை பிடித்தவர்களாக, மூடர்களாக, சீரிய நோக்கம் அற்றவர்களாக வாழ்ந்தனர். இங்ஙனம் அவர்கள் தம் கைக்கோடரியையே தங்கள் பாதங்களின் மீது போட்டுக்கொண்டனர். தங்களது செல்வங்களையும் சொத்து களையும் காற்றில் பறக்கவிட்டனர். அதிகாரிகளின் பேராசை அதிகரித்தது; குறிப்பாக மன்னர்களுடைய அதிகாரம் சீர்குலைந்த காலத்தில் அல்லது அவர்களுடைய கவனம் வேறு திசையில் திரும்பியிருந்த காலத்தில் அதிகாரிகளின் ஆசை அளவுகடந்து நின்றது. இந்த அமைதியைக் குலைப்பவரின் விருப்பப்படி அந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பு அவர் கைக்கே வந்தது. இறுதியில் அவர் தலைசிறந்த புரட்சியாளராக விளங்கினார்.[1]

அடுத்தபடியாக மேற்குத் தொடர்ச்சிமலைக்கும் கடலுக்கும் இடையே உள்ள வளமிக்க நிலப்பரப்பான கொங்கணத்தின்மீது சிவாஜியின் கவனம் சென்றது. கல்யாண் எனும் முக்கிய நகரினை அப்பாஜி சோந்தேவ் என்பாரின் தலைமையில் சென்ற மராத்தியப் படை கைப்பற்றியது. அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்ற சிவாஜி, கொலாபா மாவட்டத்திற்குள் புகுந்து அங்கு வாழ்ந்த மக்களின் ஆதரவைப் பெற்றார். இஸ்லாமியரின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தலத் தலைவர்களின் ஆதரவும் அவருக்குக் கிடைத்தது.

ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல பீஜப்பூரின் தலைநகரி லிருந்து வெகு தொலைவிலுள்ள பகுதிகளோடு சிவாஜி தமது நடவடிக்கைகளை வைத்துக்கொண்டவரையில், அந்த நாட்டின் அதிகாரிகள் அவற்றில் கவனம் செலுத்தாது விட்டனர். ஆயின், அவர் கல்யாண், கொலாபா மாவட்டங்களில் இருந்த கடற்கரைப் பட்டினங்களைக் கைப்பற்றத் தொடங்கியபோது, அவரது நடவடிக்கைகளை ஒடுக்கும் காலம் வந்துவிட்டதாக பீஜப்பூர் அரசாங்கம் கருதியது; அதற்கிணங்க மிகச்சீரிய முறையில் செயலாற்றவும் துவங்கியது. சிவாஜியின் தந்தையாகிய ஷாஜி அப்போதும் பீஜப்பூரின் சேவையில் இருந்தார். அவர் தமது மகனின் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், இல்லா விடில் அவரைச் சிறைப்படுத்துவதாகவும் பீஜப்பூர் அரசாங்கம் அச்சுறுத்தியது. பீஜப்பூர் அரசிற்கு எதிராக இருப்பதுபோலவே தமக்கு எதிராகவும் சிவாஜி புரட்சி செய்கிறார் என்ற ஷாஜியின்

[1] Elliot and Dowson, Vol. vii, பக். 257.

விளக்கங்களை யாரும் நம்பத் தயாராக இல்லை. இறுதியில், சிவாஜியைப் பணியவைக்கும் முயற்சியில் தோல்வியுற்ற ஷாஜி சிறையிலடைக்கப்பெற்ருர். இங்ஙனம் சிவாஜியைப் பணிய வைப்பதற்கான முயற்சி ஏற்பட்டது.

தமது தந்தையின் இக்கட்டான நிலையினை மனத்தில் கொண்ட சிவாஜி சிறிது காலத்திற்கு வலுத்தாக்குதல் செயல்களில் ஈடுபடாதிருந்தார். ஆயின், தாம் பெற்ற நலன்களையும் தமது ஆசைக்கனவுகளையும் துறந்துவிட்டு பீஜபூரிடம் சரணடைவதை சிவாஜியால் ஏற்க முடியவில்லை. எனவே, அவர் சூழ்ச்சித்திற முறையாக வெல்திறத்தைக் கையாள முற்பட்டார். அப்போது தக்கணத்தின் அரசப் பகர ஆளாக இருந்த இளவரசர் முராத் பக்ஷின்மூலமாகத் தாம் பேரரசர் ஷாஜஹானுக்குச் சேவை செய்யச் சித்தமாக இருப்பதாக அன்னாருக்குச் செய்தி அனுப்பினுர்; அதனோடு பேரரசர் தலையிட்டுத் தமது தந்தைக்கு விடுதலை வாங்கித் தரவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். இதற்கிடையில் அவர் பீஜபூரில் இருந்த தமது பகர ஆள்களின்மூலமாக அரசவையில் இருந்த முதன்மையான செல்வந்தர்களின் உதவி கொண்டு தமது தந்தையை மீட்க முயன்ருர். அவரது ஆதரவாளர்களான ஷார்ஸாகான், ரான் தௌலாகான் ஆகியோரின் துணையோடு தமது தந்தையைச் சிறை மீட்பதில் இறுதியாக வெற்றி பெற்ருர் (டிசம்பர், 1649).[1] நிபந்தனையின் பேரிலேயே ஷாஜி விடுதலை பெற்ற காரணத்தினுல், பீஜபூரைப் பொறுத்த வரையில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (1649–55) சிவாஜி அமைதியாக இருந்தார். ஆயின், இவ்வாறு கிடைத்த ஓய்வினைத் தமது வெற்றிகளை உறுதி செய்துகொள்வதிலும், அந்தப் பகுதிகளின் ஆட்சிக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் அவர் பயன்படுத்தினுர்.

எவ்வாறிருப்பினும், அப்போது தக்கணத்தின் அரசப் பகர ஆளாகவிருந்த இளவரசர் அவுரங்கசீப் 1655ஆம் ஆண்டில் பீஜபூரின்மீது படையெடுத்துச் சென்றபோது, தமது நடவடிக்கைகளைத் தொடங்குதற்கு அந்த வாய்ப்பினை சிவாஜி பயன்படுத்திக்கொண்டார். இளவரசர் அவுரங்கசீப்பிற்குத் துணை புரிவதாக வாக்களித்து, பேரரசப் படைகள் பீஜபூர் முற்றுகையில் மூழ்கியிருந்தபோது. அன்னாரின் பேரால் கொங்கணத்தைத்

[1] பீஜபூர் அரசவையில் இருந்த தலைசிறந்த இரு செல்வந்தர்களான ஷார்ஸாகான், ரான் தௌலாகான் ஆகியோரின் முயற்சி காரணமாகத்தான் ஷாஜி விடுதலை பெற்ருர் எனப் பேராசிரியர் J. N. சர்க்கார் குறிப்பிடுவார். அதேபோன்று பீஜபூர் படைகள் செஞ்சியை முற்றுகையிட்டபோது, பீஜபூரின் படைத்தலைவரான நவாப் முஸ்தபா கானுக்குக் கீழ்ப்படியாததாலேயே ஷாஜி சிறைப்பட்டார் எனும் கருத்தையும் பேராசிரியர் சர்க்கார் கொண்டுள்ளார் ('Shivaji', பக். 35-36).

தாக்கினர். அடுத்த ஆண்டில் வாரிசு உரிமைப் போர் ஏற்பட்ட தால் அவுரங்கசீப் வடக்கே சென்றுவிட்டார். பீஜபூரை வயது நிரம்பாத இளைஞர் ஒருவர்[1] ஆளத் தொடங்கினர். இவற்றின் விளைவாக 1657ஆம் ஆண்டில் சிவாஜி தமது பேராசைத் திட்டங் களை நிறைவேற்றிக்கொள்வதில் எவ்விதத் தடையும் இருக்கவில்லை. அவர் அநேகமாகக் கொங்கணம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார். அங்கே இருந்த துறைமுகப் பட்டினங்களினல் அப் பகுதி மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது.

**அப்சல்கானின் கொலை**

1657 முதல் 1662 வரை சிவாஜிக்கும் பீஜபூருக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தில் அப்சல்கானை முரியடித்துக் கொன்றது மிகுந்த புகழ் வாய்ந்த நிகழ்ச்சியாகும். 1659ஆம் ஆண்டில் பீஜபூரில் உள்நாட்டுப் பூசல்கள் குறைந்திருந்தன. அதன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் உடனடியாக வர விருந்த முகலாயர் படையெடுப்பை எதிர்நோக்கியிருந்தனர். அந்நிலையில் வளர்ந்துவரும் சிவாஜியின் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தவும் தீர்மானித்தனர். அத்தகைய நோக்கத்துடன் ‘புரட் சிக்காரரை (சிவாஜியை) உயிருடனே பிணமாகவோ கொண்டு வருவதற்காக’ அப்சல்கான் எனும் பழுத்த படைத்தலைவரின் தலைமையில் ஏறக்குறைய 10,000 குதிரைவீரர்கள் அடங்கிய படையையும் பல மலைப்பீரங்கிகளையும் அனுப்பிவைத்தனர். முதலில் சிவாஜியின் படைகளின் சிலவற்றை முரியடிப்பதில் அப்சல்கான் வெற்றி பெற்றதாகத் தெரிகிறது. ஆயினும், அந்தப் பகுதியின் இயற்கை அமைப்புக் காரணமாக சிவாஜியின் மலைக் கோட்டைகளை அணுகுவது கடினமாக இருந்தது. அதனல் அவர் தம்முடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென்று சிவாஜியை அழைப்பதற்காக கிருஷ்ணஜி பாஸ்கர் எனும் மாரத்திய பிராம ணர் ஒருவரைத் தூது அனுப்பினர். சென்ற தூதுவரை சிவாஜி மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். அவரை இரவில் தனிமை யில் சந்தித்து இந்து என்ற முறையில், சமயகுரு என்ற முறை யில் கானுடைய உண்மையான நோக்கங்கள்பற்றி அறிவிக்கு மாறு முறையாக வேண்டிக்கொண்டார். அப்போது சிவாஜி பின்வருமாறு கூறினர்:

‘இந்து சமயத்திற்காகவும் இந்துக்களுக்காகவுமே அவர் (சிவாஜி) யாவற்றையும் செய்தார். பிராமணர்களையும் மற்றை யோரையும் காத்து, அவர்களுடைய கோயில்களையும் கடவுள

[1] பீஜபூர் மன்னரான முகம்மது அதில்ஷா 1656ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மரணமெய்தினர். அவரது ஒரே புதல்வரும், பதினெட்டு வயதே நிரம்பிய இளைஞருமான சிக்கந்தர் அலி அதில்கான் பட்டத்திற்கு வந்தார்.

ரையும் அவமதித்தவரைத் தண்டித்து, இந்து சமயத்தின் பகைவரை எதிர்த்து நிற்குமாறு அன்னை பவானியே கட்டளையிட்டுள்ளார். அன்னை இட்ட ஆணையை நிறைவேற்றுவதில் பிராமணராகிய அவர் (கிருஷ்ணஜி) உதவி செய்வதே உகந்ததாகும். இங்கே அவர் தமது ஜாதியினரோடும் நாட்டாரோடும் வளமான, வசதியான வாழ்வைப் பெற்று வாழவேண்டும்'.[1]

இங்ஙனம் வேண்டிக்கொண்டபோது மனமிரங்கிய கிருஷ்ணஜி, அப்சல்கான் ஏதோ தொல்லைதர எண்ணியுள்ளார் என்பதைமட்டும் குறிப்பாக உணர்த்தினர். அதனால், சிவாஜி விழிப்படைந்தார். வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்தபின் சந்திக்கும் இடத்திற்குச் சென்றார். அப்போது சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படுமானால், அதற்கு ஆயத்தமாக ஆயுதங்களை மறைத்து எடுத்துச் சென்றார். நெடிதுயர்ந்து உடலுரமிக்கு இருந்த அப்சல்கான் குட்டையான சிவாஜியைத் தழுவி வரவேற்றார். 'தழுவியவுடன் தமது பிடியை இறுக்கி, சிவாஜியின் கழுத்தினைத் தமது இருப்புப் பிடியில் சிக்கவைத்து, வலதுகையால் வாள்கொண்டு அவரை வெட்டிச் சாய்க்க முயன்றார்.' சிவாஜியின் உடைக்குள் மறைந்திருந்த கவசத்தினால் இந்த முதல் தாக்குதல் பயனளிக்காது போயிற்று. சுறுசுறுப்பு மிக்கவரான மராத்தியத் தலைவர் திருப்பித் தாக்க முற்பட்டார். 'வாக்நக்' (waghnug)[2] எனும் புலி நகத்தின் துணைகொண்டு கானின் பிடி தளருமாறு செய்தார். அதன் பிறகு தமது குறுவாளைக் கொண்டு அப்சல்கானைக் குத்தினர். இந்த இரு தலைவர்களுடைய மெய்காப்பாளர்களும் இக் கைகலப்பில் கலந்துகொண்டனர். அதே சமயத்தில் மறைந்திருந்த சிவாஜியின் படையினர் வெளியே வந்து தலைவனற்ற பீஜபூரின் சேனையைத் தவிடு பொடியாக்கினர்.[3]

அடுத்த மூன்று ஆண்டுகளில் பீஜபூருடனான போர் வெவ்வேறு விளைவுகளுடன் தொடர்ந்தது. முதலில் பன்ஹலாவிற்குத் தெற்கேயும் கிருஷ்ணா ஆற்றங்கரையிலும் அமைந்த முக்கிய இடங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்ட சிவாஜிக்கு எல்லா நன்மைகளும் கிடைத்தன. ரஸ்தம்கானின் தலைமையில் வந்த

1 Grant Duff எழுதிய, 'History of the Mahrattas', S. M. Edwardes, 1921ஆம் ஆண்டில் தொகுத்தது, Vol. i, பக். 132.

2 இவ்வாயுதத்தினை 'பிச்சுவா' (bichua) என் காஃபிகான் அழைத்தார். இதன் படத்தை கிராண்ட் டஃப் எழுதிய நூலின் தொகுப்புகள் சிலவற்றில் காணலாம்.

3 இந் நிகழ்ச்சிபற்றிய விளக்கங்களுக்கு Kincaid and Parasnis எழுதிய, 'History of the Maratha People', Vol. i, பக். 64-ஐயும், Sarkar எழுதிய, 'Shivaji and his Times', 62-73 ஐயும் பின்பற்றியுள்ளோம்.

பீஜபூரி படையொன்று சிவாஜியிடம் தோற்றது. இந்த வெற்றியைத் தொடர்ந்து பீஜபூரின் தலைநகரத்து வாயில்களுக்கே சிவாஜி தமது படைகளை நடத்திச் சென்றார். அதே சமயத்தில் அவரது படைத்தலைவர்கள் வளம் மிகுந்த துறைமுகமான ராஜ்புத் எனும் நகரைச் சூறையாடினர். 1661–2-ல் பீஜபூர் சுல்தானே நேரில் படையுடன் வந்ததும் பயனற்றுப்போயிற்று. மேலும், சில மாதங்களுக்குப் போர் விட்டுவிட்டு நடைபெற்றது. அதன் பிறகு சிவாஜியுடன் சமாதானம் பேசுவதற்காக ஷாஜியை அனுப்பவேண்டிய கட்டாயம் பீஜபூர் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அதன்படி கடந்த சில ஆண்டுகளில் சிவாஜி கைப்பற்றிய பகுதிகளின் அரசர் என அவரை ஏற்றுக்கொள்ள பீஜபூர் முன்வந்தது.

### செயிஷ்டகானின் தோல்வி

இப்போது முகலாயர் நெருக்கத் தொடங்கியதால் சிவாஜி அமைதியை நாடினார். 1660ஆம் ஆண்டில் அவுரங்கசீப், தமது தாய்மாமனும் அனுபவம் மிக்க படைத்தலைவருமான செயிஷ்டகானைத் தக்கணத்தின் அரசப் பகர ஆளாக நியமித்தார். சிவாஜியின் நடவடிக்கைகளை ஒடுக்குமாறு கட்டளையிட்டார். மராத்தியர்மீது சில வெற்றிகளைப் பெற்ற செயிஷ்டகான் சிவாஜியின் கோட்டைகளில் சிலவற்றையும் கைப்பற்றிக்கொண்டார். ஆயினும், தோல்வியுற்ற மராத்தியர் பொதுவாக முகலாயர்களின் தளவாடங்களைத் தாக்கிக் கைப்பற்றுவதில் ஈடுபட்டிருந்தனர். காஃபிகான் பின்வருமாறு எழுதுவார்: 'அமீர் உல் அம்ராவின் (செயிஷ்டகானின்)படையினை எங்குக் கண்டாலும் அதனைக் தாக்கி அதனுடைய தளவாடங்களைக் கொள்ளையிட்டுவருமாறு துணிகர வீரரான சிவாஜி தமது ஆள்களுக்குக் கட்டளையிட்டார். இதைப் பற்றி செயிஷ்டகான் அறிந்தபோது, முகலாயர்களின் பொருள்களைக் காப்பதற்காக அனுபவம் மிக்க அதிகாரிகளின் தலைமையில் 4,000 குதிரை வீரர்களை நியமித்தார். ஆயினும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு முறை முன்னேறியபோதும், சிவாஜியின் ஆதரவாளர்களான தக்கண மக்கள் பகைவர்களின் பொருள்களை ஈ மொய்ப்பது போல மொய்த்துக்கொண்டனர். பகைவரின் படைகள் வருகின்றன எனக் கேள்வியுறும் வரையில், அவர்கள் காஸக்குகளைப்போல (cossaks), பகைவரின்மீது பாய்ந்து அவர்களுடைய குதிரைகள், ஒட்டகங்கள், ஆள்கள் என்றுமட்டுமல்லாது கையில் கிடைத்த எதையும் கவர்ந்து சென்றனர்.[1] இங்ஙனம் பகைவருடைய தொல்லைகட்கு உட்பட்ட செயிஷ்டகான் மாரிக்காலத்தைக் கழிப்பதற்காகப் பூனாவிற்குத் திரும்பினார்.

1 Elliot and Dowson, Vol. vii, பக். 261.

மழை நின்றவுடன், மீண்டும் தாக்குதலைத் துவக்கும் எண்ணத்தோடுதான் அவர் அங்குச் சென்றார். ஆயின், இதற்குள் சிவாஜி பீஜபூருடன் சமாதானம் செய்துகொண்டார். அதனால், அவர் தமது முழுக் கவனத்தையும் முகலாயரிடம் திருப்ப முடிந்தது. வழக்கம்போல சிவாஜி வீரத்தைவிடச் சூழ்ச்சியையே முதலில் எண்ணினார். சிவாஜி பிறந்து இளமைப் பருவத்தைக் கழித்த அதே பூனா வீட்டில் செயிஷ்டகான் தங்கியது அவரது நல்வாய்ப்பேயாகும். பூனா நகரின் ஒவ்வோர் அங்குலத்தையும் சிவாஜி அறிந்திருந்தார். அதே போன்று அந்த வீட்டின் மூலை முடுக்குகளெல்லாம் அவர் அறிந்தவையே. இத்தகைய அறிவினை அவர் முழுவதும் பயன்படுத்தி, ஒரு நாள் இரவில் (1663ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி) 400 தேர்ந்தெடுத்த வீரர்களுடன் நகருக்குள் புகுந்து, செயிஷ்டகானின்மீது இராத் தாக்குதல் ஒன்றை நடத்தினார். மகனைப் பறிகொடுத்த செயிஷ்டகான், நல்வினைப் பயனால் மூன்று விரல்களைமட்டும் இழந்து உயிர் தப்பினார். காஃபிகான் அளிக்கும் பின்வரும் விளக்கங்களிலிருந்து சிவாஜியின் சுறுசுறுப்பும், சூழ்ச்சித்திறமும், வீரமும் நன்கு வெளிப்படுகின்றன. 'பேரரசப் படையைச் சேர்ந்தவர் அன்றி வேறு எவரும், குறிப்பாக மராத்தியர் எவரும் படைக்கலம் தாங்கியோ தாங்காமலோ அனுமதிச் சீட்டு இன்றி நகருக்குள்ளும் பாடி வீட்டிற்குள்ளும் வர அனுமதிக்கப்பெறுதல் கூடாது என்ற விதி இருந்தது. மராத்திய குதிரைவீரர் எவரும் படையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. தோல்வியுற்றுத் துவண்ட சிவாஜி அணுகுவதற்கரிய மலைப்பகுதிகளுக்குச் சென்றார். அடிக்கடி தமது இருப்பிடத்தை மாற்றிவந்தார். ஒரு நாள் முகலாயப் படையில் சேவை செய்துவந்த மராத்தியக் காலாட்படை வீரர்கள் சிலர் ஒன்று சேர்ந்து நகரின் கொத்தவாலிடம்சென்று திருமணக் கூட்டத்துடன் வரும் 200 மராத்தியர் நகருக்குள் வர அனுமதிச்சீட்டுக் கோரினர். மணமகள் கோலத்தில் இருந்த ஒரு சிறுவனை அழைத்துக்கொண்டு பொழுது சாயு முன்னரே இன்னிசையுடன் ஒரு குழு நகருக்குள் நுழைந்தது. அதே நாளில் எல்லைக் காவல் நிலையங்களில் சிறை பிடிக்கப்பெற்றனர் என்ற செய்தியின் பேரில் மற்றுமொரு மராத்தியக் கூட்டமும் நகருக்குள் அனுமதிக்கப்பெற்றது. அக் கூட்டத்தினரின் தலையணிகளைக் களைந்து, அசைய முடியாது இறுகக் கட்டிக் கயிறுகளைக்கொண்டு பற்றியும், அவர்களை ஏளனம் செய்தும், அவர்கள்மீது வசைபாடியும் அழைத்துவந்த மற்றுமொரு கூட்டமும் நகருக்குள் புகுந்தது. இவ்வாறு வந்த கூட்டத்தினர் ஏற்கெனவே நிர்ணயித்திருந்த ஓர் இடத்தில் கூடி ஆயுதங்களைத் தாங்கினர். நள்ளிரவில் செயிஷ்டகான் தங்கியிருந்த வீட்டில், பெண்கள் தங்கும் அறைக்கு அண்மையில் இருந்த

சமையல் அறையைச் சில மாரத்தியர் அடைந்தனர். இந்த இரண்டு அறைகளுக்குமிடையே இருந்த சாளரத்தைச் செங்கல் லாலும் மண்ணாலும் அடைத்திருந்தனர். ஆயுதங்களுடன் சென்ற மராத்தியர், தாங்கள் நன்கு அறிந்த வழியில் சென்று சமையற் கூடத்தை அடைந்தனர். உண்ணு நோன்பு கொள்ளும் மாத மாதலால், சமையல்காரர்களிற் சிலர் உணவு சமைப்பதற்கான பாத்திரங்களை ஆயத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்; மற்றவர் உறங்கிக்கொண்டிருந்தனர். தாக்குதல் செய்ய வந்த மராத்தியர்கள் சந்தடியின்றி அறைக்குள் நுழைந்து, கூடுமான வரையில் சமையல்காரர்களின்மீது பாய்ந்து கொன்றனர்; படுத்திருந்தவர்களையும் படுகொலை செய்தனர். அதனால் கூக் குரல் மிகுதியாக எழவில்லை. அதன் பிறகு அவர்கள் அரண்மனை யில் அடைக்கப்பட்டிருந்த சாளரம் ஒன்றைத் திறக்க முற்பட் டனர். கொத்துளிகள் எழுப்பிய ஓசையாலும் கொலையுண்ட வர்கள் எழுப்பியஅழுகுரலாலும் சமையற்கூடத்தின் சுவர் அருகே உறங்கிக்கொண்டிருந்த காவலன் ஒருவன் கண்விழித்துக்கொண் டான். அவன் அமீர் உல் அம்ராவிடம் (செயிஷ்டகானிடம்) சென்று தான் கேட்ட ஓசையைப்பற்றிக் குறிப்பிட்டான். அதற் காக அவன்மீது சீறி விழுந்த அமீர், சமையல்காரர்கள் எழுந்து வேலை செய்வதால் சப்தம் எழுந்திருக்கும் என்று கூறி அவனை அனுப்பிவிட்டார். அதன் பிறகு பல பணிப்பெண்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து அறையின் சுவரில் துளை இடப்படு வதைப்பற்றிக் குறிப்பிட்டனர். அதனால் மிகுந்த அச்சத்துடன் மஞ்சத்திலிருந்து தாவி எழுந்த அமீர் வில்லையும், சில அம்புகளையும், ஈட்டியையும் கையில் எடுத்துக்கொண்டார். அப்போதுதான் சில மராத்தியர் அவர்முன் தோன்றினர். அவர்களில் ஒருவரை அமீர் அம்பு எய்து வீழ்த்தினார். ஆனால், அந்த வீரர் எழுந்து அமீரின் கட்டை விரலைத் துண்டித்தார். இதற்கிடையில் இரு மராத்தியர் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்தனர். மற்றொருவரை அமீர் உல் அம்ரா தமது ஈட்டியால் கொன்றார். இங்ஙனம் குழப்பம் ஏற்பட்டபோது, இரு பணிப்பெண்கள் அமீர் உல் அம்ராவான செயிஷ்டகானின் கையைப் பிடித்து இழுத்துச் சண்டை நடைபெற்ற இடத்திலிருந்து அழைத்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்குச் சென்றனர். இதற்கிடையில் பல மராத்திய வீரர்கள் காவற் கூடத்திற்குள் புகுந்து, படுக்கையில் கிடந்த ஒவ்வொருவரையும், 'இப்படித்தானா காவல் காப்பது!' என்று கூறிக்கொண்டே கொன்று போட்டனர். நகர் காவலில் இருந்த சிலர் விழித்துக்கொண்டு, அமீர் உல் அம்ராவின் பேரைச்சொல்லி, பறை அறைவிக்குமாறு ஆணையிட்ட னர். இங்ஙனம் பேரொலி கிளம்பியதால் ஒருவர் பேசுவதை

மற்றவர் கேட்க முடியவில்லை. கொலை செய்தவர்களின் கூக்குரல் மேன்மேலும் பெருகியது. அவர்கள் வாயில்களை அடைத்தனர். இதற்கிடையில் செயிஷ்டகானின் புதல்வராகிய வீரமும் இளமையும் நிறைந்த அபுல் ஃபாத்கான் வேகமாக ஓடிவந்து இரண்டு மூன்று மராத்திய வீரர்களை வீழ்த்தினர். ஆயின், அவர் காயம் பட்டு மடிந்தார். இத்தகைய இராத் தாக்குதல் மகாராஜா ஜெஸ்வந்த் சிங்கின் அனுமதியோடு நடைபெற்றது என்ற எண்ணம் அப்போது எழுந்தது. அதனல், மறுநாள் அந்த இராஜ புத்திரத் தலைவர் செயிஷ்டகானைக் காணவந்தபோது, 'எமக்கு இக் கதி நேர்ந்தபோது மகாராஜா, பேரரசரது சேவையில் இருப்பதாக எண்ணியிருந்தோம்' எனப் பின்னவர் ஏளனமாகக் குறிப்பிட்டார். மகாராஜாவின்மீது செயிஷ்டகானுக்குச் சிறிது சந்தேகம் இருந்ததாலேயே இவ்வாறு மறைமுகமாகத் தாக்கியிருக்க வேண்டும். அவமானத்திற்குள்ளான முகலாயப் படைத்தலைவர் பாதுகாப்பை நாடி அவுரங்காபாத்திற்குப் பின்வாங்கினர். ஆயின், 1663ஆம் ஆண்டு மே மாதத்திலேயே அவரைப் பேரரசர் தலைநகருக்கு அழைத்தார். அவரது கவனக்குறைவும் திறமையின்மையுமே தோல்விக்குக் காரணம் எனக் கடிந்துரைத்தார். செயிஷ்டகானுக்கு அடுத்த நிலையில் இருந்த படைத்தலைவராக மகாராஜா ஜெஸ்வந்தசிங் 1664ஆம் ஆண்டு மார்ச்சு மாதம்வரையில் தொடர்ந்து தக்காணத்தில் வாழ்ந்திருந்தார்.

பூனு தாக்குதலுக்கு எவ்விதத்திலும் குறையாத, பயன்மிகுந்த சாகசச் செயல் ஒன்றை 1664ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் சிவாஜி செய்துமுடித்தார். அவர் முகலாயருக்குச் சொந்தமான முக்கியத் துறைமுகப் பட்டினமான சூரத்தைத் தாக்கிச் சூறையாடினர். அங்கிருந்து பெரும் பொருளைக் கொள்ளையிட்டு வந்தார். அந் நகரில் இருந்த பிரிட்டிஷ், டச்சு வணிகக் களங்கள் மட்டும் எதிர்த்துப் போராடிய காரணத்தால் அவை கொள்ளையிலிருந்து தப்பின. செயிஷ்டாகானின் தோல்வியும் சூரத் தாக்குதலும் அவுரங்கசீபின் கோபத்தைக் கிளறின. அதனல் அவர் தமது நம்பிக்கைக்கு உகந்த திறமையாளர்களைத் தக்கணத்திற்கு அனுப்பத் தீர்மானித்தார். ஏற்கெனவே செயிஷ்டகானுக்குப் பதிலாக இளவரசர் மூஆஸத்தை நியமித்திருந்தார். இப்போது ராஜா ஜெய்சிங்கையும் திலேர்கானையும் தேர்ந்தெடுத்து அவர்களுடைய துணைவர்களுடன் ஒரு பெரும்படையைத் தக்கணத்திற்கு அனுப்பி வைத்தார். 1665ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் ஜெஸ்வந்த் சிங்கிடமிருந்து பொறுப்பேற்ற ஜெய்சிங், சிவாஜியின் பகுதிகளின் மீது தாக்குதல் செய்வதற்கான ஆயத்தங்களைச் செய்ய முற்பட்டார். முதலில் புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டார். சிறிது காலத்திற்கு அக் கோட்டையில் பலமான



அவுரங்கசீப்

எதிர்ப்பு இருந்துவந்தது. ஆயின், திலேர்கானின் அம்பு பட்டு அக் கோட்டையின் தலைவன் சாயவும், அது வீழ்ச்சியுற்றது. சிவாஜியின் தலைநகரமாகத் திகழ்ந்த ராஜ்கரும் பேராபத்திற்குள்ளாகியது. திரிந்துகொண்டிருந்த முகலாயக் குதிரைப் படைப் பிரிவுகள் மராத்தியக் கிராமங்களை அழித்துவந்தன. மேலும், எதிர்த்துப் போராடுவதனால் நேரக்கூடிய ஆபத்தினை நன்கு உணர்ந்த சிவாஜி, ஜெய்சிங்கிடம் தாம் பணிவதாகச் சேதி அனுப்பினார். அதன்பேரில் அவரைத் தகுந்த காவலுடன் புரந்தருக்குக் கொண்டுசென்றனர். அங்கே பேச்சுவார்த்தைகளுக்குப் பின் தமது கோட்டைகளில் இருபதை ஒப்படைக்கவும், பீஜபூர் சுல்தானுக்கு எதிராக முகலாயருக்குச் சேவை செய்யவும் சிவாஜி இசைந்தார். அதற்கு ஈடாக, பீஜபூர் அரசின் சில மாவட்டங்களில் சௌத்[1]வரி கொள்ளும் சிவாஜியின் உரிமையைப் பேரரசர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய உரிமை வாசகங்கள் அடங்கிய புரந்தர் உடன்படிக்கை 1665ஆம் ஆண்டு ஜூன் மாதம் நிறைவேறியது.

அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் ஆக்ராவில் இருந்த பேரரசவைக்குச் செல்லுமாறு சிவாஜியை ஜெய்சிங் தூண்டினார். அங்கே பெரும் பட்டங்களும் பதவிகளும் காத்துக்கொண்டிருப்பதாகக் கூறி, சிவாஜியை இணங்குமாறு செய்தார். ஆயின், ஆக்ராவில் சிவாஜிக்குத் தகுந்த வரவேற்பு இல்லை. தமக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவில்லை என அவர் எண்ணினார். 5000 வீரர்களைக் கொண்ட மூன்றாந்தரத்து மன்சப்தார்களின்[2] வரிசையில்தான் அவருக்கு இடம் அளிக்கப்பெற்றது. இதனை அவர் பெரிதும் வெறுத்தார். பேரரசரின் முன்னிலையிலேயே ஜெய்சிங்சின் புதல்வரான கன்வார் ராம் சிங்கினிடமும் மற்றையோரிடமும் அவர் வெளிப்படையாகவே தமது அதிருப்தியைத் தெரிவித்தார். கோபாவேசத்தில் பேரரசரைப் பழிக்கும் சில சொற்களையும் பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. அப்போது ஒன்றும் கூறாதிருந்த அவுரங்கசீப், சிவாஜியை அவர் தங்கியிருந்த வீட்டிலேயே காவலில் வைக்குமாறு மறுநாள் ஆணையிட்டார். தம்மை விடுவித்துத் தமது நாட்டிற்கே திரும்ப அனுப்பிவிடுமாறு அவுரங்கசீப்பிற்கு யோசனை கூறுமாறு அரசவை அதிகாரிகள் பலரை சிவாஜி தூண்டினார். ஆயின், அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை. எனவே, தமக்கு எப்போதும் பயன் தரத்தக்க சூழ்ச்சியை அவர் கையாண்டார். நோய்வாய்ப்பட்டதாகப் பாசாங்கு செய்து

[1] உண்மையில் நான்கில் ஒரு பங்கு அதிகாரபூர்வமான நிலத்தீர்வையில் நான்கில் ஒரு பகுதி.

[2] படைத்தலைவர்கள்.

படுக்கையை விட்டு எழுந்திராது இருந்தார். அதன் பின்னர் பிழைத்து எழுந்ததுபோல நடித்து, உயிர்ப்பிச்சை அளித்ததற்காக நன்றி செலுத்துமுகத்தான், பிராமணர்களுக்கும் சந்யாசிகளுக்கும் ஒவ்வொரு நாள் மாலையிலும் பழங்களும் இனிப்புப் பண்டங்களும் கூடைகளில் வைத்து அனுப்பினர். நம் நாட்டு மக்களிடையே இப் பழக்கம் இருந்த காரணத்தால் ஒருவரும் கவனிக்காது விட்டனர். வீட்டைக் காவல் செய்துவந்த வீரர்களின் கவனம் சில நாள்களில் குறைந்தது. அவர்கள் கூடைகளைப் பரிசோதிக்காது வெளியே அனுப்பினர். ஒரு நாள் இரவு சிவாஜியும் அவரது புதல்வரும் கூடையில் மறைந்து வெளியேறினர். தந்தையும் தனயனும் பத்திரமாக நகருக்கு வெளியே வந்தவுடன், கோசாவிகள் (Gosavis) அல்லது இந்து சமயத் துறவிகள் போன்று வேடமணிந்து மதுராவை நோக்கி விரைந்தனர். சிவாஜி மதுராவில் வாழ்ந்துவந்த தக்கணத்தைச் சார்ந்த பிராமணர் ஒருவரின் பாதுகாப்பில் தமது புதல்வரை ஒப்படைத்துவிட்டு, பேரார், காண்டேஷ் ஆகியவற்றின் வழியாகச் செல்லும் நெடுஞ்சாலைகளில் முகலாயக் காவற் படையினரின் கண்காணிப்பு அதிகம் இருக்கும் என்பதற்காக அவற்றின் வழியாகச் செல்லாது, கிழக்கு வங்காளம், ஒரிஸா, காண்டுவாறு ஆகியவற்றின் வழியாகத் தன் நாடு திரும்பினர். இங்ஙனம் தக்கணத்தில் நிரந்தரமாக அமைதியை நிலைநாட்டுதற்குக் கிடைத்த ஒரு வாய்ப்பையும் அவுரங்கசீப் இழந்தார். பேரரசப் படைகளிடத்தில் சிவாஜி அச்சம் கொண்டார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தக்கணத்தில் அவர் முக்கியமானவர் என்ற உண்மை நிலையை அவுரங்கசீப் ஏற்றுக்கொண்டிருந்தால், அந்த நிலையோடு சிவாஜி மனநிறைவு அடைந்திருப்பார். முகலாயப் படைத்தலைவர் ஒருவருடன் சேர்ந்துகொண்டு முஸ்லிம் அரசுகளாகிய பீஜபூரையும் கோல்கொண்டாவையும் பேரரசருக்காகக் கைப்பற்றியிருக்க முடியும் சிவாஜியால். இங்ஙனம் சிவாஜி பேரரசருக்குட்பட்ட பேராளாகவும், தக்கணம் சிறிது காலத்திற்காவது முகலாயப் பேரரசின் ஒரு பகுதியாகவும் திகழ்ந்திருக்கக் கூடும். ஆயின், அவ்வாறு நடைபெறுவதற்கில்லை. புறச்சமயிகளோடு உடன்படிக்கை செய்துகொள்வதில் அவுரங்கசீப் நம்பிக்கை கொள்ளவில்லை. இந்துக்களுக்குச் சொந்தமான பொருள்களின்மீது இரட்டிப்புச் சுங்கவரி விதித்து அவர்களை நசுக்கும் கொள்கையை ஏற்கெனவே அவர் தொடங்கியிருந்தார். அதே சமயத்தில் முஸ்லிம் வணிகர்கள் பழைய விதத்திலேயே சுங்கம் அளித்துவந்தனர்.

இதற்கிடையில் பீஜபூர் அரசினை ஒடுக்குவதற்குத் தம்மால் இயன்றதனைத்தையும் ஜெய்சிங் செய்துவந்தார். ஆனால், 1667

ஆம் ஆண்டு மேத் திங்களில் அவர் உடனடியாகத் திரும்ப அழைக்கப்பெற்ருர். சிவாஜிக்கு எதிராக ராஜா ஜெய்சிங் இரண்டாவது முறையாக அனுப்பப்பெற்ருர். அதன் பிறகு சிறிது காலத்திற்குள் ஜெய்சிங்கை அவரது புதல்வரான கிராத் சிங்கே நஞ்சிட்டுக் கொன்ருர். தந்தையிடம் பொருமை கொண்டிருந்த அத் தனயன் அநேகமாக அவுரங்கசிபின் தூண்டு தலின்பேரில் இத் தகாச்செயலேப் புரிந்திருக்கக் கூடும். இங்ஙனம் தோன்றிய படைத்தலேமை மாற்றம் சிவாஜிக்கு அனுகூலமாக இருந்தது. அவர் தமது அதிகாரத்தை வளர்த்துக்கொண்டார். இளவரசர் மூஆஸம் திறமையற்றவராகவும் மமதை கொண்ட வராகவும் விளங்கினர். அதே சமயத்தில் ஜெஸ்வந்தசிங் சிவாஜி யுடன் நட்புரிமை பாராட்ட முற்பட்டார். அதனுல் சிவாஜி தில்லியைப்பற்றி அஞ்சுவதற்கு ஏதுமில்லே. அதே சமயத்தில் வடமேற்கு எல்லேயில் போரிடுவதற்காகத் தக்கணத்தில் இருந்த தலேசிறந்த படையினர் அங்கிருந்து சென்றுவிட்டனர். 1666 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாரசீகப் படையெடுப்பினுல் பஞ்சாப் ஆபத்திற்குள்ளாகியது. மேலும், அடுத்த ஆண்டு மார்ச்சு மாதத்தில் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல பெஷாவரில் யூசுப்சாயிகளின் கலகம் தோன்றியது. அதன் விளேவாகப் பத்து ஆண்டுகளுக்குப் பேரரசிற்குப் பெருஞ் செலவு ஏற்பட்டது. இங்ஙனம் கிடைத்த வாய்ப்பினே சிவாஜி நல்ல முறையில் பயன் படுத்திக்கொண்டதால், பத்தாண்டுக் காலத்தில், அதாவது, 1666 முதல் 1676 வரையிலுள்ள காலப்பகுதியில் சிவாஜி தமது வாழ்வின் உச்சநிலேயை அடைந்தார்.

1666ஆம் ஆண்டு முதல் 1668ஆம் ஆண்டுவரையில் உள் நாட்டு ஆட்சிமுறையை உருவாக்குவதில் சிவாஜி கவனம் செலுத் தினர். தமக்கு ராஜா என்ற பட்டத்தையும், தமது புதல்வர் சாம் பாஜிக்கு 5000 வீரர்கள் கொண்ட மன்சப்தார் பதவியையும் வழங்குமாறு பேரரசருக்கு ஆலோசனே அளிக்குமாறு இளவரசர் மூஆஸத்தையும் ராஜா ஜெஸ்வந்த் சிங்கையும் வேண்டிக் கொண்டார். இத்தகைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் பெற்றதுடன், அகமது நகரப் பகுதிகளிலிருந்து வரும் சௌத் வரிக்கு ஈடாக பேராரில் ஒரு ஜாகீரை சிவாஜி பெற்றுக் கொண்டார். 1670ஆம் ஆண்டில் சிவாஜியின் அதிகாரிகள் காண்டேஷில் சில மாவட்டங்களின் அதிகாரிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாயில் நான்கில் ஒரு பகுதியை சிவாஜியிடமோ, அவரது துணேவரிடமோ ஒப்படைத்து விடுவதாக எழுத்து மூலம் உறுதியளித்தனர். முகலாயருடைய நேரடி ஆதிக்கத்தில் இருந்த மாவட்டங்களே அச்சுறுத்திப் பணம்

பறிக்கும் வழியை சிவாஜி இங்கேதான் முதல் முறையாகப் பயன் படுத்தினர். அதற்கு முன்பே இன்று தாரம்பூர் என வழங்கும் ராம் நகரின் மன்னர் டாமனில் இருந்த போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான பகுதிகளில் இவ்விதம் அச்சுறுத்திப் பணம் பறித்தார். எனினும், சிவாஜியைப் பொறுத்த வரையில் 1670ஆம் ஆண்டில்தான் இப் பழக்கம் தொடங்கியது எனலாம். அதே ஆண்டில் சிவாஜி இரண்டாவது முறையாக சூரத்தைச் சூறையாடினர். முன்னொரு முறை செய்ததைப் போலவே ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் தங்களது பண்டசாலைகளைப் பாதுகாத்துப் பொருள் இழப்பின்றித் தப்பினர். ஆயின், மராத்தியர் சூரத் நகரைக் கொள்ளையிட்டனர். அவர்கள் கொள்ளையடித்துவந்த பொருள்களில் மெக்காவிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த மாவாரா - உன் - நகரத்தைச் சார்ந்த முஸ்லிம் அரசரின் பொருள்களும் அடங்கும். அவுரங்கசீபின் கோபத்தைக் கிளற இதுவே போதுமானது. இங்ஙனம் சிவாஜிக்கும் முகலாயருக்குமிடையே மீண்டும் பூசல் தொடங்கியது. சிவாஜியுடன் நட்புக் கொண்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஜெஸ்வந்த் சிங் தக்கணத்திலிருந்து மாற்றப்பெற்றார். சில நாள்களுக்குப் பிறகு இளவரசர் மூஆஸமும் வெளியேறினர். அவர்களுக்குப் பதிலாகக் கான் ஜஹான் பகதூரும் மகபத்கானும் பொறுப்பேற்றனர். எவ்வாறிருப்பினும், தலைமை அதிகாரிகளின் மாற்றத்தினுல் நன்மை ஏதும் ஏற்படவில்லை. நல்வாய்ப்பு எனும் நங்கை சிவாஜியையே நாடி நின்றாள்.

### சிவாஜி அரியணையேறுதல்

தொடர்ந்து வந்த வெற்றிகளாலும் செல்வப் பெருக்காலும் தைரியமடைந்த சிவாஜி, மன்னர் என்ற முறையான பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். 1674ஆம் ஆண்டில் ராஜ்கரில் ஆடம்பரமான தர்பார் நடைபெற்றது. அங்கே முழு வேத பாராயண சடங்குகளுடன் சிவாஜி அரியணை யேறினர். 'அப்போதிருந்து சிவாஜி மகாராஷ்டிரத்தின் இறைமை அதிகாரம் பெற்ற மன்னராகக் கருதப்பெற்றார். தில்லியிடம் பற்றுறுதிகொண்ட முகலாயக் குடிமக்களைப்போலத் தாங்களும் ஒரு நாட்டின் குடிமக்கள் என மராத்தியர் உரிமை கொண்டாடினர். அரச குலங்களை நிறுவியவர்கள் கொள்ளும் வழக்கத்திற்கிணங்க, சிவாஜியும் அரியணையேறிய நாளை அடிப்படையாக வைத்து ஒரு பொது ஆண்டினைத் (சகாப்தத்தினை) தோற்றுவித்தார். முடி சூட்டிக்கொண்ட பிறகு சிவாஜி ஆறு ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்தார். அந்த ஆறு ஆண்டுகளிலும் அவர் முகலாயருடனும் பீஜபூருடனும் ஓயாது போரிட்டுவந்தார்.

வட மேற்கு எல்லைப்புற விவகாரங்களில் ஆழ்ந்துவிட்ட காரணத்தால், அவுரங்கசீப் தக்கண விவகாரங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. முகலாயர் நெருக்காததைப் பயன் படுத்திக்கொண்ட சிவாஜி தெற்கில் முன்னேறினார். 1676 முதல் 1680 வரையிலான நான்கு ஆண்டுகளில் அவர் பல தலைசிறந்த படையெடுப்புகளை மேற்கொண்டு செஞ்சி, வேலூர் முதலான பல முக்கியக் கோட்டைகளைக் கைப்பற்றினார். செஞ்சி படையெடுப் பினைப்பற்றிப் பேசவந்த அறிஞர் கிராண்ட் டஃப், 'சிவாஜியின் வாழ்க்கையிலேயே மிகச் சிறப்பு வாய்ந்தது' எனக் குறிப்பிடுவார். எவ்வாறெனின், அப் படையெடுப்பின்போது கைப்பற்றிய பகுதி களின் விளைவாக இந்து பேரரசான விஜயநகரத்தின் பெரும் பகுதி அவரது அரசில் இணைந்தது. முக்கியமாக மேற்குக் கர்னாடகத்தில், சென்னை மாகாணத்தில் இருந்த பெல்லாரி மாவட்டத்திற்கு எதிராக பெல்காமிலிருந்து துங்கபத்திரை ஆற்றங்கரை வரையில் பரவியிருந்த மாவட்டங்கள் அவரது ஆட்சிக்கு உட்பட்டன.

### சிவாஜியின் மறைவும் அவர்தம் பண்பும்

1680ஆம் ஆண்டில் சிவாஜி இறந்தபோது அவர் தமக்குப் பின் அரசராக வந்த தமது புதல்வருக்கென்று நன்கு அமைந்த பெரிய அரசினை விட்டுச் சென்றார். அவருக்குக் கிடைத்த வருவாய் உயர்ந்தபட்சம் ஆண்டொன்றிற்கு ஒன்பது கோடியென மதிப்பிடப்பெற்றது. ஆயினும், அவருக்கு உண்மையில் கிடைத்த தொகை அதைவிட மிகக் குறைவானதுதான் எனக் கூறப் படுகின்றது. எவ்வாறிருப்பினும், இவையெல்லாம் சிவாஜியின் சொந்த முயற்சியில் வந்தவை. அதிலும் முகலாய குலத்தில் தோன்றிய ஆற்றல் மிகுந்த ஒருவர் ஆண்ட காலத்தில் சிவாஜி வெற்றி பெற்றார் என்பதை நோக்கும்போது, அவரது படைத் திறமை மிகுதியாக இருந்திருக்க வேண்டுமென்பது புலப்படும். அவரது வெற்றிகளைப்பற்றி வரலாற்று அறிஞர்கள் வெவ்வேறாக மதிப்பிட்டுள்ளனர். சிவாஜியின் காலத்தில் வாழ்ந்த முகம்மதிய வரலாற்று அறிஞர்கள், அவர் ஒரு கொள்ளைக்காரர் என்றும், வழிப் பறி செய்பவர் என்றும் கொண்டனர். ஆனால், இத்தகைய மதிப் பீட்டை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் வாழ்ந்த காலத்தில் அவர் தமது ஆளுமையால் தலைசிறந்து விளங்கினார். அவர் வெற்றி பெற்ற வெறும் வழிப்பறிக் கொள்ளைக்காரராக இருந்திருந்தால் அவ்வாறு விளங்கியிருக்க முடியாது என்று கென்னடி குறிப்பிடுவது முற்றிலும் உண்மையே. இந் நாட்டு வரலாற்றில் சிவாஜிக்குச் சிறப்பான இடம் உண்டு என்றும், அக்காலத்தில் வாழ்ந்தவர்களில் தலைசிறந்த வரலாற்று

புருஷர் என அவரைக் கருத வேண்டுமென்றும் மற்ருெரு புறத்தில் இந்து வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர். பேராசிரியர் பின்வருமாறு குறிப்பிடுவார்: 'சிவாஜி எழுவதற்கு முன்னுல் மராத்திய இனத்தவர் தக்கணத்தின் பல அரசுகளில் அணுக்களைப் போல் சிதறிக்கிடந்தனர். அவர்களையெல்லாம் அவர் வலிமைவாய்ந்த தேசீய இனமாக ஒன்றுபடுத்திஞர். முகலாயப் பேரரசு, பீஜபூர் சுல்தான், இந்தியாவில் வாழ்ந்த போர்ச்சுகீசியர், ஜன்ஜிராவின் அபிசீனியர் என்ற நான்கு வலிமை வாய்ந்த பகைவர்களுக்கு மத்தியில் இத்தகைய செயற்கருஞ் செயலைச் செய்து முடித்தார். தற்கால வரலாற்றில் வேறெந்த இந்துத் தலைவரும் இத்தகைய திறமையைக் காட்டவில்லை'.[1] அவரது தனிப்பட்ட வாழ்க்கைப் பண்புபற்றியும் சொந்தக் குணநலங்கள்பற்றியும் அவர் காலத்தில் வாழ்ந்த அறிஞரான காஃபிகான் குறிப்பிடுவார். இயற்கையில் சிவாஜியைப்பற்றிக் குறைத்துக் கூறும் பண்பு கொண்ட அந்த அறிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார்: 'ஆஞல், தமது துணைவர்கள் சூறையாடச் சென்றபோது மசூதிகளுக்கோ, குரானுக்கோ, பெண்களுக்கோ எவ்விதத் துன்பமும் தரக்கூடாதென்று சிவாஜி ஆணையிட்டிருந்தார். குரானின் பிரதி அவரது கையில் சிக்கிஞல், அதனைப் பாதுகாத்துத் தமது ஆதரவில் இருந்த முஸ்லிம் ஒருவரிடம் அளித்தார்.'[2] 'அவரது கையில் சிக்கிய முஸ்லிம் பெண்களுடைய மானத்தையும் குழந்தைகளின் நலனையும் பாதுகாப்பதில் கவனமாக இருந்தார்' என்றும், 'இச் செய்தியில் அவரது ஆணைகள் கடுமையாக இருந்தன' என்றும், 'அவற்றினை மீறியவர்கள் தண்டனை அடைந்தனர்' என்றும் அதே அறிஞர் எழுதியுள்ளார்.[3]

### சிவாஜியின் அரசாங்கம்

சிவாஜி கையாண்ட ஆட்சி முறைகள் அவருக்குப் பெருமை தேடித்தருவனவாக இருக்கின்றன. மராத்தியப் படைவீரர்கள் அதிகாரிகளின் கண்டிப்பான கண்காணிப்பில் இருந்தனர். தனிப்பட்ட முறையில் கொள்ளையடிப்பதோ, அச்சுறுத்திப் பணம் பறிப்பதோ கூடாது. பகைவர் நாட்டில் படைவீரர்கள் கொள்ளையடித்துவந்த பொருள்களுக்கு அதிகாரிகளிடம் ஒழுங்காகக் கணக்குக் காட்ட வேண்டும். கௌடல்யர், சுக்ராச்சாரியர் போன்ருேர் எழுதிய பண்டைய அரசியல் சார்ந்த வடமொழி நூல்களில் காணப்பெறும் கொள்கைகளை அடிப்படையாக வைத்து அரசாங்கத்தின் பல துறைகளை சிவாஜி அமைத்தார்.

[1]Sarkar எழுதிய, 'Shivaji and his Times', பக்கம் 442.
[2]Elliot and Dowson, Vol. viii, பக்கம் 260.
[3]Elliot and Dowson, Vol. viii, பக்கம் 305.

மேலே குறிப்பிட்ட அறிஞர்கள் போற்றிப் பரிந்துரைத்த எட்டு அமைச்சர்கள் அடங்கிய அரசசபை ஒன்று அமைக்கப்பெற்றது. அதே சமயத்தில் பதினெட்டு அரசாங்க அலுவல் துறைகளும் உரு வெடுத்தன. அரச சபையும் அலுவலகத் துறைகளும் மத்திய அரசின் அங்கங்களாயின. ஏறக்குறைய அதே அடிப்படையில் மாநில அரசுகளும் இயங்கிவந்தன. முறையாக வென்று அடக்கப் பெற்ற பகுதிகள் மூன்று மாநிலங்களாக வகுக்கப்பெற்றன. ஒவ் வொன்றிலும் ஓர் அரசப் பகர ஆள் இருந்தார். மிகப் பழங்காலந் தொட்டுத் தொடர்ந்து வந்த பஞ்சாயத்து அமைப்புச் சிதையாது இருந்தது. அநேகமாக எல்லாப் பொது வழக்குகளும் அச் சபை யினுல் தீர்த்துவைக்கப்பெற்றன.

நிலவரி

ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்த நிலங்களை அளந்து ஒவ்வொரு பிகா நிலத்திலும் விளையக்கூடிய பொருள்களை மதிப் பிட்டனர். அதில் ஐந்தில் மூன்று பகுதி குடியானவர்கட்கும், இரண்டு பகுதி அரசாங்கத்திற்கும் சொந்தமாகும். தரிசாகக் கிடந்த நிலங்களில் குடியேறிய குடியானவர்களுக்கு விதையும் மாடுகளும் வாங்குவதற்கென்று அரசாங்கக் கருவூலத்திலிருந்து முன்பணம் வழங்குவதன்மூலமாக அரசாங்கமும் பயிர்த்தொழி லுக்கு ஊக்கம் தந்தது. இவ்வாறு அளிக்கப்பெற்ற முன்பணத்தை எளிதாகச்செலுத்தக்கூடிய தவணைகளில் குடியானவர்களிடமிருந்து வசூலித்தது. வழிவழியாக வந்த நிலக்கிழார்களுக்கு (மிராஸ்தார் களுக்கு) நிலவரி கொள்ளும் உரிமையை வழங்கும் பழக்கத்தை சிவாஜி கைவிட்டார். கருவூலத்திலிருந்து முறையாக ஊதியம் பெற்ற அதிகாரிகளே அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரிகளைத் தண்டினர். அரசாங்க அதிகாரிக்குக் கருவூலத்திலிருந்து ஊதியம் அளிக்கப்பெறவில்லையென்றால், அதற்கு ஈடாக ஏதோ ஒரு மாவட்டத்தின் வருவாய் அவருக்கென ஒதுக்கப்பெற்றது. ஆயி னும், அம்மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள்மீது அவருக்கு அரசியல் அதிகாரம் ஏதும் கிடையாது. ஆயின், சிவாஜியின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டிருந்த சுயராஜ்யம் எனப் பெயர்பெற்ற பகுதிகளில் மட்டுமே இத்தகைய பொதுத்துறை ஆட்சிசார்ந்த விதிமுறைகள் வழக்கில் இருந்தன. மொத்தமாக முகலாய் (Mughlai) என வழங்கப்பெற்ற பிற மாவட்டங்கள் வேற்றரசர் கையில் இருந்தபோதிலும், அவை சிவாஜியின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தன. அந்தப் பகுதிகளிலிருந்து ஆண்டுதோறும் சௌத், சார்தேஷ்முகி எனும் தீர்வைகள் கொள்ளப்பெற்றன. ஒரு மாநிலத்தில் மதிப்பிடப்பெற்ற வருவாயில் நான்கில்

[1] அண்டையில் வாழ்பவர் அடங்கிய நீதிமன்றம்.

ஒரு பகுதி அல்லது சௌத் வரியுடன் மேலும் பத்தில் ஒரு பங்கினை சார்தேஷ்முகியாகக் கொண்டனர்.

## படை அமைப்பு

படைத்துறையையும் பொது ஆட்சித்துறையைப் போலவே நன்கு அமைக்கும் திறமை சிவாஜியிடம் இருந்தது. முதலில் மராத்தியப் படையில் குதிரைப் படையே பிரதானமாக இருந்து வந்தது. மராத்தியக் குடியானவர்கள் ஆறு மாதங்களுக்கு வயலில் வேலை செய்வதும், வறட்சியான காலத்தில் படையில் சேவை செய்வதும் வழக்கமாகும். இத்தகைய முறையில் இருந்த சில ஊழல்களைக் களைந்து அதனைத் திருத்தியமைக்க சிவாஜி முற்பட்டார். அவர் முறையான நிலைப்படையொன்றை நிறுவினார். மழைக்காலத்தில் படைவீரர்களும் குதிரைகளும் தங்குதற்கான விடுதிகளைக் கட்டித்தந்தார். மாரிக்காலத்திலும் அவர்களுக்கு ஒழுங்காக ஊதியம் அளித்தார். பல நிலைகளில் உள்ள அதிகாரிகளைக்கொண்ட படைப்பிரிவுகளை முறையாக அமைத்தார். குதிரைப் படையில் இருபத்தைந்து வீரர்கள் அடங்கிய பிரிவு அடிப்படையாக அமைந்தது. இந்த இருபத்தைந்து வீரர்களுக்கு மேலாக ஒரு ஹவல்தார் இருந்தார். ஐந்து ஹவல்தார்களுக்கு மேலாக ஒரு ஜம்லாதாரும், பத்து ஜம்லாதார்கள் அல்லது 1250 வீரர்களுக்கு மேலாக ஹஸாரியும் இருந்தனர். அவர்களுக்கும்மேலே பாஞ்ச் ஹஸாரியும் உயர் குதிரைப் படைத் தலைவரான 'ஸாரிநௌபத்தும்' (sarinaubat) அதிகாரஞ் செலுத்தினர். இருபத்தைந்து வீரர்களைக்கொண்ட ஒவ்வொரு பிரிவிலும் தண்ணீர் கொண்டுவருபவன் ஒருவனும், படகோட்டி ஒருவனும் இருந்தனர். காலாட் படையில் கோட்டைக்காவல் படையிலும், சாதாரண படைப்பிரிவிலும் ஒன்பது வீரர்களுக்குத் தலைவராக ஒரு கார்பொரல் (corporal) அல்லது நாயக் எனும் அதிகாரி பணியாற்றினர். ஐந்து நாயக்குகளுக்கு மேலாக ஒரு ஹவல்தாரும், இரண்டு, மூன்று ஹவல்தாருக்கு மேலாக ஒரு ஜம்லாதாரும், பத்து ஜம்லாதார்களுக்கு மேலாக ஒரு ஹஸாரியும் அதிகாரஞ் செலுத்தினர். காலாட் படையில் 5 ஹஸாரிகளுக்குப் பதிலாக 7 ஹஸாரிகள் இருந்தனர். சாரிநௌபத் காலாட் படையின் தலைவராக விளங்கினர். குதிரைப் படையில் அரசாங்கத்திடமிருந்து குதிரையையும் ஆயுதங்களையும் பெற்ற பார்கீர்களும் (bargirs), சொந்தமாகக் குதிரை வைத்திருந்த வீரர்களான சில்லேதார்களும் (silledars) நிறைந்திருந்தனர்.

மராத்திய அரசில் கோட்டைகள் மிக முக்கிய இடத்தினை வகித்த காரணத்தினல், அவற்றில் தங்கிய காவற்படைகள்

கவனமாக அமைக்கப்பெற்றன. கோட்டைக் காவலர்கள் ஊழலுக்கு இறையாவதைத் தடுப்பதற்கான காப்பு நடவடிக்கைகள் கூடுமானவரை எடுக்கப்பெற்றன. ஒவ்வொரு கோட்டையிலும் ஹவல்தார், சப்னிஸ் (Sabnis), சாரிநௌபத் என்ற சம அந்தஸ்துள்ள மூன்று அதிகாரிகள் தலைமை தாங்கினர். அவர்கள் மூவரும் ஒன்ருக இணைந்தே செயலாற்றவேண்டியிருந்ததால் அவர்கள் ஒருவருக்கொருவர் தடையாக விளங்கினர்.[1]

ஓரளவு வலிமைவாய்ந்த கடற்படையையும் சிவாஜி உருவாக்கினர். ஜஞ்ஜிராவில் இருந்த கொள்ளைக்கூட்டத் தலைவர்களைக் கட்டுப்படுத்தவும் முகலாயர்களின் வாணிபக் கலங்களைக் கொள்ளையிடுவதற்கென்றும் கடற்படை பயன்பட்டது. கப்பல்கள் கொலாபா துறைமுகத்தில் தங்கியிருந்தன.

**அவுரங்கசீப்பும் தக்கணமும், 1680-1707**

1680ஆம் ஆண்டில் சிவாஜி இறந்ததால் அவுரங்கசீப் தமது மேலாதிக்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று உறுதி பூண்ட தக்கணத்தின் அரசியல் நிலையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. சிவாஜி மரார்த்தியரிடையே புத்துணர்ச்சியைப் புகுத்தியிருந்தார். முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து தங்களது தாய்நாட்டைக் காக்கமுடியும் என்ற நம்பிக்கை அவர்களிடம் வளர்ந்திருந்தது. அவர்களுடைய புதிய மன்னரான சாம்பாஜி துணிகரமாகக் கொள்ளையிடுவதில் தந்தையைக் காட்டிலும் எவ்விதத்திலும் சளைத்தவரல்லர். மேலும் புரட்சிக்கொடி நாட்டிய இளவரசரான அக்பர் கைதிபோல சாம்பாஜியின் அரண்மனையில் வாழ்ந்திருந்தார். சிறைப்பட்டிருந்த இந்த இளவரசரைத் தக்கணத்தில் பேரரசின் நலன்களுக் கெதிராகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடுமென அவுரங்கசீப் முறையான அச்சங்கொண்டிருந்தார். தலைசிறந்த முகலாயப் படைத்தலைவர்கள் அவ்வப்போது அனுப்பப்பெற்ற போதிலும் பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய முஸ்லிம் அரசுகள் வலிமையும் ஆற்றலும் கொண்டு விளங்கிவந்தன. தீவிர சுன்னி சமயப் பிரிவினரான அவுரங்கசீப் இந்துக்களை எத்துணை அளவிற்கு வெறுத்தாரோ அதே அளவிற்குத் தக்கணத்தின் ஷியா மன்னர்களையும் வெறுத்தார். அப்போது தக்கணத்தில் இருந்த பேரரசின் அதிகாரிகளான கான் ஜஹானும் அவரது துணைவர்களும் லஞ்சம் வாங்கினர்கள் என நியாயமான சந்தேகம் கொண்ட அவுரங்கசீப் தக்கணப் படையெடுப்பைத் தாமே மேற்கொண்டால்தான் தக்கண அரசுகளை ஒடுக்க

[1] பேராசிரியர் சர்க்கார் எழுதிய 'Shivaji and his Times' எனும் நூலில், 414-16 பக்கங்களில் இருந்து இச் செய்தியை எடுத்துக் கையாண்டுள்ளோம்.

முடியும் என நம்பினர். இங்ஙனம் இராஜபுதனப் போருக்காக ஆஜ்மீரில் தங்கியிருந்த அவுரங்கசீப் 1681ஆம் ஆண்டு செப்டம்பர் மாத ஆரம்பத்தில் தக்கணத்திற்குப் புறப்பட்டார். அவர் தம்முடன் பேரரசின் வட பகுதியில் வாழ்ந்த பல இனத்தினர் அடங்கிய பெரும்படையையும், பெருமைமிக்க பீரங்கிப் படையையும், தக்கணம் அதுவரையில் கண்டிராத அளவிற்குப் போர்த் தளவாடங்களையும் கொண்டுவந்தார். அப்போதிருந்து அநேகமாக அவரது வாழ்நாள் முழுவதையும் பாசறையிலேயே கழித்தார் 1682ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அவர் அவுரங்கபாத்தை அடைந்தார். அடுத்த ஆண்டு நவம்பரில் பேரரசப் படை அகமது நகரில் நிலைகொண்டது. பேரரசர் வந்ததால் தக்கணத்தில் புதிய தொல்லைகள் தோன்றின. தொலைவிலிருந்த பகுதிகளில் ஜெஸியா வரியைத் தண்டுவதில் முகலாய அதிகாரிகள் அத்துணை தீவிரமாக இல்லை. ஆனால், பேரரசர் தக்கணத்திற்கே வந்துவிட்டதால், அவர்கள் எப்பாடு பட்டாகிலும் அந்த வரியைத் திரட்ட வேண்டிவந்தது. அதன் விளைவாகப் பேரரசரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பகுதியில் விளங்கிய நகரங்கள் பல கொந்தளிப்பிற்குள்ளாயின.

ஆரம்ப நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பெற்றன. பேரரசப் படையின் பெரும் பிரிவுகள் இரண்டு இளவரசர்களான மூஆஸம், ஆஸம் தலைமையில் மராத்தியருக்கெதிராகவும் பீஜபூருக்கு எதிராகவும் விரைந்துசென்றன. புரட்சியில் ஈடுபட்டிருந்த இளவரசர் அக்பரைப் பிடிக்கும் முயற்சியில் இரண்டு ஆண்டுகள் வீணே கழிந்தன. அவ்விளவரசர் பாரசீகத்திற்குத் தப்பி ஓடிவிட்டார். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு மராத்தியருடைய கோட்டைகளில் சிலவற்றைக் கைப்பற்றுவதில் பேரரசப் படையினர் வெற்றிபெற்றனர். ஆயினும் மொத்தமாகப் பார்க்கும்போது கொங்கணத்தின் ஒத்துவராத தட்பவெப்பநிலை காரணமாக முகலாயருடைய படையெடுப்பு அழிவு தேடித்தருவதாகவே இருந்தது. இளவரசர் மூஆஸத்தின் தலைமையில் வந்த பேரரசப் படைப்பிரிவு மேற்கொண்ட ராம்தரா முற்றுகைபற்றி பேசவந்த காஃபிகான் பின்வருமாறு குறிப்பிடுவார்: ‘அந்த இடத்தின் காற்றுப் படையெடுப்பாளர்களுக்கு ஒத்துவரவில்லை. எல்லாத் திசைகளிலும் பகைவர் சூழ்ந்துகொண்டு தளவாடங்களும் தானியங்களும் வராது தடுத்தனர். ஒரு புறத்தில் கடலும் மற்ற இருபுறங்களில் விஷ விருக்ஷங்களும் நச்சுப் பாம்புகளும் நிறைந்த பெருமலைகளும் இருந்தன. பகைவர்கள் புற்களை வெட்டிவிட்டனர். அதனால் வீரர்களுக்கும் விலங்குகட்கும் பெரும் தீங்கு நேர்ந்தது. தேங்காயும்,

நஞ்சுபோன்று கேடுபயந்த குடுன் (Kudun) எனும் ஒருவகைத் தானியமும் தவிர வேறு உணவுப் பொருள்கள் படையினருக்குக் கிடைக்கவில்லை. அதனால் வீரர்களும் குதிரைகளும் பெரும் எண்ணிக்கையில் மடிந்தனர். தானியங்களின் விலை மிகவும் உயர்ந்துவிட்டது. சில சமயங்களில் கோதுமை மாவின் விலை மூன்று, நான்கு ரூபாய்களுக்குமேல் இருந்தது. தப்பிப் பிழைத்த வர்கள் அரைப்பட்டினி வாழ்வு வாழ்ந்தனர். அழுகையும் முனக லும் மிகுந்தது. அவர்கள் விடும் மூச்சு ஒவ்வொன்றும் கடைசி மூச்சு என அவர்கள் உணர்ந்தனர். பயன்படுத்துவதற்கு ஏற்ற குதிரைகள் செல்வந்தரிடமும் இல்லை. பேரரசப் படையின் பரிதாபகரமான நிலையைப்பற்றி அறிந்த அவுரங்கசீப், கூடுமான வரையில் தானியங்களைக் கப்பல்களில் ஏற்றி இளவரசரின் துயர் துடைப்பதற்காகக் கடல் வழியாகக் கொண்டு செல்லுமாறு சூரத்தில் இருந்த அதிகாரிகளுக்கு ஆணையிட்டார். இதைப்பற்றி பகைவர் அறிந்துகொண்டனர். அவர்கள் புதிதாக அமைத்த கோட்டைகளின் வழியாக உணவுக் கப்பல்கள் சென்றபோது அவற்றினைத் தடுத்து நிறுத்திப் பலவற்றைச் சூறையாடினர். ஒரு சில கப்பல்களே அவர்களிடமிருந்து தப்பி உரிய இடத்தை வந்தடைந்தன. ஆயினும், அமீர் எவரும் இரண்டு மூன்று பாலஸ (Palas) தானியத்திற்குமேல் பெறமுடியவில்லை. இறுதியாகப் படையினர் பின்வாங்குவதற்கான ஆணை வந்து சேர்ந்தது. அதற் கிணங்க முற்றுகை இட்டுவந்த முகலாயப்படை வழி நெடுகப் போரிட்டவண்ணம் அப்போது அவுரங்கசீப் தங்கியிருந்த அகமது நகரை வந்தடைந்தது.[1]

இளவரசர் ஆஸத்தின் தலைமையில் பீஜப்பூரை நோக்கிச்சென்ற இரண்டாவது படைப்பிரிவும் அதிக வெற்றிபெறவில்லை. ஷோலாப் பூரை இளவரசர் கைப்பற்றினார். ஆயினும், தலைநகரை நோக்கி முன்னேறிச் சென்றபோது அதனை அவரால் கைப்பற்ற முடிய வில்லை. மிகுந்த தொல்லைகளை அனுபவித்த பிறகு அவர் பின்வாங்க நேரிட்டது. இத்தகைய இடர்ப்பாடுகள் போதா தென்று மராத்தியர் தெற்கிலே முகலாயப்படை இல்லாததைப் பயன்படுத்திக்கொண்டு புரோச், பர்ஹான்பூர் ஆகியவற்றைச் சூறையாடினர்.

### பீஜபூரின் வீழ்ச்சி

இதற்கிடையில் அகமதுநகரில் இருந்த பேரரசர் தெற்கு நோக்கிச் சென்றார். இளவரசர் ஆஸத்துடன் சேர்ந்துகொண்டு பீஜபூரை முற்றுகையிடுவதற்காக மேலும் முன்னேறிச்சென்றார்.

[1] Elliot and Dowson, vol. vii. பக். 314.

1685ஆம் ஆண்டு ஏப்ரல் மாத முதலில் முற்றுகை தொடங்கியது வெகுவிரைவிலேயே வெளிப்புற மதிலில் நுழைவதற்குப் போது மான இடைவெளி ஏற்படுத்தப்பட்டது. அந்நகரத்தில் இருந்த காவற்படையினர் தீரத்துடன் போரிட்டனர். ஆனால், இறுதியாக உணவுப்பொருள்கள் காலியாகிவிடவே அக் காவற்படை 1686ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சரணடைந்தது. சிக்கந்தர் அதில்ஷா கான் சிறைப்பட்டார். அவரது நாடு பேரரசுடன் இணைக்கப் பெற்றது. இங்ஙனம் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு வளமும் வாளிப்பும் கொண்டு விளங்கிய பெருமைமிகு அதில் ஷா அரசகுலம் முடிவுற்றது.

பீஜபூரின் வீழ்ச்சிக்குப் பின்னர் கோல்கொண்டாவின் முறை வந்தது. தாக்குதலுக்கான காரணம் எளிதில் கிடைத்தது பீஜபூர், கோல்கொண்டா ஆகிய இரு நாடுகளும் மராத்தியருக்கு உதவியளித்தன என்று பேரரசர் குற்றம் சாட்டுவதற்கான வாய்ப்பு எப்போதும் இருந்துவந்தது. இதனைக் காரணமாக வெளிப்படையாகச் சுட்டிக்காட்டிய போதிலும் அந்தரங்கக் காரணம் வேறாகும். தெற்கில் தமது பேரரசிற்கு அண்மையில் வலிமை வாய்ந்த ஷியா அரசு வாழ்வதைத் தீவிர சுன்னி பிரிவைச் சார்ந்த அவுரங்கசீப் விரும்பவில்லை. மேலும் பதினாறும் நூற்றாண் டில் அக்பர் கடைப்பிடித்ததும், அவரது வழிவந்தவர்களான ஜஹாங்கீரும் ஷாஜஹானும் போற்றிவளர்த்ததுமான வலித் தாக்குதல் அடிப்படையிலான பேரரசு கொள்கையினை அவுரங்க சீப்பும் பின்பற்றினார். தெற்கில் வாழ்ந்த உரிமைபெற்ற மூன்று அரசுகளில்அகமதுநகரும் பீஜபூரும்ஏற்கெனவே பேரரசில்இணைந்து விட்டன. எஞ்சியிருந்தது கோல்கொண்டா மட்டுமே. வலித் தாக்குதல் கொள்கையை மேற்கொண்ட ஓர் இனத்தைப் பொறுத்தவரையில் இணைத்துக்கொள்வதற்குப் பகுதிகள் இருக்கும் வரையில் இணைப்புத் திட்டம் முற்றுப்பெறுவது இல்லை. அதனால் அவுரங்கசீப்பும் போரைப் பறைசாற்றினார். கோல்கொண்டா அரசரான அபுல்ஹாசனின் மீது பல குற்றங்களைச் சாட்டினார். அவற்றில் பிராமண அமைச்சர்களை வைத்திருந்தது, புறச்சமயி களான மராத்தியருடன் நட்புகொண்டது ஆகியவை முக்கிய இடம்பெற்றன. அவற்றோடு ஊதாரித்தனமும் ஒரு குற்றமாகக் குறிப்பிடப்பெற்றது. அவற்றினைப் பற்றி அவுரங்கசீப் ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்: ‘இந்தக் கேடுகெட்டவரின் தீச்செயல்களைப்பற்றி எழுதுதல் அரிது. ஆயினும், அவற்றில் நூற்றில் ஒன்றை, கடல் அனையதில் கடுகத்தனையைக் குறித்தால், அவற்றைப்பற்றி ஒருவாறு உணர்ந்துகொள்ள முடியும். முதலா வதாகக் கேடுபயக்கும் கொடுங்கோலர்களான புறச்சமயத்தவ

ரிடம் அதிகாரத்தையும் ஆட்சிப் பொறுப்பையும் ஒப்படைத்தார். சையதுகள், ஷேக்குகள், பிறபுனிதர்கள் ஆகியோரைக் கொடுமைப் படுத்தித் துன்புறுத்தினுர். வெளிப்படையாகவே வரம்புமீறிய காமக்களியாட்டங்களில் மூழ்கினுர். அல்லும் பகலும் குடித்துக் கெட்ட செயல்களையே செய்துவந்தார். இஸ்லாத்தையும் புறச் சமயத்தையும். நீதியையும், கொடுங்கோன்மையையும், பக்தியை யும், பழிச்செயலேயும் பிரித்துப் பார்க்கவில்லே. புறச்சமயத்தவருக் காக விடாப்பிடியாகப் போரிட்டார். தெய்வக் கட்டளே களேயும் தடைகளேயும் மீறி நடந்தார். முக்கியமாகப் பகைநாட் டவருக்கு உதவி செய்யலாகாது எனும் கட்டளேயை மீறினுர். இங்ஙனம் ஆண்டவன் கட்டளேயை மதியாது நடந்து திருக்குரா னுக்கு அவமானம் தேடித்தந்தார். இவைபற்றி நட்புமுறையில் ஆலோசனேயளித்தும். எச்சரிக்கை விடுத்தும் பல கடிதங்களேத் திரும்பத் திரும்ப எழுதி அனுப்பினர் அறிவார்ந்த மக்கள். ஆயின் அவைகளே அவர் புறக்கணித்தார். மேலும் கொடுந்தொழிலோன் சாம்பாஜிக்கு ஒரு லட்ச பகோடா பணத்தை அவர் அனுப்பியதாக இப்போது செய்தி கிடைத்துள்ளது. இங்ஙனம் மமதையாலும் மது மயக்கத்தாலும் தகாத முறையில் நடந்து பழிக்கஞ்சாது பாபவினேகளேச் செய்துவரும் அவருக்கு இவ்வுலகிலோ மறு வுலகிலோ விமோசனமே கிடையாது.[1]

### கோல்கொண்டாவின் வீழ்ச்சி

சிறிது காலத்திற்குப் போர் தொடர்ந்தது. 1687ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கோல்கொண்டாவிற்கு அவுரங்கசீப்பே நேரில் வந்து சேர்ந்தார். ஆயினும், உணவும் போர்த்தளவாடங்களும் நிறைந்திருந்த அந்நகரக் கோட்டையானது காலவரையறையின்றி எதிர்த்து நிற்கும்போல் தோன்றியது. ஒரு நூற்றுண்டிற்கு முன்னர் அசிர்கார் கோட்டையைக் கைப்பற்றுவதில் அக்பருக்கு வெற்றி தராததைப்போலவே தாக்குதல்களும், கண்ணிவைத் தலும் கோல்கொண்டா கோட்டைக்கு முன்னும் பலிக்கவில்லே. அதனுல் "பேரரசரும் தமது முன்னேரைப் பின்பற்றி லஞ்சம் கொடுக்க முற்பட்டார். காவற்படையில் இருந்த ஒரு துரோகி கோட்டைவாயிலேத் திறந்துவிடவும் பேரரசரும் கோட்டைக்குள் நுழைய முடிந்தது.[2] இத்தகைய துரோக மனப்பான்மை பரவத்துவங்கியது. பெருஞ்செல்வந்தர்கள் ஒருவர் பின் ஒருவராகக் கோல்கொண்டா மன்னரைக்கைவிட்டுப் பேரரசப்படையினருடன் சேர்ந்துகொண்டனர். ஆயின் அப்துர் ரஸாக் லாரி எனும் தலேவர் மட்டும் தோற்கும் கட்சியைத் தொடர்ந்து ஆதரித்துவந்தார்.

[1] Elliot and Dowson, vol. vii, பக். 325.
[2] Vincent Smith, 'History of India', p, 442.

அவுரங்கசீப் அளிக்க முன்வந்த பணத்தில் அவர் மயங்கவில்லை. எழுபது விழுப்புண்களைப் பெற்று நிலத்தில் விழும்வரை அவர் தீரத்துடன் போரிட்டார். இறுதியில் வெற்றிபெற முடியாது என்பதை நன்குணர்ந்த மன்னர் அபுல்ஹாசன் பேரரசரின் இரண்டாவது புதல்வரான இளவரசர் ஆசத்திடம் தமது கண்ணியத்திற்குக் குறைவில்லாத முறையில் சரணடைந்தார். அங்கிருந்து அவரைச் சிறைப்படுத்தி தௌலதாபாத்திற்குக் கொண்டுசென்றனர். அவருடன் குதுப்ஷாஹி அரச குலம் வீழ்ச்சியுற்றது.

### சாம்பாஜியின் முடிவு

இருவித நோக்கங்களோடு அவுரங்கசீப் தக்கணத்தின் மீது படையெடுத்துவந்தார் என்பதை ஏற்கெனவே குறித்துள்ளோம். ஷியா அரசுகளான பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் அழித்துத் தமது பேரரசின் எல்லையை விரிவு செய்வதும், மராத்திய அரசினை ஒடுக்குவதும் அவ்விரு நோக்கங்களாகும். அவை இரண்டில் ஒன்றினை இப்போது நிறைவேற்றிவிட்ட அவர் மராத்திய சக்தியை அழிப்பதில் தமது முழுக்கவனத்தையும் செலுத்த முடிந்தது. சாம்பாஜி தீரமிக்கவர் எனினும் திறமையற்றவர்; தீய வழி நின்றவர். அவரது முக்கிய ஆலோசகராக இருந்த வட இந்திய பிராமணர் கலாஷ் என்பவரோ தலைவரைப்போலவே காமக்களியாட்டங்களில் கருத்துக் கொண்டவர். இவர்கள் இருவருடைய நடத்தையினால் பல மராத்தியத் தலைவர்கள் பகைவர்களாயினர். அத்தருணத்தில் மட்டும் சாம்பாஜி முயன்றிருந்தால் பீஜப்பூரையோ கோல்கொண்டாவையோ அல்லது இரண்டையுமோ காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், அவர் சோம்பித் திரிந்தார் இன்பநுகர்ச்சியிலும் காமக்களியாட்டங்களிலும் காலத்தைக் கழித்தார். இங்ஙனம் அவர் சங்கமேஷ்வரில் காலங்கடத்திய போது மதிநுட்பம் வாய்ந்த தாக்குதல் ஒன்றின் மூலமாக சாம்பாஜியைப் பகைவர் சிறைப்படுத்தினர். தக்கணத்து அதிகாரியான முகாரப்கானும் அவரது புதல்வரான இக்லாஸ் கானும் ஒரு சிறு குதிரைப்படையுடனும் காலாட்படைப்பிரிவுடன் கோலாப்பூரிலிருந்து விரைந்துசென்று, சங்கமேஷ்வரை அடைந்து,சாம்பாஜி சற்றும் எதிர்பாராத சமயத்தில் அவரைத் தாக்கினர். சிறிதுநேரப் போராட்டத்திற்குப்பின் சாம்பாஜியின் ஆதரவாளர்களில் பலர் தப்பியோடிவிட்டனர். ஆனால், சாம்பாஜியும், அவரது புதல்வரும், அந்தரங்கத் தோழரான கலாஷும் சிறைப்பிடிக்கப்பெற்றுப் பேரரசரிடம் அழைத்துச்செல்லப்பட்டனர். அவர்களை அவுரங்கசீப்பிற்கு முன்னால் கொண்டுவந்தபோது அப்பேரரசர் அரியாசனத்திலிருந்து இறங்கிவந்து இத்துணைப் பேருதவி செய்ததற்கு நன்றி செலுத்தும் வகையில் ஆண்டவரை மூன்றுமுறை வணங்கினார்.

இச்செயல் தமது மன்னரான சாம்பாஜிக்கு அவுரங்கசீப் தம்மை யறியாமல் செலுத்திய மரியாதையென பிராமண அமைச்சரான கலாஷ் விளக்கம் தந்தார். அவர் திரும்பத்திரும்பக் கூறியதன் மொழிபெயர்ப்பினைக் காணலாம்: 'வேந்தே! உம்மைக் கண்டதும் ஆடம்பரமும், மாட்சிமையும் தங்கிய ஆலங்கீர் மன்னரும் (அவுரங்கசீப்) அரியாசனத்தில் அமர்ந்திருக்க முடியவில்லை. அதற்கு மாருக உம்மை வணங்குவதற்காக அதிலிருந்து கீழே இறங்கிவந்தார்.'[1]

காஃபிகானின்[2] கூற்றுப்படி சிறைப்பட்டவர்களை உயிருடன் வைத்திருக்கலாம் என்றும், அவர்களைக்கொண்டே மலைகளில் ஏராளமாக இருந்த மராத்தியக் கோட்டைகளை முகலாயர் பிடித்துக்கொள்ளலாம் என்றும் சிலர் அவுரங்கசீப்பிடம் யோசனை கூறினர். ஆயின் புறச்சமயத்தவரிடம் அவுரங்கசீப் பரிவுகாட்டுவதாக இல்லை. சிறைப்பட்டிருந்த மராத்தியத் தலைவர்களை இஸ்லாத்தைத் தழுவுமாறு அழைத்தபோது அவர்கள் பேரரசரின் முன்னிலையிலேயே வாய்க்கு வந்தவாறு ஏசத்தொடங்கினர். அதனுற் சீற்றமுற்ற அவுரங்கசீப் மரியாதை குறைவாகப் பேச முடியாதவாறு அவர்களது நாவினைத் துணிக்குமாறு கட்டளையிட்டார். அதன் பின்னர் அவர்கள் கண்களைப் பறிகொடுத்தனர்.[3] அதன்பிறகு அவர்கள் பலவகையானசித்திரவதைகளுக்கு உட்பட்டு 1689ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் தேதியன்று உயிர்நீத்தனர். இங்ஙனம் சம்பாஜியைக் கொன்ற ஏழுமாதங்கள் கழித்து சிவாஜியின் பேரரசினுடைய தலைநகரமான ரெய்கரைக் கைப்பற்றுவதில் முகலாயர் வெற்றிகண்டனர். சாம்பாஜியின் சகோதரரான ராஜாராம் தப்பிச்சென்றுவிட்டபோதிலும் சாம்பாஜியின் தாயாரும், அன்பு மனைவியும், அருமை மைந்தரான சாஹூவும் கைதுசெய்யப்பெற்றனர். அதன் பிறகு அவுரங்கசீப் தெற்கில் வெற்றிபெற்று முன்னேறினர். சிறிது காலத்திற்குத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி வரையில் இருந்த பகுதிகளிலிருந்தும் அவர் திறைகொண்டார்.

### தக்கணப் படையெடுப்பு

1690ஆம் ஆண்டில் முகலாயரது முன்னேற்றம் உச்சநிலையை அடைந்தது எனலாம். இப்போது காபூலிலிருந்து சிட்டகாங் வரையிலும், காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையிலும் பரவிக் கிடந்த இந்தியத் தீவக்குறை முழுவதற்கும் ஈடு இணையற்ற பெருந்

1 Elliot and Dowson, vol. vii, பக். 340–1.
2 Ibid.
3 Ibid.

தலைவராக அவுரங்கசீப் விளங்கினார். தக்கணப் படையெடுப்பின் முக்கிய நோக்கம் எனக் கொண்டதை நிறைவேற்றுவதில் அவர் வெற்றி கண்டார். பீஜபூர், கோல்கொண்டா ஆகிய ஷியா அரசுகள் அழிக்கப்பெற்றன. அவற்றின் பகுதிகள் பேரரசோடு இணைந்தன. சிவாஜி இறந்துவிட்டார். அவரது புதல்வரும் வாரிசுமான சாம்பாஜி பேரரசரின் கட்டளைக்கிணங்க கொல்லப்பட்டார். தலைநகரம் உள்படப் பல முக்கியமான மராத்தியக் கோட்டைகள் முகலாயர் வசம் வந்தன. மராத்திய அரியணைக்கு வாரிசான சாஹூவும் பேரரசரிடம் சிறைப்பட்டிருந்தார். பேராசிரியர் சர்க்கார் அவர்கள் சரியாகக் கூறியதைப்போல அவுரங்கசீப் யாவற்றையும் வென்றுவிட்டதைப்போலத் தோன்றியது. ஆயின் உண்மையில் அவர் யாவற்றையும் இழந்தார். அது இறுதி அழிவின் தொடக்கமாக அமைந்தது. நீண்ட காலத்திற்குப் பேரரசர் வட இந்தியாவில் இல்லாமற்போனதால் பேரரசின் அப்பகுதியில் அரசாங்கம் தளர்வுற்றது. ஊழல் மிகுந்தது. ஆக்ராவிலும் தில்லியிலும் கட்டுப்பாடின்மை கரைபுரண்டோடியது. குறுநிலத் தலைவர்களும் ஜமீன்தார்களும் மாநில ஆளுநர்களை மதியாது நடந்தனர். ஜாத்துகளும் சீக்கியரும் புரட்சி செய்தனர். தக்கணத்தில் நடைபெற்ற செலவு மிகுந்த பயனற்ற போர்கள் பேரரசின் பொக்கிஷத்தைக் காலியாக்கின. அதே சமயத்தில் வெற்றிபெற்ற பகுதிகளை முறையாக அடக்கி ஆளமுடியாத காரணத்தால் அவற்றிலிருந்து போதுமான வருவாயும் கிடைக்கவில்லை. ஓரிடத்தில் இருந்து ஆட்சிசெய்வதற்கும் ஒருவர் ஆளுவதற்கும் இயலாத அளவிற்குப் பேரரசின் பரப்பு மிகுதியாகியது.

தக்கண சுல்தானியங்களை அழிக்கும் அறிவற்ற கொள்கையினால் அவுரங்கசீப்பின் தக்கணப் படையெடுப்பு இறுதியில் தீமைகளை விளைத்தது. அந்த அரசுகளை வெல்லுவது நடைமுறையில் சாத்தியமானபோதிலும் பேரரச வளர்ச்சிக் கொள்கைக்கு உகந்ததுதான் என்றாலும் அதனால் தீயவிளைவுகள், குறிப்பாக மராத்தியர் முற்றிலும் ஒடுக்கப்பெறாத நிலையில், தீயவிளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதை விவேகமுள்ள அரசியல் அறிஞர் எவரும் எதிர்பார்த்திருக்கமுடியும். ஏனெனில், அதனால் புதிய, தாங்க முடியாத ஆட்சிப்பொறுப்புகள் வந்து சேரும். மேலும் 'ஏற்கெனவே மெலிவும் திறமையின்மையும் தோன்றத் தொடங்கிய ஆட்சி முறைக்குப் பெரும் பாரமாக வந்துசேரும்.' அதுமட்டுமன்றி கோல்கொண்டாவிலும் பீஜப்பூரிலும் வாழ்ந்திருந்த ஷியா வகுப்பைச் சார்ந்த குடிமக்கள் தங்கள் தங்கள் அரசகுலங்களிடம் பற்றுக் கொண்டிருந்தனர். அந்நிலையில் அவர்கள் தில்லியில் இருந்துவந்த சுன்னி பிரிவைச் சார்ந்த வெற்றியாளர்களை வரவேற்பதற்கில்லை. இந்த அரசுகளின் படைகளில் இருந்து வெளியேறிய

அதிகாரிகளும் படைவீரர்களும் மராத்தியருடன் சேர்ந்துகொண்டனர். அதனால் பகைவரின் படைபலம் பெருகியது. இந்த அரசுகளை அழித்ததால் முஸ்லீம் அரசாங்கத்தின் கோட்டைகள் இரண்டையும் அழித்துவிட்டது போலாயிற்று. அதனால் மராத்தியர் எவ்விதத் தடையும் இன்றிச் செயலாற்ற வாய்ப்பு ஏற்பட்டது. வேறுவிதமாகக் கூறுவதானால் நோக்கங்களில் ஒன்றை மட்டும் நிறைவேற்றியதால் மற்றதை நிறைவேற்றுவதில் அவுரங்கசீப் பிற்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இத்தகைய தவறான படைத்துறைசார்ந்த கொள்கையின் விளைவாகப் பேரரசு துன்புற நேர்ந்தது.

### மராத்தியருக்கு எதிராக மேலும் நடவடிக்கைகள்

மராத்தியருடனான போரைப்பற்றித் தொடர்ந்து கூறும் போது முகலாயர் ராஜ்கரைக் கைப்பற்றிய போது நல்வாய்ப்பின் பயனாக சாம்பாஜியின் இளவலான ராஜாராம் தப்பிச் சென்றதைக் குறிப்பிட வேண்டும். மேலும் தெற்கில் வலிமையுடன் விளங்கிய செஞ்சிக் கோட்டையை ராஜாராம் வந்தடைந்தார். அதே சமயத்தில் மற்ற மராத்தியத் தலைவர்கள் தக்கணத்தில் இருந்த கோட்டைகளைக் காப்பதில் ஈடுபட்டிருந்தனர். 1689ஆம் ஆண்டுமுதல் 1707ஆம் ஆண்டு வரையிலான பதினெட்டு ஆண்டுகளின் வரலாறு சலிப்பூட்டும் நீண்ட கதையாக அமைந்துள்ளது. பயனற்ற சிறு சிறு கைகலப்புகளும், சோர்வுதரும் நீண்டகால முற்றுகைகளும் இக்காலப்பகுதியை நிறைத்தன. நாட்டின் பெரும்பகுதி வென்று அடக்கப்பெற்ற போதிலும் அவற்றில் பெரும்பான்மையானவை முகலாயர் கையிலிருந்து நழுவிச் சென்றன. முகலாயருடைய வலிமை சிறிது சிறிதாகக் குலையத் துவங்கியது. அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பின் வருமாறு சுருங்கக் கூறலாம். செஞ்சிக் கோட்டையை முற்றுகையிடுவதற்காகவென்று பேரரசப் படைத்தலைவர்களில் தலைசிறந்த ஒருவரான ஸுல்பிகார்கானின் தலைமையில் பெரும் படையொன்று 1691ஆம் ஆண்டில் புறப்பட்டுச் சென்றது. மகாராட்டிரத்தில் இருந்த வேறு முக்கியக் கோட்டைகளைக் கைப்பற்றுவதற்குப் பல படைப் பிரிவுகள் அனுப்பப்பெற்றன. பீஜப்பூரிலும் கோல்கொண்டாவிலும் பல பகுதிகளில் அதிகாரிகளாக இருந்தவர்கள் உரிமை பெற்ற அரசர்கள் போல் நடக்கத் தொடங்கியதால் அந்த நாடுகளில் இருந்த பல பகுதிகளையும் கோட்டைகளையும் கைப்பற்றுவதற்காகவும் பல படைப் பிரிவுகள் ஏவப்பெற்றன. இங்ஙனம் முகலாயப் படை சிதறுண்டுகிடந்தது. அதனால் செஞ்சிக் கோட்டை முற்றுகை அசாதாரணமாக நீண்ட

போது[1] அவுரங்கசீப்பால் உதவிப்படைகளை அங்கே அனுப்பமுடிய வில்லை. அக்காலத்தில் தென்னிந்தியாவில் தலைசிறந்து விளங்கிய வலிய கோட்டைகளில் ஒன்று செஞ்சிக் கோட்டை. ராஜாராமின் தலைமையில் இருந்த சாவற்படையும் அக்கோட்டையைக் கைப்பற்றுவதற்கு ஸுல்பிகார்கான் செய்த முயற்சிகள் அனைத்தையும் முறியடித்தது. ஸுல்பிகார்கானுடன் சென்றிருந்த இளவரசர் காம்பக்ஷும், அவரது தந்தையாகிய ஆஸாத்கானும் பகைவருடன் நயவஞ்சகமாகக் கடிதத் தொடர்பு கொண்டிருந்தனர் எனும் ஐயம் காரணமாகச் செஞ்சியிலிருந்து திரும்பி அழைக்கப்பெற்றனர். சிறிது காலத்திற்குள் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றத் தவறிய ஸுல்பிகார்கானும் திருப்பி அழைக்கப்பெற்றார். 1694 முதல் 97 வரையில் வேறு சில படைத்தலைவர்களும் முயன்று பார்த்தனர். அவர்களும் தோல்வியே கண்டனர். மீண்டும் ஸுல்பிகார்கானே சென்றார். இறுதியாக 1698ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செஞ்சியை முற்றுகையிட்டுக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். ஆயின் ராஜாராமும் வேறுசில மராத்தியத் தலைவர்களும் சதாராவிற்குத் தப்பிச்சென்றனர். வேறு மராத்திய மலைக் கோட்டைகளைக் கைப்பற்றுவதற்குச் சென்ற முகலாயப் படைப் பிரிவுகளும் செஞ்சிக்குச் சென்ற பிரிவைப் போலவே அதிக வெற்றி பெற்றுவிடவில்லை. ஏனெனில், சாந்தா கோர்புரா, தானிஜாது போன்ற தனிப்பட்ட மராத்தியத் தலைவர்களின் கீழ் இயங்கிவந்த மராத்தியப் படைவீரர் பல பகுதிகளையும் கொள்ளையிட்டனர். முகலாயர்களது பொருள்களைக் கவர்ந்தனர். எங்கும் குழப்பத்தையும் அச்சத்தையும் பரப்பினர். அவர்கள் முகலாயப் படைத்தலைவர்களைப் பலமுறை முறியடித்து அவர்களது மன உறுதியைக் குலைத்தனர். பல படைத்தலைவர்களைச் சிறைப் படுத்தி வழக்கமாகக் கொள்ளும் ஈட்டுப்பணம் பெற்றுக்கொண்டு அவர்களை விடுதலை செய்தனர். இத்தகைய நிலைமை இருந்தது என காஃபிகான் ஒப்புக்கொள்கிறார். சாந்தா கோர்புராவைப் பற்றி அவர் பின்வருமாறு எழுதுவார்: 'பயிர்த்தொழில் சிறந்து விளங்கிய மாவட்டங்களைக் கொள்ளையிடுவதிலும் முகலாய அதிகாரிகளைத் தாக்குவதிலும் சாந்தா தன்னிகரற்று விளங்கினார். அவருடன் மோதியவர் இறந்தனர் அல்லது காயமுற்றுச் சிறைப் பட்டனர். அப்படியே ஒருசிலர் தப்பினாலும் அவர்கள் தத்தமது படைகளையும், போர்த்தளவாடங்களையும் துறந்துவிட்டுத் தங்கள் உயிரைமட்டும் காத்துக்கொண்டனர். அந்த வெறுக்கத்தக்க நாய் சென்று தாக்குவதாக அச்சுறுத்திய இடங்களில் எதிர்த்து நிற்கும் துணிவுகொண்ட பேரரசைச் சார்ந்த அமீர் ஒருவரும் இல்லை

[1] ஸுல்பிகார்கான் வேண்டுமென்றே முற்றுகையை நீட்டினார் என வின்சென்ட் ஸ்மித் குறிப்பிடுவார்.

யாதலாலும், அவர் முகலாயப் படைகளுக்கு ஏற்படுத்திய சேதத்தைக் கண்டு தீரமிகுந்த வீரரும் கண்டு நடுங்கிய காரணத்தால் யாரும் ஒன்றும் செய்யமுடியவில்லை.'[1]

செஞ்சியின் வீழ்ச்சிக்குப்பிறகு சாந்தா கோர்புரா நீண்ட நாட்களுக்கு உயிர்வாழவில்லை. ஆயினும், சதாராவிற்குத் தப்பிச்சென்ற ராஜாராம் பெரும் படையைத் திரட்டிக்கொண்டு பேரரசர் தமது படைகளையெல்லாம் ஒன்றுகக் குவித்திருந்த வடதக்கணத்தில் போராட்டத்தை மீண்டும் துவக்கினர். மையமாக அமைந்த பீமா ஆற்றங்கரையின் மீதான பர்ஹான்பூரில் படைவீடு ஒன்றினை 1698ஆம் ஆண்டில் அவுரங்கசீப் ஏற்படுத்திக்கொண்டு புதிய தாக்குதலுக்கு ஆன திட்டங்களைத் தீட்டினர். பேரரசப் படைத் தலைவர்களுக்கிடையிருந்த பொருமை காரணமாகப் பேராபத்து சூழ்ந்திருந்த காரணத்தால் எண்பத்தொரு வயதை எட்டியிருந்த அவுரங்கசீப்பே காவல் மிகுந்த மராத்தியக் கோட்டைகளுக்கு எதிராகப் பேரரசப் படையின் பிரிவு ஒன்றிற்குத் தலைமைதாங்கிச் செல்லத் தீர்மானித்தார். அதேசமயத்தில் ஸுல்பிகார்கான் தலைமையில் இருந்த படை பாதுகாப்பு இன்றி இருந்த பகுதிகளில் ராஜாராம், தானிஜாது போன்ற மராத்தியத் தலைவர்களுக்கு எதிராகப் போரிடவேண்டுமென்று பணித்தார். முற்றுகையிட வேண்டிய முதல் முக்கிய நகரம் சதாராவாகும். அதனைக் கைப்பற்றுவதற்கு ஓராண்டுக் காலம் பிடித்தது. முற்றுகையிட்டுக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாகச் சில கண்ணிவெடிகள் வெடித்த காரணத்தால் முகலாயப் படையில் பெருத்த சேதம் ஏற்பட்டது. 1700ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவுரங்கசீப்பின் நிபந்தனைகளுக்கு சதாரா பணிந்தது. அதற்கு ஒருமாதம் முன்னர்தான் ராஜாராம் இறந்துபட்டார். ஆனல், அவரது தீரமிக்க மனைவியான தாராபாய் தலைமைப் பதவியை ஏற்றுப் போராட்டத்தைத் தொடர்ந்தார். மராத்தியருடைய புறக்காவல் நிலையங்களாக விளங்கிய சில கோட்டைகளைக் கைப்பற்றுவதில் சிறிதுகாலத்திற்குப் பேரரசப்படையினர் வெற்றி பெற்றபோதிலும் நெருங்குதற்கு அரிதாய் வலிமைபெற்று விளங்கிய மராத்தியக் கோட்டைகள் ஏராளமாக இருந்தன. மேலும் ஒருநாளில் முகலாயர் வெற்றி பெற்றதை மறுநாளே மராத்தியர் கைப்பற்றிக்கொண்டனர். அதனல் போராட்டம் முடிவின்றி நீண்டுவந்தது, பஞ்சம், பிணி, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றினல் பேரரசப் படைகள் பெருந்துன்பத்திற்கு உள்ளாயின. 'இயற்கைச் சக்திகளே முகலாயருக்கெதிராகத் திரண்டு எழுந்ததுபோலத் தோன்றியது.' முகலாயப்

[1] Elliot and Dowson, vol. vii, பக். 347.

படையினர் பாசறை அமைத்திருந்த பீமா ஆற்றங்கரையில் வெள்ளம் வந்ததைப்பற்றி காஃபிகான் பின்வருமாறு குறித்துள்ளார்: 'உலகமே உறங்கிக்கொண்டிருந்த நள்ளிரவில் ஆற்றுநீர் கரைபுரண்டு ஓடத்துவங்கியது. பத்தாயிரம் அல்லது பன்னிரண்டாயிரம் வீரர்களை வெள்ளம் அடித்துச்சென்றது. அரசர், இளவரசர்கள், அமீர்கள் ஆகியோருக்குச் சொந்தமானவற்றையும் வெள்ளம் கொண்டுசென்றது. எண்ணிறந்த குதிரைகளும் மாடுகளும் அடித்துச்செல்லப்பெற்றன. ஏராளமான கூடாரங்களும் தட்டுமுட்டுச் சாமான்களும் வெள்ளத்தில் மிதந்து சென்றன. முகலாயப் படையில் பெரும்பீதி நிலவியது. பேரரசர் தமது கைப்படத் துதிப்பாடல்களை எழுதி வெள்ளம் தணியும்பொருட்டு அவற்றினை ஆற்றுநீரில் எறியுமாறு பணித்தார்.'[1] ஆயின் அவரது பேரரசினை மூழ்கச்செய்ய இறைவனே வகுத்திருந்ததும் அவுரங்கசீப்பே கிளப்பிவிட்ட மனித வெள்ளத்திற்கு எதிராகப் பேரரசப் படைகள் பயனற்றுப்போனதைப்போலவே அவரது துதிப்பாடல்கள் இயற்கையின் போக்கினைத் தடுத்துநிறுத்தும் சக்தி பெற்றிருக்கவில்லை.

### அவுரங்கசீப்பின் மறைவு

இங்ஙனம் பல தோல்விகளுக்கிடையே 1705ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அவுரங்கசீப் கடுமையான நோய்க்கு உட்பட்டார். அதனால் அமைச்சரின் ஆலோசனைக்கிணங்க அவர் அகமது நகருக்குப் பின்வாங்கிச் சென்றார். வெற்றிப் பெருமிதத்தோடு தாக்கிய சிறுசிறு மராத்தியப் படைகள் தொடர்ந்து வர நிதானமாகவும் மிகுந்த சிரமத்துடன் 1706ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதியன்று அவர் அகமதுநகரை அடைந்தார். இங்ஙனம் 'வெற்றியும் புகழும் பெறும் நம்பிக்கையுடன் இருபத்திநான்கு ஆண்டுகளுக்குப் பாசறை அமைத்துக்கொண்டிருந்த அகமது நகருக்கு இறுதி முறையாகத் திரும்பிவந்தார்.'[2] அங்கே அவர் ஓராண்டுக்காலம் தங்கியிருந்தார். உள்ளமும் உடலும் தளர்ந்த தொண்ணூறு வயது வயோதிகரான அவுரங்கசீபின் ஆன்மா 1707ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 20ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று சாந்தியடைந்தது. வலிமை மிக்க முகலாயப் பேரரசர்களில் இறுதியானவர் என்பதற்கு ஏற்ற முறையில் அவருடைய முடிவு பெரும் புயலின் உச்ச கட்டத்தில் வந்து சேர்ந்தது. அவரது உடலத்தை தௌலதாபாத்திற்குக் கொண்டு சென்று அங்கே புகழ்பெற்ற முகம்மதிய சாதுவான பர்ஹானுதீனின் சமாதிக்கு அருகே நல்லடக்கம் செய்தனர்.

[1] Elliot and Dowson, vol. vii, பக். 361.
[2] Vincent Smith, 'History of India', பக். 446.

## அவுரங்கசீப் குணாதிசயங்கள்

படாடோபமற்ற பேரரசர், எளிமையும் பக்தியும் நிறைந்த வாழ்க்கையும் மேற்கொண்டவர். அதேநிலையில் அவர் உயிர் நீத்தார். அவர் இறப்பதற்கு முன் தமது சவ அடக்கத்திற்கு ஆடம்பரமோ பகட்டோ கூடாதென்றும், தமது சொந்த சம்பாத்தியத்தில் சேர்த்த பொருளிலிருந்தே அடக்கம் செய்வதற்கான செலவை மேற்கொள்ள வேண்டுமென்றும் ஆணையிட்டார். அவற்றிற்கிணங்க அவர் தைத்த குல்லாய்களை விற்றுவந்த ஐந்து ரூபாயைக் கொண்டே அவரது சவப்பெட்டியைச் சாதாரண வெள்ளைக் கித்தான் துணிகொண்டு மூடினர். குரான் பிரதிகளை எழுதியதால் கிடைத்த 300 ரூபாய்களையும் ஏழை எளியவர்களுக்கு அளிக்கவேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டிருந்தார். தனிப்பட்ட சொந்த வாழ்க்கைபற்றி அவுரங்கசீப் கொண்டிருந்த கொள்கை மிக உன்னதமானது. உணவு, உடை, பானம் ஆகியவற்றில் தடைவிதிக்கப்பெற்று இருந்தவற்றை அவர் பயன்படுத்தவில்லையென்பதை நமக்குக் கிடைக்கும் குறிப்புகளெல்லாம் வலியுறுத்துகின்றன. தீவிர வைதீக முஸ்லிமின் லட்சிய வாழ்வை மேற்கொள்ளவேண்டுமென்று அவர் முயன்றுவந்தார். அவர் பேரரசாகத் தோல்வியுற்றதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும். அக்பர் புகுத்திய மாற்றங்களினால் முகம்மதிய வெற்றியாளர்களுக்கும் மன்னர்களுக்கும் சமமான நிலையை அரசியலிலும் சமுதாயத்திலும் இந்துக்கள் பெறமுடிந்தது என அவுரங்கசீப் நம்பினார். அத்தகைய போக்கு விரும்பத்தக்கதும் அல்ல முறையானதும் அல்ல என அவர் மனமார நம்பினார். அதனால் அவர் இந்நிலையை மாற்றியமைக்க உறுதிபூண்டார். அதற்கிணங்க அவர் தமது ஆட்சியின் தொடக்கத்திலேயே இந்துக்களுக்கு எதிரான கொள்கையை மேற்கொண்டார். அதன் விளைவாக இந்துக்களின் மீது ஜெஸியா வரியை மீட்டார். முகம்மதிய வணிகர்கள் அளித்ததைப் போல இரண்டுமடங்கு சுங்கவரியை இந்து வணிகர்களின் பொருள்களின்மீது விதித்தார். இராஜபுத்திரர்களைத் தவிர வேறு இந்துக்கள் எவரும் பல்லக்கு, யானை, நல்ல ஜாதிக் குதிரைகள்மீது ஏறிச்செல்லக்கூடாது எனப் பணித்தார். இந்துக்களின் கோயில்களும் அவற்றில் இருந்த கடவுட் படிமங்களும் சிதைக்கப்பெற்றன. பேரரசின் ஆணைகளின்பேரில் இந்துக்களின் பள்ளிகளும் கலாசாலைகளும் மூடப்பெற்றன.[1] இத்தகைய விவேகமற்ற கொள்கையின் விளைவு என்ன என்பதை அவுரங்கசீப்பே

[1] பல நாட்டு வரலாறுகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும் அறிஞர்கள் இத்தகைய கொள்கை இந்தியாவில் மட்டும் இல்லையென்பதை நினைவுகூர்தல் நல்லது. இந்துக்களுக்கு எதிராகச் சமய ஒறுப்புக்கொள்கையை அவுரங்கசீப் கடைப்பிடிக்கத் தொடங்கிய அதேசமயத்தில் 1678ஆம் ஆண்டு சோதனைச்சட்டத்துடன் முடிவடைந்த பல

எதிர்பார்த்திருக்க முடியும். இந்துக் குடியினர் தாங்கமுடியாத தொல்லைகளுக்குள்ளாயினர். இந்துக்களின் அரசியல் சக்தி அவுரங்கசீப்பின் வாழ்நாளிலேயே உயிர்ப்பித்து எழுவதை அவரால் காணமுடிந்தபோதிலும் அதனை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சத்நாமியர், பரத்பூர், ஆக்ரா ஆகியவற்றைச் சார்ந்த ஜாத்துகள் ஆகியோர்களின் புரட்சிகளை வேண்டுமானால் தலத்தில் தோன்றிய கலகங்கள் எனக் கொள்ளலாம். பஞ்சாபில் குரு கோவிந்த் சிங்கும் தக்கணத்தில் சிவாஜியும் மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்து அரசியல் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சி எனல்வேண்டும். அவுரங்கசீப் தமது வாழ்வின் இறுதிக்காலத்தில்தான் ஐம்பது ஆண்டுக்கால ஆட்சி பெருந்தோல்வியென்பதை உணர்ந்தார். 'எனக்குப் பின்னர் அழிவுதான்' (Az-ma-ast hamah fasad baqi) என வருத்தத்துடன் அவுரங்கசீப் தெரிவித்தார் எனக் கூறப்பெறுகின்றது. மறுவுலகில் தமது தலைவிதி எப்படியமையுமோ என்பதுபற்றியும் பேரரசர் பெருங் கவலைகொண்டிருந்தார். தமது புதல்வர்களுக்கு எழுதிய கடிதங்களில் வயோதிகப்பேரரசர் மரணப்படுக்கையில் இருந்துகொண்டு தமது செயல்கள் சிலவற்றைப்பற்றி கவலைகொண்டு துன்பம் நிறைந்த மொழியில் தமது உள்ளத்தின் மடையைத் திறந்து எழுதியுள்ளார். இளவரசர் ஆசத்திற்குப் பின்வருமாறு எழுதினர்: 'நலம் உன்னைச் சேர்வதாக. என் மனம் உன் அருகிலேயே உள்ளது; எனக்கு வயோதிகம் வந்துவிட்டது. மெலிவு என்னைப் பாதிக்கின்றது. வலிமை என்னைவிட்டுப் பிரிந்துவிட்டது. நான் இவ்வுலகில் அன்னியனகப் பிறந்தேன். அன்னியனகவே பிரிந்து செல்லுகிறேன். என்னைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் யார்? எதற்காக வந்துள்ளேன்? என்பவைபற்றியும் அறியேன். அதிகாரத்தில் கழிந்த கணப்பொழுது துயரத்தையே விட்டுச் சென்றுள்ளது. பேரரசின் பாதுகாவலனகவோ காப்பாளனகவோ நான் இல்லை. விலைமதிக்க முடியாத காலம் வீணே கழிந்துள்ளது. எனக்குள்ளேயே ஆதரவாளனைப் (மனசாட்சியை) பெற்றிருந்தேன். ஆயினும் அதனுடையபேரொளி எனது மங்கிய கண்களுக்குப் புலப்படவில்லை. வாழ்க்கை நிரந்தரமானது அன்று. பிரிந்து செல்லும் மூச்சுக்காற்றிற்கு அடையாளமாக எதுவும் இருப்பதில்லை. எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கைகளெல்லாம் நாசமாகியுள்ளன. காய்ச்சல் விட்டிருக்கின்றது. ஆயினும் எலும்பும் தோலும் தவிர என்னிடம் எஞ்சியுள்ளது எதுவுமில்லை. எனது மகன் (காம்பக்ஷ்) பீஜபூருக்குச் சென்றுள்ளபோதிலும்

---

சமய ஒறுப்புச் சட்டங்களை இரண்டாம் சார்லஸின் அமைச்சர்கள் நிறைவேற்றினர். அதேபோன்று படாடோபத்தில் முகலாய மன்னரைப் போலத் திகழ்ந்த பதினன்காம் லூயிமன்னர் சில ஆண்டுகட்குப் பின்னர் குடிமக்களில் யூக்கோக்களாய் இருந்தவரை ஒதுக்கும் கொள்கையை உச்சகட்டத்திற்குக் கொண்டுவந்தார்.

அவன் என் அருகிலேயே இருக்கிறன். எனதருமை மகனே! நீயோ இன்னும் அருகில் இருக்கின்றய். ஷாஆலம் வெகு தொலைவிலுள் ளான். ஆயினும், ஆண்டவர் அருளால் எனது பேரன் (அஸீ முஷான்) இந்தியாவிற்கு அருகே வந்துள்ளான். நம்பிக்கையிழந்து அச்சம்கொண்டுள்ள எனது ஆதரவாளர்களும் பாசறையில் உள்ள வர்களும் என்னைப்போலவே துயரத்துடன் இருக்கின்றனர். பாதரசத்தைப் போல நிலையின்றி தவித்துக்கொண்டுள்ளனர் தலைவரிடமிருந்து பிரிக்கப்பெற்ற அவர்கள் தலைவர் ஒருவர் இருக்கின்றரா இல்லையா என்ற ஐயம் கொண் டுள்ளனர். இவ்வுலகிற்கு நான் எதையும் கொண்டுவரவில்லை. மனிதனின் குறைகளைத்தவிர வேறு எதையும் நான் கொண்டு செல்லப்போவதில்லை. எனது ஆன்மாவின் விடுதலைபற்றி எனக்கு அச்சமாக இருக்கிறது. எனக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையின் அளவுபற்றி நடுக்கமாக உள்ளது. ஆண்டவரின் வள்ளன்மையிலும் வற்றுத கருணையிலும் எனக்கு முழு நம்பிக்கை உண்டு; எனினும், (எனது செயல்களைப் பொறுத்த) அச்சம் என்னைவிட்டு அகலாது நிற்கின்றது. எது வந்தாலும் வரட்டும். இறுதிக் கப்பலை அலைகளின் மேல் மிதக்கவிட்டுவிட்டேன். ஆண்டவர் எனது பாசறையைக் காப்பார் எனினும், எனது புதல்வர்களின் முயற்சி இன்றியமையாது வேண்டற்பாலதொன்றும். என்னல் காணமுடியாது இருக்கும். ஆனல், எனது பேரனுக்கு (பிதார்பக்ஷ்) எனது இறுதி வாழ்த்து களைத் தெரிவி. அவனைக் காணும் விருப்பம் என் நெஞ்சைப் பிளக் கின்றது. பேகம் (அவுரங்கசீப்பின் மகள்) கவலையுற்று இருப்ப தாகத் தெரிகின்றது. ஆனல், ஆண்டவர்தான் மனங்களையெல்லாம் அறிந்த நடுவராக இருக்கமுடியும். பெண்களின் மூடத்தனமான எண்ணங்களினல் ஏமாற்றத்தைத் தவிர வேறெந்த நன்மையும் ஏற்படாது. விடைபெறுகிறேன். விடைபெறுகிறேன்.'

அவர் தமது ஆசை மகனுகிய இளவரசர் காம்பக்ஷிற்குப் பின் வருமாறு எழுதினர்: 'என் ஆருயிர் மைந்தனே, நான் அதிகா ரத்தின் உச்சியில் இருந்தபோது ஆண்டவரின் அனுமதியோடு உனக்குச் சில யோசனைகளைக் கூறினேன். உன்னுடன் துன்பங் களை அனுபவித்தேன். ஆயினும், ஆண்டவரின் திருவுளம் இல்லை போலும். அவற்றிற்கு நீ செவி சாய்க்கவில்லை. இப்போது நான் அன்னியனுகப் பிரிந்து போகின்றேன். எனது பயனற்ற வாழ் வைக் கண்டு வேதனைப்படுகின்றேன். அதனல் வரும் நன்மை யென்ன? பாபங்கள் குணக் குறைகள் ஆகியவற்றின் விளைவாக வந்த சுமையை என்னுடன் கொண்டுபோகிறேன். நான் இங்குத் தனியாக வந்தேன். தனியாகவே செல்கிறேன். இந்த வாழ்க் கைப் பயணத்தின் தலைவன் என்னைக் கைவிட்டுவிட்டான். பன்னி

ரண்டு நாட்களாக என்னை வாட்டிவந்த காய்ச்சல் நீங்கிவிட்டது. நான் பார்க்குமிடமெல்லாம் ஆண்டவரையே காணுகின்றேன். எனது ஆதரவாளர்களைப் பற்றியும் சுற்றத்தார்பற்றியும் நான் அதிக அச்சம் கொண்டுள்ளேன். அந்தோ! என்னையே நான் அறிந்திருக்கவில்லை. மெலிவினால் எனது முதுகு வளைந்துள்ளது. எனது பாதங்கள் அசைய மறுக்கின்றன. எழும்பும் மூச்சு சென்று விட்டது. அது நம்பிக்கையெனும் நல்லாளைக்கூடப் பின்னே விட்டுச்செல்லவில்லை. நான் ஏராளமான குற்றங்களைப் புரிந்துள்ளேன். எவ்விதத் தண்டனைகள் கிடைக்குமென்பதை யானறியேன். பாசறையைக் கடவுள் காப்பாற்றுவார் என்றபோதிலும் உண்மைச் சமயத்தவரும் எனது மக்களும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நான் உயிருடன் வாழ்ந்த போது எவ்வித அக்கறையும் காட்டவில்லை. நான் இப்போது போகிறேன். அதனுடைய விளைவு என்ன என்பதை ஊகித்துக்கொள்ளலாம். மக்களைக் காக்கும் பொறுப்பினை ஆண்டவர் எனது புதல்வரிடம் ஒப்படைத்துள்ளார். அஸீமுஷான் அருகிலிருக்கிறான். உண்மைச் சமயத்தவர் யாரும் கொல்லப் படாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். இல்லையானால் அவர்களுடைய துயரங்கள் என் தலையில்தான் விடியும். நான் போவதால் உன்னையும், உனது தாயையும், மகளையும் ஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்கிறேன். மரணத்தின் துன்பங்கள் விரைந்து வருகின்றன. இன்னும் பகதூர்ஷா இருந்த இடத்திலேயே இருக்கின்றான். அவனது மகன்மட்டும் இந்துஸ்தானத்திற்கு அருகில் வந்துள்ளான். பிதார்பக்ஷ் குஜராத்தில் உள்ளான். இதுவரையில் துயருறாத ஹயத் உன்னிஸ்ஸா இப்போது துன்பத்தில் ஆழ்ந்துள்ளாள். பேகத்திற்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக்கொள். உனது தாய் எனது நோயில் பங்கு பெற்றிருக்கிறாள். மரணத்திலும் என்னுடன் வரவிரும்புகிறாள். ஆனால், ஒவ்வொன்றிற்கும் வேளை வரவேண்டும்.'[1] இக் கடிதங்கள் துன்பம் தோய்ந்தவை. அவரங்கசீப்பின் செயல்களையும் பண்புகளையும் கடுமையாகத் தாக்குபவரும் இத்தகைய புலம்பல்களில் உள்ள துயரத்தை உணர்ந்துகொள்ள முடியும். அதனோடு மரணப் படுக்கையில் தனித்து நின்ற அந்த வயோதிகன்மீது சிறிதளவாவது இரக்கம் கொள்ளாமல் இருக்கமுடியாது.

### அவுரங்கசீப்பிற்குப் பின்

அவுரங்கசீப் இறந்த பிறகு இந்தியாவில் முகலாயரது ஆட்சி ஒரு பயனுள்ள சக்தியாக விளங்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

[1] Vincent Smith, 'History of India', பக். 448.

அவரது வழித்தோன்றல்களில் எவரும் திறமைசாலியாக இல்லை. அப்போது முரண்பட்டு நிற்கும் போட்டிக் கும்பல்களின் போர்க் களமாகவே தில்லி காணப்பெற்றது. பல பொம்மை அரசர்கள் தொடர்ந்து தில்லி அரியணையில் அமர்ந்திருந்தனர். அவர்களது வலிமையற்ற ஆட்சியில் பேரரசு விரைவாக வீழத்தொடங்கியது. செயலிழந்த சவத்தை வட்டமிடும் கழுகுகளைப்போலப் பேராசை கொண்ட பகைவர்கள் முகலாயப் பேரரசைச் சூழ்ந்துகொண்டனர். வடக்கிலிருந்து பாரசீகரான நாதர்ஷா முதலில் வந்தார். அவருக்குப் பின் ஆப்கானியர் வந்தனர். சீக்கியர்களோவெனின், முகலாயரது மேலாதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டுப் பஞ்சாபில் உரிமைபெற்ற ஆட்சியை ஏற்படுத்தினர். தில்லி அரியணையின்மீது மராத்தியர் எவரும் அமர்தல்கூடாது என்பதை முடிவு செய்த பானிப்பட்டுச் சண்டை (1761) நடக்கும் வரையில் மராத்தியக் கூட்டரசின் படைகள் தெற்கிலிருந்து தடையின்றித் தில்லியை நோக்கி வந்தவண்ணமிருந்தன. இறுதியில் பிற பகைவர்களை யெல்லாம் வீழ்த்தும் வாய்ப்புப் பெற்றிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகள் கிழக்கேயிருந்து தாக்கத் தொடங்கின. பரிதாபத்திற்குரிய வழித்தோன்றலான ஷா ஆலம் அவுரங்கசீப் இறந்த நூறு ஆண்டுகளுக்குள் பிரிட்டிஷாரின் பாதுகாப்பிற்குட்பட வேண்டிவந்தது. அவர் தைமூர் குலத்தைச் சார்ந்தவர் என்ற முறையில் 1857ஆம் ஆண்டுவரையில் தில்லி அரியணையில் வீற்றிருந்தபோதிலும், இந்தியாவின் புதிய ஆட்சியாளரிடம் உபகாரச் சம்பளம் பெறும் அவலநிலையில்தான் வாழ்ந்துவந்தார்.

# கலைச்சொல் அகராதி

(தமிழ்—ஆங்கிலம்)

அ

| | | |
|---|---|---|
| அரசகாப்பாளர் | — | Regent |
| அரசகுலம் | — | Dynasty |
| அரச சின்னம் | — | Insignia |
| அரசத்துரோகம் | — | Treason |
| அரசப் பகர ஆள் | — | Viceroy |
| அரசு எய்தல் | — | Accession |

ஆ

| | | |
|---|---|---|
| ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி | — | English East India Company |
| ஆட்சியாண்டு | — | Regnal year |
| ஆட்சி முறை, பொதுத்துறை | — | Administration, civil |
| ஆதிபத்தியம் | — | Overlordship |
| ஆளுநர் | — | Governor |
| ஆளுமை | — | Personality |

இ

| | | |
|---|---|---|
| இடைப்படு நாடு | — | Buffer state |
| இறைமை | — | Sovereignty |

உ

| | | |
|---|---|---|
| உட்குடி | — | Vassal |
| உடன்கட்டையேறுதல் | — | Sati |
| உடன்பிறப்புக் கொலை | — | Fratricide |
| உலேமா | — | Ulema |
| உருவ வழிபாடு | — | Idolatry |
| உவ்ளகம் | — | Harem |
| உறுப்பமைதி இயல் | — | Physiognomy |

ஒ

| | | |
|---|---|---|
| ஒற்று அறிதல் | — | Espionage |

க

கல்லறை — Tomb
கால இயல் — Chronology
காலகட்டம் — Epoch
காலவழிச் செய்திக் கோவை — Chronicle
காவற்படை — Garrison
குடிமரபாக — Hereditary
குத்பா — Kutba
கூலிப்படை — Mercenary army
கோட்டையரண் — Fortress
கோனாட்சி — Monarchy

ச

சமகாலத்தவர் — Contemporary
சமய ஒறுப்பு — Persecution
சமயம் — Creed
சமயம் சார்ந்த அரசு — Theocratic state
சமயப் பொறை — Toleration
சர்வாதிகார ஆட்சி — Autocracy

த

தலைமை அதிகாரம் — Paramountcy
தலைவரி — Poll tax
தற்காலிகப் போர்நிறுத்தம் — Truce
திறை — Tribute
தின் இலாஹி, தெய்விக சமயம் — Din I lahi

ந

நாட்டினம் — Nation
நிலமானிய முறை — Feudalism
நேசநாடுகள் — Allies

ப

பக்தி நெறி — Bhakthi cult
பட்டத்து இளவரசர் — Heir Apparent
படைச்சாதனத் துறை — Commissariat
பணயம் — Hostage
பர்காணு — Pargana

பழைமைப் பண்பு — Orthodox
பாதுஷா — Padsha
புரட்சிக் கலகம் — Rebellion
புறச்சமயம் — Heresy
பேச்சுவார்த்தை — Negotiation
பேரரசர் — Emperor
பேரரசக் கட்டளை — Firman; Decree
பொது ஆண்டு — Era

ம

மசூதி — Mosque
மரண தண்டனை — Capital punishment
மரபுரிமை — Heritage
மறுமலர்ச்சி — Renaissance
மன்சப்தார் — Mansabdar
முடிசூட்டு விழா — Coronation
முடியாட்சி — Monarchy
மூத்த மகன் பட்டத்துரிமை — Primogeniture
மேலாதிக்கம் — Ascendency

வ

வலுத்தாக்குதல் — Aggression
வஸீர் — Vazir
வாரிசுரிமைப் போர் — War of succession
வாழ்க்கை — Career
வெல்திறம் — Diplomacy

ஜ

ஜாகிர் — Jagir
ஜெஸியா வரி — Jezya

# கலைச்சொல் அகராதி

## (ஆங்கிலம்-தமிழ்)

### A

Accession — அரசு எய்தல்
Administration, civil — ஆட்சிமுறை, பொதுத்துறை
Aggression — வலுத்தாக்குதல்
Allies — நேசநாடுகள்
Ascendancy — மேலாதிக்கம்
Astrology — குறிநூல்
Autocracy — சர்வாதிகார ஆட்சி

### B

Bhakthi cult — பக்தி நெறி
Buffer state — இடைப்படு நாடு

### C

Capital punishment — மரண தண்டனை
Career — வாழ்க்கை
Chronicle — காலவழிச் செய்திக் கோவை
Chronology — கால இயல்
Commissariat — படைச்சாதனத் துறை
Contemporary — சமகாலத்தவர்
Coronation — முடிசூட்டு விழா
Creed — சமயம்

### D

Decrees — பேரரசக் கட்டளைகள்
Din I lahi — தின் இலாஹி ; தெய்விகச் சமயம்
Diplomacy — வெல்திறம்
Dynasty — அரசகுலம்

### E

Emperor — பேரரசர்
English East India Company — ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி
Epoch — காலகட்டம், சகாப்தம்
Era — பொது ஆண்டு
Espionage — ஒற்று அறிதல்

## F

Firman — பேரரச கட்டளை
Feudalism — நிலமானிய முறை
Fortress — கோட்டையரண்
Fratricide — உடன்பிறப்புக் கொலை

## G

Garrison — காவற்படை
Governor — ஆளுநர்

## H

Harem — உவளகம்
Heir apparent — பட்டத்து இளவரசர்
Heresy — புறச்சமயம்
Heritage — மரபுரிமை
Hostage — பணயம் ; ஈட்டுப் பொருள்
Heriditary — குடிமரபாக

## I

Insignia — அரச சின்னம்
Idolatry — உருவ வழிபாடு

## J

Jagir — ஜாகீர்
Jazia — ஜெஸியா வரி

## K

Kutba — குத்பா

## M

Mansabdar — மன்சப்தார்
Memoirs — நினைவுக் குறிப்புகள்
Mercenary army — கூலிப்படை
Monarchy — கோனாட்சி ; முடியாட்சி
Mosque — மசூதி

## N

Nation — நாட்டினம்
Negotiation — பேச்சுவார்த்தை

## O

Orthodox — பழைமைப் பண்பு
Overlordship — ஆதிபத்தியம்

## P

Padsha — பாதுஷா
Paramountcy — தலைமை அதிகாரம்
Pargana — பர்காணு
Persecution — சமய ஒறுப்பு
Personality — ஆளுமை
Physiognomy — உறுப்பமைதி இயல்
Pilgrim Tax — யாத்திரிகர் வரி; புண்ணியச் செலவு வரி
Polltax — தலை வரி
Primogeniture — மூத்த மகன் பட்டத்துரிமை

## R

Rebellion — புரட்சிக் கலகம்
Regent — அரசகாப்பாளர்
Regnal year — ஆட்சியாண்டு
Ranaissanee — மறுமலர்ச்சி

## S

Sati — சதி; உடன்கட்டையேறுதல்
Sovereignty — இறைமை

## T

Theocratic state — சமயம் சார்ந்த அரசு
Toleration — சமயப் பொறை
Tomb — கல்லறை
Treason — அரசத்துரோகம்
Tribute — திறை
Truce — தற்காலிகப் போர்நிறுத்தம்

## U

Ulema — உலேமா

## V

Vassal — உட்குடி
Vazir — வஸீர்; தலைமை அமைச்சர்
Viceroy — அரசப் பகர ஆள்

## W

War of succession — வாரிசுரிமைப் போர்

# பொருட்குறிப்பு அகராதி


அ

அக்பர், 15
பிறப்பு, 24
ஆளுநராக நியமனம், 26
இந்தியாவின் பேரரசர் என அறிவிப்பு, 28
ஹெமுவுடன் சண்டை, 29,31
அக்பரும் பைராம்கானும், 31, 35
பேரரசு கொள்கை, 35
திருமணமும் இராஜபுத்திரருடன் கூட்டும், 38
உயர்தனி அதிகாரத்தைக் கைப்பற்றுதல், 39
வெற்றிகள், 40, 49
அக்பரும் ரான்தம்பூரும், 44
அக்பரும் ராணு பிரதாப் சிங்கும், 46
சூரத்தையும் குஜராத்தையும் கைப்பற்றுதல், 48
அக்பரும் இராஜபுத்திரரும், 49, 52
சீர்திருத்தங்கள் முதலியன, 52
சமயக் கருத்துகள், 53, 56
அக்பரும் தக்கணமும், 59, 60
அக்பரும் இளவரசர் சலீமும், 62
மறைவு, 63
குணநலன்கள், 64, 99
அக்பரும் ஆப்கானியரும், 137
அக்பர், இளவரசர், 151, 152, 178
அக்மல்கான், 138
அக்வாவிவா, 58
அகமது நகர், 60, 77, 99, 102
அசஃப்கான், 72, 76, 81, 87, 88
அடிமை முறை, 93
அதில்ஷா, 101, 102, 163
அப்சல்கானின் கொலை, 163
அப்துர் ரஹீம், 35, 60, 77, 79
அப்துல் ஹமீது லஹாரி, 90, 92, 94, 102
அபுல் ஃபாசல் (எடுத்துக் கையாண்டது), 62, 89
அர்ஜுன், ஐந்தாம் குரு, 72,155
அரக்கான் மன்னர், 136
அலாவுதீன் கில்ஜி, 50, 51, 59
அலிகுலிகான், 37, 41
அலிமர்தன்கான், 97
அவுரங்கசீப், 3, 80, 81, 86, 95, 98
தக்கணத்தில், 104-108
அரசுரிமைப் போட்டி, 107, 114
முராதைக் கொலை செய்தல், 114
தாராவைத் துரத்திச்செல்லல், 114-116
அவுரங்கசீபும் ஷுஜாவும், 117
பேரரசராகப் பட்டமேற்றல், 125
அவுரங்கசீபும் அயல்நாட்டுத் தூதுவர்களும், 128
அவுரங்கசீபும் அஸ்ஸாம் படையெடுப்புகளும், 130, 136
அவுரங்கசீபும் ஆப்கானியரும், 136, 141
சமயக் கொள்கை, 141, 147
அவுரங்கசீபும் சத்நாமியரும், 147, 148
அவுரங்கசீபும் இராஜபுத்திரரும், 148, 150
அவுரங்கசீபும் இளவரசர் அக்பரின் புரட்சியும், 151, 152
அவுரங்கசீபும் சிவாஜியும், 155, 157
அவுரங்கசீபும் தக்கணமும், 177
பீஜபூரையும் கோல்கொண்டாவையும் அடக்குதல், 179, 182

இறுதிப் போராட்டம், 185, 188
மறைவு, 188
குணாதிசயங்கள், 189, 192
அஜித்சிங், 149, 153
அஸ்காரி, 16, 17, 25, 26
அஸ்ஸாம், 130. 132
ஆஹோம்கள், 131

ஆ

ஆக்ரா, 9, 42, 64, 88, 90, 111, 125
ஆதம்கான், 32, 35, 39
ஆதிகிரந்தம், 154, 155
ஆஃப்கானியர், 13
தோல்வி, 14
ஹெமுவின் தலைமையில், 29, 30
கான் ஜஹானின் தலைமையில், 89, 91
போர்கள், 136, 140, 193
ஆஸம், இளவரசர், 150,178,190

இ

இக்பால் நாமா, 71,74,77,80,82
இங்கிலாந்தும் முகலாயர்களும், 46, 83
இசை, அவுரங்கசீப் தடை விதித்தல், 142
இந்துக்கள், 53, 54-58, 94, 125, 131
எதிரான கொள்கை, 146-148, 190
இப்ரஹீம் மிர்ஸா, 48
இப்ரஹீம் சூர், 29
இப்ரஹீம் லோடி, 5,6,7,8
இஸ்லாம், அவுரங்கசீபின் ஆதரவு, 141-146

உ

உசேன் பெக், 71
உதயசிங், 43-44

ஐ

ஐரோப்பாவும் முகலாயரும், 82-85

க

கக்கர்கள், 5
ஷெர்ஷாவின் பாதுகாப்பைப் பெறுதல், 22
கலூ ஷா, 103
கறீம்சான், 93, 94
காங்ராவைக் கைப்பற்றுதல், 78
காண்டஹார், 25, 96-98
காண்வா சண்டை, 11
காஸிம்கான், 1-10
காம் பக்ஷ், 190-191
கான் கானன், 60, 77-78, 100, 132
கியாஸ்பெக், 73
கிழக்கிந்தியக் கம்பெனி, 83, 193
கிறித்தவ சமயம், 58
குத்பா, 9, 78, 87, 93, 103, 110, 126, 132
குத்புதீன், 74
குத்புல்முல்க், 101, 102, 105
குர்ரம், இளவரசர், 72, 76, 77
குருநானக், 2, 154
குருமார்கள், 72, 154-155
குஜராத், 17, 19, 92
குஷ்ரு, இளவரசர், 63, 69, 81
கலகம் செய்தல், சிறைப்படல், 70-72
மறைவு, 72
கூச் பீஹார், 130
கேசவராய் கோயில் அழிக்கப்படுதல், 144
கேம்ரான், 16, 20-22, 25, 26
கோல்கொண்டா, 60, 101-104, 157, 180-182

ச

சத்நாமியர் கலகம், 147, 190
சதி (உடன்கட்டையேறுதல்), 52, 59

சந்திரகுப்த மௌரியர், 1
சமணர்கள் (ஜைனர்கள்), 73
சாந்தா கோர்புரா, 186, 187
சாந்தேரி சண்டை, 13
சாம்பாஜி, 152, 173, 182, 183, 184
சிக்கந்தர் சூர், 26, 29, 31, 63
சிவாஜி, 155, 157
பிறப்பு, 157
இளமைப் பருவம், 159-161
வலுத்தாக்குதல் கொள்கை, 161-163
சிவாஜியும் அப்சல்கானும், 163-164
சிவாஜியும் செயிஷ்டகானும், 165-168
சூரத்தைத் தாக்குதல், 168, 172
அவுரங்கசீபிடம் பணிதல், 189
தப்பிச் செல்லுதல், 170
அரசாங்க அமைப்பு, 171-172
மன்னர் என்ற பட்டம், 172
மறைவும் குணநலன்களும், 173-174
சிவாஜியின் அரசாங்கம், 174-175
சிவாஜியும் படையும், 176
சீக்கியர், 2, 153-154
சுலைமான் ஷீக்கோ, 109-111, 115
தண்டனையும் மரணமும், 121-123
செங்கிஸ்கான், 3, 15
செஞ்சி, 173, 185
செயிஷ்டகான் : வங்காளத்தின் ஆளுநராக, 135
சைதன்யர், 2
சௌசா, 21

ட

டச்சுக்காரர்கள், 83

த

தக்கணம், 59-62, 77, 86-92, 98-106, 125, 135
தவார் பக்ஷ், 87
தாதாஜி கோண்டதேவ், 158
தார்டி பெக்கான், 29
தாராபாய், 187
தாராஷீக்கோ, 72, 80, 86, 98, 105
அரியணைப் போராட்டம், 105-108
அவுரங்கசீபினால் துரத்தப் படல், 112, 115
தோல்வியும் மரணதண்டனையும், 115-123
தானியா ஜாது, 186-187
தில்லி, 2, 5, 7, 10, 28, 30-33, 64, 97, 125, 184, 193
தில்லி சுல்தானியம், 2, 5
திலீர்கான், 134
தீன் இலாஹி, 56
துர்கதாஸ், 149, 151
தேஜ்பகதூர், 153
தைமூர், 3, 14
தோடர்மால், 23, 105
தௌலத்கான் லோடி, 5, 6, 7, 154

ந

நாதர்ஷா, 3, 193
நானக், குரு, 154
நிஜாம் உல்முல்க், 91, 99, 100
நூர்ஜஹான்; ஜஹாங்கீரை மணத்தல், 73
குணநலம், 75-76
நூர்ஜஹானும் மகபத்கானும், 80
நூர்ஜஹானும் ஷாரியரும், 86-87

ப

பக்தி இயக்கம், 2
பகதூர் ஷா, 17-19, 66, 153
பஞ்சங்கள், 92, 126, 127
படை, சிவாஜியின் தலைமையில், 176
பத்தானியர், 136

பதேகான், 99
பதேபூர் சிக்ரி, 47, 55
பாதுஷா நாமா, 89-90, 100, 102
பாபர், 1
இந்தியாவிற்கு வருதல், 3
ஆரம்பகாலப் படையெடுப்புகள், 3-7
இறுதிப் படையெழுச்சி, 7, 8
பானிப்பட்டில், 8
தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றுதல், 9
சமர்க்களத்தில் சங்ரம் சிங்கைச் சந்தித்தல், 11-13
சாந்தேரியைத்தாக்குதல், ஆப்கானியரை முறியடித்தல், 13
மறைவு, 14
பாபரும் ஷெர்ஷாவும், 18-19
பார்வஸ், இளவரசர், 71-72, 77, 81
பாரசீகம், 96,97, 124, 128, 141, 143
பானிப்பட் சண்டை, 8, 29-30, 193
பாஸ்பகதூர், 35, 36, 43
பிராமணர்கள், 143, 157
பீஜப்பூர், 60
ஷாஜஹானின் தாக்குதல், 101, 157, 160
பீஜபூரும் சிவாஜியும், 160-161
வீழ்ச்சி, 179-180
பெரிஷ்டா, 8
பைராம்கான், 24, 26
திருமணம், 31
காப்பாளராக, 31
வீழ்ச்சியும் கொலையும், 33-35

ம

மகபத்கான், 80-81, 89, 100, 139, 172
மராத்தியர், 2
வரலாறு, 155, 158
சிவாஜியின் தலைமையில், 160-176
அவுரங்கசீபுடன் போர், 125, 165-176
மாலிக் ஆம்பர், 77, 99
மாலிக் ஜவான்கான், 120, 121
மான்சிங், 51, 57, 62, 69
மாஹம் அனகா, 32, 33, 35, 36, 39
மிர்சா பெய்சிங்கர், 87
மீர்ஜும்லாவின் உயர்வு, 106
ஷூஜாவைத் துரத்துதல், 115-118
கூச் பீகாருக்கும் அஸ்ஸாமிற்கும் படை கொண்டுசெல்லல், 132, 134
முகலாய அரசவையின் அன்னியத் தூதுவர்கள், 128-129
முகலாயர்கள், 1-15
பாபருடன் முகலாயர் வருகை, 1, 8
பாபர் இறந்தபோது அவர்களின் நிலை, 15
ஷெர்ஷாவிடம் தோல்வி, 20
ஹூமாயூனின் தலைமையில் மீட்சி, 26
அக்பரின் தலைமையில், 28, 30, 35, 36
ஐரோப்பியருடன் தொடர்பு, 82-85
தக்கணப் படையெடுப்பு, 98-106
சீர்குலைவு, 123, 124, 125-128
முகலாயரும் அஹோம்களும், 131
முகலாயரும் ஆப்கானியரும், 136, 141
முகலாயரும் சிவாஜியும், 165, 166
அவுரங்கசீபின் தலைமையில் சீர்குலைவு, 183, 188
முகமது அதில்ஷா, 28, 101, 102, 103
முகம்மதியர்கள் : அக்பரின் கண்டிப்பு, 58
அவுரங்கசீப் அளித்த சலுகைகள், 143-144

முகமதுபின் துக்ளக், 1, 59
முகம்மது லோடி, 17
மும்தாஜ் மஹால், 86, 95-96
முல்லா முர்ஷித், 5
முராத் இளவரசர், 47, 60-62
  அரியணைப் போட்டி, 107-111
  அவுரங்கிசீபினால் கொலையுறல், 113
  முராதும் சிவாஜியும், 162
மூ ஆஸம் இளவரசர், 150, 171, 178
மெகஸ்தனிஸ், 1
மேவார் சண்டை, 76-77

வ

வரிகள், 127-128

ஜ

ஜஹாங்கீர் (சலீமையும் காண்க), 38
  அக்பருக்கு வாரிசாதல், 68
  அவரது கட்டளைகள், 69
  ஜஹாங்கீரும் குஷ்ருவின் புரட்சியும், 70
  நூர்ஜஹானை மணத்தல், 73
  மேவாருடன் போர், 76-77
  காங்ராவைக் கைப்பற்றுதல், 78
  எதிராகப் புரட்சிக் கலகங்கள், 79, 81
  மறைவு, 81
  ஜஹாங்கீரும் ஐரோப்பிய வல்லரசுகளும், 82-85
ஜாத்துகள், 104, 107
ஜீஜாபாய், 89
ஜுஜ்ஜார் சிங், 88, 89
ஜெய் சிங், 111, 118, 121, 168, 169-171
ஜெஸ்வந்த் சிங், 110, 118, 139, 148-149, 168-172
ஜெஸியா நீக்கப்பெறல், 40, 58
  அவுரங்கசீப் மீட்டல், 145, 153, 178, 189

ஸ

ஸுல்பிகார்கான், 185, 186

ஷ

ஷா ஆலம், 3, 191
ஷா தமாஸ்ப், 25
ஷாரியர், 86
  பேரரசர் என அறிவித்தல், 87
  வீழ்ச்சி, 88
ஷாஜஹான் (குர்ரத்தையும் காண்க), 76
  புரட்சி செய்தல், 79-80
  பேரரசராதல், 86-88
  மேலும் புரட்சி, 88-92
  ஹுக்ளியைக் கைப்பற்றுதல், 93-94
  இந்துக் கோயில்களை அழித்தல், 94-95
  காண்டஹாரைக் கைப்பற்றுதல், 96-98
  ஷாஜஹானும் தக்கண விவகாரமும், 98-106
  நோய்வாய்ப்படல், 108
  அவுரங்கசீபினால் சிறையிடப்பெறல், 123
  ஆட்சிபற்றிய சுருக்கம், 123
  ஷாஜஹானும் சிவாஜியும், 162
ஷாஜி, 57, 58
ஷாஷீநா, 86
  பேரரசரென அறிவிப்பு, 115-116
  வீழ்ச்சி, 117
ஷெர் ஆப்கன், 73
ஷெர்ஷா :
  ஆட்சிக்கு வருதல், 18-
  பீகாரின் மன்னராக ;
  ஷெர்ஷாவும் ஹுமாயூனும், 18-22

பஞ்சாபை வெல்லுதல், 23
சீர்திருத்தமும் மறைவும், 23
ஷேக் கலீல், 21
ஷேக் முபாரக், 55

ஹ

ஹக்கீம் மிர்ஸா, 29, 50, 52, 56
ஹமீது பேகம், 24, 32
ஹாக்கின்ஸ், காப்டன் வில்லியம்ஸ், 83
ஹிந்தால், 16, 20, 26
ஹீமு, 29, 30
ஹுசேன் ஷா, 100
ஹுமாயூன், 1, 9, 14, 31
ஆரம்பகால இன்னல்கள், 16
பண்புகளும் ஆரம்பகாலப் படையெடுப்புகளும், 16-17
ஹுமாயூனும் ஷெர்ஷாவும், 20
தோல்வியும் நாட்டைவிட்டு வெளியேறுதலும், 24-26
இந்தியாவை மீட்டல், 26
ஹுக்ளியை அழித்தல், 93

# தமிழ் வெளியீட்டுக் கழகம்

## சென்னை - 9

### 1968 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

| | | | ரூ. பை, |
|---|---|---|---|
| *1. | பொருளாதாரம்—II | சி. வேலாயுதம் | 9—00 |
| 2. | புதுமைப் பொருளாதாரக் கூறுகள் | திருமதி ஆர். தாமரஜாட்சி | 12—00 |
| 3. | பொருளாதாரம்—ஓர் அறிமுகம்—I | தி. சி. மோகன் | 12—00 |
| 4. | ,, ,, —II | எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன் | 10—75 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு | க. முத்தையன் | 7—00 |
| *6. | பணவியலும் பாங்கியலும்—II | சி. வேலாயுதம் | 11—50 |
| 7. | நவீன பாங்கு இயல் | க. வெற்றிவேல் | 7—50 |
| *8. | இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும் | பி. வி. ஸ்ரீநிவாசன் | 5—50 |
| *9. | அரசாங்க நிதி இயல் | அர. சேஷாசலம் | 4—75 |
| 10. | இந்தியப் பொருளியல்—I | எம். பாலசுப்பிரமணியன் | 10—00 |
| 11. | ,, —II | எம். லூர்துநாதன் | 4—25 |
| 12. | நமது பொருளாதாரப் பிரச்சினை—I | சி. சுந்தரராஜன் | 10—75 |
| 13. | ,, —II | எஸ். குழந்தைநாதன் | 10—50 |
| 14. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I | கீ. சீ. இராமசாமி | 6—00 |
| 15. | ,, ,, —II | ,, | 6—00 |

* மூலநூல் (Original Book)

| | | | |
|---|---|---|---|
| 16. | அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி | தி. சி. மோகன் | 5—00 |
| 17. | அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I | மு. க. சுப்பிரமணியம் | 11—00 |
| 18. | ,, ,, —II | பி. வி. சீனிவாசன் | 6—00 |
| 19. | ,, ,, —III | ,, | 6—50 |
| 20. | அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I | மா. குமாரசாமி | 10—00 |
| 21. | ,, ,, —II | அர. சேஷாசலம் | 9—50 |
| 22. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I | தே. வேலப்பன் | 10—00 |
| 23. | ,, ,, —II | ஜி. சிதம்பரம் | 8—00 |
| 24. | பணம்—சிறு விளக்கம் | கோ. இராதாகிருஷ்ணன் | 10—00 |
| *25. | வணிக இயலின் தத்துவங்கள் | கு. ஆளுடைய பிள்ளை | 9—50 |
| 26. | பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில், வாணிபப் புரட்சி | சு. ரா. கருப்பண்ணன் | 11—00 |
| 27. | பென்ஹாம் பொருளாதாரம்—I | ஏ. குழந்தை | 11—00 |
| 28. | ,, ,, —II | எஸ். குழந்தைநாதன் | 7—00 |
| *29. | வரவுசெலவுத் திட்டம் | ஆர். ரங்காச்சாரி | 6—00 |
| 30. | பன்னாட்டுப் பொருளாதாரம்—I | ஏ. குழந்தை | 7—50 |
| 31. | ,, —II | கே. எஸ். இராமசாமி | 9—00 |
| 32. | பொருளாதார ஆய்வு நூல்—I | கோ. இராதாகிருஷ்ணன் | 7—75 |
| 33. | ,, —II | ,, | 7—00 |
| 34. | வளர்ச்சியுறாத நாடுகளின் அரசாங்க நிதியியல் | க. வெற்றிவேல் | 4—25 |
| 35. | வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள் | மா. குமாரசாமி | 5—50 |
| 36. | 1939முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள் | சி. சுந்தரராஜன் | 7—50 |
| 37. | பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள் | எம். கே. சுப்பிரமணியம் | 7—75 |

வரலாறு

| | | | |
|---|---|---|---|
| *38. | பிரிட்டன் வரலாறு—I | கி. ர. அனுமந்தன் | 10—00 |
| *39. | ,, ,, —II | ,, | 9—75 |
| *40. | ஐரோப்பிய வரலாறு—I | டி. வி. சொக்கப்பா | 4—50 |
| 41. | ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டு காலச் சரித்திரம் | வை. விருத்தகிரீசன் | 15—00 |
| 42. | இங்கிலாந்து வரலாறு—I | இரா. அண்ணாமலை | 13—00 |
| 43. | ,, ,, —II | பா. மாணிக்கவேலு | 13—00 |
| 44. | ,, ,, —III | என். ஜே. ராஜகோபால் | 8—00 |
| 45. | ,, ,, —IV | ,, | 8—00 |
| 46. | இங்கிலாந்தின் வரலாறு—I | க. த. திருநாவுக்கரசு | 15—00 |
| 47. | ,, ,, —II | எம். எக்ஸ். மிராண்டா | 8—00 |
| 48. | ,, ,, —III | ,, | 5—00 |
| 49. | இந்தியாவின் சிறப்பு வரலாறு—I | தி. வெ. குப்புசாமி | 7—50 |
| 50. | ,, ,, —II | ஏ. உஸ்மான் ஷெரீப் | 9—00 |
| 51. | ,, ,, —III | அ. பாண்டுரங்கன் | 11—00 |
| 52. | கிரேக்க நாட்டு வரலாறு—I | சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன் | 7—50 |
| 53. | ,, ,, —II | ,, | 7—00 |
| 54. | ,, ,, —III | பி. இராமாநுஜம் தேவதாஸ் | 7—75 |
| 55. | ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு—I | தி. வெ. குப்புசாமி | 8—25 |
| 56. | ,, ,, —II | ஏ. உஸ்மான் ஷெரீப் | 7—50 |
| 57. | ,, ,, —III | க. த. திருநாவுக்கரசு | 10—50 |
| 58. | முகலாயப் பேரரசு—I | ஏ.உஸ்மான் ஷெரீப்,எம்.எக்ஸ். மிராண்டா | 7—50 |
| 59. | ,, —II | எம்.எக்ஸ்.மிராண்டா, பா. மாணிக்கவேலு | 7—75 |

* மூலநூல் (Original Book)

**அரசியல்**

| | | | |
|---|---|---|---|
| *60. | இந்திய அரசியலமைப்பு | வீ. கண்ணையா | 5—00 |
| 61. | அரசியலுக்கு ஓர் அறிமுகம் | டி. செல்லப்பா | 8—50 |
| 62. | தற்கால அரசியல் அமைப்புகள் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 8—50 |
| 63. | பன்னாட்டு அரசியல்—I | திருமதி நூர்ஜஹான் பாவா | 16—00 |
| 64. | ,, —II | ,, | 13—25 |
| 65. | பொதுத்துறை ஆட்சி இயல்—I | வீ. கண்ணையா | 9—00 |
| 66. | ,, ,, —II | அ. ஜெகதீசன் | 7—25 |
| 67. | பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்—I | வீ. கண்ணையா | 7—50 |
| 68. | ,, ,, II | டி. செல்லப்பா | 7—50 |
| 69. | இந்திய அரசியலமைப்புத் திட்டம் | தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன் | 9—25 |
| 70. | இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I | வீ. கண்ணையா | 6—25 |
| *71. | மக்கள் ஆட்சி | க. சந்தானம் | 4—25 |
| 72. | 1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும் | என். ஜே. ராஜகோபால் | 7—75 |

**உளவியல்**

| | | | |
|---|---|---|---|
| 73. | குழந்தை உளவியல்—I | கி. ர. அப்புள்ளாச்சாரி | 8—00 |
| 74. | ,, —II | ,, | 7—00 |
| 75. | உட்கவர் மனம் | சி. ந. வைத்தீஸ்வரன் | 7—00 |
| 76. | இளையோர் உளவியல்—I | தி. இரா. அரங்கராசன் | 12—00 |
| 77. | ,, —II | ,, | 9—00 |
| 78. | சமூக உளவியல் | என். வேதமணி மானுவேல் | 9—25 |
| 79. | பிறழ்நிலை உளவியல் | அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ் | 11—00 |
| 80. | பித்தரின் உள்ளம் | ,, | 3—00 |
| *81. | குமர உள்ளம் | டாக்டர் மு. அறம் | 6—25 |

**தத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| 82. | இந்து சமயத் தத்துவம் | ஞா. ராஜாபகதூர் | 5—50 |
| *83. | அறிவு ஆராய்ச்சி இயல் | ஆர். இ. ராமானுஜாச்சாரி | 3—50 |
| *84. | மேலைநாட்டுத் தத்துவம் | ஆர். எஸ். தேசிகன் | 3—50 |
| 85. | அத்துவித தத்துவம் | கோ. மோ. காந்தி | 6—50 |
| 86. | ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர் | மோ. வள்ளுவன் கிளாரன்சு | 5—50 |
| 87. | இந்தியத் தத்துவம் | வ. அ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம் | 3—50 |
| 88. | மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்—I | சி. இராமலிங்கம் | 6—00 |

**அறவியல்**

| | | | |
|---|---|---|---|
| 89. | அறவியல்—ஓர் அறிமுகம் | கோ. மோ. காந்தி | 8—50 |

**அளவையியல்**

| | | | |
|---|---|---|---|
| 90. | அளவை இயல்—தொடக்க நூல் | கி. ர. அப்புள்ளாச்சாரி | 2—50 |

**மானிடவியல்**

| | | | |
|---|---|---|---|
| *91. | மானிடவியல் | ம. சு. கோபாலகிருஷ்ணன் | 4—75 |
| 92. | பண்பாட்டுக் கோலங்கள் | கி. பூ. சுப்பிரமணியன் | 5—50 |
| 93. | இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை | எஸ். இலட்சுமி | 3—50 |

**சமூகவியல்**

| | | | |
|---|---|---|---|
| 94. | சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | ஜே. நாராயணன் | 10—50 |

**புவியியல்**

| | | | |
|---|---|---|---|
| 95. | ஆசியா—I | கொ. சேஷ. நரசிம்மன் | 9—50 |
| 96. | ,, —II | ,, | 8—75 |
| 97. | ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் | ஏ. எஸ். நாராயணன் | 8—50 |
| *98. | தென்கிழக்கு ஆசியா | ஜி. கிருஷ்ணமூர்த்தி | 8—50 |

* மூலநூல் (Original Book)

புவியியல் (தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| *99. | வட அமெரிக்கா | குமாரி இரா. அலுமேலு | 8—25 |
| *100. | தென் அமெரிக்கா | எம். என். பத்மநாபன் | 9—00 |
| *101. | தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா | திருமதி எச். நியூமன் | 4—00 |
| *102. | ,, —ஆஃப்பிரிக்கா | எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர் | 3—25 |
| *103. | புவிப்புறவியல்—II | நா. அனந்தபத்மநாபன் | 6—00 |
| *104. | செய்முறைப் புவியியல் | சு. ஜெயச்சந்திரன் | 9—00 |
| *105. | மக்கட் பரப்பியல் | வி. எஸ். அனந்தபத்மநாபன் | 6—25 |
| *106. | சமுத்திரவியல் | கோ. இராமசாமி | 6—50 |
| 107. | காலநிலை இயல்—I | கொ. சேஷ. நரசிம்மன் | 10—00 |
| 108. | ,, — II | ,, | 5—00 |
| 109. | வளியியலுக்கு ஓர் அறிமுகம் | கோ. இராமசாமி | 11—00 |
| *110. | புவி அமைப்பு இயல் | சி. விஸ்வநாதன் | 4—75 |
| 111. | பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும் | கோ. இராமசாமி | 6—00 |

புள்ளியியல்

| | | | |
|---|---|---|---|
| *112. | புள்ளியியல்—அறிமுகம் | சு. வைத்தியநாதன் | 10—00 |
| 113. | புள்ளியியல் முறைகள்—I | கோ. சண்முகசுந்தரம் | 10—00 |
| 114. | ,, —II | கே. ஆர். இராஜகோபாலன் | 14—00 |
| 115. | நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம் | இ. வி. லட்சுமிநரசிம்மன் | 6—50 |

உயர்கணிதம்

| | | | |
|---|---|---|---|
| *116. | ஆயத்தொலை வடிவகணிதம் | டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை | 12—50 |
| *117. | வகை நுண்கணிதம் | ,, | 8—00 |
| *118. | தொகை நுண்கணிதம் | தி. கோவிந்தராஜன் | 9—00 |

**விலங்கியல்**

| | | | |
|---|---|---|---|
| *119. | விலங்கியல் | பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன் | 12—00 |

**பௌதிகவியல்**

| | | | |
|---|---|---|---|
| 120. | ஒளி நூல் | ச. சம்பத்து | 10—00 |

**விஞ்ஞானம்**

| | | | |
|---|---|---|---|
| *121. | வானவெளி வெற்றி | டாக்டர் எம். ஏ. தங்கராஜ் | 6—00 |
| *122. | ரேடியோ | ,, பி. திருஞானசம்பந்தம் | 4—75 |
| *123. | எக்ஸ்-கதிர்கள் | பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம் | 4—50 |
| *124. | பாம்புகள் | பெ. மா. அண்ணுமலை | 3—50 |
| *125. | தாவரம்—வாழ்வும் வரலாறும் | டாக்டர் கு. சீனிவாசன் | 8—00 |
| *126. | கரும்பு | கு. பெரியசாமி | 4—00 |
| *127. | தாவரங்களின் வாழ்வியல் | எஸ். சுந்தரம் | 6—50 |

**மருத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| *128. | நீரிழிவு—க்ஷயரோகம் | டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன் | 2—50 |
| 129. | மகப்பேறும் மாதர் நோயும் | டாக்டர் (குமாரி) மணிமேகலை | 8—25 |
| *130. | பாக்டீரியா | சு. சுந்தரம் | 2—50 |
| 131. | புற்றுநோய் | அ. கதிரேசன் | 3—50 |

* மூலநூல் (Original Book)

பொறியியல்

| | | | |
|---|---|---|---|
| 132. | நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம் | கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால் | 8—50 |

சட்டம்

| | | | |
|---|---|---|---|
| *133. | குற்றவியல் சட்டம் | எம். சண்முகசுப்பிரமணியம் | 10—00 |

பொது நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 134. | மகாத்மா காந்தி | சரஸ்வதி தங்கையன் | 3—25 |
| 135. | விவசாயப் புரட்சி | வி. கார்த்திகேயன் | 8—00 |
| *136. | சேமக் கை—நூல் | ஆ. சுப்பிரமணியம் | 2—50 |
| *137. | முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் | எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் | 9—00 |
| *138. | உணவும் ஊட்டமும் | தி. வேங்கிடகிருஷ்ணய்யங்கார் | 4—50 |

புகுமுக வகுப்புகளுக்குரியவை (P.U.C.)

| | | | |
|---|---|---|---|
| *139. | உலக வரலாறு | டி. ஆர். இராமச்சந்திரன் | 4—50 |
| *140. | பொருளாதாரம் | ஜி. சிதம்பரம் | 4—25 |
| *141. | வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்-I | கு. ஆளுடைய பிள்ளை | 4—00 |
| *142. | ,, ,, II | ,, | 3—50 |

| | | | |
|---|---|---|---|
| *143. | புகுமுக வகுப்புக் கணிதம்—I | K. இராஜகோபால் | 7—00 |
| *144. | ,, —II | ,, | 3—00 |
| *145. | கணிதம்—ஓர் அறிமுகம்—I | R. மகாதேவன் | 4—75 |
| *146. | ,, —II | ,, | 3—25 |
| *147. | புகுமுக வகுப்புக் கணித நூல்—I | தி. கோவிந்தராசன், கொ. முத்துசாமி | 7—00 |
| *148. | ,, —II | ,, | 4—50 |
| *149. | பௌதிகம் | டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராசன் | 7—50 |
| *150. | புகுமுக பௌதிகம் | டாக்டர் எம். ஏ. தங்கராஜ் | 5—75 |
| *151. | வேதியியல் | T. முனியப்பன், R. முத்துலட்சுமி | 7—00 |
| *152. | புகுமுக வேதியியல் | C. A. பத்மநாபன் | 5—50 |
| *153. | விலங்கியல் | S. ஆப்ரகாம் | 4—00 |
| *154. | புகுமுக விலங்கியல் | P. M. அண்ணாமலை | 7—25 |
| *155. | புகுமுக வகுப்புத் தாவரவியல் | S. சுந்தரம் | 4—50 |

* மூலநூல் (Original Book)